மூன்றாம் உலகப் போரிற்கான இரகசியத்திட்டம்

செப்ரெம்பர் 1994

# உலக உலா

## ஆசியாவில் பெருகிவரும்



## அணுஉலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட
பொருட்களிற்காக
தனித்தனி சிறப்புக்
கடைகள்

★ யாழ்ப்பாணன் விற்பனை
நிலையம்
(பலசரக்கு சில்லறை வியாபாரம்)
யாழ்ப்பாணம்

★ விக்ரர் இயந்திர உதிரிப்
பொருள் வாணிபம்
யாழ்ப்பாணம்

★ சேரன் வேளாண் இடுபொருள்
வாணிபம்
சுன்னாகம்

★ சேரன் மருந்து வாணிபம்
யாழ்ப்பாணம்

★ சேரன் காகிதாதிகள் வாணிபம்
யாழ்ப்பாணம்

★ எழிற் கூடம்
(பாத்திர பண்டம், அழகுசாதனம்)
யாழ்ப்பாணம்

★ எழினி
(புடைவை வாணிபம்)
யாழ்ப்பாணம்



முக்கிய நகரங்களில்
எமது கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- சாவகச்சேரி
- சுன்னாகம்
- கொடிகாமம்
- பருத்தித்துறை

நடமாடும்
வாணிபம்

வடமராட்சி
தென்மராட்சி

# சேரன் பல்பொருள் வாணிபம்

2 ஆம் ஆண்டு நிறைவில்

23 - 09 - 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக விவகாரங்கள்

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY
நூலகம்
மாநகராட்சி மன்று
13 - 9 - 1994
யாழ்ப்பாணம்

### ஆசியா

இந்தியாவின் கடல் வலிமை 07
பூட்டானில் இனக்கலவரங்கள் 09
நேபாளத்தில் உல்லாசப் பயண வீழ்ச்சி 12
தூக்குக் கயிற்றில் ஒருங்கிணைப்பு 15
கம்போடியாவைக் காப்பாற்ற முடியுமா? 17
தென்கிழக்காசியாவில் அதிகரிக்கும் இராணுவபலம் 18
அரபாத்தின் காசா வருகை 22

### ஐரோப்பா

மூன்றாம் உலக யுத்தம் 24
சொறித் தலைக் கரடி 27
புதிய பொதுவுடைமைவாதிகள் 38

### அமெரிக்கா

அகதிகளின் வெள்ளம் 36

### ஆபிரிக்கா

பிரான்சின் தலையீடு 38

### மதம்

பெண் மதகுருவுக்கு இடமில்லை 43

### வாணிகம்

உயரப்பற, மலிவு விற்பனை 44

### மருத்துவம்

புற்றுநோய்த் தடுப்பு 47

### சுற்றுச் சூழல்

பசுஞ்சுவர் 51
நிருக்கடியில் பயங்கரச் சத்தம் 54

### முகாமைத்துவம்

கேட்க ஆரம்பியுங்கள் 55
வெற்றியின் இரகசியமொழி 56

### சமூகவியல்

கோப்பியின் வரலாறு 59
வீடு திரும்பிய கூர்க்காக்கள் 62

### விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

ஆசியாவின் அணுஉலைகள் 65
21ஆம் நூற்றாண்டின் தகவல் தொடர்பு 69

### விலங்கியல்

நாய் இனத்தின் வளர்ச்சி 72

### மனிதவியல் வரலாறு

தங்க அதிசயம் 76

### விளையாட்டு

மரண சாதனம் 79

### பல்திணைப் பகுதி

செய்திச் சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06
நேசப் பூக்கள் 08

விலை:- ரூ. 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா:- 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருஷ்யா

### பரிதாபத்திற்குரிய பசுபிக் கப்பற் படையணி

ருஷ்யாவின் பசுபிக் கப்பற் படையணியின் தளபதி பதவி விலக்கப்பட்டு விட்டார். அதற்குக் காரணம், "அந்தக் கப்பற் படையணியின் போர்ச் செயற்பாட்டு வலு வெகுவாகக் குறைந்து விட்டது" என்பதாகும். ஓர் ஆயுதக் கிடங்கு தீப்பற்றி வெடித்த பின்பு மே 17 ஆந் திகதி அட்மிரல் ஜோர்ஜி குறினோவ் பதவி விலக்கப்பட்டார். அங்கு கடமை வேலை முடிந்து நின்ற கடற்படை வீரர்கள் சிலர், ஒரு றொக்கட்டின் பகுதியொன்றைச் சுத்தியலால் திறக்க முயன்றபோது, மே 14 ஆந் திகதி அந்தத் தீ விபத்து ஏற்பட்டது. அந்தப் பசுபிக் கடற்படை அணி போர்த் திறன் தரப்படுத்தலில் கடைசியில் இருப்பதாக ருஷ்ய பாதுகாப்பு அமைச்சர் சில காலத்திற்கு முன்பு கூறினார்.

## இந்தியா

### காஷ்மீர் சமாதான நடவடிக்கைகள்

முஸ்லிம் பிரிவினைவாதிகளுடனான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட இந்தியாவின் துணை இராணுவப் பிரிவுகளில் ஒன்றான எல்லைக் காவல் படையைக் காஷ்மீரின் வீதிகளிலும், நகரங்களிலும் இருந்து மீள அழைத்துக் கொள்வது என்று இந்தியா முடிவெடுத்துள்ளது. பல மனித உரிமை அத்துமீறல்களுக்கு அந்தப் படைப் பிரிவே குறை கூறப்பட்டது. இந்தப் படை மீள அழைத்துக் கொண்ட செயலால் 'பயங்கரவாதத்தை நிறுத்துவதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெறத் தூண்டுதல் ஏற்படுமென நம்பப்படுகிறது. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் (JKLF) முக்கிய தலைவர்களில் ஒருவரான மொகமட் யாசின் மாலிக்கு வைத்திய காரணங்களையிட்டு நீதி மன்றம் ஒன்று பிணை வழங்கியதால், அவர் மே 17 ஆந் திகதி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். புதுதில்லிப் படைகளை மீள அழைத்துக் கொள்ளுமானால் தமது இயக்கம் வன்முறையைக் கைவிட்டு அமைதிப் பேச்சுக்கு வர ஆயத்தமாக உள்ளதென மாலிக் கூறினார்.

## ஜப்பான்

### உணர்வை நெருடும் பயணம்

வலதுசாரிகளிடமிருந்து எழுந்த அழுத்தங்கள் காரணமாக, அமெரிக்காவின் ஹவாயில் உள்ள பேர்ள் ஹாபரில் உள்ள அரிசோனாத் தேசிய நினைவாலயத்திற்கு ஜப்பானியச் சக்கரவர்த்தி அக்கிஹிடோ ஜூன் மாதத்தில் மேற்கொள்ள இருந்த பயணத்தை ஜப்பானிய அரசாங்கம் நிறுத்தி விட்டது. இதனை ஜப்பானியச் செய்தி ஏடுகள் அறிவித்தன. அதற்குப் பதிலாக அக்கிஹிடோ அடையாளம் குறைந்த அடையாள பூர்வமாக 1941 டிசம்பர் 7 ஆந் திகதி ஜப்பானின் தாக்குதலுக்குப் பலியான அமெரிக்கர்கள் புதைக்கப்பட்ட சேமக்காலைக்குச்சென்று தனது அஞ்சலியைச் செலுத்தவுள்ளார்.

## சீனா

### வானொலி அலைச்சலுகைகள்

அமெரிக்க வானொலி ஒலிபரப்புக்களைக் குழப்பும் அலை வரிசைகள் பற்றி விசாரித்து ஆய்வு நடத்த அமெரிக்கத் தொழில்நுட்ப வியலாளர்களுக்கு அனுமதி கொடுக்க பீக்கிங் இணங்கியுள்ளது. அதேபோல் செஞ்சிலுவைச் சங்கத்துடனும் சிறைச் சாலைகளுக்கு வருகை தந்து பார்வையிட அனுமதிப்பது பற்றியும் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இவை பற்றிச் சீன வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அதேவேளை சீனாவுக்குச் சென்ற அமெரிக்காவின் சிறப்புத் தூதுவர் மைக்கேல் அர்மாகொஸ்ட் பல உயர்தர சீனத் தலைவர்களுடன் சந்திப்புக்கள் நடத்தியுள்ளார்.

## சிங்கப்பூர்

### போர் விமானக் கொள்வனவு வகையில் மாற்றம்

சிங்கப்பூர் 18 எப்/ஏ 18 ரக ஜெட் போர் விமானங்களுக்குப் பதிலாக 18 எப் 16 ரக விமானங்கள் கொள்வனவு செய்யக் கூடும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. அந்தப் பரிமாறலில் ஏ ஐ எம் 9 சைட்வைன்டர் ஏவுகணைகளும் ஏ ஐ எம் 7 எம் ஸ்பெரோ ஏவுகணைகளும், வேறுபல சுடு கலன்களும், போர்ப் பொருள்களும் அடங்கவுள்ளன. இந்த விற்பனையை அமெரிக்க ஆட்சிமன்றமான காங்கிரஸ் தடுப்பதாயின் 30 நாள்களுக்குள் அவ்விதம் செய்ய வேண்டும்.

## தாய்வான்

### அணு உலைக்கு எதிரான வாக்கு

தாய்வான் பவர் என்கின்ற நிறுவனத்தால் 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் வடக்குத் தாய்வானில் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கும் அணுமின் உலையைக் கட்டும் வேலைகளை நிறுத்தும்படி கோர உள்ளூரில் நடந்த மக்கள் தீர்ப்பு வாக்களிப்பில் குங்கிலியே என்ற அந்த நகரப் பகுதி மக்கள் பெரும்பான்மை வாக்கால் அணு உலைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பல வருடதாமதத்தின் பின்பு இரண்டு வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட அந்த வேலைக்கு 96 வீத எதிர்ப்பு வாக்குகள் கிடைத்தன. ஆனால், பொருளாதார அமைச்சர் சியாங் அதை மக்கள் தீர்ப்புக் கட்டுப்படுத்தாது என்றும், கட்டுமான வேலைகள் தொடரும் என்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையில் விளையாட்டு

அமெரிக்க இலினோய் மாநிலத்தின் டியர்பீல்ட் நகரிலுள்ள விக்டோர் மகஸ் டெக்னோலொஜீஸ் என்ற நிறுவனம், கணனிகளில் வீடியோ விளையாட்டுக்கள் நடத்தும்போதுஅந்தக்காட்சிகளைத் தத்ரூபமாக நிகழ்வதுபோல் உணர்வூட்டக்கூடிய, (தலையில் அணிந்து கொள்ளும்) சாதனத்தைச் சந்தைக்கு விட உள்ளது. இதுவரை



கணனிகளில் பதிவு செய்துள்ள வீடியோ விளையாட்டுக்களைக் கணனித் திரையிலோ அல்லது தொலைக்காட்சித் திரையிலோதான் காணக் கூடியதாக இருந்தது. ஆனால், அந்தச் சாதனத்தை அணிந்துகொண்டு பார்த்தால் அதில் அந்தப் பார்வையாளர் தாமே பங்கு பற்றுவதுபோல் ஓர் உணர்வு ஏற்படுவதுடன், அது முப்பரிமாண ஸ்டீரியோ ஒலி எழுப்புவதுடன், படத்தையும், குறுக்கு வாட்டில் 360 பாகையும், செங்குத்தாக 70 பாகையும் வரையிலான அளவில் தெரியக் கூடியதாக ஆக்குகின்றது. தலையில் அணிந்துகொண்டு அதனைப் பார்ப்பவர் தமது தலையை அசைத்தால் அந்த விளையாட்டுச் சூழலும் அசையும். இது எதிர்வரும் ஜூலை மாதத்தில் சந்தைப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அது ஐ.பீ.எம். மெகின்ரொஸ் தனிப்பாவனைக் கணனிகளுடனும், சேகா, நினவ்டோ, ஜவுகர் விளையாட்டு முறைப் பதிவுகளுடனும் பொருத்தக் கூடியது. சைபர் மெகஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் விலை 700 அமெரிக்க டொலர்.

## கள்ளப் பணத்தைக் கண்டு பிடித்தல்



அச்சுக்கலை முன்னேற்றம் கள்ளப் பணத் தாள் அச்சிடுவோர்க்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசங் காட்டும் பிரத்தியேக மை நிரப்பப்பட்ட பேனா ஒன்று இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டுள்ளது, இதன் விலை பத்து டொலர். இந்தப் பேனாவை வைத்துக்கொண்டு 12,000 சோதனைகள் செய்யலாம். ஒரு பணத்தாள் மீது சிறியதோர் அடையாளம் இந்தப் பேனாவினால் இட்டால் உண்மையான பணத்தாளாகவிருந்தால் அந்த அடையாளம் இலேசான மஞ்சள் நிறமாக மாறும். நிறம் கறுப்பாக அல்லது கருஞ் சிவப்பாக மாறினால் அது கள்ள நோட்டு என்று தீர்மானிக்கலாம். மேலும் உண்மையான பணத்தாள் என்றால் இந்த மை அடையாளம் நாலு மணித்தியாலத்தில் மறைந்துவிடும். இந்த மையில் நச்சுப் பொருள்கள் கலக்கப்படவில்லையென்று உத்தரவாதம் தரப்பட்டுள்ளது.

## ஓட்டக்காரர்

ஜப்பானின் சன்யோ நிறுவனம் ஓட்டக்காரர்களுக்கு ஓடும்போது கேட்க இசை இசைப்பதுடன் அவர்கள் பெறும் உடற்பயிற்சி அளவையும் கணித்துக்காட்டும் கருவி ஒன்றை சந்தைக்கு விட்டுள்ளது. எஸ் பீ டீ 1500 என்று பெயரிடப்பட்டுள்ள அந்தச் சாதனம், அணிந்துகொண்டு ஒலி செலுத்தியைக் காதில் பொருத்திக் கொண்டு ஓடத் தொடங்கிய உடனே, முதல் 30 செக்கண்டுகளுக்குப் "பீப்பீப்" ஒலிகள் எழுப்பி ஓடுபவரின் ஓட்டத்தைச் சூடுபிடிக்கச் செய்த பின்பு ஓடு



பவர் ஓடிக்கொண்டு இருக்கையில், 1 ஆம் மைல் கழிய ஓர் ஒலியும், 2 ஆம் மைல் கழிய இரண்டு ஒலிகளும் என்று கூடிச் செல்லும். மைற் கணக்குகளுக்கு ஏற்ப "பீப்" ஒலிகள் ஒலிக்கும். அந்தச் சாதனத்தை முடுக்கி உடற் பயிற்சி செய்யும்போது அதனை அளவையிட முடியும். பாவிப்பவர் தாம் எத்தகைய பயிற்சி செய்கிறார் என்பதனை அமுக்கியை அழுத்தித் தெரிவித்து உடற் பருமனையும், பயிற்சி செய்யப்போகும் நேரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் பதிந்துவிட்டால், அந்தச் சாதனம் எத்தனை கலோரி வெப்பம் செலவானது என்பதனைப் பதிவு செய்யும். இச் சாதனம் கழற்றக்கூடிய இடுப்புப் பட்டிக் கொழுக்கியுடனும் நைலோன் இடுப்புப் பட்டியில் பொருத்தப்பட்டதுமான மாதிரிகளில் வருகிறது. விலை 70 டொலர்.

## அசதியற்று வேலை செய்ய வசதி

அமெரிக்காவில் கொலராடோ மாநிலத்தில் எங்கல் வூட் நகரில் இயங்கும் பகாமா கோள்ட் நிறுவனம்.



வேலை செய்யும்போது அசதியற்றுச் செய்ய வசதியான மேசை கதிரை ஒன்றை, பனானா என்ற பெயரில் செய்து விற்பனைக்கு விட்டுள்ளனர். வீட்டில் இருந்து கொண்டு காரியாலய வேலை செய்பவர்களுக்கு அது உகந்தது. அந்த மேசையில் கடிதக் கோவைகள், தொலைபேசி, கணனிப்பொறி, ஃபக்ஸ் இயந்திரம் முதலியவற்றைப் பொருத்தவும், போடவும் லாச்சுகள்உள்ளன. கதிரை ஒரு வெளிக்களத்தில் போட்டு அமரும் சாய்மனைக் கதிரை போல் அமைந்துள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள தட்டச்சு வசதிக்கேற்றபடி அசைந்து, சரிந்து கொடுக்கக்கூடியதாக வைக்கப்பட்டுச் சாய்மனைக் கிடையில் தட்டச்சுச் செய்ய வசதி தருகிறது. விலை 1300 டொலர்.

## ரோயோட்டாவின் புதிய கார்

வேகம், கவர்ச்சியான வடிவமைப்பு, ஓட்டுபவரின் ஆணைக்குட்படும் பண்பு இத்தனையும் உள்ளடக்கிய இரண்டு கதவும் 320 குதிரைச் சக்தியுங் கொண்ட அதிவேக ரொயோட்டா நிறுவனத்தின் தயாரிப்புப் பெரும் வரவேற்புப் பெற்றுள்ளது. மேற்கூறிய அடைமொழிகளுக்கு ஒருமித்து இலக்கான கார்கள் சமகாலத்தில் விற்பனைக்கு வந்துள்ளது மிகவும் அரிது. 'ஸ்போர்ட்ஸ்' கார் (Sports Car) ரகத்தைச் சேர்ந்த இந்த வாகனம் மிகவும் நேர்த்தியான நான்கு அதிர்ச்சித் தாங்கிகளைக் கொண்டுள்ளது. இதன் இயந்திரம் மிகவும் வலுவுள்ளதென்றும், ஓட்டப்பந்தயக் கார் போல நெடுஞ்சாலையில் சிறகு விரித்துப் பறக்காத குறையாக வேகமெடுக்குமென்றும் கார்ப் பிரியர்கள் தெரிவிக்கின்றனர். இதற்குத் தயாரிப்பாளர் கொடுத்த பெயர்ரொயோட்டா சுப்றா (Toyota Supra). நாம் வாங்க நினைத்தால் கொடுக்க வேண்டிய விலை 42,500 டொலர்.

## வாகன சமிக்ஞை

மேற்கு நாடுகளில் அதிவேகமாக வாகனங்களைச் செலுத்த வேண்டிய நெடுஞ்சாலைகள் உண்டு. குறிப்பிட்ட வேகத்திற்குக் குறைவாக இந்தச்சாலைகளில் வாகனம் ஓட்டுவது சட்டப்படி



குற்றமாகும். வாகனத்தில் பழுது வந்துவிட்டால் நீங்கள் நிறுத்த வேண்டிய கட்டாயம் நேரும். அப்படி நிறுத்தும்போது நீங்கள் உங்கள் வாகனத்தின் முன்பும் பின்பும் சிவப்பு வெளிச்சம் பொருத்தப்பட்ட எச்சரிக்கைக் கருவியை நிலத்தில் வைக்க வேண்டும். அல்லாவிட்டால் வேறு வாகனங்கள் வேகமாக வந்து உங்கள் நிறுத்தப்பட்ட வாகனத்தின்மீது மோதநேரிடும். மிகவும் சிறியளவில் மடித்து உங்கள் வாகனத்தின் பொதி சுமக்கும் பகுதியில் வைக்கக் கூடிய சிவப்பு வெளிச்சம் இப்போது விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வெளிச்சம் இங்கிலாந்தின் நெடுஞ்சாலைப் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்டுள்ளது. விலை இன்னும் குறிப்பிடப்படவில்லை.

## மோட்டார் சைக்கிள் தலைக் கவசம்

சாதாரண நம் நாட்டுத் தலைக் கவசங்களிலும் பலவிதத்தில் வித்தியாசப்பட்ட மூடி அமெரிக்காவில் விற்பனை ஆகின்றது. முதலாவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதைத் தலையில் அணிந்தபடி வேகமாகச் செல்லும்போது காதில் பாயும் காற்றுச்சத்தமும் வேறு ஒலிகளும் காதில் விழமாட்டா. இரண்டாவதாக காதில் இதமாக இசையோ வானொலிச் செய்தியோ வரும் விதத்தில் காதுக்கு நேராக ஒலிப்பேழைகள் பொருத்தப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்ட வானொலி அல்லது வேறு இசையைப் பரப்பும் கருவியுடன் இந்தத் தலைக்கவசம வயர் (கம்பி) மூலம் பொருத்தப்பட்டுள்ளது. நல்ல தரமான ஓசையைக் கேட்டு அனுபவித்தவாறு நீங்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்லலாம். இதனால் நேரும் விபத்துக்களுக்கு தாம் பொறுப்பில்லை என்று இதன் அமெரிக்கத் தயாரிப்பாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதன்விலை 200 டொலர்.

அமெரிசகாவில் மேலாலை ஹெலி கலைபபதில்லை; கீழே கிடங்கு பள்ளமான றோட் இல்லை. அங்கு ஓடலாம். ஆங்கு ஓடலாமோ? நினைத்தே பார்க்கக்கூடாது.

## கெட்ட நாற்றத்தைப் போக்கப் புதிய வழி

வீட்டில் பாவிக்கப்படும் அப்பச் சோடாவுடன் (Baking Soda) புதிய உபயோகமொன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மண்ணிலுள்ள நாற்றத்தைப் போக்க இந்த மண்ணை உலையில் இட்டு அப்பச் சோடாவையும் கலந்து 350 பாகை செல்சியசுக்குச் சூடேற்ற மணம் யாவும் நீங்குமென்று உத்தரவாதம் அளித்துள்ளனர். இந்த முறையை அமெரிக்க கடற்படை தனது ஆய்வு கூடங்களில் நடைமுறைப்படுத்துகின்றது. இப்போதுள்ள நாற்றமகற்றும் முறைகள் செலவு கூடியதென்றும், புதியது இலாபகரமானதென்றும் அமெரிக்கக் கடற்படை தெரிவிக்கின்றது.

நல்ல வேலை! அமெரிக்க கடற்படைக்குச்சொல்லி, பொம்மை வெளிப்பக்க மணத்தைக் குறைக்க ஒரு வழி செய்யச் சொல்லிச் சொல்ல வேணும் என்கிறார் ஒரு மிதிவண்டியாளர்.

## அப்பிள் நிறுவனம் தயாரிக்கும் கணனிப்பொறி

நித்தம் மாறிக்கொண்டு வரும் கணனிப்பொறி யுகத்தில் அப்பிள் (Apple) நிறுவனம் முன்னணியில் நிற்கின்றது. பி, சி (பி. சி) எனப்படும் சொந்தமாகவும், கூட்டாகவும் பாவிக்கும் கணனிப்பொறி ஒன்றின் மேல் ஒன்



றாக அடுக்கி வைக்கக் கூடிய வசதியுடன் வருகின்றது. இட வசதியுடன் சக்தி கூடியதாகவும் இது இருக்கின்றது. இங்கு படத்தில் காண்பிக்கப்படும் 8100/80 ரக கணனிப் பொறி இந்த நிறுவனம் தயாரித்துள்ள மூன்று அதிவேகப் பொறிகளில் ஒன்றாகும். இவர்கள் இதற்கு முன் தயாரித்த 6100/60, 7100/66 ரகங்கள் வேகம் குறைந்தவை என்றாலும் தொடர்ந்து தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன. இந்த மூன்றின் விலைகளும் 2,000 டொலரில் ஆரம்பித்து 4,000 டொலர் வரை செல்கின்றன.

## இதன் இசைக் கோட்பாடுகள்



முதற் பார்வைக்கு ஒரு நேரங் காட்டும் கருவியுடன் இணைக்கப்பட்ட சாதாரண வானொலி போல் இருந்தாலும் இதன் ஆழமான தொனி (Bass) மிகவும் அபூர்வமானதென்று வர்ணிக்கப்பட்டுள்ளது. நீர்மேலிருந்து கடலுக்கு அடிவரை செல்லும் சோனிக் (Sonic) ஒலி போன்று இது அலை அலையாகப் புதிய இசை நயம் தருவதாகவும் அன்பர்கள் தெரிவிக்கின்றனர். இசை அலைத்தொழில் நுட்பமும், உயர்ந்த ரக ஒலி பெருக்கியும், 34 அங்குல நீள நாதத்தின் தரத்தைக் கூட்டும் ஒலிப் பெட்டியும் கூட்டாக இணைந்து ஆழமான தொனியை உண்டாக்குகின்றன இதன் விலை அமெரிக்காவில் 349 டொலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதில் விழுந்தவை

★ மொஸ்கோவில் 5,374 படுக்கைகளைக் கொண்ட "ரோசியா" உல்லாச விடுதியின் உபசரிப்பாளர் ஒருவர்: "இங்கு தங்கிவரும் விருந்தாளிகள் ஏதாவது முறையீடு செய்தனரா?......! அவர்கள் இப்போது எலிகளைத் துரத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளதால் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவதில்லை" என்றார்.

★ பிரித்தானியாவில் பிரெஞ்சுமொழி முற்றாகத் தடை செய்யப்படவேண்டும். இல்லையேல் இதனால், ஆபத்து உண்டாகும் என்று பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் "அந்தோனி ஸ்டீன்" கூறினார்.




★ உதைபந்தாட்டம் என்ற நூதன விளையாட்டை முதலில் உருவாக்கியது கடவுள்தான். முதலடி எடுத்துவைத்து நடக்கப் பழகும் சிறு குழந்தை முன் நீங்கள் பந்து ஒன்றைப் போட்டால் அது என்ன செய்யும்? அக் குழந்தை கறுப்பினக் குழந்தையாகவோ, ஈரானியக் குழந்தையாகவோ, சீனக் குழந்தையாகவோ இருக்கலாம். பாவம் அதுவும் அடிக்கத்தான் போகிறது என்று, லொஸ் ஏஞ்சல் நகரின் ஒரு விளையாட்டுக் களஞ்சிய உரிமையாளரும், சல்வடோர் அகதியுமான நிக்கொலாஸ் ஒறெல்லானா கூறினார்.




✶ இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் மின் கட்டணத்தைக் கட்டிவிட வேண்டும் என்று தேசிய அதிகாரசபை எமது சகோதரர்களுக்கு அறிவிக்கிறது.

— அராபியப் பத்திரிகை ஒன்றில் காசா மக்களுக்கு விடுக்கப்பட்ட செய்தி.

★ நாங்கள் எப்போதோ ஒரு நாள் "மாலார்" (Mahlar) இன் இரண்டாவது சுருதியை மீட்கத்தான் போகின்றோம். அது இயேசுவின் உயிர்த்த ஞாயிறு பண்டிகை போன்று அமையும்.

— சர்ஜேவோ தேசிய நூலகத்தில் உயிர் நீத்தோரை நினைவு கூர்ந்து பிரார்த்தனை நடாத்திய பின் "சூபென் மேத்தா" கூறியது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கடற்படையின் வலிமை கூடுகிறது.



## ஐஎன்எஸ் ஷண்குல் கடற்படையின் ஆயுத முன்னேற்றத்தின் மைற்கல்.

இந்தியக் கடற்படை நவீனமயப் படுத்துவதிலும், அதன் தற்சார்பு நிலையிலும் ஒரு படி முன்னெடுப்பதில் இந்தியாவிலேயே இரண்டாவதாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஐ. என். எஸ் ஷண்குல் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. மே 28 ஆந் தேதியன்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இந் நீர்மூழ்கியின் இயக்கத்தைப் பம்பாயில் தொடக்கி வைத்தார். இத் தொடக்க வைபவம் இந்திய நாட்டின் கடற்பிராந்திய பாதுகாப்பாகிய அரசினது செயற்பாட்டிற்கு வலிமை சேர்க்கும் வாய்ப்பினை வழங்கியுள்ளது.

சில நாள்களின் பின் டெல்லியில் இடம்பெற்ற கடற்படைத் தளபதிகளின் மாநாட்டுக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுகையில், இந்த விடயத்தால் ஏற்பட்டுள்ள வலிமை அதிகரிப்பினைச் சிறப்பாகக் குறிப்பிட்டார். நாட்டினது கடற் பிரதேசங்கள் பற்றிய முரண் நிலைகளை அலட்சியஞ் செய்வதோ, குறைத்து மதிப்பிடுவதோ அபாயகரமானது என்று அவர் கூறினார். கடற்படைக்கென வசதிவாய்ப்பை ஏற்படுத்தவென் ஒதுக்கீடு செய்யக்கூடிய விசேட நிதியானது கடந்த சில ஆண்டுகளாய்ப் பாதகமான முறையிலே பிற மூலவளச் செலவினங்களால் நொருக்குண்டு பாதிப்புக்குள்ளாவதை அவரின் டெல்லி, பம்பாய்ப் பேச்சுக்கள் எடுத்துக் காட்டின.

போர்க் கப்பல்களையும், நீர்மூழ்கிகளையும் உள்நாட்டிலேயே தயாரிக்கும் நிபுணத்துவத்தைப் பயன் செய்வதற்குப் போதியளவு முன்னுரிமை வழங்கப்படுவது பற்றி உயர் பீடத்தைச் சேர்ந்தவர்களின் ஆதாரபூர்வமான செய்திகள் மூலம் தெரிய வருகின்றன. நீர்மூழ்கிகளினதும், விமானந் தாங்கிக் கப்பல்களினதும் திறன்களை அதிகரிக்கச் செய்வதில் இந்திய கடற்படை ஆர்வங் காட்டுகின்றது.

சுயநல நோக்குக் கொண்டோரால் வர்ணிக்கப்படுவது போன்று ''துணிகரச் செயல் என்பது திட்ட நிகழ்ச்சி நிரலிலில்லை என்பதையும் பிரதமர் வலியுறுத்தினார். இந்தியாவின் கடற் பிரதேசங்களையும், பொருளாதார வளர்ச்சி நோக்கினையுமே இத்திட்டம் குறியாகக் கொண்டதாகும் என்பதைச் சுட்டிக் காட்டினார். பரந்துபட்ட கடற்கரைப் பகுதியையும் தொலைதூரம் பரந்து கிடக்கும் தீவுகளையும், நீர்மக்கரிமங்கள், கனிமங்கள், கடல்படு திரவியங்களை மிகப் பெருமளவு உள்ளடக்கிய பொருளாதார வலயங்களையும் உள்ளடக்கியுள்ள நிலையில் அவற்றைப் பாதுகாப்பதென்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியம் என்பது அவரின் கருத்து. அண்மைக் காலங்களில் அதன் அயல் நாடுகளினதும், மேற்கு நாடுகளினதும் பாதுகாப்புப் பகுப்பாய்வாளர்கள் இந்தியா தனது கடலாதிக்க விரிவாக்கத்தின் மூலம் தனது சக்தியை முனைப்பாக வெளியிடத் தொடங்கியுள்ளது என்றும் குற்றஞ் சாட்டுகிறார்கள். இந்தியக் கடற்படை தன் அயல் நாடுகளை அச்சுறுத்த முற்பட்டுள்ளதாகவும் செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன. இவற்றின் காரணமாகப் பாகிஸ்தான் தனது பாதுகாப்பு நிலைகளை வலிவாக்கவும், ஸ்திரப்படுத்தவும் மேற்கிலிருந்து நவீனத்துவமான ஆயுதங்களைப் பெறும் முயற்சியில் ஈடுபடுகிறது.

இந்தியாவுக்குச் சொந்தமாக உள்ள யுத்தக் கப்பல்களின் தொகை 125. இந்தத் தொகை உலகின் ஏழாவது இடத்தை வகிக்கின்றது. இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்கள் 18 நீர் மூழ்கிக் கப்பல்கள் சக்திவாய்ந்த ஏவுகணைகளைச் செலுத்தும் திறன் படைத்தவையாய்க் கடற் கரையில் நிறுவப்பட்டுள்ள மின்கலன்கள் என்பனவும் அதனிடம் உள்ளன. ஆனால் அதனது நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரப் பாதுகாப்புக்கு இரண்டு மடங்காக அதன் அயல் நாடுகளிடம் பாதுகாப்பணிகள் இருப்பதால் இந்தியக் கடற்படையின் முதன்மையான நோக்கம் தற்பாதுகாப்பாகவே உள்ளது.

சீனக் கடற்படையில் தொழில் புரிவோர் தொகை 2,60,000 ஆக இருக்கையில் இந்தியக் கடற்படையினர் 55,000 ஆக உள்ளனர். ஒப்பீட்டடிப்படையில் சீனாவின் எண்ணிக்கை மிகப் பாரியது. சீனரிடமுள்ள நீர்மூழ்கிகளின் தொகை 46. ஜப்பான் மிகுந்த தொழில் நுட்பம் வாய்ந்த 17 நீர்மூழ்கிகளைக் கொண்டிருக்கையில் வடகொரியாவோ 29 நீர் மூழ்கிகளுக்குச் சொந்தமாகியுள்ளது. அண்மையில் முன்பு கிழக்கு ஜேர்மனியிடமிருந்து 39 போர்க் கப்பல்களை இந்தோனேஷியா விலைக்குப் பெற்றிருக்கிறது. தென் கிழக்காசிய அரசுகளின் கூட்டு (Asean) நாடுகள் சமீபத்திய வருடங்களில் போர்க் கருவிகளைக் கொள்வனவு செய்வதிலே தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார மைய நோக்கினால் தமது கரையோரப் பகுதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதனையும் பிரதான நோக்கமாகக் கொண்டே இந்தக் கொள்வனவு முயற்சிகள் முனைப்படைந்துள்ளன. 1978 இல் 327 மில்லியன் டொலராகவிருந்த பாகிஸ்தானின் பாதுகாப்புச் செலவினம் 1993 இல் 2.87 பில்லியன் டொலராக அதிகரித்து விட்டது. கடந்த மூன்றாண்டுகளுக் கிடையில் தனது கடற்படை வலுவை அதிகரிக்க ஈரான் ருஷ்யாவிடமிருந்து 3 நீர்மூழ்கிகளைக் கொள்வனவு செய்தது. இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் நடமாட்டமும், கவனமும் குறைந்து வரும் இடைவெளியினை நிரப்புவதற்காகவே இந்த நாடுகள் தமது கடற்படைப் பலத்தினை அதிகரிப்பதில் ஈடுபடுகின்றன என்று சில பகுப்பாய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். கேந்திரக் குறிக்கோள்களை உள்ளத்தில் அமைத்துக்கொண்டு ஏற்கனவே பல நாடுகள் தொழிற்படத் தொடங்கி விட்டன.

இந்தியக் கடற்படை தனது கடற் பாதுகாப்புத் திட்டத்துக்கான கால எல்லையாகப் 15 ஆண்டு காலத்தைக் கொண்டதாக உள்ளது. நீர் மூழ்கிகள் மூலம் கடலின் அடிப்பாகத்தில் செயல் புரிவது என்பது எதிர்காலத்தில் சிக்கலானதொரு முக்கியத்துவத்தைப் பெற்றதாகும். இந்திய அரசு நீர்மூழ்கித் திட்டத்தை இடையில் போட்டிருந்து சிறிது காலத்தைக் கடத்திய போதிலும் மீண்டும் அதன் கவனம் அந்தத் துறையில் இறங்கி உள்நாட்டிலேயே தயாரித்த ஷண்குலின் வடிவமைப்பு எஸ்.எஸ்.கே வகை 1,500 என்ற ஜேர்மனிய நீர்மூழ்கி வடிவமைப்பில் அமைத்துக் கொண்டதாகும். 1970 வரை இந்திய கடற்படை தனக்கு வேண்டியவற்றைக் கொள்வனவு செய்து வந்த நிலை இன்று மாறி உருவாக்கும் நிலைக்கு உயர்ந்து விட்டது.

ஷண்குல் விஞ்ஞான உருவாக்க நிகழ்வடிப்படையில் உயர்தரமான தொழில் நுட்ப நிபுணர்களும், திறமையாளரும் கொண்ட குழுவினால் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவின் கப்பல் கட்டும் திறனுக்கு எடுத்துக்காட்டாகும். என்.எஸ்.ஷிசுமர் ஐ.என்.எஸ் ஷல்கி என்ற இரண்டோடு பயங்கர ஆயுத பலம் வாய்ந்த மூன்றாவது நீர்மூழ்கியாக இது விளங்குகிறது. இதன் வேக அளவு 20 நொட்கள்; 40 பேரைக் கொண்டு கடலில் வேறு துணை வேண்டாது போர் நடவடிக்கையை மேற்கொள்ளும் தன்மை உடையது இது. ஆயுதக் கட்டுப்பாடு மிகவும் தொழில் நுட்பத் திறனோடு கூடியதாகும். ருஷ்ய வடிவமைப்பில் கிலோவகுப்புக் கொண்ட ஏழு நீர்மூழ்கிகளும், ஃபொக்ஸ்றொட் வகுப்புக் கொண்ட எட்டு நீர்மூழ்கிகளும், ஜேர்மனிய வடிவமைப்பில் இரண்டு நீர்மூழ்கிகளும், இந்தியக் கடற்படைக்குச் சொந்தமாக உள்ளன. அணுச் சக்தியால் இயங்கும் சக்திவாய்ந்த நீர்மூழ்கி 'சக்ர' ருஷ்யாவிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டு 1991 இல் மீளளிக்கப்பட்டது. ஆனால் அணுச் சக்தியியக்க நீர்மூழ்கியைத் தயாரிக்கும் திட்டம் உள்ளது. இந்த ரக நீர்மூழ்கிக் கப்பல்கள் கடலடியிற் செயற்படும் மிகச் சக்தி வாய்ந்தவையாகும். இன்று இந்தியா மேலதிகமாக உருவாக்கியுள்ள அணுச் சக்தி கொண்டு இயக்கப்படாத நீர்மூழ்கி போர்க் கப்பல்களிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது. அண்மைக்காலச் செயற்பாடுகளின் போது இதுபோன்ற நீர்மூழ்கிகள் தமது சுதந்திரமான இயக்கத்தினால் கடலடி நடவடிக்கைகளில் கூடிய நேரத்திற்கு ஈடுபடக் கூடியவையாகவே உள்ளன. கரந்து நடவடிக்கையில் ஈடுபடுவதில் நீர்மூழ்கிகள் ''மிகப் பயங்கரமான ஆயுதங்களாக''ப் பயன்பட வல்லன என்பதில் வியப்பில்லை. கேந்திர நோக்குநர் இத்தகைய நீர்மூழ்கிகள் 12-15 வரை இந்தியக் கடற்படைக்கு அதன் நடவடிக்கைகளின் போது தேவைப்படும் என்கின்றார். இந்தியக் கப்பல் கட்டும் தளம் இரண்டாண்டுகளில் ஒரு நீர்மூழ்கியை உருவாக்கும் திறன் படைத்துள்ளது. வான் பாதுகாப்புக் கப்பல் (Air Defence Ship)ஒன்றைச் செய்வதற்கு 10 வருடங்கள் தேவைப்படும். ஆனால் இவற்றிற்கு வேண்டிய பண உதவி உடனுக்குடன் கிடைக்க வேண்டும். ஆனால் இந்திய கடற்படை மொத்தப் பாதுகாப்பு நிதியிலிருந்து 11.9 நூற்று வீதத்தையே பெற்று வருகிறது.

எவ்வாறாயினும் ஒதுக்கீட்டு நிதியக் கட்டுப்பாட்டிலிருந்த தேவைக் கட்டளைகள் உறுதியாகக் கிடைக்காதாயின் வேலைகள் நிறுத்தப்படும் தேக்க நிலைக்கு உள்ளாகும். நாட்டின் முதன்மையான கப்பல் கட்டும் நிறுவனமான 'மசகோன் டொக்ஸ்' மூடப்படும். இப்பொழுதே வேலைகளுக்கான சில அலகுகள் வேலையின்றிக் கிடக்கின்றன. அரசு அடுத்த நீர்மூழ்கித் தயாரிப்பை ஆரம்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி வழங்காவிட்டால் கப்பல் கட்டும் தளம் வேலையற்றுச் சோம்பிக் கிடக்கும். நீண்ட காலம் காட்டப்படாதிருந்த பச்சைக் கொடி விரைவில் காட்டப்படும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கி விட்டன. எனவே மீண்டும் நீர்மூழ்கி கட்டும் வேலை கூடிய விரைவில் ஆரம்பமாகலாம்.

இந்திய விஞ்ஞான நிபுணர்கள் அணு சக்தியால் இயங்கும் நீர்மூழ்கி பற்றிய தொழில் நுட்ப ஆய்வில் இறங்கி விட்டனர். இவர்களின் ஆய்வு முடிவுகள் அணுவியக்க நீர்மூழ்கிகளை உற்பத்தி செய்ய உதவும். இதற்கான வடிவமைப்பு ருஷ்யாவிடமிருந்து பெறப்பட்டுள்ளது. ருஷ்ய நீர் மூழ்கியை மீளளித்ததும் முன்பு அதனைக் குத்தகைக்குப் பெற்றுக் கையாண்டதும் இந்தத் துறையிலே குறிகாட்டியாய் விளங்குகின்றன.

போதிய அளவு நீர்மூழ்கிகளைப் பெற்றிருத்தல் இந்தியாவிற்கு எதிராக எடுக்கப்படும் இராஜதந்திரத்தினை முறியடிக்க உதவும். ஷண்குலின் இயக்கத்தைத் தொடக்கி வைத்த பிரதமர் இந்தியாவின் கடற் படைப் பலம் அதன் தற்பாதுகாப்பையே நோக்காகக் கொண்டு வளர்த்தெடுக்கப் படுவதாகக் கூறியுள்ளார். எழுகின்ற அச்சங்களைத் தணிப்பதற்காய்ச் சூழவுள்ள கடற் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதோ, மற்றவர்களின் சட்ட பூர்வமான உரிமைகளை மறுப்பதோ தமது அரசின் நோக்கமன்று என அவர் கூறியுள்ளார். ஆனால் அதே சமயம் நாட்டின் தன்னாதிக்கத்தை ஊறுபடுத்த மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையையும் எதிர்கொண்டு அத்தகைய மீறல்களை முறியடிக்கவும் இந்தியா முனையும். ஆனால் இந்தியாவானது தென்னாசிய, பிராந்திய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளதென்பது தான் உண்மை.

*புரொண்லைன் ஜூலை, 1994*

★

# புகழ்பூத்த திம்புவைத் தலை நகராகக் கொண்ட பூட்டானிலும் இனக்கலவரங்கள்.

**1975** ஆம் ஆண்டு பூட்டானின் மேற்கு எல்லை நாடான சிக்கிம் தன்னாட்சி இழந்த நிலையில் இந்தியாவின் கீழ் வந்துள்ளது. சிக்கிமின் சனத்தொகையில் 75 வீதமாக இருந்த நேபாள மக்கள் கலகம் விளைவித்ததால் அதை அடக்க சிக்கிம் மன்னர் இந்திய இராணுவத்தின் உதவியை நாடியதால் வந்த வினையாகும். நாட்டிற்குள் பிரவேசித்த இந்தியர்கள் கலகத்தை அடக்கிவிட்டு மக்கள் கருத்துக் கணிப்பு (Referendum) ஒன்றை நடத்தியுள்ளனர். இந்த வாக்கெடுப்பில் 97 வீத மக்கள் இந்தியாவுடன் சேர வாக்களித்தபடியால் இந்தியா இதை மறுக்காமல் சிக்கிம் நாட்டைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டுள்ளது.

இந்தியர்கள் வெகு சாமர்த்தியமாக நடத்திய மேற்படி நாடகம் பூட்டான் மன்னரைக் கிலி கொள்ளச் செய்துள்ளது. பூட்டானில் நடப்பது சர்வாதிகார மன்னர் ஆட்சி. இத்தகைய சர்வ வல்லமை பொருந்திய மன்னர் ஆட்சி இன்று உலகில் மறையத் தொடங்கியுள்ளது. 300 வருடங்களுக்கு மேல் திபெத்திய மதகுருமார் பூட்டானில் நடத்திய பரம்பரை ஆட்சியை, 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்து முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. ஆட்சியாளர்களுக்குக் கீழ் பிரதிநிதியாக அப்போது இருந்த சேர் உக்யென் வான்ங்சூக் (Sir Ugyen Wanchuk) என்பவரை பிரிட்டிசார் மகாராஜாவாக அரியாசனம் ஏற்றி வைத்தனர். இன்றைய அரசர் அவருடைய வம்சா வழியினராவார்.

ஆசியாவின் இரு பெரும் நாடுகளுக் கிடையில் அகப்பட்ட நாடு பூட்டான். வடக்கில் சீனா, மேற்கில் இந்தியா விழுங்கிய சிக்கிம், தெற்கிலும், கிழக்கிலும் மீண்டும் இந்தியா. பூட்டானின் வர்த்தகம் இந்தியாவின் கையில் இருக்கின்றது. பூட்டானின் வெளி விவகாரங்கள் இந்தியாவின் பொறுப்பிலேயே காணப்படுகின்றது. அரசர்

**“ சிக்கிம் நாட்டின் கதி எமக்கு வந்துவிடக் கூடாது.”**

**— பூட்டான் மன்னர் வான்ங்சூக்**

உள்நாட்டு அலுவல்களை மாத்திரம் கவனிக்கின்றார். பெருந்தொகை பூட்டான் மக்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். நெல், ஏற்றுமதி செய்யுமளவுக்கு அவர்களிடம் உண்டு. யாக் எனப்படும் எருமையைப் போன்ற மிருகமும் ஆடுகளும், கம்பளி மயிர் ஆடுகளும் பால், இறைச்சி, மயிர் என்பவற்றிற்காக வளர்க்கப்படுகின்றன. புதிய தலைநகர் திம்பு இந்திய பொறியியலாளர்களால் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப பள்ளிக்கூடங்கள், நடுத்தர பள்ளிக்கூடங்கள் மாத்திரம் காணப்படுகின்றன. இங்கு இந்திய ஆசிரியர்கள் கடமை ஆற்றுகின்றனர். மேற்படிப்புக்காக வசதி படைத்தோர் இந்தியாவுக்குச் செல்லுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 ஆம் ஆண்டு தொடக்கம் பூட்டானை 20 ஆம் நூற்றாண்டுக்கு அறிமுகம் செய்யும் பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெருந் தெருக்கள், மருத்துவமனைகள் ஆகியவை கட்டும் வேலைகள் இக்கால கட்டத்திலேயே தொடங்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்தும், நேபாள நாட்டிலிருந்தும், பெருந் தொகையான தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். தமது நாட்டில் நிலவும் வறுமையிலிருந்து தப்புவதற்காக நேபாள நாட்டுமக்களே கூடுதலாகப் பூட்டானுக்கு இவ்வாறு வந்துள்ளனர். இவர்கள் திரும்பித் தமது நாட்டிற்குச் சென்றதற்கு ஆதாரம் ஏதேனும் இல்லை.

இன்று இருக்கும் நிலையில் பூட்டானின் 6,50,000 மக்கள் தொகையில் நேபாள மக்கள் 30 வீதமாக இருக்கின்றனர். தெற்குப்புற பூட்டானில் அங்கு வாழும் மக்களில் இவர்கள் 50 வீதம் வகிக்கின்றனர். நேபாள மக்களின் வருகையையும் வளர்ச்சியையும் பூட்டான் அரசரும், பூட்டான் வாசிகளும் அச்சத்துடன் நோக்குகின்றனர். "எமது பண்பாடும் சுதந்திரமும் ஆபத்து நிலை அடைந்துள்ளன" என்று பூட்டான் அரசர் கூறியுள்ளார். அவர் மனதில் சிக்கிம் உதாரணம் நிலைபெற்றுள்ளது. இதற்குத் தூபமிடுமாற் போல் நேபாள இளைஞர்கள் சிலர் "பூட்டானில் ஒரு குர்கா நாட்டை நிறுவ வேண்டும்" எனச் சூளுரைத்துள்ளனர்.

1988 ஆம் ஆண்டு தொடக்கம் அத்துமீறிக் குடியேறிய நேபாள மக்களை வெளியேற்றும் நடவடிக்கை என்ற போர்வையில் அங்கு நெடுங்காலமாக வசிப்பவர்களுக்கும் எதிராக நாட்டை விட்டு வெளியேற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான நேபாள மக்கள் இவ்வாறு பூட்டான் அரசால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இன்னும் பலர் அரச பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலால் தாமாகவே நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அமெரிக்க அரசு வெளியிட்ட அறிக்கை, "சட்டபூர்வமற்ற சிறைப்பிடித்தல், சித்திரவதை, பெண்கள் மீது கற்பழிப்பு, கொள்ளை போன்ற நடவடிக்கைகள் பூட்டான் பொலிஸ் மற்றும் இராணுவத்தால் நேபாள மக்கள் மீது நடத்தப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கின்றது. வெளியேற மறுத்தவர்கள், கடும் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் மேற்படி அறிக்கை கூறுகின்றது. 1989 ஆம் ஆண்டு பூட்டான் அரசர் வெளியிட்ட சட்டத்தில், "பூட்டானில் தங்க அனுமதிக்கப்படும் நேபாள மக்கள் பூட்டானின் தேசிய மொழியைப் பயில வேண்டுமென்றும், நாட்டின் தேசிய உடையை மாத்திரம் அணிய வேண்டும் என்றும், பொது வாழ்வில் எல்லா விதத்திலும் பூட்டானின் தேசிய பண்பாட்டைப் பின்பற்ற வேண்டும்" என்றும் அறைந்து கூறப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் பின் அதிகார பீடத்திற்கு நெருக்கமாக இருந்த பல மேட்டுக் குடி நேபாள மக்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். நாடு கடந்த பூட்டான் மக்கள் கட்சி என்ற இயக்கத்தையும் இவர்கள் ஆரம்பித்துள்ளனர். "சர்வாதிகார மன்னனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் தகுந்த பாடம் புகட்டுவோம். எம்மக்கள் மீது நடத்தப்படும் அடக்கு முறையை ஒழிப்போம்" என்று அவர்களின் அறிக்கை கூறுகின்றது.



தெற்குப் பூட்டானில் வசிக்கும் நேபாள மக்கள்

முறுகல் நிலையைத் தணிப்பதற்காக நேபாள அரசும் பூட்டானும் ஜூன் மாதம் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன. நெடுங் காலம் பூட்டானில் இருந்த பின் நாட்டை விட்டு வெளியேறிய நேபாள மக்களை ஏற்றுக்கொள்ள பூட்டான் சம்மதம் தெரிவித்துள்ளது. ஆனால், யார் நெடுங்காலம் சட்டபூர்வமாக பூட்டானில் குடியிருந்தவர்கள் என்பதைக் காட்டும் ஆவணங்கள் ஒருவரிடமும் இல்லை. கிழக்கு நேபாளத்தில் ஐ. நா. எட்டு அகதிகளுக்கான முகாம்களை நடத்துகின்றது. இங்கு 85,000 அகதிகள் பராமரிக்கப்படுகின்றார்கள். ஐ. நா. செய்து கொடுக்கும் வசதிகளால் கவரப்பட்டு இந்தியாவிலிருந்தும், நேபாளத்திலிருந்தும் பல வசதி குறைந்தோர் இந்த முகாம்களில் புகலிடம் தேடியுள்ளனர். இவர்களெல்லாம் பூட்டானுக்குள் பிரவேசிக்கத் தகுதியற்ற

**பூட்டான்**

**தலை நகர்**
திம்பு

**பரப்பு**
46,500 ச. கி. மீ

**மக்கள் தொகை**
16 கோடி (1992)

**மொழி**
ஷொங்கா, நேபாளி

**எழுத்தறிவு**
15 %

**சமயம்**
புத்தம், இந்து

**நாணயம்**
குல்ட்ரம்
(ஒரு டொலர் = 31 . 94)
இந்திய ரூபாவும் சட்டபூர்வமாகப் பயன்படுத்தப் படுகிறது.

**தனிநபர் வருமானம்**
190 டொலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் என்று பூட்டான் அரசு தெரிவித்துள்ளது. ஓர் உயர் ஐ. நா. அதிகாரி இது உண்மையென ஒத்துக் கொண்டுள்ளார். மேற் கூறப்பட்ட தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இந்தியா அல்லது நேபாளத்தின் ஏழைகள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பூட்டான் அரசும் பூட்டான் மக்களும் நேபாள மக்கள் மீது நடாத்தும் தாக்குதல்கள் தற்போது பெருமளவுக்குக் குறைந்துள்ளன. ஆனால், கடும் சினம் கொண்டுள்ள குர்கா இளைஞர்கள் ஓயவில்லை. அவர்கள் பதில் தாக்குதல்களை இப்போது நடத்தி வருகின்றனர். அண்மையில் திக்கமாயி கிரி என்ற பெண்மணியின் கணவரின் துண்டிக்கப்பட்ட தலை, அவர் வீட்டு வாசலில் போடப்பட்டிருந்தது. பூட்டான் நாட்டில் வாழும் திக்கமாயி, இதைச் செய்தது குர்கா இளைஞர்கள் தான் என்று குற்றம் சாட்டியுள்ளார். அந்தப் பெண்மணி கூறுவது யாதெனில், '' இதைச் செய்தவர்கள் குர்கா கிரிமினல்கள். எம்மை மிரட்டி நாட்டை விட்டு வெளியேறச் செய்வதே அவர்களின் நோக்கம்.'' இந்த அபிப்பிராயம் பூட்டான் அரசாலும், இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் சாமீர் பால் அவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. '' அவர்களுடைய திட்டம் என்னவென்று நன்றாகத் தெரிகின்றது. மக்களைக் கூடுதலாக வெளியேற்றுவது, உலகின் கவனத்தைக் கவருவது, பூட்டான் அரசு மீது அழுத்தங்களைக் கொண்டு வருவது, குடியுரிமை சட்டங்களை வலுவிழக்கச் செய்வது, இத்தியாதி'' என்கிறார். பத்திரிகையாளர் சாமீர் பால்.

இந்தக் கலவரங்களில் நேபாளம் மாத்திரம் பெரும் நன்மை அடைந்து உள்ளது. தனியாரும் அரசுகளும் அகதிகளைப் பராமரிக்கவென நேபாளத்திற்குப் பணமாகவும் பொருளாகவும் அனுப்பிய வண்ணம் இருக்கின்றனர். இப்பணமும், பொருளும் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்று ஒருவரும் கவலைப்படவில்லை. ஐ.நா. மாத்திரம் ஏதோ தன்னால் இயன்றதைச் செய்கின்றது. மாசுபடாத இயற்கை வளம்நிறைந்த நாடெனப் பூட்டானுக்கு நெடுநாளாகப் பெயருண்டு. ஆனால், இயற்கை எவ்வாறு இருப்பினும் பூட்டானின் நற்பெயர் கெட்டுவிட்டதை யாரும் மறுப்பதற்கில்லை. அமைதிக்கும், அமைதிப் பேச்சுக்களுக்கும் களமாக இருந்த நாடு இன்று கொலைக் களமாக மாறியுள்ளது வேதனை தரும் செய்தியே.

ஆதாரம் : நியூஸ் வீக்
யூன் 13, 1994

●

ஜப்பான்

## முன்னாள் பிரதமர் பதவி விலகியது நிதி ஊழலால் மட்டும் அல்லவாம்.

சில மாதங்களுக்கு முன்பு ஜப்பானிய பிரதமர் மொறிஹீறோ பதவி விலகிய போது அவர் தனது சொந்த நிதி விடயங்களில் சில முறைகேடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்காக அப்படிச் செய்ததாகக் கூறினார்கள். ஆனால் அவர் அப்படிச் செய்வதற்கு நிதி ஈடுபாடு மட்டுமே தான் காரணமாகாது. அவருக்குப் ''பெண் தொடர்பாலும்'' அது ஏற்பட்டிருக்கலாம். சென்ற வாரம் ஜென்டாய் என்ற வார இதழ் ஒன்று ஹொசகாவா ஆளுநராக இருந்த தென்பகுதி மாகாணமான குமாமோடோவில் இருந்து ஹொசகாவாவின் சட்டபூர்வப் பிரதிநிதியும் ஒரு மதுபானக் கடைப் பணிப்பெண்ணும் 1971 இல் ஒப்பமிட்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரதியொன்றைப் பெற்றுப் பிரசுரித்திருந்தது. அந்த ஒப்பந்தம் அந்தப் பெண் தன்னுடன் தொடர்பு வைத்திருந்த ஒருவர் எதிர்காலப் பிரதமராக வரும் போது அதுபற்றிய செய்தியேதும் சொல்லாமல் இரகசியமாக இருப்பதற்காக அந்தப் பெண்ணுக்கு 600,000 யென் பணம் தருவதாகக் கூறுகிறது. ஹொசகாவா தனது அரசியற் பதவி உயர்வைக் கட்டியெழுப்பியபோது அந்த ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றானது. ஆகவே 1986 இல் ஹொசகாவாவின் அலுவலகம் அந்தப் பெண்ணுக்கு மேலும் 5 மில்லியன் யென் கொடுத்து அந்த ஒப்பந்தத்தின் அந்தப் பெண்ணுடைய பிரதியை விலைக்கு வாங்கியதாம் என்று அந்த வார இதழ் மேலும் கூறுகிறது இது வெளிவந்த பின்பு பல செய்தி நிருபர்கள் ஹொசகாவாவுடன் தொடர்புகொள்ள முயன்றும் இயலாமற் போனதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளம் உல்லாசப் பயணத்துறையில் தனது முன்னைய கவர்ச்சியை இழக்கிறது.

காத்மண்டுவின் (நேபாளத்தின் தலைநகர்) தலைசிறந்த உல்லாச விடுதி கசினோ எவரெஸ்ற், அங்கு சீட்டுச் சூதாட்ட விளையாட்டுக்கான ஆடம்பர மேசையில் சீட்டுக்கள் வழுக்குவதுபோல, நேபாளத்தின் உல்லாசப் பயண வருவாயும் வழுக்கிக் கொண்டிருக்கிறது. இந்த வழுக்குதலில் அரசினால் இழக்கப்படவுள்ள பணம் 61 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதால், ளெளிநாட்டு உல்லாசப் பயணிகளை நம்பி விடுதிகள் நடத்தி வருபவர்களும், பயண வழிகாட்டிகளும் அதிர்ச்சிக்குள்ளாகின்றனர். 1992 தொடக்கம் நட்டத்தில் சென்று கொண்டிருக்கும் உல்லாசப் பயண வருவாயை, மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, அதிர்ஷ்டப் புதையலாய் மாற்றுவதில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

ஒரு காலத்தில், நேபாளத்தின் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பதில் மிக உச்சமாக இருந்தது உல்லாசப் பயண வருவாய்தான். ஆண்டுதோறும், அரசிறையாக உல்லாசப்பயணிகள் மூலம் கிடைத்த 61 மில்லியன் டொலரைப் பின்தள்ளிக்கொண்டு கம்பள ஏற்றுமதியால் 200 மில்லியன் டொலர் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ள உல்லாசப் பயணத் துறையை, இன்று நேபாள அரசு மற்றைய தொழில்களை வளர்க்க ஓர் உபகாரணியாகவே கருதுகின்றது. இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு கடக்கமுடியாதுள்ள பாதைகளைச் சீரமைத்தல், மின்சார விநியோகம், தொலைத் தொடர்புச்சாதன அபிவிருத்திகளை ஏற்படுத்தி அவற்றின் ஊடாகப் பல புதிய கைத்தொழில்களைப் பரவலாகத் தொடங்கலாம் என்பதே காத்மண்டுவின் நோக்கம். எனவே இதற்காகவென்றாலும், கீழ்நோக்கிச் செல்லும் உல்லாசப் பயணத்துறைக்குப் புத்துயிர் அளித்தாகவேண்டும்.



1992 இல், நேபாளத்தில், சிரமம் நிறைந்த பயணத்தை மேற்கொண்ட உல்லாசப் பயணிகளின் தொகை 330, 000. ஆனால், இப்பொழுது, அந்தத் தொகை 220, 000 ஆக வீழ்ச்சி கண்டுவிட்டது. கைத்தொழிற் பகுப்பாய்வாளரின் கணிப்புப்படி இத்தொகை மேலும் வீழ்ச்சியடையலாம்.

எழுதியவர் :
— யக். சுரையா —

எதார்த்தமானவையும் வெளிக்குப் புலனாவனவுமான அரசியற் குழப்ப நிலைமைகளால் இந்தியாவிலும் நேபாளத்திலும் பாதைச் சீரமைப்பு முயற்சிகள் குறைவுற்றபோதிலும், திட்டமிடாத முறையில் கிடைக்கும் வெற்றியைப் போன்ற தோல்வி வேறு இல்லை என்னும் காலங்கடந்த சுடலைஞானமே பிரச்சனையின் முதன்மையான பகுதியாகும். 1960 களில் ஆன்மீக அநுபூதி, மலைகள், உயர்சந்தைகள் என்ற இவற்றின் கலவைத் தன்மை காரணமாக நேபாளமானது, சமகால நாடுகாண் போருக்கு ஜெட் விமானகால சங்ரில்லாவாக விளங்கியது உண்மையே. அக்காலத்திலிருந்து வளர்ச்சியடைந்த உல்லாசப்பயணிகள் வரவு 1980 களில் உன்னத நிலையை அடைந்திருந்தது.

ஆனால், ஆயிரக்கணக்கில் காத்மண்டுவின் நெருக்கம் நிறைந்த ஒழுங்கைகளில் வந்து குவிந்தவர்களுக்குக் கடந்தகாலம் நிகழ்காலத்துக்கு விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்கவில்லை. நின்றும் கிடந்தும் பாதையைத் தடை செய்த எருதுகள் பெருந்தொகையாக வந்த காட்சியாளர் குழுக்களின் டொயோட்டிகளுக்குத் தடையாயிருந்து அதேவேளை, இறக்குமதியான நவீன பொருள்களும் பழைமையான அரும்பொருள்களும் கலந்து குழம்பிக் கிடந்த கடைகளும், ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்ட பொருள்கள் நிறைந்த கடைகளும் வியாபாரத்துக்குத் தயார் நிலையிலிருந்தன. பெரும் பணம் செலவு செய்து நேபாளத்தின் புனிதத்தையும், தனித்து நிற்கும் இயல்பையும் காண வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC ... CHUNDIKULI BRANCH LIBRARY



# பயணத்துறை வருவாயில் ஏற்படும் இழப்பைச் சரிசெய்ய வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் முயற்சி

பயணிகள், ஆடம்பரமும் உல்லா சமுமே நோக்காக வந்த சனக்கூட்டத்தில் தம்மை இழந்து கரைந்து போக நேரிட்டது.

இத்தகைய மோசமான சூழ்நிலையை எடுத்துக் காட்டும் வகையில் நியூஸ்வீக் சஞ்சிகை வெளியிட்ட ''சங்ரில்லாவிற்குப் பிரியாவிடை'' என்ற கட்டுரை அமைந்தது. அந்தக் கட்டுரையில் காத்மண்டுவில் பெருகிவரும் 'சூழல் மாசுபடல்' விரிவாகச் சுட்டிக் காட்டப்பட்டது. இந்தச் செய்தியால் அச்சுறுத்தப்பட்ட காத்மண்டுவாசிகளும், பயணிகளாக வந்தோரும் சூழ்நிலை மாசுபடலிலிருந்து தப்பிக் கொள்ளப் பாதுகாப்பு முகமூடி அணிந்தனர். ஆனால், பெரும்பாலானோர் இது எதார்த்த நிலைக்கு அப்பாலான கற்பனை என்றே கொண்டனர். சூழல் மாசுபட்டதோ மாசுபடவில்லையோ, புகாரும் புகையும் நிறைந்த காத்மண்டு புதிதாக வருகைதருவோரின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டது என்பது மட்டும் உண்மை. நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் மூன்றாவது உலக வருகையாளருக்கான உள்நுழை அனுமதிக்கட்டணமாக 40 அமெரிக்க டொலரையும். திரிபுவன் விமானத்தளத்திலிருந்து திரும்பித் தம்நாடு செல்வோரிடம் 13 டொலரையும் ( 600/- ) அரசு வரியாக அறவிடுவது அமைந்தது.

1960 இலிருந்து உல்லாசப் பயணம் எனபது ஒரு தொழில் என்று பெயரிடப்பட்டபோதிலும், நேபாள அரசு அதனைத் தரமுயர்த்தக் கூடிய கொள்கையாக்கம் எதனையும் இதுவரை கடைப்பிடிக்கவில்லை. அண்மையில் உருவாக்கப்பட்ட உல்லாசப் பயணத் தரமுயர்த்தல், முன்னேற்றம் தொடர்பான குழுவை உதாரணமாக எடுத்துக்கொண்டால் பெருந்தொகையான கைத்தொழில் தொடர்பான பேச்சாளர்கள், அது சிலராட்சி மேலாண்மை கொண்ட ஒன்று என்று கண்டித்து அதன் செயற்பாட்டை நிறுத்தி விட்டனர். உல்லாசப் பயணத் தரமுயர்த்தலுக்கென ஒதுக்கப்பட்ட 3 மில்லியன் ரூபாய்கள் அரசினாலும் தனியார் நிறுவனங்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இந்தப் பணம் கொண்டு எவ்வகையிலும் ஓர் அழுத்தமான பதிவினை ஏற்படுத்தல் இயலாது என்று கருதப்பட்டது. ''சர்வதேசத் தொடர்புச் சாதனங்கள் மூலம் விளம்பரம் செய்ய இந்தப் பணம் ஒரு வாரத்திற்கே போதியதல்ல'' என்று காத்மண்டில் அமைந்த உலகப் பயணப் பிரச்சார நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் டப்பி பாகெட் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசியலும் உல்லாசப் பயணிகளை முதன்மைப்படுத்தி ஊக்குவிப்பதில் மிக மெதுவாகவே தொழிற்படுகிறது. உல்லாசப் பயணத்தை அரசுடன் இணைத்து நடவடிக்கை மேற்கொள்வதற்கெனத் தயாரிக்கத் தொடங்கிய நகல் திட்டம் பூர்த்தியடைந்து விட்டாலும், அத்திட்டம் பிரதமரான கிரிஜா பிரசாத் கொய்ராலாவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. அவரோ பிரதமர் மட்டுமின்றி தேசிய உல்லாசப் பயண சபையின் தலைவருமாவார். ''பிரதமர் இதனிலும் முக்கியமான வேறு விடயங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று உல்லாசப் பயண அமைச்சர் இராம் ஹரிஜோஷி கூறுகிறார். ஆட்சியிலிருக்கும் தேசிய காங்கிரஸ் கட்சிக்கு, வெளியிலும் கட்சிக்கு உள்ளேயும் எதிர்ப்புக்கள் உச்சக் கட்டத்தினை அடைந்து வருகின்றன.

உல்லாசப் பயணம் தொடர்பான தெளிவான கொள்கையாக்கம் தேவைப்பட்டபோதிலும் அதற்கான விடுவிப்பு எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. திட்டவட்டமான விதிமுறைகள் எவையும் மேற்கொள்ளப்படவுமில்லை. உலகின் இரண்டாவது விமானத் தளத்தை அமைப்பதன் மூலம் காத்மண்டுவின் பயண நெருக்கடிகளை எளிதுயடுத்த வகுத்த திட்டம் எப்படித் திட்டமளவிலேயே செயற்பாடின்றி நீண்டுகொண்டிருக்கிறதோ அதுபோன்ற தாமத நிலைதான் இது.

''உல்லாசப் பயணத்துறையென்பது கறவைப் பசுபோலப் பணமீட்டுவதற்கான ஒன்றென்ற கருத்தே நிலவுகின்றது. ஏனெனில் அது ஆடம்பரச் செலவினத்துக்குரியதென்ற படிமத்தைக் கொண்டிருப்பதுதான்'' என்கிறார் யோகேந்திரா சாக்யா. இவர் நேபாளத்திலுள்ள 18 அங்கத்தவரைக் கொண்ட உல்லாச விடுதிச் சங்கத்தின் தலைவர். அரசாங்கம் இதன் மூலம் எந்த அளவிற்குப் பெறமுடியுமோ அந்த அளவிற்குப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாயிருக்கிறது. மாற்றாக எதனையும் கொடுக்க அது தயாராயில்லை.

உள்நாட்டு உல்லாசப் பயண வரலாற்றில் சமாந்தரப் போக்கினை எடுத்துக்காட்ட சாக்கியாவின் விருந்தினர் விடுதியின் தோற்றத்தையும் வளர்ச்சியையுமே கூறினால் போதும். 1971 இல் அவர் தமது வீட்டிலே சிறிய அளவில் தொடங்கிய அந்த விடுதி இன்று 115 அறைகள் கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ளது. அறைகளின் ஒரு நாள் வாடகை 2 அமெரிக்க டொலரிலிருந்து 23 டொலர் வரையானது. இவருடையது போலவே தான், தமெல் மாவட்டத்திலுள்ள மற்றைய உல்லாச விடுதிகளுமாகும். இவை நேபாள உணவு வகையிலிருந்து பலநாட்டுப் பல இனத்தவரின் உணவு வகைகளையும் தயாரித்து அளிப்பனவாகவும், சுகந்த மணமூட்டப்பட்ட அறைகளைக் கொண்டனவாகவும், பொருள் கொள்வனவுக் கடைகள் கொண்டனவாகவும், சிற்றுண்டிச் சாலைகள் அமைந்தனவாகவும் விளங்குகின்றன.

ஆனால், தமெல் மாவட்டத்திற் போலவே, மற்றைய நேபாளத்து மாவட்டங்களில் உள்ள பயணிகளைக் கவரும் மையங்களும் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன. ஆனால், சாக்யாவின் கருத்துப்படி வெளிநாட்டுப் பயணிகளை மட்டுமன்றி, இந்தியக் குடும்பங்களையும் கவர்ந்திழுக்கின்ற காட்சி மையங்கள் பல நேபாளத்தில் உள்ளன என்பதற்கு ஐயம் இல்லை. காத்மண்டுவிற்குப் புறத்தேயுள்ள நகர்கோட்டே கடல் மட்டத்திலிருந்து 2160 மீற்றர் உயரத்தில் உள்ளது என்ற இடத்தில் அபூர்வமாக எவரெஸ்ட் சிகரத்தையே கண்டுகளிக்கும் வாய்ப்புண்டு. வேறு எதுதான் இல்லாவிட்டாலும் இந்தக் காட்சி ஒன்றே உல்லாசப் பயணத்தின் பயனாகப் பெறக்கூடியதாகும். இவ்விடத்தில் சாக்கியா 50 அறைகள் கொண்ட ஆடம்பர உல்லாச விடுதி ஒன்றைத் தொடங்கியுள்ளார். இவர்போலவே தொழிற் பிரமுகரான ஷியாம் பண்டே என்பவரும் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு வெளியுறவு உல்லாசப் பயணத்திற்கும், இயற்கைக் காட்சிகளை இரசிப்பதற்கும் உதவும் வகையிலே ககாணி என்ற இடத்தில், சகல வசதிகளையும் கொண்ட விடுதி தொடங்கத் திட்டமிட்டுள்ளார். இமாலயத்தின் சூரியோதயத்தையும், அதன் நிழல் விழும் அருமையான காட்சியைத் தரும் வாவிகளையும் கண்டுகளிக்க வருவோருக்குத் தூண்டுதலை அளிப்பதே இவர் நோக்கம். ''அரசாங்கம் உல்லாசப் பயணத்துறையின் சார்பிலே அநுதாபம் கொள்ள வேண்டியதில்லை. எங்களை அத்தொழிலில் ஈடுபட அனுமதித்தால் அது ஒன்றேபோதும்'' என்கிறார் ஷியாம் பண்டே.

அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் உலகின் விழிகளைக் கவர்ந்திழுக்கவல்ல அதிசிறந்த இயற்கைக் காட்சிகளும், கவர்ச்சி மையங்களும் நேபாளத்தில் உண்டு என்பதால் அவைமூலம் தனக்குத் தானே ஆதரவளிக்கும் திறனை நேபாளம் பெற்றிருக்கிறது. ''எமது தனித்துவமான விற்பனைப் பொருள் எவரெஸ்ற் சிகரமே; அது உள்ளவரை நாம் நட்டம் அடையப்போவதில்லை'' என்கிறார் மகிழ்வூட்டும் உல்லாசப்பயண நிறுவனத்தின் உபதலைவர் உட்பல் சென்குப்தா. மற்றைய ஈர்ப்புக்களுள் நேபாளத்தூடாகத் திபெத் செல்லும் பயண ஒழுங்குகளை மேற்கொள்ள உதவுவதாலும் நேபாளத்திற்கு வருவாய் கிடைக்க வாய்ப்புண்டு. நேபாளம் திபெத் பாதையில் சுமார் 30 வீதம் இந்திய அரசினால் சீர்ப்படுத்தப்படாததனாலும், உல்லாசப் பயணிகளின் வரவுக் குறைவான காலங்களைச் சமாளிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

எவரெஸ்ற் சிகரத்துக்கு ஏறிச் சென்று சாதனைபுரிந்த சேர். எட்மண்ட் ஹிலாறி, ''சிரமம் நிறைந்த நேபாள வீதிகள் குப்பைக் குவியல்களால் நிறைந்து கிடக்கின்றன'' என்றார். ஆனால், 20 ஆண்டுகளாக நேபாளத்தின் இமாலயப் பிரதேசங்களில் பாதைச் சீரமைப்பாளராய்ப் பணியாற்றி வரும் ஸ்டான் ஆமிங்ரன், அவர் கூற்றை மறுக்கின்றார். நாட்டின் பெரும்பாலான பகுதிகள் துப்புரவாகவும், ஊறுபடுத்தப்படாதனவாகவும் உள்ளன என்பது அவர் கருத்து. தரைப்பகுதி விற்பனவு முகவர்களே எதிர்காலத் தொழில் வளத்தைச் சீர்கெடுக்க இவ்வாறு கதைகட்டுவதாக அவர் முடிவு செய்கிறார். பிறெய்ன் வைற் என்ற முன்னாட் கல்கத்தாவாசியும் இதே கருத்தையே கொண்டுள்ளார். அவர் திரிசூலி ஆற்றுப் பயணத்தை ஒழுங்கு செய்து வருபவர். ''இங்குள்ள அசுத்தமும், பழைமையும், இடிபாடுகளும் நிறைந்த விடுதிகள் மலிவானவையென்றாலும் உல்லாசப் பயணிகள் மீண்டும் வருவதற்குத் தூண்டுதலை அளிக்காது தடை செய்வனவாயுள்ளன'' என்கிறார் அவர். வேட்டைக்கென வருவோர், இயற்கைச் சூழலில் விலங்குகள், பறவைகள், மரம் செடிகொடிகளைக் கண்டு ஆய்வு நிகழ்த்த வருவோர் நீண்டநாள் தங்காது திரும்பி விடுவதும் உல்லாச விடுதி நடத்துவோருக்குக் கவலை தருகின்றது.

''எனினும் உல்லாசப் பயணிகளின் மூலம் வருவாயைப் பெறும் நம்பிக்கையை, அதன் தொடர்பான தொழில்களில் சிறப்பாக உல்லாச விடுதிகள் நடத்தும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் முற்றாக இழந்து விடவில்லை. முன்னைய வரவின் 60 வீதம் இவ்வாண்டு இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இந்த வீதாசாரம் அடுத்த ஆண்டில் 10 வீதத்தால் கூடலாம்'' என்கிறார் காத்மண்டு எவரெஸ்ற் உணவு விடுதியின் பொது முகாமையாளர் பட்ரி நமங், சூழல் மாசுபடல், அடிக்கடி மின்சார வெட்டு, என்பவற்றுக் கிடையில் மற்றைய விடுதி நடத்துவோர்களும் இவ்வாறே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நேபாள உல்லாசப் பயணத்துறை இன்றுள்ள நெருக்கடிகளைக் களைந்தேயாக வேண்டும். அவ்வாறு களையாவிட்டால் அது அந்நாட்டிற்கு பாதிப்பை உண்டாக்கும் என்பது நிச்சயம்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்குக் கயிற்றில் ஒன்றிணைப்பு

யேமன் நாட்டின் ஒன்றிணைப்பை அச்சுறுத்தும் வகையில் இடம்பெற்ற ஐந்துவாரச் சண்டையால் உண்டான பயன் பலத்த சேதம் என்பதைத் தவிர வேறு எதுவும் தெளிவாகப் புலப்படவில்லை. தெற்கு யேமனின் முன்னாள் அரசுப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மரணமடைந்தனர். 14 மில்லியன் சனத்தொகையே கொண்ட இடத்திலிருந்து 1 மில்லியன் மக்கள் அகதிகளாகும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர். நாள்தோறும் இருபகுதியிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள், தென் மத்தியில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களின் காதுகளைச் செவிடுபடுத்தின. வடக்குப் பகுதியில், தலைவர் அலி அப்துல்லா சலே அவர்களுக்கு விசுவாசமான படையினரால், 5,00,000 மக்களைக் கொண்ட நகரம் ஏறத்தாழச் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் இருந்தது.

யேமனின் வடக்கு, தெற்கு ஆகிய இருபகுதிகளும் 1990 ஒகஸ்டில் ஒன்றிணைக்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டு ஆதிக்கமானது சலேயினதும், அவரது ஆதரவாளர்சளதும் கைகளுக்கு மாறியதை எதிர்க்கு முகமாக, உப ஜனாதிபதி அலி — சலீம் — அல்பெய்ட் அரசிலிருந்து விலகினார். இந்நிலையில் சலேயுக்கும், பெயிடுக்கும் தனித்தனி விசுவாசமான படைகள் ஒன்றுடன் மற்றது மோதுவதில் ஈடுபட்டது. இந்த மோதலால் எல்லைப் பகுதி விரிவாக்கத்தில் வடக்குப் படையினருக்கு இலாபம் கிடைத்தபோதிலும், தெற்குப் படையினர் இன்னமும் வலுவான எதிர்ப்பைக் கொடுத்தே வருகின்றனர். எனவே முடிவு எவருக்கும் முழுமையான சாதகமாக அமையவில்லை என்றே கூறவேண்டும். முன்னைய லெப்டினன்ட் கேணலான சலே ஏடனைக் கைப்பற்றும் முயற்சியில் நாட்டு மக்களிற் பெரும்பாலோருக்கு மரணம் ஏற்படும் என்ற அச்சத்தால் தயக்கம் காட்டுகிறார்.



**யேமன்:**

**சவுதி அரேபியா உள்நாட்டுப் போரினை ஊக்குவிக்குமா?**

பெரும்பாலான யேமனியர் தமக்கு மிக அண்மையிலுள்ள சவுதி அரேபிய அயலார், இந்தச் சண்டை நீடிப்பை விரும்புவதாக நம்புகிறார்கள். "நாங்கள் எம் சொந்த மக்களோடு போராடுகிறோம். ஆனால் எங்களின் உண்மையான எதிரி சவுதி அரேபியாதான்'' என்று சனாவிலுள்ள மத்திய சந்தை (களிமண் கட்டிகளால் கட்டப்பட்டது) வர்த்தகரான அப்துல் அல் சுபேறி கூறுகிறார். சவுதி அரேபிய சுல்தான் (அரசர்) சவுட், தமது மரணப்படுக்கையில் இருந்தவண்ணம் தனது பிள்ளைகளுக்கு, ''சவுதி அரேபியாவின் மகிழ்ச்சியானது யேமனின் மகிழ்வின்மையிலே தங்கியுள்ளது'' என்று சொன்னதாக ஆதார பூர்வமற்ற கதை உலாவுகின்றது. சனாவிலுள்ள அரசு அதிகாரிகள் சவுதியினரை நேரடியாகக் குற்றஞ் சாட்டாதபோதிலும், றியாட் தெற்கு யேமன் பிரிவினைவாதிகளுக்கு பல்கேரியாவிலும், உக்ரெய்னிலுமிருந்து ஆயுதங்கள் பெற்று உதவுவதாக, அந்தரங்கத்தில் நினைத்தோ சொல்லியோ வருகிறார்கள். சனாவிலுள்ள, அதிகாரி ஒருவர், ''இந்தச் சண்டையை யிட்டுச் சவுதிகளைத் தவிர வேறு எவரும் மகிழ்ச்சியடையவில்லை என்பது தெளிவு'' எனகிறார்.

றியாட்டுக்கு இதனால் ஏற்படும் பயன் என்ன? வளைகுடா யுத்தத்தின் போது சதாம் ஹுசேய்னுக்கு யேமன் ஒத்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பு வழங்கியதற்குப் பழி வாங்க வேண்டுமென்ற பழைய வன்மம் ஓர் உள்நோக்கம். ''அந்தச் செயலுக்கான (ஹுசேய்னுக்கு உதவியதற்கான) விலையை நாம் இன்று கொடுக்கிறோம்'' என்று கடந்தவாரம் சலே கூறினார். யேமனின் சுதந்திரப் போராட்டத்தை அங்கீகரித்தால் சவுதியும் தனது கட்டுப்பாட்டிலுள்ள அரேபியக் குடாநாட்டிற்குச் சுதந்திரம் வழங்க நேரலாம் என்ற அச்சமும், யேமனில் அவர்கள் குட்டை குழப்புவதற்கு ஒரு வலுவான காரணம் எனவும் கருதப்படுகிறது. ''யேமனின் ஜனநாயக மயப்படுத்தல் சவுதிக்குப் பயங்கர அச்சுறுத்தலாயுள்ளது. இது அரேபியாவின் எல்லைப் பிரதேசத்திலும் பரவலாம் என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று யேமன் ஆங்கில வார சஞ்சிகையின் ஆசிரியரான அப்துல் அசீஸ் சக்காஃப் கருத்துத் தெரிவிக்கின்றார்.

சலே சவுதியின் சீற்றத்தைத் தணிக்க முயலலாம். அவ்வாறு தணிப்பதாயின், அவர் யேமனின் எல்லைப் பிரதேசக் கோரிக்கையைக் கைவிட்டு, அப்பிரதேசத்தை இதற்குச் சவுதி அரேபியாவுடன் இணைப்பதற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் அல்லது அவரது தாராண்மைக் கொள்கையைக் கைவிட முன்வரவேண்டும். அவர் பத்திரிகைச் சுதந்திரத்தை, யுத்தம் என்ற சாட்டில் ஏற்கனவே கட்டுப்படுத்தி விட்டார். ஆனால், சவுதியைத் தணிவு நிலையில் வைக்க மேற்குறித்த இரு முறைகளில் எதுவும் உள்நாட்டில் அவருக்கு எதிர்ப்பையே உண்டாக்குவன. சவுதியின் பின்னணியில் சர்வதேச அமைதிப்படை ஒன்றினை யேமனுக்கு அனுப்புவதாகிய ஆலோசனை சலேயினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ''அது எமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும்''.

யேமனின் உள்நாட்டுப் பிரிவினைக்குத் தீர்வு காண்பதென்பது, சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் கடினமானதாகவேயிருக்கும். பழைமை பேணுவோருக்கும், மேற்கத்தியச் சார்பான வடக்கத்தியருக்கும், சமவுடைமைக் கொள்கையினரான தெற்கத்தியருக்குமிடையே நிலவும் நீண்டகால முறுகலும், முரண்பாடும் ஒன்றிணைப்பை என்றைக்குமே சாத்தியமாக்கப் போவதில்லை. உடன்படிக்கை அடிப்படையில் வடக்கையும் தெற்கையும் இணைப்பது சுலபமாகலாம். ஆனால் சலே இதற்கான தீர்வு பற்றி ஆலோசிப்பதாகத் தெரியவில்லை. பிரிவினைவாதிகளைக் ''கொலைகாரர்கள்'' என்று பெயர்சூட்டி, அவர்களின் இயக்கத்தை அவர் தடை செய்துவிட்டார். ஆனால், ஒன்றிணைப்புக்குச் சாதகமாயுள்ளவர்களோடு அவர் பேச்சுவார்த்தை நடத்துவார். ''யேமனியர் எந்த ஓர் உடன்படிக்கைக்கு வருவதற்கு முன்பும் ஒரு சண்டையை நடத்தத் தவறமாட்டார்கள் என்பது தான் அவர்களின் வழமையான முறை'' என்று அமெரிக்க யேமன் ஆராய்ச்சி நிறுவனமாகச் சனாவில் செயற்படும் நிறுவனத் தலைவர், டேவிட் வாபேட்டன் சொல்கிறார். அவர் கூறுவது உண்மையானால் யேமனியர் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பெரியதொரு விலை கொடுப்பார்கள்.

## கொரியா கோரும் உணவு உதவி

வட கொரிய அரசுத் தலைவர் கிம் இல் சுங், இந்தியாவின் மேற்கு வங்க மாநில முதலமைச்சர் ஜோதி பாசுவிடம் உணவு வகைகளும், மருந்துகளும் தமக்கு அவசர உதவியாக அனுப்பும்படி கேட்டுள்ளார் என்று புது தில்லியில் உள்ள உத்தியோக பூர்வ வட்டாரங்கள் கூறின. இந்தியாவில் மிஞ்சிக் கிடக்கும் ஒரேயொரு கம்யூனிஸ்ட் அரசிற்குத் தலைமை வகிக்கும் திரு. பாசு சென்ற மே 14 முதல் சீனாவுக்கும், வட கொரியாவுக்கும் 12 நாள் பயணமாக வருகை தந்தார். கிம் இல் சுங் அங்கு பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாக எடுத்துக் கூறி, வங்காளத்துக்குக் கம்யூனிஸ்டுகளை அவர்கள் முன்பு கியூபாவில் பிடல் காஸ்ரோவின் அரசுக்கு நெருக்குதல் அதிகரித்தபோது நிவாரண உதவிகளைக் கப்பலேற்றியது போல் தமக்கும் செய்யும்படி கேட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பாசுவின் நிச்சயமான இணக்கம், புது தில்லிக்குச் சங்கடம் தருவதாக உள்ளது. ஏனெனில் அது அணு ஆயுதம் உற்பத்தி செய்யாமல் இருப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் உண்டாக்கிக் கொண்டுள்ள பிரச்சனையான ஈடுபாடுகளுக்கு இடையில் அமெரிக்கா வடகொரியாவுடன் அணு ஆயுத உற்பத்தி விடயமாகக் கொண்டுள்ள மோதலில் தன்னையும் கொழுவிக் கொள்ள விரும்பாமல் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவைக் காப்பாற்ற சிகானூக் அரசரால் முடியுமா?

சிகானூக் அரசருக்கு இன்று வயது 71. பல ஆபத்துக்களை விலக்கிக் கொண்டு உயிர்வாழும் இவர் இன்று இறக்குந் தறுவாயில் இருக்கின்றார். அவருக்கு இறுதிக்கட்டப் புற்றுநோய். அவர் தனது உயிரினும் மேலாக நேசிக்கும் தாய்நாடு கம்போடியாவுக்கும் இதே நோய் என்று சொல்லத் தோன்றுகின்றது. ஏற்கனவே, நாடு மேற்கு – கிழக்காகப் பிளவுபட்டுள்ளது. மேற்கு எல்லை நாடான தாய்லாந்தின் உதவியுடன் 1,200 கி. மீ எல்லையோரப் பகுதியில் பெருமளவு கமர்றூச் இயக்கத்தின் பிடியில் வந்துள்ளது. இதை மீட்டெடுக்க அரச படைகள் நடாத்திய போர் தோல்வி அடைந்துள்ளது. கம்போடிய இராணுவத்தையும் நோய் பிடித்துள்ளது. அவர்கள் தமது கடமையை மறந்து பொருள் தேடும் குறியில் இருக்கிறார்கள். வட மேற்குக் கம்போடியா நிரந்தரமாக கமர்றூச் இயக்கத்தின் கையில் இருக்கும் எனப் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கம்போடியா இராணுவத்தின் படுதோல்விகள் மக்களைச் சினங்கொள்ளச் செய்துள்ளது. பல மில்லியன் டொலர் இழப்பும், சொத்துக்கள், உயிர்கள் போன்ற அழிவும் கண்டதுதான் மிச்சம் என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி உள்ளனர். இந்தக் கட்டத்தில் அரசர் சிகானூக் ஒருவரால்தான் நாட்டை ஒன்றுபடுத்த முடியும் என்ற ஒரு நம்பிக்கை நிலவுகிறது. யுத்த நிறுத்தம் ஒன்றையும், அமைதிப் பேச்சுக்களையும், அவர் ஒருவரால் தான் முன்னின்று நடத்த முடியும் என்ற எண்ணம் வெளிவந்தாலும் இறைவன் கொடுத்த நோய் அவரை விட்டு வைக்குமா? என்பது தான் பெரிய கேள்வி.

கம்போடியாவின் அரசமைப்பு விதிப்படி இரண்டு பிரதமர்கள் பதவி வகிக்கின்றார்கள். ஒருவர் சிகானூக் அரசரின் மகன் றனாரீத், அடுத்தவர் கன்செென். கமர்றூச் இயக்கத்தினுடன் அதிகாரப் பங்கீடு செய்வதற்கும், அவர்களுக்கு மந்திரிப் பதவி கொடுப்பதற்கும், கமர்றூச் போராளிகளைக் கம்போடிய இராணுவத்தில் இணைப்பதற்கும், றனாரீத் தயாராக உள்ளார். ஆனால், முன்னாள் கமர்றூச் தலைவரான கன்சென் கமர் இயக்கத்தினரை அரசில் சேர்ப்பதை வன்மையாக எதிர்க்கிறார். ஆகவே, கமர்றூச் இயக்கத்துடன் தொடக்கப் பேச்சுக்கள் நடத்துவதே இயலாதுபோல் தெரிகிறது. ஆனால், கன்சென்னையும் மீறிக் கமர்றூச் இயக்கத்தை அரசில் இணைத்தால் மிகப் பெரியதோர் ஆபத்து இருக்கிறது. "கம்போடிய அரசைப் பிடிப்பதுதான் கமர்றூச்சின் உண்மையான குறிக்கோள்." அவர்களை அரசில் அங்கம் வகிக்க அழைப்பது றனாரீத் போன்றோரின் தற்கொலைக்குச் சமம்.

> "ஐ நாவின் இயலாமையும் கமர்றூச்சின் பிடிவாதமும், நாட்டைப் பீடித்துள்ள ஊழலும், அசிரத்தையும் கம்போடியாவைச் சிதைக்கின்றன."
> — ஒரு பார்வையாளர்

ஆனால், ஒன்று மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது. பெரும்பான்மையான கம்போடிய மக்கள் கமர்றூச் இயக்கத்தை வெறுக்கிறார்கள். அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் செய்த கொலைகளையும், அட்டூழியங்களையும் இயக்கம் மறந்தாலும் மக்கள் மறக்கவில்லை. ஆகவே, இயக்கத்திற்கும் குறிக்கோள்களை அடைவது எளிதல்ல என்றாலும் கம்போடியாவில் மக்கள் சக்தி பலனற்றது என்பது யாவரும் அறிந்த ஒன்றே. சிகானூக் அரசர் என்ன மந்திரவித்தை செய்தாலும் கம்போடிய அரசும், கமர்றூச் இயக்கமும் கீரியும், பாம்பும் போன்ற எதிரிகள் என்பது வெளிப்படை. என்னதான் கெரில்லாப்போர் முறையில் வல்லவர்களாக இருந்தாலும், முழு நாட்டையும் பிடிக்குந் திறன் அவர்களிடம் இருக்குமா என்பது சந்தேகமே. தாய்லாந்து எல்லையோரமாக வட மேற்கு மூலையில் ஒரு தனி அரசுடன் அவர்கள் திருப்திப்பட வேண்டியது தான். சிகானூக் அரசரின் உயிரும் பிரிய, நாட்டின் ஒருமையையும் சிதையச் சரியாய் இருக்கும். கம்போடியாவைப் பல வருடமாகக் கூர்ந்து கவனித்து வரும் மேற்கு உலக இராஜதந்திரி ஒரு வசனத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்: "கம்போடியாவுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாக நான் நினைக்கவில்லை" என்பதாக.

ஆதாரம்: நியூஸ் வீக் ஜூன் 6, 94.



PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்காசிய நாடுகளின் அச்சமும்

பெரும்பாலான தென்கிழக்காசிய நாடுகளில் தங்கள் பாதுகாப்புக் குறைவால் எழும் அச்சமும், பெருஞ் செலவில் ஆயுதத் தளபாடங்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வமும் தென்படுகின்றது. 224 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்ட சிங்கப்பூர், அமெரிக்காவிடமிருந்து எப் 16 ரக விமானங்களையும், அதற்குரிய பொருத்து ஆயுதங்களையும் வாங்க முயற்சிக்கின்றது. 3.000 தீவுகளை உள்ளடக்கிய இந்தோனேஷியா தனது பங்கிற்குச் சென்ற வருடம் முன்னாள் கிழக்கு ஜேர்மனிடமிருந்து ஒரு கப்பற் படையையே வாங்கியுள்ளது. இன்னுமொரு கோணத்திலிருந்து பார்த்தால் இப் பிராந்திய நாடுகளுக்கிடையில் ஆயுதப் போட்டியொன்று நிலவுவது போல் தோன்றுகின்றது. ஆனால் சர்வதேச படைபலம் பிரதேச ஒழுங்கு ஆகியவற்றில் ஆய்வு செய்யும் மலேசியா அதிகாரியான பூன் நாகாரா இதை வன்மையாக மறுக்கிறார்.



நீரிலும் நிலத்திலும் செல்லும் சீனாவின் கனரக வாகனம்

இவருடைய கூற்றில் இங்கு நடப்பது ஆயுதப் போட்டியல்ல. பழையதைத் தள்ளி விட்டுப் புதியதைக் கொள்வனவு செய்வதுதான் நடைபெறுகின்றது. எண்ணெய் வள ஆய்வுகளும், பாரிய மீன் பிடித் தொழிலும் இப் பிராந்தியத்தில் பரவலாக நடைபெறுகின்றன. இராணுவப் பாதுகாப்பு மிகவும் அவசியம். அவர்களின் தேவைக்கேற்ற ஆயுத தளபாடங்களும் மிக அவசியம் என்கிறார் பூன் நாகாரா. இப்புவியில் நெருக்கடி நிறைந்த பிரதேசங்களில் தென்கிழக்காசியாவும் ஒன்றாகும். பல தசாப்தங்களாக இடைவிடாது யுத்தங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. ஐ. நா.வின் தலையீடு பலன் தரவில்லை. இன்னும் பல வருடங்களுக்கு இவ்வாறான நெருக்கடி நிலை தொடருமென இப்பிராந்திய நாடுகள் நம்புகின்றன. பல்வேறு இயற்கைச் செல்வங்களும், மூலப் பொருள்களும் நிறைந்த இப் பிரதேச மக்களின் சராசரி வருமானம் உயராது பல வருடங்களாக ஸ்தம்பித நிலை அடைந்துள்ளது. ஆனால் இராணுவச் செலவு கூடிக் கொண்டே போகிறது.

இவ்வருட மே மாத இறுதி வாரத்தில் அமெரிக்காவும்-தாய்லாந்தும் கூட்டாக இராணுவ ஒத்திகை பார்த்துள்ளனர். கடந்த பல வருடங்களாக வருடா வருடம் நடக்கும் நிகழ்ச்சியென்றாலும் இம்முறை இதற்குக் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தெற்காசிய நாடுகள் பனிப்போர் முடிந்தாலும் தம்மைத் தயார் நிலையில் வைத்திருக்கவே விரும்புகின்றன. ஆனால் யார் உங்கள் எதிரி என்ற கேள்விக்குப் பதில் தர மறுப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஏன் வீண் வம்பு என்ற புத்திசாலித்தனம் காரணமாகலாம்.

1949 ஆம் ஆண்டு நிகழ்ந்த மாவோவின் வெற்றியுடன் தென்-கிழக்காசிய நாடுகளின் அச்ச உணர்வு ஆரம்பித்துள்ளது. ஆதிகாலத்தில் பெரும்பாலான தென்கிழக்கு ஆட்சியாளர்கள் சீனச் சக்கரவர்த்திக்குத் திறை செலுத்தி வந்துள்ளனர். இப்பயம் மீண்டும் பலம் வாய்ந்த சீன அரசு நிறுவப்பட்டவுடன் புத்துயிர் பெற்றுள்ளது. சீனா சம்பந்தமான தென்கிழக்காசிய நாடுகளின் அச்ச உணர்வை மூன்று விதமாக வகுக்கலாம். (1) சீனாவின் பாரம்பரிய மேலாண்மை. (2) பொருளாதார மேம்பாடு. (3) 10 மில்லியன் சீன வம்சா வழியினர் தென் கிழக்காசிய நாடுகளில் வசிக்கின்றனர். இவர்களின் மாறுபட்ட தேச விசுவாசம், தென் கிழக்காசிய நாடுகள் கூறத் தயங்கினாலும் அவர்களுடைய ஆயுத பலத்தைப் பெருக்கும் அடிப்படைக் காரணம் சீனாதான்.

இவ்வருட ஜூலை மாதம் தாய்லாந்தின் பாங்கொக் தலை நகரில்ஆசியன் அமைப்பின்வருடாந்தக் கூட்டம் நடைபெற இருக்கின்றது. இங்கு அங்கத்துவ நாடுகளுடன்

## அவற்றின் அதிகரிக்கும் இராணுவச் செலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா, சீனா, ருஷ்யா, ஜப்பான், பர்மா, ஆகிய நாடுகளும் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றன. முதன்முறையாக வியட்நாம், லாவோஸ், பப்புவா-நியூகினி ஆகிய நாடுகள் பார்வையாளர்களாக வருகின்றன. இக்கூட்டத்தில் பாதுகாப்புப் பிரச்சனைகளும், மக்கள் வாழ்க்கைத்தரம் சம்பந்தமான ஆய்வுகளும் அலசப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு நடக்கும் உரையாடல்களில் கம்போடியாவில் நடக்கும் உள்நாட்டுப் போர் முதலிடம் வகிக்கும். அடுத்ததாக கொரியன் தீபகற்பத்தில் வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டத்தால் எழுந்த நெருக்கடி நிலை ஆராயப்படும். ஸ்பிராட்லித் தீவுகள் சம்பந்தமான பல்நாட்டு உரிமைப் போட்டியை ஒரு புறம் வைத்து விட்டு, உரிமை கோருவோர் யாவரும் ஒருங்கிணைந்து இத்தீவுகளைப் பரிபாலனஞ் செய்வது பற்றியும் ஆராயப்பட இருக்கின்றது. தென்-கிழக்காசியாவுக்கென நிரந்தரமானதோர் அமைதிப் படையை நிறுவுவது பற்றியும் பிரேரணைகள் வந்துள்ளன. இப்பிராந்திய நாடுகளின் அச்ச உணர்வைக் கருத்திற் கொண்டு நோக்குங்கால் இதுவே ஆசியன் அமைப்பின் மிக முக்கிய விடயமாகத் தோன்றுகின்றது. ஒரு நாட்டின் வரலாற்றுடன் கலந்து விட்ட அச்சத்தைப் போக்குவது மிகவும் கடினம். அதே சமயத்தில் அத்தகைய அச்ச உணர்வில் ஏற்புடைய நியாயம் உண்டு என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

*ஏசியா வீக் ஜூன் 01, 1994.*

★

# இந்திய கடற்படை விரிவாக்கமும் இந்துசமுத்திர ஆதிக்கமும்

உலகின் மிகப் பெரியதும் ஆழமுமான சமுத்திரம் பசுபிக் என்றாலும் உலகின் மிகப் பெரியதான ஆசியாக் கண்டத்தின் தெற்கில் இருக்கும் இந்து சமுத்திரம் குறைத்து மதிப்பிடக் கூடியதன்று. புவியின் நிலப்பரப்பில் மூன்றில் ஒன்றையும், உலக சனத் தொகையில் பாதிக்கு மேலாகவும் தன்னகத்தே கொண்ட ஆசியா வளங்களின் இருப்பிடமாக இருக்கின்றது. அத்திலாந்திக்கை அடுத்து இந்து சமுத்திரம் பரப்பளவில் மூன்றாவதாக நிலை பெற்றுள்ளது. இதன் நீர் ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அன்ராட்டிக்கா ஆகிய கண்டங்களைத் தொடுக்கின்றது. மேற்கூறிய இரண்டு சமுத்திரங்களைப் போல் அல்லாது இந்து சமுத்திரம் பூமத்திய ரேகைக்கு தெற்கில் கிடக்கின்றது. அத்துடன் ஆசியாக் கண்டத்தினுள் இரண்டு இடத்தில், பெருமளவில் உட்புகுந்து மேற்கில் அரேபியக் கடலாகவும், கிழக்கில் வங்காள விரிகுடாவாகவும் உருப் பெற்றுள்ளது.

இந்து சமுத்திரத்தின் மீதும், தனது எல்லைக்கப்பால் இருக்கும் அயல் நாடுகள் மீதும், ஆதிக்கம் செலுத்துவது 1947 இல் நிறுவப்பட்ட இந்திய அரசின் நெடுங் காலத் திட்டங்களில் ஒன்றாகும். பொதுப் பண்பாடு என்று காரணங் காட்டி கிழக்குத் திசையில் இருக்கும் நாடுகளைத் தனது அரவணைப்பில் வைத்திருப்பதில் இந்தியாவின் முதற் பிரதமர் ஜவகர்லால் நேரு ( 1889–1964 ) காலந் தொட்டு முயற்சிகள் நடைபெறுகின்றன. இவர் பிரதமராக இருந்த காலத்தில் ( 1947–1964 ) இக்கொள்கை வெகு மும்முரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் அர்த்தசாத்திர ஆசிரியர் கௌடில்யர் இந்திய அரசர்களுக்குச் செய்த பரிந்துரையைக் குறிப்பிடுவது பொருந்தும். மேலதிக சனத்தொகையை நாடு கடத்துவதன் மூலமாகவோ, அயல் நாடுகளைப் பிடித்து அங்கு குடியிருத்துவதன் மூலமாகவோ, சட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். ஏப்ரில் 1955 இல், நடந்த பான்துங் மாநாட்டில் (Bandung Conference) திரு. நேருவின் நோக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றன. சமமானவர்களில் முதல்வர் என்ற இவரின் நிலைப்பாடு இங்கு தோல்வியுற்றுள்ளது, இந்த மாநாடு ஆசிய-ஆபிரிக்க நாடுகள் ஒன்று கூடிய வரலாற்று முதன்மை வாய்ந்த நிகழ்ச்சியானாலும், இப்பிரதேச நாடுகள் இந்தியா அல்லது சீனாவின் தலைமையை ஏற்க மறுத்ததை நாம் அவதானிக்கலாம்.

அண்மைக் காலத்தில் தென்கிழக்காசிய நாட்டுத் தலைவர்களுக்குப் புதியதோர் கவலை தொட்டுள்ளது. இந்து சமுத்திரத்தில் தன்னை அடையாளங் காட்டி வரும் அமெரிக்கக் கடற்படை வெளியேறின் அவ்விடத்தை நிரப்புவது யார்? அமெரிக்கக் கடற்படையின் இரண்டாவது உயர் அதிகாரி வைஸ்-அட்மிரல் டங்கிறாஸ் காற்ஸ் அச்சத்தைப் போக்கும் விதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார். ''மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் கிழக்கு மேற்கு என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதே எமது பிரதான நோக்கம்.'' ஜப்பான் போன்ற மத்திய கிழக்கின் எண்ணெயில் நம்பியிருக்கும் நாடுகளுக்கு இது நம்பிக்கை ஊட்டுவதாக இருப்பினும், அமெரிக்கக் கடற்படையின் நெடுங்கால திட்டங்கள் பற்றிய செய்தியை இவர் வெளியிடத் தவறியுள்ளார். இன்று வரை அமெரிக்கா டியோகார்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத் தீவிலுள்ள தனது முப்படை முகாம் மூலமாகவும், மத்திய கிழக்கில் தொடங்கி பசுபிக் வரையிலான நடமாடும் பாரிய கடற்படை மூலமாகவும் இந்து சமுத்திரத்தில் அமைதி காப்பது கண்கூடு. எனினும் இன்று உலக ரீதியாக கடற்படைகள் யாவும் தங்கள் செயற்பாடுகளைச் சுருக்கிக் கொள்வது தான் வரன் முறையாக இருக்கின்றது.

இந்தியாவின் இராணுவ ஆய்வாளர்கள் மனோஜ் ஜோஷ் கூறுவது யாதெனில்; '' இன்னும் 15 தொடக்கம் 30 வருடங்களில் அமெரிக்கக் கடற்படை இல்லாத இந்து சமுத்திரத்தை நாம் பார்க்கக்கூடும். அச்சமயத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளின் கடற்படைகள் இவ்விடத்தில் காணப்படும்.'' புவியின் மிகப் பெரிய சாம்பிராஜ்யங்களில் ஒன்றான போர்ஷியாவின் வாரிசு இன்றைய ஈரான் ஆகும். பரப்பளவில் சுருங்கினாலும், ஈரான், ஐரோப்பிய – ஆசியா நிகழ்வுகளைப் பாதிக்கும் வலிமையுடன் இருக்கின்றது. தென் - மேற்கு ஆசியாவில் காணப்படும் இந்த நாடு, தெற்கில் அரேபியன் கடலை எல்லையாகக் கொண்டுள்ளது. இந்தோனேஷிய கடற்படையின் அட்மிரல் விதோ தோ அவர்களுடைய கருத்தும் இதை ஒத்ததாக இருக்கின்றது. '' இப்பிரதேசத்தில் இருந்து எதிர் காலத்தில் வெளியேறும் நோக்கம் அமெரிக்காவுக்கு உண்டு. அமெரிக்க வெளியேற்றத்தால் நேரிடப் போகும் வெறுமை இப்போதே இராணுவ பல ஆய்வாளர்களைக் கதிகலங்கச் செய்துள்ளது.''

பாகிஸ்தானும், வேறு சில சிறிய நாடுகளும் அமெரிக்காவின் இடத்தை இந்தியா பிடித்துவிடும் என்று அஞ்சுகின்றன. தற்போது இந்திய கடற்படையில் 125 கப்பல்கள் இருக்கின்றன. அத்துடன் 2 விமானம் தாங்கிகளும், 19 நீர் மூழ்கிக் கப்பல்களும் இந்தியாவிடம் உண்டு. அரேபியன் கடலில் ஆரம்பித்து மலேசியாவுக்கு அப்பால் தனது கடற்படை அணிகளைக் காட்டும் பலம் இந்தியாவிடம் உண்டு. இந்தியத் தரையிலுள்ள விமானத் தளங்களிலிருந்து கிளம்பி வெகுதூரம் ஊடுருவிப் பறக்கக் கூடிய விமானங்களும் இந்த நாட்டிடம் உண்டு. உலகின் ஏழாவது மிகப் பெரிய கடற்படை என்ற பெருமை இதற்குடைய தாகும். இன்று இருக்கும் நிலையில் இந்து சமுத்திரத்தில் காணப்படும் மிகப் பெரிய கடற்படை இந்தியாவுக்குச் சொந்தமாகும்.

ஆசியாவின் இராட்சத நாடு சீனா இன்னும் இந்து சமுத்திரத்தினுள் உலாவத் தொடங்காவிட்டாலும், வருங் காலத்தில் இது நடக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. போர்னியோத் தீவில் காணப்படும் மலேசியாவில் கடல் கடந்த சரவாக் (Sarawak) மாகாணத்தின் மேற்கெல்லையில், 5 கிலோ மீற்றர் தூரத்தில் சீனக் கடற்படை உரிமைகோரி நெருங்கி வரத் தொடங்கியுள்ளது. பலகாலம் மூடிக்கிடந்த பர்மா இப்போது தனது வடக்கெல்லை நாடான சீனாவுடன் நெருங்கிய இராணுவ வர்த்தக உறவுகளை அண்மையில் தொடங்கியுள்ளது. சீனத் தொழில்நுட்ப உதவியுடன் பர்மா தனது நாட்டின் தெற்கிலுள்ள இந்து சமுத்திரக் கரையோரத்தைப் பலப்படுத்துகின்றது. இது சீனக் கடற்படை வந்து போவதற்குரிய முன் நடவடிக்கை யாகவும் கொள்ளலாம். இந்தியாவின் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் இங்கு தான் காணப்படுகின்றன. தற்சமயம் சீனாவிடம் பெரும் கடற்படை இல்லையென்று சொன்னாலும் இன்னும் 10 வருடங்களில், அதனிடம் பல விமான ந் தாங்கிகளும், அணு சக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களும், விண்வெளியில் இருந்தவாறு சமிக்ஞை கொடுக்கும் செய்மதியும், தூரம் பாயும் ஏவுகணைகளும், இத்தியாதி வல்லரசுக்குரிய தளபாடங்களும் கைக்கெட்டிவிடுமெனத் திடமாக நம்பலாம். தனது படைபல விரிவாக்கத்தைச் சீனா அண்மையில் ருஷ்யாவிடமிருந்து வாங்கிய சக்தி வாய்ந்த எஸ் யூ 27 ரக போர்விமானத் தொடருடன் ஆரம்பித்துள்ளதாக நாம் கொள்ளலாம்.

1989 ஆம் ஆண்டுடன் நடுத்தரத் தூரப் பாயும் ஏவுகணைகளைத் தானே தயாரிக்கும் உலகின் 6 நாடுகளில் ஒன்றாக இந்தியத் தரம் உயர்ந்துள்ளது. 1994 ஆம் ஆண்டுடன் இன்னும் கூடிய சக்தி வாய்ந்த ஏவுகணையையும் இந்தியா தயாரிக்க ஆரம்பித்து விட்டது. தாக்குதலுக்குப் பயன்படுத்தும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட வினாஷ், நாகக் என்ற இரண்டு யுத்தக் கப்பல்களையும் அது சமுத்திரத்தில் இறக்கிவிட்டுள்ளது. அமெரிக்காவின் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், இராணுவ ஆய்வாளராகவும் இருக்கும் பாகிஸ்தானியர் நகுல் பக்சி றாயிஸ் பின்வருமாறு தனது நாட்டின் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார். ''இந்து சமுத்திரத்தை அண்டிய எல்லா நாடுகளிலும் பாகிஸ்தான் இந்தியக் கடற்படைக்குக் கூடுதலாகப் பயன்படவேண்டிய நிலையில் உள்ளது.'' தொடர்ந்து அவர் கூறுவது யாதெனில், காஷ்மீர் பிரச்சனை இன்னும் பெரிதாக வெடிக்கும் போது இந்தியக் கடற்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானின் ஒரேயொரு கப்பல் தளமான கராச்சியை மறியல் செய்யலாம்.'' இதே மாதிரியான அச்சம் பங்களாதேஷத்திலும் நிலவுகின்றது. அண்மையில் இந்திய சரக்குக் கப்பல் ஒன்று பங்களாதேஷ் கடற்கரையைத் தரைதட்டிய போது, இந்தியக் கடற்படைக் கப்பல்கள் யாதொரு அனுமதியுமின்றி உதவிக்குச் சென்றுள்ளன.

தமது கடற்படை யாதொரு நாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருக்கவில்லை என இந்தியா கூறி வருகின்றது. உயர் அதிகாரியொருவர் கூறும் விளக்கம்; "இந்து சமுத்திரப் பாதுகாப்புச் செயற்பாடுகளில் இந்தியா முக்கிய பங்கெடுக்கும் நோக்குடன் இருக்கவில்லை. எமக்கு நாடு பிடிக்கும் பேராசை இல்லை சிறு நாடுகளை எமது ஆதிக்கத்துக்குள் கொண்டு வரும் திட்டமும் எம்மிடமில்லை.'' இந்தியாவின் விமானப் படையதிகாரி கொமாண்டோர் ஜஸ்ஜித்சிங் மேற்கூறியதை ஒட்டிப் பின்வருவனவற்றை ஒப்புவிக்கின்றார். "நாம் யுத்தத்தை தேடிப் போவதில்லை; விலக்கியே நடக்கின்றோம். எமக்குப் பொருளாதார முன்னேற்றம் தான் முக்கியம்.'' ஆனால் இந்தியாவின் கடற்படை உட்பட பாதுகாப்புச் செலவுகள் 1990 ஆம் வருடம் தொடங்கி 3 வருடங்களுக்குள் 7.3 மில்லியன் டொலர் உயர்ந்துள்ளது. ஓரளவு இந்திய, சீன உறவுகள் சீரானாலும் பாகிஸ்தானுடன் போட்டிக்குச் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தமும் தனது சொந்தத் தேவைகளும் இந்தியாவுக்கு நிறைய உண்டு. பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்தைக் கண்டிக்கும் இந்தியா, இத்திசையில் வெகுதூரம் சென்றுவிட்டதென்று இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். இந்தியக் கடற்படைக் கப்பல்கள் இன்று அநேகமாக அணு சக்தியிலேயே இயங்குகின்றன. தாம் பெற்றதைப் பிறிதொருவருக்குக் கிடைக்காது தடுக்கும் பண்பு இந்தியாவுக்கே உரியதாகும்.

தொகுப்பு:- உலக உலா
ஆசிரியர் குழு

# தாய்லாந்தில் பச்சை குத்துவதால் ஜாலவித்தை செய்வோர்

பச்சைக்குத்து தோலளவே ஆழமானாலும் அதன் சக்தி ஒருவரின் மனஅடி ஆழம்வரை ஊடுருவுகின்றது என்பது தாய்லாந்தில் பரவலாக வழக்கத்திலுள்ள பச்சை குத்தும்வெறிப் பழக்கத்தின் காரணமாகத் தெரிகிறது. ஹொங்கொங்கிலுள்ள தறுதலைக் கும்பல்களைச் சேர்ந்தவர்களும், மேற்கத்திய கடலோடிகளும், வழக்கமாக பல தலைப் பாம்பு உருவமும், ஆடை அணியாத பெண் உருவமும், தங்கள் நெஞ்சிலும் முகத்திலும் குத்திவித்துக் கொள்வதுண்டு. ஆனால் தாய்நாட்டில் அநேகர் கண்ணுக்குப் புலப்படாத பச்சைக் குத்துக்களைத் தனியுருக்கு அல்லது செப்பு ஊசிகளை நல்லெண்ணெயில் தொட்டுக் குத்துவித்துக் கொள்வதை விரும்புகின்றனர். அதிலுள்ள ஜாலவித்தைத் திறனில் நம்பியே அப்படிச் செய்துகொள்ளப்படுகிறது. அந்தத் தெளிவான எண்ணெய்ப் பச்சைக் குத்துக்களை தமது உடலில் கொண்டோர் ஆபத்துக்களிலிருந்து காக்கவும், தங்கள்பால் மற்றவர்களின் காதலையும் வசீகரத்தையும் ஈர்க்கவும் உதவும் என்று அங்கே நம்புகின்றனர். நெற்றியிலோ நாவிலோ பொறித்தால் அந்த நபரை அது நல்ல பேச்சாளராகவும், தெளிவான புத்தி உள்ளவராகவும் ஆக்கிவிடும் என்று நம்புகின்றனர். ஆனால் பச்சை குத்தப்பட்டு இருப்பதால் மட்டுமே அந்தப் பலம் வந்துவிட்டது என்பதல்ல. அது குத்திவிட்டவரால் மந்திரித்து உருவேற்றப்படவும் வேண்டும். பச்சை குத்துபவர் மந்திரித்து ஓதி ஊதிவிட்டு அந்தப் பச்சையை உருவேற்றி விடுகிறார். அதனால் அந்த வித்தையில் சிறந்த குருமாருக்கு அங்கே மிகுந்த மவுசு உண்டு.

ஏசியாவீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசீர் அரபாத்தின் காசா வருகை

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத், ஜூலை மாத முதல் வாரத்தில், தனது தாய் நாடான காசாவுக்கு வருகை தந்தார். குண்டு துளைக்காத பென்ஸ்காரின் கூரைமீது ஏறி நின்று கையசைத்து தம்மை வரவேற்ற மக்கள் கூட்டத்தின் குதூகலத்தில் கலந்து கொண்டார். காசாவுக்கு உள்ளேயும் இஸ்ரேலிய எல்லையில் இஸ்ரேலிய இராணுவ ஜெனரல் ஒருவனுடன் கை குலுக்கிய உடனே எல்லையைக் கடந்து தமது தாயக மண்ணை அடைந்ததும் நிலத்தில் முத்தமிட்டார். உடனே புதிதாக அமைக்கப்பட்ட பாலஸ்தீனியப் பொலிஸ் படையைச் சேர்ந்தோர் புளகாங்கிதம் மேலிட்டவர்களாக தலைவர் அரபாத்தைத் தூக்கி தமது தோள்களில் சுமந்தனர். காசாவில் வாழும் ஒரு மில்லியன் சனத்தொகை கொண்ட பாலஸ்தீனியர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்களாக அவரை வரவேற்றனர். ஆனால் அவர்களுக்கு இது எதிர்பாராத ஒரு கொண்டாட்டமானது, முன்னாள் பாலஸ்தீனிய பாராளுமன்றக் கட்டடத்தின் முன்னால் உள்ள சதுக்கத்தில் நின்று அரபாத் மக்களுக்கு உரை நிகழ்த்தி இனிப்புகளையும், வெண் மலர்களையும் விசிறி எறிந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அங்கு கூடிய கூட்டத்தினருக்கு அது ஓர் எதிர்பாராத சந்திப்பானதுடன் புதிராகவும் இருந்தது. பாலஸ்தீனிய விடுதலைப் போராளி ஒருவரான முகமட் டஹமான் என்பவர், அந்த வருகை நிகழ்வைப்பற்றி வர்ணிக்க ஒரு பழைய அரபுப் பழமொழியைச் சொன்னார்: ''விரதமிருந்து விரதமிருந்து கடைசியில் ஒரு வெண்காயத்தைத் தின்று விரதத்தை முடித்துக் கொண்டாற் போல்'' என்று அவர் கூறினார்.

மத்திய கிழக்கின் வரலாற்றில் ஒரு யுக நிகழ்வான அந்த அரபாத்தின் வருகை, அவருடைய வேறு எங்கோ செல்லும் பயணத்தின் போது காலாறிச் சென்ற தரிப்பாகவே கொள்ள வேண்டும். ஜூலை 11 ஆம், 12 ஆம் தேதிகளில் இஸ்ரேலியத் தலைவர்களுடன் பாரீஸ்



பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவரின் காசா வருகை

நகரில் மேலும் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லும் போது. அவர் தனது தாய் நாட்டின் இருள் புறப்பட்டுப் போகவேண்டும் என்பதற்கே காசாவுக்கு வருகை தந்தார். அதற்காக இரண்டு நாள்களுக்கு முன்புதான் அவர் தனது காசாப் பயணத்

மொழியாக்கம் :

— திரு. அ. கிருபைராஜா —

திட்டத்தைக் கூறியதும் அவருடைய உதவியாளர்கள் கூட ஆச்சரியப்பட்டனராம். இருந்தும் அந்தப் புழுதி மண்டிய பழைய கட்டடங்களைக் கொண்டு உறங்கி வழியும் கடலோர நகரிற்கே அவர் தமது முதலாவது வருகையைத் தந்ததில் பல பலன்கள் உண்டென்பதில் சந்தேகத்திற்கு இடம் இல்லை.

காசா தான் பாலஸ்தீனிய ஹமாஸ் தீவிரவாதத்தின் பலக் கோட்டை என்பதுடன், இங்குதான் 1987 உட் பிரிவுத் தீவிரவாதம் ஆரம்பித்தது. ஆனால் எதிர்வரும் மாதங்களில் பாலஸ்தீனிய சுயாட்சிக்கு நம்பிக்கை தரும் அமைப்புக்களைக் கட்டியெழுப்புவதில் காசா ஒரு பரிசோதனைக் களமாக அமையப் போகிறது. ஆனால் ஆரம்பத்தில் காசா வருகை, அவர் அந்த மக்களின் முன் நின்று தலைமை வகிப்பவர் என்ற உணர்வு கொண்டதாக உள்ளது.

அரபாத்தும் கூடப் பல சோதனைகளுக்கு ஆளாகிக் கொண்டு தான் உள்ளார். அவருடைய வருகையில் தொனிக் கொண்டுள்ள பல கேள்விகள் ஆவன; அவர் தான் பாலஸ்தீனிய மக்களின் சரியான தலைவரா அல்லது ஒரே ஒரு தலைவரா? அவர் செயலில் இறங்கி நிறைவேற்றத் தயாராக உள்ளாரா? எது எப்படியாயினும் அது அவருடைய நாடு? ஒரு முன்னணிப் பாலஸ்தீனியப் புத்திஜீவியான எட்வட்சையிட் கூறினார்; அநேக மக்கள் அவர் தமது தலைமையகமான டுனிஸியாவில் இருந்து காசாவின் ஜெரிக்கோ நகருக்கு வந்து அங்கிருந்து இயங்குவதையே விரும்புகின்றனர் என்று. இஸ்ரேலுடன் நடத்தப்பட்டுக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் சுயாட்சிப் பேச்சுவார்த்தைகளை எதிர்ப்பவரான அவர், மேலும் கூறுகையில், அப்போதுதான் அரபாத்திற்குச் சரியான பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்க நேரும் என்றும் கூறினார். அவற்றுள் அரபாத்தின் எதேச்சாதிகாரமான நடத்தை பற்றி நிலவும் விமர்சனமும், காசாவில் இவர் பாலஸ்தீனிய அகதிகள் மத்தியில் முக்கிய பிரமுகர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு செயலாற்றிய விதமும் அடங்கும். வெளியே உள்ள தலைவர்களைச் சேர்த்தால் அவர்களே பெரும்பான்மையாகி விடுவர் என்ற காரணத்தால் அவர்களை அழைக்கவில்லைப்போலும்.

அரபாத் காசாவுக்கு வந்து தரிப்பதில் பின்னடிப்பது தாம் வெறுங் கையாக அங்கு போவது போன்ற உணர்வு அவருக்குள் இருப்பதனாலாகும். மேற்கத்திய உதவி வழங்குவோர் பற்றி அவர் விசனமுற்றுள்ளார். அவர்கள் குறைவான நிதி உதவியே வழங்கியுள்ளதுடன் அதனைக் கூட அவர்கள் எதிர்பார்த்தபடி அல்லாமல் தாமதித்தே கொடுத்து உதவி இருக்கின்றனர். முன்பு அரபாத்திற்குப் பெரும் அளவில் வாரி வழங்கிய பாரசீகக்குடா அரச குடும்பங்கள், இப்போது அதில் உற்சாகம் இழந்து விட்டாற் போல் தெரிகிறது. பாலஸ்தீனிய விடுதலை இயக்கம், ஈராக்கின் சதாம் ஹுசேனுக்கு 1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போரின் போது ஆதரவு வழங்கியதும் இதற்குக் காரணமானது. அனைத்துலக நிதி உதவியாக வாக்களிக்கப்பட்ட 2.2 மில்லியன் டொலரில் 150 மில்லியனுக்கும் குறைவான தொகையே அரேபியர்களிடம் இருந்தும் கிடைப்பதாக உள்ளது. அநேகமான உதவி வழங்கும் நாடுகளைப்போல அரேபியர்களும் நிதியை அரபாத்திடமோ அல்லது பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திடமோ நேரடியாகத் தராமல் அரபாத் தலைமையிலான பாலஸ்தீனிய தேசிய அதிகாரிகளிடமே கொடுக்க விரும்புகின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர்கள் நிதி உதவிகளை அரபாத்திடம் கொடுப்பதில் தயக்கங் காட்டுகின்றனர். பல செல்வந்தரான பாலஸ்தீனிய அகதிகள் கூட ஒரு நாட்டைக் கட்டி எழுப்ப வெனப் பாலஸ்தீனத்துள் மீண்டும் வந்திருந்தும் கூட; அரபாத்தின் நிர்வாகத் திறமை பற்றி வெளிப்படையாகவே சந்தேகம் கொள்பவர்களாக உள்ளனர். நாட்டில் அமைதி ஏற்படக் கூடிய வகையில் பொருளாதாரத்தை வளர்க்கவும், முதலீடுகளை ஊக்குவிக்கவும் சில நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அநேகமாக அரபாத் தம்முடன் கொண்டுவந்துள்ளது பேச்சு வன்மை என்று கூறலாம். ''இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் அழிவுண்டுள்ள எங்கள் தாய் நாட்டைக் கட்டி எழுப்பும் பாரிய பணி எங்கள் முன்பு உள்ளது'' என்று அவர் கூறினார். அவர் இஸ்லாமிய அடிப்படைவாதிகளைத் ''தேசிய ஒற்றுமையை'' உண்டாக்கும்படி வேண்டி நின்றார். யூத ஆர்ப்பாட்டக்காரர்களைக்கவனத்தில் கொள்ளாது, அவர் ஜெரூஸலேத்தில் தொழுகை நடத்தப் போவதாக இலட்சியப்பேச்சுப் பேசினாலும், அது எப்போது என்று கூறவில்லை. அவருடைய பேச்சு மில்லியன் கணக்கான பாலஸ்தீனியர்களை மனம் மிளிரச் செய்யக் கூடும். ஆனால் ஒரு மனிதர் காசாவுக்கு வருகை தந்தபோது அதனைத் தொலைக்காட்சியில் ஒலிபரப்பியதால் மட்டும் அங்கு வாழ வேண்டியவர்களின் பிரச்சனைகள் தீரப்போவதில்லைத்தானே.

## செல்லப் பிராணிகளுக்கும் சொகுசு

வட கறோலினாவில் உள்ள ''வெச்சூரே கோ(ர்)ப்பரேஷன்'' என்ற நிறுவனம் வடிவமைத்துள்ள செல்லப்பிராணிக்கான தழுவணை ( Cushion ) ஒருவரின் நாயையோ, பூனையையோ பனிக்குளிர் காலத்தில் வெப்பத்துள் இருக்கவும், கோடையில் குளுகுளுப்பாய் இருக்கவும் செய்யும். '' லவாபெட் '' என்று பெயரிடப்பட்டுள்ள அது, பல நைலோன் படலங்கள் கொண்டடையினுள், விஷத் தன்மை அற்ற வெப்பத்திரவம் அடைக்கப்பட்டதாக இருக்கும். பருவ நிலை குளிராக இருக்கும்போது, அந்தத் தழுவணையை '' மைகிறோ வேவ் '' அனலியிலோ, அல்லது கொதிநீரிலோ 5 நிமிடம் போட்டு எடுத்தால், அது சூடேறிச் சுமார் 8 மணி நேர அளவுக்கு வெப்பமாக இருக்குமாம். அதேபோல், குளிரூட்டவேண்டுமென்றால், குளிர் சாதனப் பெட்டியுள் ஆறு மணி நேரம் வைத்து விட்டு எடுத்தால், அது நான்கு மணி நேரத்திற்குக் குளுகுளுப்பாக இருக்குமாம். சிறியதும் பெரியதுமான அளவுகளில், முறையே 30 டொலருக்கும் 50 டொலருக்கும் கொள்வனவு செய்யலாம்.

பணம் கனத்தோர், தாம் மட்டும் அல்லாது, தமது செல்லப் பிராணிகளையுங் கூடச் சொகுசாக வைத்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ திட்டமிட்ட யுத்தம் மூன்றாம் உலகயுத்தம்"



1992ம் ஆண்டு மேற்கு ருஷ்யாவில் நிறுத்தி வைக்கப்பட்ட அணு ஆயுதம் பொருத்தப்பட்ட ஏவுகணை செலுத்தி

இரு ஜேர்மனியர்களும் ஒன்றாகியவுடன் கிழக்கு ஜேர்மன் இராணுவ அதிகாரிகள் பல ஆவணங்களை அழித்திருந்தாலும் எஞ்சியவை நேற்றோ நாடுகளைப் பயமுறுத்தப் போதுமானவையாக இருக்கின்றன. இராணுவக் காப்பகங்களில் இருந்து மீட்கப்பட்ட 25, 000 -க்கு மேற்பட்ட ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்த நேற்றோப் படை நிபுணர்கள் பின்வரும் அதிர்ச்சியூட்டும் தகவல்களைத் தருகின்றனர். தாம் எதிர்பார்ப்பதிலும் கூடுதலான தயார் நிலையில் வார்சோ ஒப்பந்த நாட்டுப் படைகள் இருக்கின்றன என்றும் நேற்றோ நாடுகளின் நிலைகளை அணுவாயுதம் பொருத்தப்பட்ட நீண்ட தூரம் பாயும் ஏவுகணை மூலம் அழிக்கும் திறன் அவர்களிடம் உண்டென்றும் முதற் பார்வையில் தெரிவித்துள்ளனர். பதில் தாக்குதலாகவன்றி வேறு யாதொரு காரணத்திற்காகவேனும் அணுவாயுதம் பாவியோம் என்று வார்சோ நாடுகள் கொடுத்த உறுதி மொழியெல்லாம் வெறும் பொய்யென்றும் இந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. மேற்கு நாடுகளின் புலனாய்வுத் தகவல்கள் தவறானவையென்று இப்போது தெரிய வருகின்றது. மேற்கூறிய ஏவுகணை மூலம் பிறசல்ஸ் நகரிலுள்ள நேற்றோத் தலைமைச் செயலகத்தைத் தகர்க்குந் திட்டம் இருந்ததையும் இப்போதுதான் அவர்கள் அறிகின்றனர்.

நேற்றோ எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு 1949 ஆம் ஆண்டு ஏப்பிரல் 4 ஆம் திகதி வாஷிங்ரன் நகரில் உருவாகியுள்ளது. இதிற் கைச்சாத்திட்ட 12 நாடுகளும்; அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, கனடா, டென்மார்க் நோர்வே, ஐஸ்லாந்து, லக்ஸ்சம்பேர்க், நெதர்லாந்து, போர்த்துக்கல், பெல்ஜியம் என்பனவாம். 1952 இல் கிறீஸ், துருக்கி ஆகிய நாடுகளும் 1955 இல் மேற்கு ஜேர்மனியும் பின்பு அனுமதிக்கப்பட்டுள்ளன. பொதுவுடைமை நாடுகளின் தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY



# மேற்கு ஐரோப்பாவை கைப்பற்ற சோவியத் ருஷ்யா தீட்டிய இரகசிய இராணுவத் திட்டங்கள் அம்பலம்.

குதலுக்குப் பாதுகாப்பாகவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. நேற்றோவுக்கு எதிராகச் சோவியத் ருஷ்யாவின் தலைமையில் போலந்து நாட்டின் தலைநகர் வார்சோவில், 1955 ஆம் ஆண்டு பொதுவுடைமை நாடுகள் இராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளன. இதில் கைச்சாத்திட்ட நாடுகள்—அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்சிலாவாக்கியா, சோவியத் ருஷ்யா என்பனவாம்.

கிடைத்த இராணுவத் திட்டங்களைத் துருவித் துருவி ஆராயும் போது, ஆய்வாளர்கள் ஒரே குரலில் தெரிவிக்கும் கருத்து யாதெனில், நேற்றோ நாடுகளைக் காப்பாற்றியது இராஜதந்திரமும் தொடர்ச்சியான சோவியத் ருஷ்யாவுடனான பேச்சுக்களுமே. வார்சோ ஒப்பந்த நாடுகளின் தாக்குதல்களை மழுங்கடிக்க நேற்றோ நாடுகளிடம் தந்திரோபாயம் அல்லது ஆயுத பலம் போதியளவு கிடையாது. அதுவும் இரு சாராருக்கும் எல்லை நாடான கிழக்கு ஜேர்மனி போராயுதங்களில் சோவியத் ருஷ்யாவுக்கு நிகராக விளங்கியுள்ளது. இந்த நாட்டுத் துருப்புக்கள் யாவும் 85 வீதத் தயார் நிலையில் எப்போதும் இருந்திருக்கின்றன. இரண்டு மணித்தியால முன் அறிவித்தலுடன் அவர்கள் தாக்குதலுக்குத் தயாராகி விடுவர். முன்னணிப் படைகள் 45 நிமிடங்களில் தயார் நிலைக்கு வந்துவிடும். வார்சோ ஒப்பந்த நாடுகள் யாவற்றிலும் இத்தகைய துரிதகதி தயார் நிலை நிலவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதை நேற்றோ நாடுகள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை.



வார்சோ ஒப்பந்த நாடுகளின் இராணுவ ஒத்திகை

கப்பற் படைகள்கூட ஒரு மணித்தியாலத்தில் தயார் நிலைக்கு வரக்கூடிய அளவுக்குப் பயிற்சி பெற்றுள்ளன. நேற்றோ நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றியபின், அந்த நாடுகளில் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு 300,000 நிர்வாக அதிகாரிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். மேற்கு ஜேர்மனியைக் கைப்பற்றிய பின் அங்கு பாவனைக்கு விடுவதற்கென புதிய நாணயம், காவல் துறை ஆகியவையும் எல்லையைக் கடக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கு ஜேர்மனியின் ஆயுத பலம் நேற்றோ நாடுகளை அச்சமடையச் செய்துள்ளது எனலாம். 1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் தேதி, இரு நாடுகளும் ஒன்றாகிய தினத்தில் டாங்கிகள், கவசக வாகனங்கள், துருப்புக் காவிகள், விமானங்கள், கப்பல்கள் யாவும் எரிபொருளும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டுள்ளன. துருப்புக்களின் தினசரி வரவேடுகளை ஆய்வு செய்த நேற்றோ அதிகாரி அவர்கள் இடைவிடாது பயிற்சியும், பல்வேறு ஆயுதங்களில் தேர்ச்சியும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கின்றார். இவர்களுடைய தயார் நிலையின் ஓர் அம்சமாக வெற்றிவாகை சூடும் படைவீரர்களுக்குக் கொடுக்கவென விதம் விதமான பதக்கங்களும், பட்டிகளும், மார்பு அணிகலன்களும் தயாரித்துக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றோடு ஒப்பிடும்போது நேற்றோப் படைகள் முழுச்சோம்பேறிகளென்று சொல்லத் தோன்றுகின்றது. அவர்கள் ஞாயிறில் நன்றாகத் தூங்கியெழுந்து வேறு நாடுகளில் காரியாலயச் சிப்பந்திகள் போன்று நிம்மதியாக இருந்துள்ளனர். திருமணஞ் செய்த இராணுவ வீரர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மாலை வேளைகளில், உல்லாசமாகச் சுற்றுவது நேற்றோப் படைகளின் சர்வ சாதாரண நடைமுறை. ஆனால் வார்சோ ஒப்பந்த நாடுகளில் இதைக் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாது. வார்சோ நாடுகள் அணுவாயுதப் போருக்கு முன்னுரிமை கொடுத்திருந்தன. அதுவும் ஏவுகணைமூலமே அவர்கள் போராடுவர். இந்த அபாயத்தை எதிர்கொள்ள நேற்றோ நாடுகளிடம் ஒருவித ஒழுங்கும் இல்லையென்பது வெளிப்படை.

தாக்குதல்கள் தொடங்கி 30 நாள்களுக்குள், மேற்கு ஐரோப்பா முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே சோவியத் ருஷ்யாவின் திட்டம். மத்திய தரைக்கடல் எல்லைவரை ஸ்பெயின் நாட்டையும், பிரான்சின் மேற்கு எல்லைக் கடல்வரையுள்ள எல்லா நேற்றோ நாடுகளையும் வார்சோ ஒப்பந்த நாடுகளின் பிடியில் வைத்திருக்கும் ''மாஸ்ரர் திட்டம்'' ஆய்வாளர்களின் கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டியுள்ளது. இதில் மின்னலடிக்கும், பதிலடிக்கும் இடமில்லாமல் செய்வதும் முக்கிய அம்சமாகும். 1980 ஆம் ஆண்டளவிலேயே வார்சோ ஒப்பந்த நாடுகள் 840 அணுவாயுதம் பொருத்தப்பட்ட ஏவுகணைகளைத் தயாரித்துள்ளதையும், முதலடியிலேயே அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டத்தை வைத்திருந்ததையும் இப்போது நேற்றோ நாடுகள் அறிகின்றன. அவ்வருடம் தளபதியாக இருந்த சோவியத் மாஷல் குலிகோவ் துருப்புக்களுக்கு விடுத்த அறிக்கை இப்போது வெளிவந்துள்ளது. அதில் ''அணுவாயுதங்களைப் பாவித்து இரக்கமின்றி எதிரியை நசுக்க வேண்டும். இது இறுதி யுத்தம் என்று குலிகோவ் கூறியுள்ளார். அடுத்த யுத்தம் அணுவாயுத யுத்தம் என்று நேற்றோ நாடுகள் ஒரு போதும் எதிர்பாக்கவில்லை. அவர்கள் அரசியல்வாதிகளிடம் தங்கள் பொறுப்புக்களைச் சுமத்தியுள்ளனர். அதாவது அடுத்த யுத்தத்தில் பாவிக்க வேண்டிய ஆயுதம் வழமையானதா, அணுவாயுதமா என்பதை அரசியல் மட்டத் தீர்ப்பாக விட்டுள்ளனர். வார்சோ நாடுகளின் தீர்ப்பு எப்போதே வழங்கப்பட்டு விட்டது. அடுத்த யுத்தம் அணுவாயுத யுத்தம். இலக்கு முழு மேற்கு ஐரோப்பா.

14 வருடங்கள் நேற்றோப் படைகளின் தளபதியாகக் கடமையாற்றிவிட்டு, அண்மையில் இளைப்பாறிய, அமெரிக்க ஜோன் கல்வின் அவர்களிடம் இதுபற்றி வினவிய போது, ஆயுதம் தெரிவு செய்வதில் வெற்றி தோல்வி தங்கியுள்ளது என்றார். அணுவாயுதப் பாவிப்பு துருப்புக்களின் அசைவைக் குறைக்கும். வழமையான ஆயுதங்கள் முப்படைகளும் நிலைகொள்வதைத் தடுத்து அசைவதையே (Mobility) எதிர்பார்க்கும். சோவியத் ருஷ்யா திட்டமிட்ட அணுவாயுத யுத்தத்தில் இரு பகுதிகும் தோல்வி நிச்சயம். இரு பகுதியும் இந்த ஆயுதத்தைப் பாவிக்கும் போது ஐரோப்பா மாத்திரமல்ல உலகத்தின் பெரும்பகுதியே அழிந்துவிடும். அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ திட்டமிட்ட யுத்தம் மூன்றாம் உலக யுத்தம். அணுவாயுதத்தை மட்டுப் படுத்திப் பாவிக்கலாம் என்ற தப்பான அபிப்பிராயம் நிலவுகின்றது. ஓர் அணு உலையின் கசிவு எவ்வளவு தீங்கைச் செய்கின்றது. அணுவாயுதம் ஏவியவனையும்அழித்தேதீரும் மேற்குஐரோப்பாவின் நேற்றோ அணிகளை அழித்ததோடு யுத்தம் முடிவுறாது. அமெரிக்காவிலிருந்து ருஷ்யா மீது ஏவப்படும் அணுவாயுதம் அவர்களையும் அழித்தே திரும்; இது ஒருவரும் வெல்ல முடியாத யுத்தமென்று மீண்டும் சொல்வேன் என்றார் கொமாண்டர் ஜோன் கல்வின்.

இவ்வருட ஜூன் மாத இறுதி வாரத்தில், ருஷ்யா நேற்றோவில் விசேட அங்கத்தவராகவும், பங்காளியாகவும் சம்பிரதாய பூர்வமாக இணைக்கப்பட்டு விட்டது. ஒரு பாதுகாப்பான அமைதியான உலக வாழ்வுக்கு இச் சம்பவம் எம்மை இட்டுச் செல்லுமென்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் குறிப்பிட்டுள்ளார். 40 வருடங்களுக்கு மேலாக ருஷ்யாவின் மிரட்டலுக்குப் பணிந்து நடந்த நாடுகள் ருஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்ட உயர் அந்தஸ்தை வரவேற்காவிட்டாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் புதிய வரலாற்றை இன்முகத்துடன் எதிர் கொள்கின்றன.

## வார்சோ ஒப்பந்த நாடுகளிடம் குவிந்திருந்த ஆயுத தளபாடங்களுக்கு என்ன நடந்து விட்டது?

சோல்ற் 1 (Salt 1) எனப்படும் ஆயுதக் குறைப்புப் பேச்சுக்களும், ஒப்பந்தங்களும் 1972 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்துள்ளன. இதைத் தொடர்ந்து 1990 இல் 22 நாடுகள் ஒப்பமிட்ட வழமையான ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் ( Conventional Arms Reduction Treaty ) அமுலுக்கு வந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் பின் பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்கள் இனியோர் ஐரோப்பிய நாட்டிடமும் இருக்கமாட்டா. பாதுகாப்புக்குத் தேவையானவை மாத்திரம் நாடுகள் வசம் இருக்கும். 1995 ஆம் ஆண்டளவில் அரைவாசிக்கு மேற்பட்ட கனரக ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விடும் என்று நம்பப்படுகின்றது.

1973 தொடக்கம் 1986 வரை ஆயுதக் குறைப்புப் பேச்சுக்கள் ஆமை வேகத்தில் முன்னேறியுள்ளன. 86 இல் கோர்பச்சேவ் பதவிக்கு வந்தவுடன் பேச்சுக்கள் புதிய உத்வேகம் பெற்றன. நேற்றோவிலும் பார்க்க மிகக் கூடுதலான ஆயுதங்களை அழிக்க கோர்பச்சேவ் சம்மதித்துள்ளார். நேற்றோவிலும் 4 மடங்கு கூடிய ஆயுதத் தளபாடங்களை வார்சோ ஒப்பந்த நாடுகள் அழித்துள்ளன. ருஷ்யா 2,700 கனரக ஆயுதங்களையும், 16,000 டாங்கிகளையும் மறைத்து வைத்திருந்தாலும் ஒப்பந்தத்தின்படி பெரும்பாலும் ஒழுகி வருகின்றது. விளாடீமீர் சிறினோவிஸ்கி போன்ற கடும் தேசியவாதி, ருஷ்யாவில் பதவியேறினாலும் மீண்டும் பழைய இராணுவ பலத்தைக் கட்டியெழுப்புவது எளிதல்ல. முன்பு இரண்டு மணித்தியால அறிவிப்புடன் நடத்தக் கூடிய தாக்குதல் இனிமேல் பல வருடங்கள் எடுக்கலாம்.

ரைம்: ஜூலை 04, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொறி தலைக் கரடி

1991 ஆம் ஆண்டு நத்தார்த் திருநாளன்று, மிக்கேயில் கோர்பச்சேவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதிப் பதவியிலிருந்து தாமாக விலகினார். அடுத்த நாள், சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் உச்ச அரசவையான சுப்றீம் சோவியத், தன்னைத் தானே கலைத்துக் கொண்டு, 1922 ஆம் ஆண்டின் ஒன்றிய ஒப்பந்தத்தைக் கைவிட்டது. அதனால், வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பான நேற்றோவின் கண்டிப்பும் அற்றுப் போனது. அதற்குப் பதிலாக, 15 சுதந்திர நாடுகள் உதயமாயின. சோவியத் ஒன்றியத்தால், 1940 இல் தன்னுடன் வலிய, இணைத்துக் கொள்ளப்பட்ட போல்ரிக் குடியரசுகளான எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா என்பன 1991 செப்ரெம்பரில் தங்கள் விடுதலையைப் பிரகடனப்படுத்தின. ஜோர்ஜியா மட்டும் தவிர்ந்த, எஞ்சிய சோவியத் குடியரசுகள், ''பொதுநலவாயச் சுதந்திர நாடுகள்'' என்ற அமைப்பாகின. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு, அந்தப் பழைய சாம்பிராஜ்யத்திற் குழப்ப நிலை தொடங்கியது. ஆனால், ருஷ்யப் பேரரசின், நிழல் இன்னும் நிலவுகின்றது. அது மக்களின் சுதந்திர நல்வாழ்வில் அக்கறை கொண்ட தீப்பிழம்பு விளாடிமீர் சிறினோவ்ஸ்கியின், சோவியத் சோசலிஸக் குடியரசைப் பலவந்தமாக மீண்டும் நிறுவுவது என்ற, அச்சுறுத்தல் உருவமாக நிலவுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் இருந்து சுதந்திர வர்த்தகப் பொருளாதாரமாக மாறுவது, மிகவும் கடினமானதாக நிருபிக்கப்பட்டு உள்ளது. எஸ்தோனியா தவிர, மற்ற எல்லா நாடுகளிலும், பழைய கொம்யூனிஸ்டுகளின் கையே ஓங்கி நிற்கிறது. அவர்களுள் சிலர், மற்றவர்களிலும் பார்க்க, நல்ல முறையில் நின்று பிடிக்கிறார்கள். இதனகத்தே, அந்தப் புதிய நாடுகள் பற்றிய சுருக்க விபரமும், அவற்றின் 1994 ஆம் ஆண்டிற்கான நிலைப்பாடுகளும் காட்டப்படுகின்றன.

## ருஷ்யா:- (Russia)

| | |
|---|---|
| தலைவர்:- | பொறிஸ் யெல்சின். |
| உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- | 6,930 அமெரிக்க டொலர். |
| சனத்தொகை:- | 148.7 மில்லியன் (ருஷ்ய ஒன்றியத்தின் சனத்தொகையில் 51 வீதம்) |
| பரப்பளவு:- | 17 மிலலியன் சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரம்பளவில் 76.6 வீதம்) |
| இனப்பிரிவு:- | ருஷ்யர் 82 வீதம், ராரர் 4 வீதம. |
| ஏற்றுமதிகள்:- | எண்ணெயும், வாயுவும், வைரங்கள், உலோகங்கள், நிலக்கரி. |
| சென்ற ஆண்டு:- | யெல்சினுக்கும், பாராளுமன்றிற்கும் இடையில் எழுந்த பூசல் சென்ற ஒக்ரோபரில் இராணுவத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு உச்சக் கட்டத்தை எட்டியது. பொருளாதாரப் பின்னடைவுகள் தொடர்ந்தன என்றாலும், 1992 இல் இருந்ததிலும் பார்க்க, குறைவாகவே அவை அமைந்தன. |
| கண்ணோட்டம்:- | யெல்சினுக்கு, எதிர்ப்புகள் அதிகரித்துக் கொண்டு உள்ளன. பொருளாதாரம், தாழ் நிலையை அடையும். |

## 1. எஸ்தோனியா:- (Estonia)

| | |
|---|---|
| தலைவர்:- | விமாட் மெறி. |
| உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- | 8,090 அமெரிக்க டொலர். |
| சனத்தொகை:- | 1.6 மில்லியன் (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 0.5 வீதம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பரப்பளவு:- | 45,000 சதுர கிலோ மீற்றர் (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.2 வீதம்) |
| இனப்பிரிவு:- | எஸ்தோனியர் 62 வீதம், ருஷ்யர் 30 வீதம். |
| ஏற்றுமதிகள்:- | விவசாய உற்பத்திகளும், உலோகங்களும். |
| சென்ற ஆண்டு:- | போல்ரிக் சுதந்திர வர்த்தகப் பரப்பளவு ஒப்பந்தம் இருக்கக் கூடிய தாக, எஸ்தோனியாவும், அதன் அண்டை நாடுகளும், தொடர்ந்தும் ருஷ்யாவுடனான வர்த்தகத்திலேயே பெரிதும் தங்கியுள்ளன. |
| கண்ணோட்டம்:- | அந்த நாட்டில் உள்ள கூடிய எரிசக்தி வளம், அதன் பொருளாதாரத்தை ஏனைய போல்ரிக் நாடுகளின் பொருளாதாரத்திலும் பார்க்க, உயர்வாகச் செயற்பட வைக்கும். |




## 2. லத்வியா:- (Latvia)

| | |
|---|---|
| தலைவர்:- | குண்ரிஸ் உல்மானிஸ். |
| உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- | 7540 அமெரிக்க டொலர். |
| பரப்பளவு:- | 64,000 சதுர கிலோ மீற்றர் (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.3 வீதம்) |
| சனத்தொகை:- | 2.7 மில்லியன் (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 0.9 வீதம்) |
| இனப்பிரிவு:- | லத்வியர் 52 வீதம், ருஷ்யர் 34 வீதம். |
| ஏற்றுமதிகள்:- | கட்டடப் பொருள்கள், உணவுப் பொருள்கள். |
| சென்ற ஆண்டு:- | 1993 இல் மொஸ்கோவுடனான உரசல் காரணமாக, சென்ற ஜனவரி 10 ஆம் திகதி இரண்டு ருஷ்ய ஜெனரல்கள் றீகாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். |
| கண்ணோட்டம்:- | பொருளாதாரம், ருஷ்ய மீள் ஏற்றுமதிகளில் தொடர்ந்து தங்கியிருக்கும். அரசியல் சீர்திருத்தங்கள் மெதுவாகவே முன்னேறுகின்றன. |

## 3. லிதுவேனியா:- (Lithuania)

| | |
|---|---|
| தலைவர்:- | அல்ஜிர்டாஸ் பிறஜ்காஉஸ்காஸ். |
| உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- | 5,140 அமெரிக்க டொலர். |
| சனத்தொகை:- | 3.7 மில்லியன் (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 1.3 வீதம்). |
| பரப்பளவு:- | 65,000 சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.03 வீதம்). |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரிவு:- லிதுவேனியர் 80 வீதம், ருஷ்யர் 9 வீதம்.

ஏற்றுமதிகள்:- புடவை, விவசாயப் பொருள்கள்.

சென்ற ஆண்டு:- தேசிய அரசியல்வாதிகளுக்கு, பொருளாதாரத்தை உயிர்ப்பிக்க வேண்டிய திறமை அற்றுப் போனதால், முன்னாள் கொம்யூனிஸ்டுகள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தனர்.

கண்ணோட்டம்:- மூன்று போல்ரிக் நாடுகளுக்குள் லிதுவேனியா, ருஷ்யாவுடன் மிக நல்லுறவு பேணும்.

## 4. மொல்டோவா:- (Moldova)

தலைவர்:- மிர்சியா ஸ்னெகுர்

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 4.640 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 4.4 மில்லியன். (சோவியத் ஒன்றியத்தின் மொத்த சனத்தொகையில் 1.5 வீதம்).

பரப்பளவு:- 34,000 சதுர கிலோ மீற்றர் (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.2 வீதம்).

இனப்பிரிவு:- மொல்டோவியர் 65 வீதம், உக்றேனியன் 14 வீதம்.

ஏற்றுமதிகள்:- விவசாய உற்பத்திகள்.

சென்ற ஆண்டு:- மொல்டோவா தவிர்ந்த, வேறு எந்த முன்னாள் சோவியத் குடியரசும், தனது அண்டை நாடுகளால், பொறாமையுடன் நோக்கப்படுவதில்லை. ருஷ்யப் படைகள், 1993 இல் பதற்ற நிலை உருவாகாமல் தடுத்து வைத்திருந்தன.

கண்ணோட்டம்:- பொருளாதார வீழ்ச்சி, தேசிய மனோ நிலைகளுக்குத் தூண்டுதல் கொடுக்கலாம்.

## 5. பெலாரஸ் :- (Belarus)

தலைவர்:- ஸ்ரானிஸ்லாவ் ஷுஸ்கேவிச்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா: 6,850 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 10.2 மில்லியன், (சோவியத் ஒன்றியத்தின் மொத்தச் சனத்தொகையில் 3.5 வீதம்.

பப்பளவு:- 2,08,000 சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 1 வீதம்)

இனப்பிரிவு:- பைலோருஷ்யர் 78 வீதம், ருஷ்யர் 13 வீதம்.

ஏற்றுமதிகள்-: இயந்திரங்கள், உணவுப் பொருள்கள்.

சென்ற ஆண்டு:- அரசுத் தலைவர் ஷுஸ் கேவிச்சுக்கும், சுப்றீம் சோவியத்திற்கும் இடையிலான தேக்க நிலை, அனைத்துலக நன்னம்பிக்கையைக் குறைத்துள்ளது.

கண்ணோட்டம்:- திட்டமிட்டு உள்ளபடி, மார்ச் மாதத் தேர்தல்களும், அணு ஆயுத அழிப்பும் நிகழ்ந்தால், பெலாரஸ் நல்ல முறைப்படி கவனிக்கப்படலாமென எதிர் பார்க்கலாம்.

## 6. ஜோர்ஜியா:- (Georgia)

தலைவர்:- எட்வேட் ஷெவர்ட் நாட்ஸெ.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 3,670 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 5.4 மில்லியன். (சோவியத். ஒன்றியத்தின் சனத்தொகையில் 1.9 வீதம்)

பரப்பளவு:- 70,000 சதுர கிலோ மீற்றர், சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.3 வீதம்)

இனப்பிரிவு:- ஜோர்ஜியர்கள் 70 வீதம் ஆர்மெனியர் 8 வீதம்.

ஏற்றுமதிகள்:- விவசாய உற்பத்திகள்.

சென்ற ஆண்டு:- யுத்தத்தால் சீரழிந்து உள்ள ஜோர்ஜியாவில், ஷெவர் நாட்ஸெ தனது தனிப்பட்ட செல்வாக்காலும், அரசியல் ரீதியாகவும் தப்பி நிற்பது. சென்ற ஆண்டின் சில நன்னிலைமைகளில் ஒன்றாகும்.

கண்ணோட்டம்:- மத்தியில் அதிகாரப் பலமற்று, ஜோர்ஜியாவின் பொருளாதாரம் சீர்குலையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆ(ர்)மீனியா (Armenia)

தலைவர்:– லிவொன் ரெர் பெற்றோஸி யன்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா :- 4,610 அமெரிக்க டொலர்,

சனத்தொகை:– 3.6 மில்லியன் (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகை யில் 1.3 வீதம்)

பரப்பளவு:- 30,000 சதுர கிலோமீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.1 வீதம்

இனப்பிரிவு:- ஆ(ர்)மீனியர் 93 வீதம் அஸெர்பைஸானியர் 3 வீதம்

ஏற்றுமதிகள்:- விவசாய உற்பத்திகள்.

சென்ற ஆண்டு:– அஸெர்பைஸானுடனான யுத்தத்தில் ஆ(ர்)மீனியாவின், கையே மேலோங்கியது. ஆனால், சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளத் தவறியதால், அந்த நாடு பொருளாதாரத் தடைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

கண்ணோட்டம்:- பொருளாதாரம், தப்பி வாழ்வதற்கான மட்டத்தின் கீழ் விழும்.

கிழக்கில் விலாடிவொஸ்ரொக்கிலிருந்து, மேற்கே களினின் கிறாட்வரை பரந்துள்ள ருஷ்யா பூகோளத்தின் மொத்த நிலப் பரப்பில் 11.5 வீதத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. உலகின் மிகப்பெரிய நாடு கிட்டத்தட்ட, இந்தோனேஷியாவின் பரப்பளவினைப் போல் 9 மடங்காகும். ஆனால், ருஷ்யா அதனிலும் பார்க்க, 41 மில்லியன்கள் குறைவான சனத் தொகை கொண்டுள்ளது.

## 8. அஸெர்பைய்ஸான் (Azerbaijan

தலைவர் :- கெய்டார் அலியேவ்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 3,670 அமெரிக்க டொலர்

சனத்தொகை :- 7.1 மில்லியன், (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 0.4 வீதம்)

பரப்பளவு :- 87,000 சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.4 வீதம்)

இனப்பிரிவு :– அஸெர்பைய்ஸானியர் 38 வீதம் ருஷ்யர் 6 வீதம்.

ஏற்றுமதிகள் :- எண்ணெய், உலோகங்கள், பருத்தி,

சென்ற ஆண்டு:– உள் நாட்டில் இராணுவத்தின் சீர்குலைவும், அஸெபைய்ஸானின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை ஆர்மீனியா கைப்பற்றிக் கொண்டமையும், அலியேவ் மீண்டும் அரசியல் அதிகாரத்தைப்பெற உதவியது.

கண்ணோட்டம்:- அலியேவ், மக்களின் ஆதரவு பெற்றிருந்தாலும், குழப்ப அலையைத் திசை திருப்பினால்தான் தப்பித் தரித்திருக்க முடியும்.

## 9. கிர்கிஸ்தான்:- (Kyrgyzstan)

தலைவர்:- அஸ்கர் அகாயேவ்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:– 3,280 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:– 4.4 மில்லியன். ( சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 1.5 வீதம்)

பரப்பளவு:- 1,99,000 சதுர கிலோ மீற்றர், (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.9 வீதம்.

இனப்பிரிவு:– கிர்கிஸ்தானியர் 52 வீதம், ருஷ்யர் 22 வீதம்.

ஏற்றுமதிகள்:- இரசாயனங்கள், கனிப்பொருள்கள், கம்பளி.

சென்ற ஆண்டு:- சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியபடி, றூபிள்களுக்குப் பதிலாக, சொம் நாணயத்தை ஏற்படுத்தியமை, பொலிவு தரவில்லை.

கண்ணோட்டம்:– பொருளாதார, அரசியற் சீரழிவுகள் தொடரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. உஸ்பெகிஸ்தான்:- (Uzbekistan)

தலைவர் :- இஸ்லாம் கறிமோவ்

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா :- 2,790 அமெரிக்க டொலர்.

சனத்தொகை :- 20.6 மில்லியன், சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 7.1 வீதம்)

பரப்பளவு :- 4,47,000 சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 2 வீதம் )

இனப்பிரிவு :- உஸ்பெக் 71 வீதம் ருஷ்யர் 8 வீதம்.

ஏற்றுமதிகள் :- பருத்தி, செப்பு, தங்கம் உர வகைகள்.

சென்ற ஆண்டு :- கறிமோவ், அரசியல் எதிரிகளைப் பலமாக அடக்கிக் கொண்டு அதே வேளை, தொழில் வாய்ப்பும், செழுமையும் ஏற்படுத்துவதாக வாக்களித்துக் கொண்டு ஏமாற்றி நசுரவைத்துக் கொண்டார்.

கண்ணோட்டம் :- வெளிநாட்டு மூலதனங்கள் இலாபந்தரத் தொடங்கியதால், செல்வஅதிகரிப்பு ஏற்படலாம்.

## 11. தஜிகிஸ்தான்:- (Tajikistan)

தலைவர்:- இமோமாலி றக்ஹ்மாநோவ்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 2,180 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 5.3 மில்லியன், ( சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 1.8 வீதம்)

பரப்பளவு:- 1,43,000 சதுர கிலோ மீற்றர். (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 0.6 வீதம்)

இனப்பிரிவு:- ரஜிக் 62 வீதம். உஸ்பெக் 24 வீதம்.

ஏற்றுமதிகள்:- கனிமங்கள், இயந்திரங்கள்.

சென்ற ஆண்டு:- தஜிகிஸ்தானின் கடும் உள்நாட்டுப் போர், ஜனநாயக, இஸ்லாமியச் சக்திகளுக்குத் தோல்வியாய் முடிந்தது. முன்னாள் கொம்யூனிஸ்ட் நிர்வாகத்திற்கு, எல்லைப் பிரதேசங்கள் குழப்ப நிலைகளாக உள்ளன.

கண்ணோட்டம்:- றக்ஹ்மாநோவ், தேர்தல் நடக்கவும், புதிய யாப்பு ஒன்றை ஆக்கவும் வாக்களித்துள்ளார்.

## 12. உக்றேயின்:- (Ukraine)

தலைவர்:- லியொனிட் கிறாவ்சுக்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 5,180 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 51 9 மில்லியன். ( சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 2.7 வீதம் )

இனப்பிரிவு:- உக்றேயினியர் 73 வீதம், ருஷ்யர் 22 வீதம்.

ஏற்றுமதிகள்:- நிலக்கரி, சீனி, இரசாயனங்கள்,

சென்ற ஆண்டு:- கிறாவ்சுக், பாராளுமன்றம் முக்கிய விடயங்களிலே தன்னைப் பின்பற்றாத, பலமற்ற நிலையில் இருக்கிறார்.

கண்ணோட்டம்:- உக்றேயினின், தனது அணு ஆயுதக் கையிருப்பைக் கைவிட்டு, அவற்றை அழிக்கத் தீர்மானித்திருப்பது, அந்த நாடு ருஷ்யாவுடன் கொண்டுள்ள உரசல் நிலையைக் குறைக்க, மேற்கத்திய நிதி உதவி கிடைக்கலாம்.

## 13. கசக்கஸ்தான்:- (Kazakhstan)

தலைவர்:- நூர்சுல்ரான் நசர்பாயேவ்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா:- 4,490 அமெரிக்க டொலர்.

சனத்தொகை:- 16.7 மில்லியன். (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 5.7 வீதம்)

பரப்பளவு:- 2.7 மில்லியன். ச. கி. மீ. சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 12.2 வீதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| இனப்பிரிவு:– | கக் இனத்தவர் 40 வீதம். ருஷ்யர் 38 வீதம். | | தைத் தொடர்ந்து, பொரு ளாதாரத்தை நகர வைப்ப தற்காக, நசர்பாயேவ் அவசர கால நடவடிக்கை எடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார். |
| ஏற்றுமதிகள்:– | எண்ணெயும் வாயுவும், நிலக்கரி, தானியங்கள், கம்பளி. | | |
| சென்ற ஆண்டு:– | ருஷ்யா, றூபிள் நாணயத்தைத் தருவதற்கான நிபந்தனைகளைக் கடுமையாக்கிய | கண்ணோட்டம் - | பொருளாதார, அரசியற் சீர்குலைவுகள் தொடரும். |

## 14 துர்க்மெனிஸ்தான் (Turkmenistan)

| | | | |
|---|---|---|---|
| தலைவர் :- | சலார் மட் நியாஸோவ் | சென்ற ஆண்டு:– | வாயு ஏற்றுமதிகளுக்கு உயர்ந்த விலை நிர்ணயிக்கப்பட்டு, பொருளாதாரம் கடும் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அதனால் மூலதன இருப்பும், அத்துடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும், வர்த்தகர்களினதும் நம்பிக்கையும் வளர்ந்தது. |
| உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா :- | 3,540 அமெரிக்க டொலர். | | |
| சனத்தொகை:- | 3, 7 மில்லியன். (சோவியத் ஒன்றியத்தின் சனத்தொகையில் 1. 3 வீதம்) | | |
| பரப்பளவு:- | 4,88,000 சதுர கிலோ மீற்றர், (சோவியத் ஒன்றியத்தின் பரப்பளவில் 2. 2 வீதம்) | கண்ணோட்டம்;- | து(ர்)க்மெனிஸ்தான் தனது அண்டை நாடுகளான துருக்கி, ஈரான் என்பவற்றின் வட்டத்திற்குள் விரைவில் விழும். |
| இனப்பிரிவு:- | து(ர்)க்மெனியர் 72 வீதம், ருஷ்யர் 10 வீதம். | | |
| ஏற்றுமதிகள்:– | வாயு, பருத்தி | | |

# 1993 இல் சோவியத் ஆயுதப் படைகள் சீர் குலைந்தன

ஒரு காலத்தில் மிகப் பலம் பொருந்தியதாக இருந்த சோவியத் ஆயுதப்படைகள், இப்பொழுது கலைந்து பின்வாங்குகின்றன. சென்ற ஆண்டில் செக்கொஸ்லொவாகியா, ஜேர்மனி, போலாந்து ஆகிய நாடுகளில் இருந்த ருஷ்யப் படையணிகள், மீளத் திருப்பி அழைக்கப்பட்டன. போல்ரிக் குடியரசுகளிலிருந்து படையை மீள அழைப்பது; நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் தருவது பற்றியும், ருஷ்யச் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றியுமான பேச்சுவார்த்தை மெதுவாக நிகழ்ந்ததால், செயல்முறை தாமதமாக்கப்பட்டது. ருஷ்யாவும், உக்ரேயினும், உக்கிரேயினில் நிறுவப்பட்டுள்ள சோவியத் அணு ஆயுத நிலையங்களைப் அப்புறப்படுத்துவது பற்றியும், கருங்கடலில் உள்ள கப்பற் படையைப் பிரித்து எடுப்பது பற்றியும், சர்ச்சையில் ஈடுபட்டன. தஜிகிஸ்தானில், எந்த நேரத்திலும் குழம்பக்கூடிய நிலையில் உள்ள சமாதானத்தைக் காப்பாற்றி வைத்திருக்கும் ருஷ்யப் படைப்பிரிவுகள் மேலும் பலப்படுத்தப்பட்டதுடன், கஜக்ஸ்தானிலும், உஸ்பெகிஸ்தானிலும், கிர்ஜிஸ்தானிலும் அமைதி உண்டாக்குவதில் அவை ஈடுபட்டன. ஜோர்ஜிய உள்நாட்டு யுத்தத்திலும், ஆ(ர்)மீனியாவுக்கும் அஸெபைய்ஸானுக்கும் இடையிலான மோதலிலும், உத்தியோக ரீதியாக இல்லாவிட்டாலும், ருஷ்யப் படையினர் நேரடிப்பங்கு கொண்டனர். ருஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பாவல் கிறாக்சேவ், பேரளவில் தனக்கு மேலதிகாரியாக இருந்த எயர்மார்ஷல் யெவ்ஜெனிஷெபோஷனிகொவ் என்பவரைக் கூட்டுப் பாதுகாப்புப் படைகளின் தளபதிப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, அந்தக் கூட்டுப் படை ஆணையகத்தைக் கலைக்கத் தொடங்கினார். ருஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் பாராளுமன்றுக்கு எதிராகச் சென்ற ஒக்ரோபர் மாதத்திற் செயற்பட்டபோது, அவர் ஜனாதிபதிக்கு ஆதரவு நல்கியதால், இராணுவத்தை மிகவும் பேரம் பேசக் கூடிய நிலை ஏற்பட்டது.

''ஏசியா வீக்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பொதுவுடைமைவாதிகள்

## கிழக்கு ஐரோப்பா அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நடைமுறைப் படுத்தலாம்




பனிப் போர்க்கால கட்டத்தில், பேர்ளின் சுவர் இடிவதற்கு முன்னும், சோவியத் யூனியன் பிளவுபட முன்னரும் பொதுவுடைமை விரதம் ஒரு கடற் பாறைபோல பாதுகாப்பாகவும், நிரந்தரமாகவும் உள்ளது என்று தோன்றிற்று. ஆனால், அதன் எதிர்ப்பாளர்கள் கடவுள் நம்பிக்கையற்ற வர்க்கத்தினரைப் பின்பற்றுகிற எவரும் எப்போதாவது சுதந்திரமான தேர்தல் மூலம் அதிகாரத்தை பிடித்தார்களா? என்று திருப்தியடைந்த நிலையில் சொல்லலாம். கேரளா, மேற்கு வங்கம் மற்றும் தென் இத்தாலியின் சில நகரங்கள் போன்றவற்றின் உதாரணங்களைச் சுலபமாகக் காணத்தவறின் கம்யூனிஸ்டுகள் துவக்கின் பலம் மூலம் ஆட்சிப் பாதையைப் பிடித்தார்கள் என்று வாதாட முடியும். ஜனநாயகம் அபிவிருத்தி வரலாற்றில் எதிரிடையான அர்த்தமுள்ள சம்பவமாக சீவ் தொடக்கம் புடாபெஸ்ற் ஈறாக உள்ள பிழையான எண்ணதததை நீக்க, சனங்கள் சில வருடங்களுக்கு முன், திடீரென அதிகாரத்திலிருந்த கம்யூனிஸ்டுகளை மீண்டும் அரசில் அமர்த்த வாக்களிக்கிறார்கள். ஒருவரும் அவர்களில் தலைக்கு நேரே துவக்கை நீட்டுகிறார்களில்லை,

1992 இல் ( Mr. Algiridas Brazauskas ) திரு. அல்ஜிரிதாஸ் பிராசோக்காஸ், லிதுவேனியாவின் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர், நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் போக்கு ஆரம்பித்தது. கடந்த செப்ரெம்பரில் புதிய பாராளுமன்றைத் தெரிவு செய்வதற்கான முறை போலாந்து மக்களுக்கானது. அவர்கள் ( Solidarity ) சொலிடாறிற்றியின் உறுதியான ஆதரவாளர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, கூடுதல் வித்தியாசத்தில் தீவிர இடதுசாரிக் கூட்டணியைத் (Democratic Left Alliance) தெரிவு செய்தனர். இக் கூட்டணியில் ஜனநாயகம் இடது நேச உடன்பாட்டுக் கட்சியுடன் முன்னாள் கம்யூனிஸ்டுகளின் மற்றும் மக்கள் அபிமான போலிஸ் குடியானவர் கட்சியின் வாரிசுகளும் இடம் பெற்றனர். அவ்வாறான நிகழ்ச்சிகள் கட்சியில் எதுவித கலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இரு வாரங்களுக்கு முன் ஹங்கேரியர் கூட்டு முன்னணியின் தலைமையிலான ( HSP ) கோனேக்கரின் ஆதரவாளர்கள் ஹங்கேரியின் சமதர்மக் கட்சியை அதிகாரத்தில் அமர்த்தினார்கள். ஜேர்மனியிலும் கூட எறிக்கோனேக்கரின் ஆதரவாளர்கள் உள்ளூர் தேர்தல்களில், சில இடங்களைக் கைப்பற்ற முடிந்தது. அவர்கள் அடுத்துவரும் சமஸ்டித் தேர்தலின்போது ( Bundestag ) ஜேர்மன் பாராளுமன்றம் செல்ல போதிய வாக்குகள் சேகரிக்க முடியும்.

உக்றேனிய கம்யூனிஸ்ட்டுகள் அவர்கள் இப்போதும இவ்வாறே அழைக்கிறார்கள். 175 இடங்களில் 118 இடங்களைப் பிடித்துள்ளனர். தனி நபர்களாயினும் அவர்கள் அரசியற் கட்சிகளுடன் தொடர்புடையவர்கள். முன்னாள் சோவியத் குடியரசுகளிலும் கம்யூனிஸ்டுகள் பெயர் மாற்றிய பின் அதிகாரத்தையும் தங்கள் போக்கையும் வைத்திருக்கிறார்கள். துர்க்மெனிஸ்தான் ஜனாதிபதி அண்மையில் 99 வீத வாக்குகளால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். ருஷ்ய கம்யூனிஸ்டுகள் கூட, கடந்த டிசம்பரில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பலத்தைக் காண்பிக்கக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் சின்னபின்னப் பட்டிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளமைக்க உதவும் முகமாக பழைய பல்லவியையே பாடவேண்டியுள்ளது.

அதனால் செங்கொடியை உயர்த்துவதற்கும், லெனினைப் பீடத்தில் அமர்த்துவதற்கும் மற்றும் சர்வதேசியத்தை மீட்டுவதற்கும் காலம் வந்துவிட்டது. பிடல் கஸ்ரோவும், கிம்யொங் இல் உம் இன்னும் கொஞ்சக்காலம் நீடித்திருக்க ஊக்கப்படுத்த வேண்டும். ஏனெனில் அவர்களது நாள்கள் கடைசியாக விடியப் போகும் காலம். ஆனால் அவ்வளவு வேகமாக அல்ல. ஐரோப்பாவின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கம்யூனிஸ்ட்டுகள் ஜனநாயகவாதிகளாக மற்றும் சிறந்த பொருளாதாரத்தை ஆதரிப்பவர்களாக வெளிப்படையாகச் சொல்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குறுகிய கால பயனற்ற பேச்சுக்களின் போது சில பாடங்களைப் படித்துள்ளனர்போலும். உதாரணமாகப் போலாந்தில், அதிகாரத்திற்கு வந்து எட்டு மாதங்களின் பின் பழைய காப்பாளர்கள் பிரித்தெடுக்கவோ மற்றும் சுதந்திர பொருளாதாரத்தை நோக்கி உறுதியாகச் செல்லவோ சிறிதே செய்துள்ளனர். முதலீடுகளைத்தனி உடைமையாக்க அவசரம் காட்டப்படவில்லை. புதிய ஹங்கேரிய ஆட்சியாளர் தொடர்ச்சியாக மேலும் திறமையான அரசு, வரவு, செலவு, தன்னடக்கம் மற்றும் சேமிப்பதின் அவசியம் பற்றிச் சொல்லிக் கொள்கிறார்கள்.

பழைய பொதுவுடைமைவாதிகள் மீண்டும் உயிர் பெற்றது எதைக் குறிக்கிறது? அநேகமான கிழக்கு ஐரோப்பியர்கள் மற்றும் வெளியில் அவர்களுடைய அனுதாபிகள் ஜனநாயக சீர்திருத்தங்களை அவர்கள் கட்டியணைத்தால், இயல்பாகவே சுபீட்சம் பின் தொடரும் என்று ஐயத்துக்கு இடமின்றி நம்பினார்கள். உண்மையில் பல சந்தர்ப்பங்களில் இதன் பெறுபேறுகள் வேலையின்மை அதிகரிப்பு, உயர் பணவீக்கம், இருப்போர் இல்லாதோர்க்கிடையே அகன்று கொண்டே போகும் இடைவெளி ஆகியவையே ருஷ்யாவில் காணப்படும் சிக்கல் நிலைக்கு முக்கிய உதாரணம். அநேகர் கடந்துபோன நேரத்தை எண்ணி வருந்தத் தொடங்கியது அதிசயமல்ல. தலைவர்கள் பழையகால நிலைப்பாடுகள் பற்றி அவர்களுக்கு ஞாபகப்படுத்தும் போது, அவர்கள் தம் தலைவர்கள் பக்கம் திரும்புவது இயற்கையே.

வாக்காளர் முன்னாள் ஆட்சியை ஒட்டு மொத்தமாக மீளமைக்க விரும்பும் அதேவேளை, மேற்கத்தயவர்களால் உருவாக்கப்பட்ட ''அதிர்ச்சி வைத்தியம்'' பற்றிக் களைத்துப் போனார்கள். உயர்வான வீதத்தினாலும் தனிமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளை மீளப் பெறும் போது ஏற்படும் தொடர்பினால் அதிகார வர்க்கத்தினரின் சுரண்டலாலும் பயனற்றுப் போனமையால் களைத்துப் போனவர்கள் எதிர்க் கட்சியினர். சம்பள அதிகரிப்பு, கமக்காரருக்கு கூடுதல் நிவாரணங்கள், சிக்கனத் திட்டத்தில் சலுகைகள், சந்தைப் பொருளாதாரத்தை மேன்மைப் படுத்தும் ஏனைய சீர் திருத்தங்களைக் கொண்டு வருவதாக வாக்குறுதியளித்தனர். சனங்கள் எதை விரும்புகிறார்கள் என்று பார்த்தால் பழைய கம்யூனிசம் பிரதிபலிக்கும் தீவிரவாதப் போக்கும், ஜனநாயக வாரிகளின் போக்கும் இடைப்பட்ட ஒன்று. அவர்கள் இரு சார்புக் கொள்கைக்கு அப்பால் பார்க்கிறார்கள். தங்கள் ஆட்சியாளரிடம் இருந்து செயற்பாட்டை உரிமையுடன் கேட்கிறார்கள்.

குறிப்பிடத் தக்கவாறு முதலாளித்துவம் பொதுவுடைமைப் பெருந்துயரில் இருந்து தனிநபர்கள் துணிந்து வெளியே வருவதுடன் ஆரம்பிக்கிறது. அது காலப் போக்கில் அநேகமாக வெகுவாகப் பின்னால் பொருளாதாரம் முழுமையாக மிக முக்கியமான காலகட்டத்தைச் சேகரிக்கிறது. அது தன்னுடன் மற்றவரையும் இழுத்துச் செல்கிறது. அதேவேளை புதிதாக உருவாக்கப்பட்ட செல்வத்தைப் பங்கிட இடமளிக்கிறது. அநேக முன்னாள் சோவியத் நாடுகள் முதலாளித்துவத்திற்கு மாறும் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. முன்நோக்கிச் செல்பவர்களிடம் இருந்து எதிர்ப்பு வருவது இயல்பே. அத்துடன் தனிநபர் உடைமையை, சமமாகப் பங்கிட்ட காலத்திற்காகச் சில ஏக்கங்களும் இயல்பே.

அதிகார பொருளாதாரத்தைச் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்திற்குத் திசை திருப்பும் வேலை அச்சுறுத்தலோடு கூடிய கடினமானது, மேன்மை பெற விரும்பும் அரசியற் சீர்திருத்தங்களால் கஷ்டத்தை ஈடு செய்ய எண்ணுவது கலப்பற்ற மடைமைத்தனம். ஒரு தேசம் ஒரு வேளை அவ்வளவு பதற்றத்தையும், திடீர் எழுச்சியையும் மட்டுமே கிரகிக்க முடியும். வாக்களிக்கும் உரிமையோ அல்லது சீவிப்பதற்கான உரிமையோ விரும்பத் தக்கது என்று மக்களைக் கேட்டால் மக்கள் இயல்பாகவே பின்னையதைத் தெரிவிப்பர். ஆசியாவின் மேலும் மேம்பாடடைநத தேசங்கள் பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல ஒரு முகப்படுத்துவது மேலானது என்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். அப்போது அரசியல் உறுதிப்பாடு பேணப்படுவதை ஆராய வேண்டி வரும. இல்லையேல் பொருளாதார அபிவிருத்திக்கு அச்சுறுத்தல் உண்டாகும். மற்றும சில முதலீட்டாளர்கள் தம் பணத்தை முதலிட விரும்புவர். அதை '' அதிகார வர்க்க முதலாளித்துவ '' காலம் எனலாம்.

பிற்பாடு எல்லா மக்களும் மேலான கல்வி கற்று மேம்பாடடைந்ததும் சமூகத்தில் பங்கைச் சம்பாதிதது விட்ட உணர்வு வரும். அப்போது அரசில் மேலும் அதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தை உரிமையுடன் கேட்பர். அப்போது அதிகார வர்க்கம் நெகிழ ஆரம்பிக்கலாம் அத்துடன் ஜனநாயக வழிக்குத் தேவையான அரசியல் சீர் திருத்தங்கள் பற்றித் தொடரலாம். முறையாக நிர்வகிக்கப்பட்டால் சமூக பதற்றங்கள் படிப்படியாகக் குறையும். வடகொரியா, தாய்வான் மற்றும் அப்பகுதியில் உள்ள ஏனைய நாடுகளில் அதிகார வர்க்க முதலாளித்துவச் செயற்பாடுகள் வெற்றியளித்தமை நிருபணமாயிற்று. சீனாவிலும், வியட்நாமிலும் அருவருப்பாக இருப்பினும் அதே மாதிரி நிலைமை பிறக்கிறது. மேலும் பாதை வழியே எல்லா நாடுகளும் மேலும் சுதந்திர பொருளாதார அரசியல் முறைகளை எதிர்பார்க்க முடியும்.

கிழக்காசிய உருப்படிவம் கிழக்கு ஐரோப்பியாவுக்குக் பொருந்தக் கூடியதா? கணிசமான அளவு கலாசார முரண்பாடுகள் அது அவ்வாறு இருக்க முடியாது என்று குறிப்பிடுகிறது. அதைவிட ஐரோப்பியர்கள் ஏற்கனவே தம்மளவில் பாரிய பொருளாதார அரசியல் மாற்றங்களை நடைமுறைப் படுத்துகிறார்கள். மாக்ஸிஸ்ற் வார்த்தைகளில் மீளமைக்கப்பட்ட கம்யூனிஸ்டுகளின் வருகை, வெளியேற்றப்பட்ட தீவிரவாத சீர் திருத்த வாதிகளுக்கு எதிராளிகள் என்று வாதிடலாம். அவ்வாறான விவாதம் தேசத்தின் நீண்ட கால நன்மைக்காக ஒரு புதிய நடுவழிக் கூட்டு இணைப்பை உருவாக்கலாம். புதிய அரசுகள் சந்தைப் பொருளாதார ஒழுங்குமுறைகளைக் கொடுக்கிறது. விலகி இருக்கும் வரைக்கும் முதலீட்டு வியாபாரத்தை தேசிய மயமாக்கலோ அல்லது வேறோ அவர்கள் சரியான பாதையில் செல்வர். உண்மையாக, பிழையான சிகிச்சையால் போதியளவு அதிர்ச்சியடைந்திருக்கும் மக்களால் அது வரவேற்கப்படும்.

★

# அமைதியானது, ஆனால் சாந்தம் அற்றது.

ஜப்பானின் பழைய காலத் தலைநகர் ஹியான் கியோ என்பதன் பெயர்ப் பொருள் அமைதியும், சாந்தமும் நிறைந்த நகரம் என்பதாகும். அதன் தற்போதையப் பெயர் கயோட்டா என்பதாகும். கயோட்டோ நகரமே ஒரு தொல்பொருட் காட்சியகம் என்று கூறலாம். அங்கே 60 மிக அழகாக அமைக்கப்பட்ட பூங்காக்களும், 200 சின்டோ புத்தமத ஆலயங்களும், 1500 புத்தமதக் கோயில்களும் உள்ளன. அவற்றில் அநேகமானவை, 794 முதல் 1,200 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்ட வரலாறு கொண்டவை. ஜப்பானின் இராச குடும்பம், நாறாவிலிருந்து குடி பெயர்ந்து, பண்டைய மாபெரும் டாங் இராச பரம்பரையினர் வாழ்ந்த நகரான சங்கான் என்று அப்பொழுது அமைக்கப்பட்ட, இப்பொழுது ஷியான் என்று அழைக்கப்படும் நகருக்குக் குடியேறினர்.

ஆனால் தற்பொழுது அந்த நகரில் அமைதியும் சாந்தமும் அந்த நகரத்தில் கட்டுமானத் தொழிலால் நகர அபிவிருத்தி செய்வோருக்கும், பழம் பொருள் காப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் இடையில் நடக்கும் இழுபறியால் குன்றியுள்ளன. அவர்களுடைய அநேக சண்டைகள் புதிதாக எழுப்பப்படும் கட்டடங்களின் உயரம் பற்றியதாகும். ஜப்பானில் ஓடும் புலட் என்ற அதிவேக ரயில் வண்டியில் செல்வோர் அனைவருக்கும் தெரியக் கூடியதாக உள்ள 45 மீற்றர் உயரமான டோஜ் பகோடாவை மறைக்கக் கூடியதாக எந்தப் புதிய கட்டடமும் எழக்கூடாதென்று தொன்மையைக் காப்போர் தடுக்கின்றனர். ஆனால் கட்டடங்கள் கட்டி எழுப்புவோரே வென்றுகொண்டு இருக்கின்றனர். ஜப்பானின் பொருளாதாரம் கீழிறங்கத் தொடங்கியுள்ள இந்நாளில் கயோட்டோ நகரமும் அதற்கு ஈடுகொடுத்துத் தனது செல்வ நிலையைத் தொடர முயல்வதால் புதிய முதலீட்டு முனைவுகள் வெற்றி கொள்கின்றன. அந்தப் பழம் நகரின் 1,200 ஆவது ஆண்டு விழா கொண்டாட்ட நினைவுச் சின்னங்களாக ஒரு புதிய பெருந் தெருவும், நவீன நாடகக் கொட்டகையும், அங்குள்ள பழைய இராச மாளிகைக்கு அடுத்தாற் போல் ஜப்பானிய மாதிரியிலான பெரும் விருந்தினர் விடுதியொன்றும் கட்டத் திட்டமிட்டுள்ளன.

ஏசியாவீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதுளிகளாக இருந்து பெரு வெள்ளமாகும் அகதிகள் வருகை

சில வாரங்களுக்கு முன்பு போல் அல்லாமல், இப்போது ஹெய்ற்றியர்களுக்கு அமெரிக்கா என்றதும், அங்கே தப்பிச் செல்லப் பெரும் உற்சாகம் ஏற்பட்டு உள்ளது. அனைத்துலகப் பொருளாதாரத்தடை ஹெய்ற்றியின் பொருளாதாரத்தை அமுக்க அமுக்க, அமெரிக்காவிற்குத் தஞ்சம் கேட்டு ஓடும் ஹெய்ற்றியர்கள் தொகை அதிகரித்துக் கொண்டு உள்ளது. முன்பு வாரத்திற்கு ஐம்பது பேராக இருந்த அந்தத் தஞ்சம் கேட்டு வருவோர் தொகை, இப்போது பெரும் வெள்ளமாக அதிகரித்துள்ளது. வள்ளங்களில் ஏறிக் கடலோடித் தப்ப அவர்களுக்கு 75 டொலர் அளவு செலவாகிறது. அதனால் அனைவருக்கும் தப்பி ஓடித் தஞ்சம் பெற விருப்பம் இருந்தாலும் பணம் இல்லாமையே தடையாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களாக ஆயிரக்கணக்கான ஹெய்ற்றி மக்கள் தங்களிடம் உள்ள அனைத்தையும் விட்டுவிட்டு அமெரிக்காவிற்கு தப்பி ஓடிக் கொண்டுள்ளனர். அமெரிக்கக் கடற்கரைக் காவல் படையினர், கரையில் இருந்து 12 மைல் தூரம் வரை சென்று, அப்படி தப்பி வருவோரைத் தங்கள் கப்பலிற்குள் மீட்டுக் கரையேற்றுகின்றனர். இந்தப் பெருந் தொகையான இடம் பெயர்வு 1991 இல் லெப். ஜெனரல் றாவுல் செட்றாஸ் தலைமையிலான இராணுவக் குழு ஒன்று ஹெய்ற்றியின் அரசாங்கத்தை வீழ்த்தி, ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு தொடங்கிய அமெரிக்காவுடனான மோதலின் உச்சக் கட்டமாகிறது. ஆனால் அமெரிக்காவின் மியாமிக் கடற்கரையைச் சென்று அடையும் சில அதிர்ஷ்டசாலிகளுக்குத்தவிர, பெரும் தொகையான ஹெய்ற்றியில் உள்ள மக்களுக்கு அதனால் ஒன்றும் பயனில்லை. அதேபோல் முன்பு தஞ்சம் கோரி வந்தவர்களைத் திருப்பி அனுப்பும் முறையை மாற்றி, அந்த அகதிகளுக்குத் தஞ்சம் கோரிட உரிமை கொடுத்தது ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கும் ஒரு தோல்வியே ஆகிறது. அதனால் ஹெய்ற்றியின் உள்ளே உறுதியான நிலைப்பாட்டை ஏற்படுத்த இந்த அகதிகள் வெளியேற்றம் எவ்விதமாகவும் உதவவில்லை.



கடலில் 12 மைல் சென்று படகுகளில் வரும் அகதிகளை மீட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 16,000 ஹெய்ற்றியர்கள் தங்கள் நாட்டைவிட்டு இடம் பெயர்ந்து வந்தபோது, அப்போது இருந்த ஜனாதிபதி புஸ்ஸின் நிர்வாகம் அவர்களை அமெரிக்கப் படைத்தளம் உள்ள குண்டானாமோ குடாவில் தடுத்து இறக்கி, ஜமேக்காவில் தற்காலிகமாகக் குடி அமர்த்தியது. அதேபோல் வேறு பல அண்டை நாடுகளில் அகதிகளைத் தங்கவைக்க அமெரிக்கா ஒழுங்குகள் செய்தது. ஆனால் ஹெய்ற்றியில் பதவி கவிழ்க்கப்பட்டு அமெரிக்காவில் தஞ்சம் பெற்றுள்ள ஜனாதிபதி அரிஸ்டயிற், தனது நாட்டு மக்களை ஹெய்ற்றிக்குள் இருந்து வரும்படி கூற முடியாது என்று கிளின்ரன்

**ஹெய்ற்றி: அகதிகளுக்கு அமெரிக்கா தஞ்சமளிக்கும் நம்பிக்கையில் அவர்கள் படகுகளில் வெளியேறிச் செல்கின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்திற்குக் கூறிய பின்பு, அகதிகள் அமெரிக்காவிற்கு வர இடம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பிரச்சனைகளும் பெருகுவதாக உள்ளது.

அமெரிக்கத் தூதரகம் வானொலி வர்த்தகச் சேவை மூலம் ஹெய்ற்றியர்களை. ஆபத்தான கடற் பிரயாணத்திற்குத் தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைக்க வேண்டாம் என்று எச்சரித்தும் கூட, ஹெய்ற்றிப் பொலிசார், அங்கிருந்து படகு ஒன்றில் தப்பிச் செல்ல முயன்றோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது, ஏற்பட்ட பயத்தால் கடலிற் குதித்தோர் 30 பேர் நீரில் மூழ்கி இறந்துங் கூட அகதிகள் வெளியேற்றம் தடைப்படவில்லை. ஹெய்ற்றியில் உள்ள அமெரிக்க கொன்சல் காரியாலயத்தில் அமெரிக்காவிற்குத் தஞ்சம் கேட்டு விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்த போது, அங்கு சில ஹெய்ற்றியர்களே அதற்கு எனச் சென்றனர். ஏனெனில் அப்படி விண்ணப்பஞ் செய்வோரில் சிறிய தொகையினருக்கே தஞ்சம் கிடைக்கிறது. அத்துடன் அந்த நடவடிக்கையின் போது உள்ளூர்ப் பொலிசாரிடம் பிடிபட்டு ஆபத்துக்கு உள்ளாகவும் இடம் உள்ளது. அத்தோடு ஏற்கனவே அவ்விதம் தஞ்சம் பெற அனுமதிக்கப் பட்டவர்கள் 1,200 பேர் ஹெய்ற்றியில் இருந்து வெளியேற விமானப் பயண வசதி இல்லாமல் தேங்கி நிற்கின்றனர். ஏனெனில் ஐ. நா. விதித்துள்ள தடை காரணமாக அந்த நாட்டில் இருந்து புறப்படும் நேரடி விமானப் போக்குவரத்துக்களும் தடைசெய்யப் பட்டுள்ளன. அதனால் அகதிகளாக நாட்டைவிட்டு வெளியேறுவோரைத் தடுக்க மேற் கொண்ட விளம்பரம் ஒன்று, ''அமெரிக்கா ஒன்றும் சொர்க்க வாழ்வு தராது மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படும் வரை காத்திருப்பதே சிறந்தது'' என்று கூறுகிறது.

உள்நாட்டு நிலபரமோ நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு உள்ளது. அந்த நாட்டின் மீதான ஐ. நா பொருளாதாரத் தடை அங்குள்ள ஏழைகளையே அதிகம் பாதித்து உள்ளது. சில வாரங்களுக்கு முன்பு செட்றாஸ் ஆட்சிக்கு ஆதரவு வழங்கும் சில பணக்கார ஹெய்ற்றியர்களை அடக்கவெனப் பல நூற்றுக் கணக்கான ஹெய்ற்றியர்களின் அமெரிக்கச் சொத்துக்கள் மீது அமெரிக்க அரசு தடை விதித்தது. அது நல்ல பலனை அளித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் வோரன் கிறிஸ்தோபர் அமெரிக்கச் செனேட் சபையில் உரை நிகழ்த்திய போது கூறினார்.

தடை நடவடிக்கைகள் ஹெய்ற்றியின் நிலையில் சில விரிசல்களை உண்டாக்கித்தான் உள்ளன என்று கூறத்தக்க விதமாக அந்த நாட்டுப் பொலிஸ் படைத் தலைவர் லெப், கேர்ணல் மைக்கல் பிரான்ஸுவா. செட்றாஸ் ஆட்சியை அகற்றும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுப்பதாகச் சந்தேகிக்கப் படுகிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூற்றுப்படி, ''ஓர் அமுக்கக் குண்டு வைக்கப்பட்டுள்ளது. அது எப்போது வெடித்து யாரை வீழ்த்தும் என்று கூறமுடியாது'' என்பதற்கு ஏற்ப கிளின்ரன் நிர்வாகமும் ஹெய்ற்றியின் நடவடிக்கை தனது முகத்தில் கரிபூசாமல் இருக்க எதிர்பார்க்கக் கூடும்.

மொழியாக்கம்:

**திரு. கிருபைராஜா**

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி ஹெய்ற்றியின் மீது படையெடுக்க அமெரிக்கா சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளது. அமெரிக்காவின் விசேட படைகள், பாரசூட் குருப்புக்கள், கடற் கொமோண்டோக்கள் போன்றன ஹெய்ற்றியில் ஓர் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஒத்திகையினைச் செய்து பார்த்துள்ளன. உலகின் கண் துடைபபிற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபையில் படையெடுப்பதற்காதரவான தீர்மானத்தைப் பெற வழமைபோல் ஐ. நா. வை நாடியுள்ளது. ஐ. நாவும் கால எல்லை விதிக்காமல் ஹெய்ற்றியின் மீது படையெடுக்க ஆதரவளித்துள்ளது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆர்ஜென்ரீனாவைத் தவிர்ந்த ஏனைய நாடுகள் இதனை ஆதரிக்கவில்லை. அவை இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீடு தன்னிச்சையாக அதிகரிப்பதையிட்டு அச்சந் தெரிவிக்கின்றன. அமெரிக்காவிலோ ஓர் அமெரிக்க வீரன் கூட ஹெய்ற்றியில் கொல்லப்படுவதை யாரும் விரும்பவில்லை. ஹெய்ற்றிய இராணுவ ஆட்சியாளர் செட்றாஸ் அமெரிக்காவை காரசாரமாகக் கண்டித்து வந்தாலும், படையெடுப்பைச் சமாளிக்க என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை; எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

தொகுப்பு: உலக உலா

## பதிலடி கொடுப்பதாக அச்சுறுத்தல்

சைபீரியாவில் காட்டுமரம் தறிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த போது தப்பிச் சென்று தென் கொரியாவுக்குள் புகுந்த வடகொரியர்களுக்கு அங்கே அரசியல் தஞ்சம் கொடுக்கப்பட்டால் அதற்கு எதிரான பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொயங்யாங் வானொலிச் செய்தி ஒன்று அறிவித்தது, இதற்கிடையில் மொஸ்கோவும், பொயங்யாங்கும் அந்த மரம் தறிப்போரின் சட்டபூர்வ நிலைமை பற்றியும் அவர்களுக்கு மேலும் பாதுகாப்பும், மனித உரிமைகளும் அவர்கள் வேலை செய்யும் பிரதேசங்களில் வழங்குவது என்றும் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டுள்ளன. சியோல் அந்த வடகொரிய மரம் தறிக்கும் தொழிலாளருக்குத் தஞ்சம் தர ஒப்புக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மத்திய ஆபிரிக்காவில் தலையீடு

**றுவாண்டாவில் பிரான்ஸ் மேற்கொண்டிருக்கும் "மனிதாபிமான" பொலிசு நடவடிக்கையானது எதிர்விளைவுகளையே ஏற்படுத்திவிடுமளவுக்கு குறிப்பிடத்தக்க ஆபத்தைச் சந்திக்கிறது.**

*மொழியாக்கம்*
திரு. யோகரெட்ணம்

ஆபிரிக்காவில் பிரான்சிற்கான " விசேட பங்கு " எப்போதுமே அதற்குச் சுவையான அனுபவமாகவே இருந்திருக்கிறது. அதனது கடந்த குடியேற்ற கால உரிமையொன்றுடன் புவிசார் அரசியல் நலன்களை உறுதிப் படுத்துவது மற்றும் அதனது ' பிராஞ்சு மொழிவாரி ஒருமைப்பாடு ' ( Francophone Solidarity ) வலியுறுத்தப்படுகிறது போன்றவையே இதற்கான பின்னணியாகும். ஒரு மக்களது பாஷையை இன்னொரு மக்கள் பேசுகிறார்கள் என்பதற்காக, அவர்களது விடயங்களில் தலையிடுவதற்கு இவர்களுக்கு உரிமையும், கடமையுமிருப்பதான இந்த " மொழிவாரி உரிமை " உண்மையில் விசித்திரமானதொன்றை, 1960 இலிருந்து பன்னிருதடங்களுக்கும் மேற்பட்ட இராணுவத் தலையீடுகளில் திரும்பத் திரும்ப இறங்கியதன் மூலம், ஆபிரிக்காவில் அதனது பிராந்தியப் பொலிசுக்காரரின் நடவடிக்கைகளுக்கே இவ் விசித்திர உரிமை வழிகோலிற்று. கடந்த வாரம் மீண்டுமொரு தடவையாக பிரான்சு தனது துருப்புக்களை றுவாண்டாவிற்குள் அனுப்பியுள்ளது. இந் நடவடிக்கையானது, " வரையறுக்கப்பட்ட காலத்திற்கான " ஒரு " மனிதாபிமான " இராணுவப்பணியொன்றாக அதிகாரிகள் தரப்பில் விபரிக்கப்பட்டது.

அரை மில்லியன் உயிர்களை இதுவரை பலிகொண்டு விட்டதுடன் பல இலட்சம் றுவாண்டாப் பிரஜைகளைத் தேசாந்திரியாக விரட்டியடித்துக் கொண்டிருப்பதுமான மொழி, இனவாரிப் படுகொலைகளிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதே குறிக்கோள் என இந்த நடவடிச்கைக்குக் காரணங் கற்பிக்கப்படுவது நகைப்பிற்கிடமானதாகும். தான் நடுநிலைமை வகிப்பதாகத் தற்போது பிரான்சு உரிமை பாராட்டுவதை, றுவாண்டாவில் அதனது கடந்த காலத் தலையீடுகளே அடிப்படையற்றதாக்குவதுதான் இப்போதுள்ள பிரச்சினையாகும். 1990 இலிருந்து 1993 வரையில் செல்வாக்கும், பலமும் மிக்கவர்களான ருட்சி இனத்தவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேச பக்தி முன்னணி ( ஆர். பி. எவ். ) யினரின் ஆயுதப் புரட்சியின் போது, ஹூட்டு இன ஆதிக்க அரசுத் தலைவராக இருந்த ஜனாதிபதி ஜீவென்ல் ஹாபியறிமனாவின் ஆட்சிக்கே பிரான்சிய துருப்புக்களின் ஆதரவும், ஆயுதங்களும் வழங்கப்பட்டன. நாட்டின் பெரும்பகுதியை இப்போது தமது கட்டுப்பாட்டிற் கொண்டிருக்கும் கிளர்ச்சியாளர்கள், பிரான்சின் " மக்கள் மீட்பு நடவடிக்கை" ( " Operation—Turquoise " ) தமது வெற்றியைத் தடுக்கும் நோக்குடன் கூடிய ஒரு 'மறைமுக இராணுவ நடவடிக்கையே' எனக் குற்றஞ்சாட்டியிருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. தந்திரமாக என்னதான் மனிதாபிமான முலாம் பூசப்பட்டபோதிலும் பிரான்சியத் துருப்புக்கள் அங்கு இருப்பதொன்றே நிலைமையை மேலும் கடினமாக்கும் நிலை அங்கிருக்கிறது.



ருட்சியின சிறுபான்மையினருக்கே பாதுகாப்பு ஆகக்கூடுதலாகத் தேவைப்படுகிறது. ஏப்பிரல் 6 ஆம் திகதியன்று ஹாபியறிமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணஞ் செய்த விமானத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ராக்கெட் தாக்குதலானது, ஜனாதிபதியைக் கொன்றதுடன் உறுதியற்றதாக விருந்த தற்காலிகப் போர்நிறுத்த மொன்றையும் சிதறடித்துவிட்டது மல்லாமல், அவரது ஹுட்டு இன ஆதரவாளர்களது கொலைவெறி யையும் தூண்டிவிட்டிருந்தது. கத்தி, கொடுவாள்கள் சகிதம் நிகழ்ந்த கொலைவெறி யாட்டத்தின் விளைவாக ருட்சி இன மக்களில் ஏறக்குறைய பாதித் தொகையினர் கொன்றொழிக்கப் பட்டனர். கடந்த மே மாதம் 5,500 பேர்கொண்ட சமாதானப்படை யொன்றை அங்கு அனுப்புவது என்ற தீர்மானம் ஐ. நா. சபையில் வாக்களிப்பின்பேரில் நிறைவேறிய போதிலும் குறைந்தது யூலை இறுதி வரையிலாவது அப்படை தயாராகிவிடுவது இயலாத வொன்று. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க விரும்பாத பிரான்சு ஜனாதிபதி ஃபிராங் கொய்ஸ் மின் ரொறான்ட்டும் பிரதம மந்திரி எட்டுவார்ட் பலாரும் "முற்றாகவே அழித்தொழிக்கப்படும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் இனக் குழுக்களைப் பாதுகாக்கும்" உடனடி நடவடிக்கையைப் பிரான்சு எடுக்கவேண்டுமென்று யூன் 15–ம் திகதியன்று இணக்கம் கண்டிருந்தனர்.

சமாதானப் படையினர் வந்து சேரும் வரையில் பிரான்சின் வழிநடத்தலுடனான பல் தேசியப் படையொன்றைப் போரினால் சின்னபின்னப்பட்டிருக்கும் அந் நாட்டிற்கு அனுப்புவதே இதன் நோக்கமாக இருந்தது. ஐ. நா. பொதுக் காரியதரிசி பூட்டோஸ்காலி இத் திட்டத்திற்கு ஆதரவளித்ததுடன் அமெரிக்கா மற்றும் பிரான்சின் ஐரோப்பிய நட்பு நாடுகளும் விநியோக ரீதியிலான ஆதரவுகளை வழங்குவதாக உறுதியளித்திருந்தன.

கடந்த வாரம் ருவாண்டாவில், இரண்டு மாதங்களுக்கான அதனது மனிதாபிமான நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்தும்படி பிரான்சுக்கு அங்கிகாரமளிக்கும் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பத்து வாக்குகளால் நிறைவேறியது ஐந்து நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தனது இராணுவப் பணியினை மேற்கொள்வதற்கு அவசியமான எந்தவித பலப் பிரயோகத்திற்குமான அதிகாரம் பிரான்சுக்கு வழங்கப்பட்டது. சமாதானப் படையினருக்குப் பொஸ்னியாவில் வழங்கப் பட்டதிலும் பார்க்கப் பரந்த அளவிலான அதிகாரம் பிரான்சுக்கு இங்கு வழங்கப்பட்டிருந்தது. அங்கு அவர்கள் தற்பாதுகாப்பின் பொருட்டு மட்டுமே, துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். ஆனால், இங்கு போரில் ஈடுபட்டிருந்தவர்களுடன் ஆயுதப்போரில் இறங்கி வருவதற்கான சாத்தியக் கூறுகளையுங்கூட இது அதிகரித்து விட்டிருந்தது. புறுஸ்ஸலிஸில் இருக்கும் "ஆர். பி. எவ்." பிரதிநிதியொருவர் பின்வருமாறு கூறியிருந்தார்: "அவர்கள் எமக்கு எதிர்ப்படுவார்களேயாகில் மோதல்கள் வெடிக்கும்."

பிரான்சியர்கள் முதலில் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்களுக்குள்ளேயே நகர்ந்து கொண்டிருப்பதால் குறைந்தது ஆரம்பத்திலாவது இவ்வாறான மோதல்கள் சாத்தியமானதாகத் தோன்றவில்லை. அவர்களது அப் பணிக்கே சிறந்த பொருத்தமான துருப்புக்களை வரும் வாரத் தொடக்கத்திலேயே கிழக்கு ஸயரிலுள்ள கொமா, புக்காவு விமானத் திடல்களில் வந்து சேரத்தொடங்கினர். பிரான்சிலிருக்கும் விரைவு நடவடிக்கைப் படையிலிருந்து (RAF Rapid Action Force)கிட்டத்தட்ட 1,000 பேர்களுடன் மேலும் 1,500 பேர் ஆபிரிக்காவிலிருக்கும் பிரான்சுத் தளங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஸயர் தளத்தில் நிலைகொண்டிருந்த ஜகுவர் ( Jaguar ) மற்றும் "மிராஜ்" ( Mirage ) போர் விமானங்கள் எட்டின் ஆதரவுடன் இலகுரக கவச வாகனங்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் முதலாவது துருப்பினர் புக்காவுக்கு அருகில் எல்லையைக் கடந்து தென்புற நகராகிய சியங்குடை நோக்கி முன்னேறின. இங்குதான் ஹுட்டு இனத் துருப்புக்களின் கட்டுப்பாட்டிலிருந்த முகாம்களில் 5000–க்கு மேற்பட்ட






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருட்சி அகதிகள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தனர், ஏனைய பிரான்சுப் பிரிவுகள் வடக்கே கோமாவிலிருந்து உட்பிரவேசித்து ஜிஸ்செனிய் நகருக்கண்மையில் அந்நிய இனங்களால் சூழப்பட்ட பகுதியில், ஹுட்டு அகதிகளிருந்த இடத்தை நோக்கி முன்னேறின. நாட்டின் மேற்குப்புற எல்லையில் பெருமளவில் உடல்கள் புதைக்கப்பட்ட பாரிய சவக்குழிகளைப் பிரான்சுத் துருப்புக்கள் கண்டன.

ஹுட்டு மற்றும் ருட்சி முகாம்கள் இரண்டிற்குமே முன்னேறிச் சென்றதன் மூலம் தமது சார்பற்ற நடுநிலையைச் செயல் ரீதியாக எண்பிப்பதாகவே பிராஞ்சியர்கள் நம்பி எதிர்பார்த்தனர். ஆனால் கொடுவாள்கள் மற்றும் ஈட்டிகளை அசைத்து ஆர்ப்பரித்தவர்களுட்பட கூட்டங்கூட்டமாக ஹுட்டு பதாதைகள் சகிதம் இனமக்கள் பிரெஞ்சு வீரர்களை உற்சாகமாக வரவேற்றிருந்தனர். அவர்களது பதாதைகளில் பிராஞ்சியர்களை வாழ்த்தும் பிரெஞ்சுமொழி சுலோகங்களும் காணப்பட்டன. பிராஞ்சியர்கள் கூடுதலான ஆயுதங்கள் வழங்கி ஆட்சியினருக்காகப் போரிடவுமே வந்துள்ளனர் என அரச வானொலி உரிமை பாராட்டியதை யிட்டு, கிளர்ச்சி வீரர்கள் சந்தோஷப்படாதிருக்கவும் முடியாது.

பிராஞ்சியர்களின் ''மீட்பு நடவடிக்கை'' ஆரம்பமாவதற்கு சிறிது முன்னரே, உதவி நிவாரணப் பணியினருட்பட பிரெஞ்சு நாட்டினர் அனைவரையும் நாட்டை விட்டு வெளியேறும்படி கிளர்ச்சியாளர்கள் கட்டளையிட்டிருந்தனர். பிரெஞ்சுப் பத்திரிகையாளர்கள் சிலர் பின்னர் திரும்பிவர அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்களில் குறைந்தது அரை இடசின் பேர்களாவது வெளியேற்றப்பட்டனர். தலைநகர் கிகாலியில் நிலை கொண்டிருந்த 450 பேர் கொண்ட ஐ. நா. கண்காணிப்புப் படைக் கொமாண்டராகிய மேஜர் ஜெனரல் றொமியோ டல்லேய்யர் பிரெஞ்சு மொழி பேசும் தம்முடைய ஆபிரிக்கத் துருப்புக்களுக்கெதிராகப் பழிவாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காரணமாக 42 வீரர்களை நாட்டிலிருந்து வெளியேற்றியிருந்தார். அதே வேளை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் பதாதைகள் தாங்கி ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் கிகாலி வீதிகளில் எதிர்ப்பு அணிவகுப்பு நடத்தினர்.

தவிர்க்க முடியாத சில பாராளுமன்ற அபிப்பிராய பேதங்கள் மத்தியிலும் பிரெஞ்சு அரசியல் நிர்வாகம் பொதுவாக இத்தலையீட்டை ஆதரித்தேயிருந்தது. நடவடிக்கைக்கு முன்னிரவில் தேசியப் பேரவையில் உரையாற்றிய பலாடுர், ''எமது படைகள் எந்த விதத்திலும் றுவாண்டாவின் ஆட்சிப் பிரதேசத்தில் ஆழமாக ஊடுருவிச் செயற்படவோ அல்லது உள் நாட்டுப் போராட்டங்களில் பங்குபற்றவோ போவதில்லை'' என்ற வரிகள் மூலம் தமது அதிகாரிகளுக்கு விடயத்தை ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார். இருந்தும் பிரெஞ்சு நடவடிக்கை மிக மிகச் சொற்ப அளவில் மிகவும் காலங் கடந்து விட்டதாக மேற்கொள்ளப்படும் ஒன்று தானா? என்ற கேள்வியே இன்னமும் தொங்கி நிற்கிறது.

பிரெஞ்சு வருகையைப் பெரும்பான்மை ஹுட்டுகள் மனதார வரவேற்கிறார்கள். அரசுக்கட்டுப்பாட்டிலுள்ள ஆட்சிப் பிரதேசமெங்கும், கார்கள் மற்றும் மக்கள் படையினர் முகாம் கொண்டிருக்கும் வீதித் தடைநிலையங்களிலும் பிரெஞ்சு மூவர்ணக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருப்பதுடன், கிராமத்து வீதிகளுக்குக் குறுக்கே அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பெரிய வெள்ளை நிறப் பதாதைகள் பிரான்சு – றுவாண்டா ஒத்துழைப்பை வரவேற்பதாகக் கட்டியங் கூறிக்கொண்டிருந்தன. ஸயர் எல்லையிலிருந்து கிழக்கே மாகாணத் தலைநகர் பீயூட்ராறேக்கான நான்கு மணிநேர வாகனப் பயணமொன்றின்போது கொடுவாள்கள், குண்டாந்தடிகள் ஏந்திய இளம் மக்கள் படையினர் எம்மை பிரெஞ்சுப் பத்திரிகையாளர்கள் தானாஎன வற்புறுத்திக்கேட்டனர். அதனை நாம் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு உறுதிப்படுத்திய போது, முறுவலித்த அவர்கள், எம்முடன் கைகுலுக்கிக் கொண்டதுடன் எம்மை அப்பால் செல்ல அனுமதித்தனர். றுவாண்டாவிலிருக்கும் ஐ. நா. பணிக் கொமாண்டராகிய மேஜர் ஜெனரல் றோமியோ டல்லேய்யரின் கருத்துப்படி பிரெஞ்சு இராணுவத்தலையீடானது, அரசுத்துருப்புக்களின் தளர்ந்து கொண்டிருக்கும் உளஉரத்தையும் எழுப்பிக் கொள்ளவைத்திருக்கிறது. கிகாலியின் முற்றுகையின் கீழிருக்கும் துருப்புக்களின் ''விசேஷமாக கீழ்மட்டங்களில் மன எழுச்சி அதிகரித்துள்ளதெனதோன்றுவதாக டல்லேய்யர் கூறுகிறார்.

இம்மீட்பு நடவடிக்கையானது இதுவரையில் பெரிதாக எதனையும் சாதித்துவிடவில்லை. வீரர்கள் வீதித்தடைகள் சிலவற்றை அகற்றுவதுடன் பொதுமக்கள் படை உறுப்பினர்களது ஆயுதங்களைக் களைவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் சொற்பத்தொகையிலான ருட்சியின ஆகதிமுகாம்களில் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பை நிலை நிறுத்தியுமிருந்தனர். ஆனால் தாம் எதிர்பார்த்திருந்ததிலும் பார்க்க வெகு சொற்பமான ருட்சிகளே அப்படுகொலைகளுக்குத்தப்பி உயிர் வாழ்ந்திருந்ததாகப் பிரெஞ்சு அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். மேற்கு றுவாண்டாவில் பிரெஞ்சு துருப்பினர் சுற்றிவந்த இரண்டு மாகாணங்களில் யுத்தத்திற்கு முந்திய சனத்தொகையாகிய 1,00000 வரையான ருட்சிகளில் வெறும் 20,000 பேர்களே உயிருடன் எஞ்சியிருந்தனர். ஹுட்டு அரசின் தலைநகராகிய ஜிஸ்ஸெனியில், ''ருட்சியர்கள் எவருமே எஞ்சியிருக்கவில்லை'' என்கிறார் வியோற்றாட். அத்துடன் எஞ்சிய சொற்ப ருட்சிகளையும் உயிர்மீட்பதற்கு, இன அழிப்பிற் பங்கு கொண்டிருந்த பலருக்கும் அவர்களது செயற்பாடுகளுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கிக் கொண்டிருந்த ஹுட்டு அதிகாரிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தே, செயற்பட வேண்டியிருப்பதாகப் பிரெஞ்சு அதிகாரிகள் ஒப்புகொண்டுள்ளனர். கடந்த வாரம் 8,000 ருட்சிகளுக்குப் புகலிடம் அழித்துக் கொண்டிருந்த நியாருசிசி அகதிமுகாமொன்றுக்குள் 50 பிரெஞ்சுத் துருப்புக்கள் நகரக்கூடியதாக இருந்தது. உள்ளூர் அரசுத் தலைவர்கள் இனத் தலைவர்களுடன் ஒத்துழைப்புடனேயே பிரெஞ்சு அதிகாரிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மக்கள் படையினரால் இரவு நேரங்களில் மேற் கொள்ளப்படும் திடீர் வேட்டைகளின்போது ருட்சியர்கள் பலர் அவர்களால் இழுத்துச் செல்லப்பட்ட வேளைகளில் இரு சாராருமே அருகில் பார்த்து நின்றிருக்கின்றனர். "இல்லையென்றால் ஒருவேளை எமது பணியையே வாபஸ் பெற்றுக் கொள்ளுமளவுக்கு விபரீதமாகிப் போயுமிருக்கலாம். சிலரது (அதிகாரிகள்) கைகள் இரத்தக்கறை படிந்தவையாக இருந்தபோதிலும் இப்படியானவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை நியமிப்பது என்று பொறுப்பில் இருக்கவில்லை" என பிரெஞ்சுக் கொமாண்டர் கேணல் டைடியர் திபோட் தனது இயலாமையை ஒப்புக்கொள்கிறார்.

கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்திற்கு முன்னரே மேற்குநோக்கி ஓடியிருந்த ஆயிரக்கணக்கான ஹுட்டு அகதிகளுக்கும் உதவிவழங்குவதற்கு பிரெஞ்சு அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டிருந்தனர். எல்லையிலிருந்து 12 மைல்கள் தூரத்தில் மாகாண தலைநகர் கிக்கொங்கொறோவுக்கு வடக்கேயுள்ள சியானிக்காவிற்கு 50,000 மக்கள் கடந்தவாரத்தின்போது இடம்பெயர்ந்திருந்தனர். கிராமத்து சிற்றாலயத்தைச் சூழவிருந்த குன்றுகளைக் கடந்த இவர்கள் பரந்து விரிந்ததான அகதிகள் முகாமொன்றுக்குவந்துசேர்ந்தனர். அநேகமாக அவர்களில் எவருமே இலைகளாலும் கிளைகளாலுமான குடிசைகளிலேயே வாழ்ந்ததுடன் உயிர்வாழ்வதற்கு, நிவாரண நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட வாராந்த உணவுப்பங்கீடான காய்கறிகளிலேயே தங்கியவர்களாகவுமிருந்தனர். "நாம் இங்கு பட்டினி கிடக்கிறோம்" என கிகாலியைச் சேர்ந்த 17 வயதுடைய க்குளோடைன் றூட்டம் பாஸி என்ற மாணவியொருத்தி கூறினாள். ஏப்ரல் 20 இல் தலைநகரிலிருந்து தனது குடும்பத்துடன் தப்பிய இவள், அன்றிலிருந்து மாறி மாறி இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றாள். ஹுட்டு மக்களுக்கெதிராக "ஆர். பி. எவ்" கொடுமைகள் புரிந்ததாக இவளும் ஏனையோரும் கூறியிருந்தனர். ஆனாலும் வெகு சிலரே இக்குற்றங்களில் எதையாவது தாம் நேரிற்கண்டதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த வார இறுதியிலேயே முகாமை பரிசோதனையாகப் பார்வையிடுவதற்காக முதலாவது பிரெஞ்சு உளவு தகவல் நடவடிக்கைக்குழுவினர் வந்து சேர்ந்திருந்தனர், அத்துடன் நிவாரணத் திற்கான பிளாஸ்டிக் கூடாரத்தகடுகளுங் கொண்ட வாகன அணியொன்றும் ஒரு சில நாள்களில் வந்து சேருமென எதிர்பார்க்கப்பட்டது.

உயிர்தப்பியிருக்கும் ருட்சிகளுக்குமிடையிலான ஓர் அதிகாரப் பங்கீட்டு ஏற்பாடு ஒன்றுதான் றுவாண்டாவின் உள்நாட்டுப் போருக்கான ஒரே தீர்வாக முடியும் எனவும், அவர் குறிப்பாகக் கூறியுள்ளார். " றுவாண்டா பல்தேசிய இனங்கள் கொண்ட ஒரே நாடாகவே தொடர்ந்து இருக்க வேண்டும். இனவொழிப்பு மேற்கொள்ளப்பட்டபோதிலும் அரசியல் தீர்வுதான் ஒரே தீர்வாகும் என்கிறார் வியோன்ராட் பீட்டு. மொத்தமான வெற்றியைக் கிளர்ச்சியாளர்கள் ஈட்டிக்கொள்வதனாலாகும் விளைவுகள் பற்றி, பெரும்பான்மை ஹுட்டு அரசு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்." "என்னைப்போன்ற மக்கள் ஸயருக்குள் பின்வாங்கிச் சென்று கெரில்லாப் போரொன்றை ஆரம்பிப்போம்" என்கிறார் மேற்கு றுவாண்டாவின் தலைநகர் கிக்கொங் கொறோவின் அரசுத் தலைவராகிய லோறென்ற் பியூசிபரூட்டா. கிளர்ச்சியாளர்கள் விட்டுக் கொடுக்கவில்லையென்றால் கடினமான ஒரு முடிவையே பிரான்சு தெரிந்து கொள்ளவேண்டியிருக்கும். போரொன்றுக்கான ஆபத்தை அது சந்திக்கவேண்டியிருக்கும், அல்லது 'ஆர். பி. எவ்.' முன்னேறுவதற்கு இடமளிப்பதன்மூலம் இலட்சக்கணக்கில் மேலும் அகதிகள் தொகை வளர்வதை அனுமதிக்கவேண்டியிருக்கும். பிரெஞ்சு இராணுவத் தலையீட்டின் இறுதி முடிவு எதுவாக இருப்பினும், றுவாண்டாவின் மக்கள் படும் பேரவலங்களுக்கு முடிவு அருகில் இருப்பதாகத் தெரியவில்லை.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி றுவாண்டா முழுவதையும் ருட்சி இனப் போராளிப் படையான ஆர். பி. எவ் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது. றுவாண்டாவின் ஜனாதிபதியையும், பிரதமரையும் ஹுட்டு இன மக்களிலிருந்தே தெரிந்தெடுத்து ஆர். பி. எவ் நியமித்துள்ளது. இச்செயலானது உலகிற்குப் பெரும் ஆச்சரியத்தையும், ருட்சி இனப் போராளிகளது இராஜதந்திரத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. ருட்சி இனப் போராளிகள் றுவாண்டாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலட்சக்கணக்கான ஹுட்டு இன மக்கள் தாங்கள் பழிவாங்கப்படுவோம் என அஞ்சி அண்டை நாடான ஸயருக்குத் தப்பிச் சென்றுள்ளனர். சுமார் 2 மில்லியனுக்கு மேற்பட்ட ஹுட்டு இன மக்களும், அரச படையினரும், இவர்களோடு சேர்ந்து வெறியாட்டம் போட்ட குண்டர் படைகளும் சேர்ந்தே ஸயரில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஸயரில் அகதிகளின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. ஸயரில் உள்ள கோமா (Goma) என்ற அகதி முகாமே உலகின் மிகப் பெரிய அகதிகள் தங்குமிடமாகக் கருதப்படுகிறது. இங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளோ சுகாதார, தங்குமிடவசதிகளோ இல்லாமல் அகதிகள் அல்லற்படுகிறார்கள். சுகாதாரச் சீர்கேட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் மோசமான வாந்திபேதி நோய் பரவியுள்ளது. இதுவரை 20,000-க்கு மேற்பட்ட மக்கள் இந் நோயினால் கொல்லப்பட்டுள்ள னர். ஏராளமானவர்கள் கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப் பெருந்தொகையான அகதிகள் இடப்பெயர்வைக் கண்டு உலகமும், அகதிகள் நிவாரணப் பணி அமைப்பு களும் திகைத்துப் போய் நிற்கின் றன. அமெரிக்கா பெயரளவில் ஏதோ சில உதவிப் பொருள்களை விமானங்களிலிருந்து கொட்டியது. ஆனால் அது இலக்குத் தவறியதால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும ளவு கிடைக்கவில்லை. ஆபிரிக்க கறுப்பர்கள் பாதிக்கப்படும் போது இப்படித்தான் உலகம் கைகட்டி நிற்கும். ஆனால் இதுவே ஐரோப் பாவோ அன்றி அமெரிக்காவோ இருந்தால், உலகமும், ஐ. நா. சபை யும் வரிந்து கட்டிக் கொண்டு நிவாரணப்பணிகளில் ஈடுபடுவார் கள் என்பது தான் உண்மை.

புதிய றுவாண்டா அரசு அகதி களாக வெளியேறிய ஹூட்டு இன மக்களைத் திரும்பவும் பழைய இடங் களுக்குத் திரும்புமாறு அழைப்பு விடுத்துள்ளது. ருட்சி இன மக்கள் படுகொலையில் ஈடுபட்ட பழைய றுவாண்டா அரசபடையினரும், அவர்களோடு சேர்ந்த குண்டர் படைகளும், சம்பந்தப்பட்டவர்களும் புரட்சி நீதிமன்றின் முன்னால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங் கப்படுவார்கள் என றுவாண்டா வின் புதிய அரசு மேலும் அறிவித் துள்ளது. அத்துடன் ஸயரில் புகுந்துள்ள பழைய அரசபடை களினதும், குண்டர்படைகளின தும் ஆயுதங்களைக் களையுமாறு ஸயர் அரசுத் தலைவரைப் புதிய றுவாண்டா அரசு கேட்டுள்ளது.

ருட்சி இனப் போராளிகள், தங்கள் மக்களில் 5 இலட்சத்துக்கு மேற்பட்டோரை ஹூட்டு இன அரச, குண்டர் படைகள் கொன்று குவித்த போதிலும், பழிவாங்கல் நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபடவில்லை. உலகும் இதனை வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறது கோமா அகதி முகாம், ஹூட்டு இனமக்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கவில்லை. மோசமான அகதி முகாம் அமைப்பினால், பழி வாங்கல் இல்லாத ருட்சி இனப் போராளிகளின் நடவடிக்கைகளா லும் ஏராளமான ஹூட்டு இன மக்கள் நாடு திரும்பிக் கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. அகதிமுகாமில் நோய்வந்து இறப்பதைவிட, சொந்த நாட்டில் பிரச்சனைகளை எதிர் கொள்ளத் தயராகி விட்டனர்.

தொகுப்பு: உலக உலா

★

## கிறிக்கட்டில் ஐந்து - நூறு ஓட்டம்

கிரிக்கட் விளையாட்டில் அதிக ஓட்டம் எடுப் பதைக் கொண்டே திறமையைக் கணிக்கும் உலகிற்கு மகிழ்வுதர, புதிய ஓர் அதிக ஓட்டக் கிறிக்கட் நட்சத்திரமாக பிரயன் லாறா உதித்துள்ளார். சென்ற ஏப்பிரலில் இங்கிலாந் துக்கு எதிராக விளையாடிய தனது நாடான மேற்கிந்தியத் தீவுகளின் குழுவுக்கு 375 ஓட்டங் கள் எடுத்துச் சாதனை படைத்த அவர், 1958 முதல் நிலவிய உலகப் பெரும் ஓட்டத் தொகையை மீறிவிட்டார். அப்பொழுது அவர் அதிக ஓட்டங் கள் எடுத்தது தனது சாதனைத் திறனுக்குச் சூடு காட்டவோ என்று எண்ணும் படியாக, அண்மை யில் இங்கிலாந்தில் வோவிக்ஸயரில் நடந்த உள்நாட்டுப் போட்டி ஆட்டத்தில் அவுட் ஆகாமல் 501 ஓட்டங்கள் எடுத்ததுடன், வேறு விதமான சாதனையும் அவர் படைத்து உள்ளார். தொடர்ந்து ஏழு போட்டிகளில் ஏழு நூறு ஓட்டங்கள் எடுத் துச் சாதனை புரிந்து இருந்த அவர், இப்பொ ழுது கடந்த எட்டுப் போட்டிகளில் 1551 ஓட்டங் கள் எடுத்த சாதனையும் படைத்துள்ளார். பிர யன் லாறாவை வர்த்தக விளம்பர உலகு சூழ்ந்து கொண்டு பெரும் பணக்காரர் ஆக்கப் போகி றது. பிரித்தானியாவில் உள்ள இடத்துக்கு இடம் கொண்டு செல்லக்கூடிய தொலைபேசிக் கம்பனி ஒன்று, மாதம் ஒன்றுக்கு 375 நிமிடம், கட்டணம் இன்றித் தொலைபேசியைப் பயன் படுத்த அவருக்கு வசதி கொடுத்து உள்ளது. லெவி 501 ஜீனஸ் அவரை வைத்து வர்த்தக விளம்பரம் செய்ய ஆயத்தமாகிறதாகக் கேள்விப் படக் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெண் மத குருமாருக்கு இடமில்லை."

## — பாப்பரசர்

ஆண்களுக்குச் சரிநிகராக உரிமை கேட்கும் பெண்கள் றோமன் கத்தோலிக்க மதத்தில் குருவாய் வரவும் போராடுகின்றனர். பலவிதத்திலும் தன்னை முற்போக்காளராக இனங்காட்டிக் கொள்ளும் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இவ் விடயத்தில் ஒரு மாற்றத்திற்கு இடங் கொடுக்க மறுத்துள்ளார். 74 வயதினரான பாப்பரசர், கால் முறிவுக்காக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபின் தனது இருப்பிடம் திரும்பியுள்ளார். இவ்வாறு திரும்பியபின் அவர் செய்த முதலாவது உத்தியோக பூர்வ நடவடிக்கை மேற்கூறியமறுப்பு எனத்தெரிவிக்கின்றது.

தனது 16 வருட காலசேவையில் பாப்பரசர் இதுபோன்ற காரசாரமான அறிக்கையை வெளியிட்டது கிடையாது என்று அதைப் படித்த விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர் பெண்களின் எதிர்பார்ப்புக்களை இந்த அறிக்கை முற்றாக நிராகரித்து விட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் பாப்பரசர் கத்தோலிக்க பீடங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையிலேயே மேற்படி மறுப்பு காணப்படுகின்றது. இந்த மறுப்பை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் "இயேசு கிறிஸ்து நாதரின் நாள்தொட்டு குருத்துவம் ஆண்களுக்கு மாத்திரமே." பாப்பரசர் இந்த அறிக்கையில் தொடர்ந்து கூறுவது யாதெனில்: "சில இடங்களில் இவ் விடயம் விவாதத்திற்குட்பட்டதாக இருக்கின்றது. சந்தேக நிவர்த்தியாக நான் கூறுவது யாதெனில்: பெண்களுக்குக் குரு நிலை கொடுக்க எம்மால் முடியாது. இம் முடிவு எல்லா விசுவாசிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்." இவருடைய மொழிப் பிரயோகம் எதிர்காலத்தில் இவ் விடயம் சம்பந்தமாக யாதொரு பேச்சுக்கும் இடம் அளிப்பதாக இல்லை விசுவாசிகள் யாவரும் மறுப்பின்றி இத் தீர்ப்பை ஏற்க வேண்டும் என்ற தொனி இந்த அறிக்கையில் தெளிவாக இருக்கின்றது. இவருக்குப் பின் வரும் பாப்பரசர்கள் இந்த அறிக்கையை மாற்றுவார்கள் என்பது சந்தேகமே—இவ்வாறு கத்தோலிக்க மத ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவில், கத்தோலிக்க மதத்தில் குருவாக வருவதற்குப் பெண்கள் பெரும் பிரயத்தனப் படுகின்றனர். இதைப் பாப்பரசர் நன்கு அறிவார். இவருடைய அறிக்கையில் "சில இடங்களில்" என்ற சொற்கள் இவர்களைக் குறிக்கும். கர்தினால் றாத்சிங்கர் விசுவாசிகளுக்குப் பின்வருமாறு அறை கூவல் விடுத்துள்ளார். "பாப்பரசரின் அறிக்கை இறைவனின் ஆணைக்குக் கட்டுப்படும்படி வேண்டுகின்றது," பாப்பரசரின் அறிக்கைக்கு இறைவனின் அனுசரணையையும் மதிப்புக்குரிய கர்தினால் அழைத்துள்ளது வெளிப்படை.

6,000 அங்கத்தவர்கள் கொண்ட பெண்களுக்குக் குருத்துவம் கோரிப் போராடும் அமெரிக்கக் கழகம் பாப்பரசரின் அறிக்கைக்குக் கடும் ஆட்சேபந் தெரிவித்துள்ளது. இதன் தலைவி ருத் பிற்ஸ் பற்றிக் தனது உணர்ச்சிகளைப் பின்வருமாறு வடித்துள்ளார்: "எது விதத்திலும் நடக்கத்தான் போகிற தொன்றைத் தடுக்கும் முயற்சியில் ஒரு வயோதிபர் ஈடுபடுகிறார்." இது ஒரு புறமிருக்க, பாப்பரசரின் அறிக்கை இங்கிலாந்திலுள்ள புரொட்டஸ்தாந்து மதமும், கத்தோலிக்க மதமும் ஒன்றிணைவதைப் பிற் போட்டுள்ளது.

இங்கிலாந்தில் பெண்களுக்குக் குருநிலை அளிக்கத் தொடங்கி விட்டார்கள் இது இவ் வருடத் தொடக்கத்தில் ஆரம்பமாகியுள்ளது. இங்கிலாந்தின் மத பீடாதிபதி ஜோர்ஜ் கேரி ( Archbishop of Canterbury ) பாப்பரசரின் அறிக்கையை விமர்சிக்கையில் கூறுகிறார்: "கிறிஸ்துநாதர் தனது சீடர்களை ஆண்களாகத் தெரிவு செய்யும் போது பெண்களை நிரந்தரமாகத் தள்ளி வைப்பதாக எடுக்கக் கூடாது." விமோசனம் ஆண்களுக்கு மாத்திரம் அல்ல, எல்லோருக்குமே. பெண்களுக்கு குருத்துவத்தில் சம உரித்து உண்டு. ஆகையால் இங்கிலாந்தின் புரொட்டஸ்தாந்து மதத்திற்கும், பாப்பரசரின் நிலைப்பாட்டிற்கும் அடிப்படை. வித்தியாசங்கள் நிறைய உண்டு. எதிர்காலத்தில் இரண்டும் இணைவதை இது நிச்சயம் தடை செய்யும். டைம்,ஜூன் 13, 1994



பெண்கள் குருத்துவம் பெற அனுமதிக்கப்படமாட்டார்கள், ஆனால், அமெரிக்காவில் நடப்பதுபோல் வேதாகமம் வாசிக்கவும், தேவநற்கருணை கொடுக்கவும் அனுமதிக்கப்படுவார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப்பற, மலிவு விற்பனை

## விண்வெளி ஏவுதளவெடிப்பு சீனாவின் வர்த்தக குறிக்கோளில் பின்னடைவு

இந்த மாதத்தின் முற்பகுதியில் தீபெத்து பீடபூமியில் ஓரமாகவுள்ள சீசூவான் நகரத்தில் உள்ள கீசாங் என்னுமிடத்தில் வதந்திகள் பரவலாயின. கீசாங் செய்மதி ஏவுதளத்தில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது என்பதே பேச்சாகும். சீனாவின் வர்த்தக ரீதியான குறிக்கோளைக் கொண்ட விண்வெளித் திட்டந் தான் கீசான் ஏவுகணைத் தளம். ஏற்பட்ட வெடிப்பு அங்கிருந்த வழிகளையெல்லாம் அழித்து முப்பது பேர் வரை இறந்து, அல்லது காயப்பட்டிருக்கலாம் என்பது ஒரு செய்தி. தீயணைக்கும் படையினர் ஏற்பட்ட பெரும் தீயுடன் போராடுவதாக மற்றொரு செய்தி. ஒரு சில நாள்களின் பின்னர் சீனாவின் அரச சபை வெடிப்பு ஏற்பட்டதையோ, இறப்பினையோ, காயப்பட்டதையோ குறிப்பிடாமல் ஏதோ மிகப் பெரிய தவறு ஏற்பட்டு விட்டது என்பதைச் சாடை காட்டியது. ஏதோ எதிர்பாராத நிகழ்வினால் அழிவுகள் ஏற்பட்டு பென்கைன் 2 (Fengyun) என்னும் சீனாவின் முதலாவது உயர்ரக காலநிலை செய்மதி ஏவுவது பின்போடப்பட்டுள்ளது என்பதனைச் சுட்டிக் காட்டியது.

பெய்ஜிங்கின் உத்தியோக பூர்வ அறிவிப்பினை விட வதந்திகள் உண்மையாக இருப்பது வழமை. அதுபோலவே இந்த மாதம் முற்பகுதியில் அமெரிக்கா ஏவிய Goes-8 என்ற செய்மதியை ஒற்றி 75 மில்லியன் அமெரிக்கா டொலர் பெறுமதியான சீனாவின் பென்கைன் 2 என்ற வானிலைச் செய்மதி கடைசி நேரப் பரிசோதனையின் போது கீசாங்கில் வெடித்ததாக நியூஸ்வீக் அறிகின்றது. பெய்ஜிங்கில் உள்ள ஒரு மேற்குலக இராஜதந்திரியின் கருத்துப்படி திட்டம் நொருங்கி விட்டது மட்டுமல்ல, பிரதான பரிசோதனைக் கூடத்தினையும் அழித்து விட்டது. இவ் விபத்தில் இரண்டு பேர் இறந்தும், 20 பேர் வரை காயப்பட்டும் இருக்கலாம். இறந்தவர்களில் விணவெளி தொழில்நுட்ப ஆய்வு நிறுவனத்தின் தலைவரும், சீனாவின் முதுநிலை ரொக்கட் விஞ்ஞானியுமான கீயூபாரெனும் ஒருவர். மற்றொரு செய்தி கீயூபாரென் கண் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றது.

கீசாங் விபத்து அடுத்த தசாப்தத்தில், வர்த்தகச் செய்மதிகளை ஏவும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வியாபாரத்தில் பெரும் பங்கைக் கைப்பற்றும் சீனாவின் எண்ணத்தில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் வியாபாரத் திட்ட எண்ணத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு உண்மையான பௌதிக அழிவிற்கு ஏற்றதாகும். மேற்குலக போட்டியாளர் ஒருவர் அங்கு பாதுகாப்பு விதிகள் ஏதுமில்லை என்கிறார். பெய்ஜிங்கின் குறிக்கோள் மிகவும் உயர்ந்தது. பெப்ரவரி மாதம் சீனா மிகவும் சக்தி வாய்ந்த 'லோங்மார்ச்' என்னும் ரொக்கட்டின் வடிவமைப்பினை வெளிப்படுத்தியது. புதிய 3 ஏ என அழைக்கப்படும் ஏவு வாகனம் 2 . 5 தொன் நிறையைப் பூமியின் மிக உயர்ந்த சுற்றுப் பாதையில் சேர்க்கக்கூடிய சக்தி வாய்ந்தது. முன்னைய மாதிரியை விட ஒரு தொன் கூடிய நிறையைக் கொண்டு செல்லக்கூடியது.



**பசுத்தோல் போர்த்த பட்டுப் பூச்சி...**

அமெரிக்கத் தயாரிப்பை அடியொற்றி விமான இயந்திரத்தின் உதவியுடன் அதிக தூரம் செல்லக் கூடிய ஏவுகணைகளைச் சீனா தயாரித்து அணு ஆயுதங்களைக் காணுவதில் வெற்றி கண்டுள்ளது.

இதுவரை ஐரோப்பிய பல் தேசியக் கம்பனியும், வர்த்தகச் செய்மதி ஏவும் தொழிலில் முதல் வருமான ஏரியான் ஸ்பேஸ் (Ariane Space) அமெரிக்காவின் ஜெனரல் டைனமிக்ஸ் (General Dynamics) மக்டோனால் டக்கிளஸ் (Mc Donell Douglas) என்பவற்றோடு போட்டியிடுவது சீனா மட்டுமல்ல, ருஷ்யாவின் அரச உடைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான குருனிச்செவ் என்ரபிரைஸ் உம் (Khrunichev Enterprise) தனது சக்திவாய்ந்த பரீட்சித்த புரோடொன் (Proton) ரொக்கட்டுக்களை மேற்குலக செய்மதி இயக்குபவர்களிடத்தில் சந்தைப் படுத்த முயற்சிக்கிறது. ருஷ்யத் தொழில் நுட்பத்தில் பிழை கண்டு பிடிக்க முடியாத ஓர் இடம் விண் வெளித் திறமைகளைப் பெற்றுக் கொண்டது. அவர்கள் சிறந்த பெறுபேறுகள் பெற்றவர்கள் என்கிறார் ஐரோப்பிய விண்வெளி முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் ஜீன்யக்குவெஸ் டோடியஸ்.

சீனாவினதும், ருஷ்யாவினதும் உள்வருகை செய்மதி ஏவு தொழில் ஏலவே இருக்கின்ற மிகை இயலளவை மேலும் அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. சராசரியாக வருடமொன்றிற்கு 15-20 ஏவுதல்களே இடம் பெறுகின்றன. ருஷ்யா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளின் இராணுவ அரசாங்க விண்வெளித் திட்டங்களால் வர்த்தக ரீதியான சந்தை சுருங்கியே காணப்படுகிறது. சீனாவும், ருஷ்யாவும் சேர்ந்து ஒரு சில வெளிநாட்டு வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டுள்ளனர். சிலரது ஆய்வுகளின்படி சீனா வர்த்தக ரீதியான சந்தையில் 3 சதவீதத்தினையும் ருஷ்யா அதை விட குறைவாகவுமே கொண்டிருக்கின்றது. மேற்குலக விண்வெளி நிறுவனங்கள் சீனாவும், ருஷ்யாவும் விலை குறித்துச் சந்தைப்படுத்த முனைவதாகத் தொடர்ச்சியாகக் குற்றஞ் சாட்டி வருகின்றன.

விலை குறைத்து விற்கும் கொள்ளையில் ருஷ்யா பிரத்தியேகமானது. உதாரணமாக 1992 இல் மேற்கில் தமது முதலாவது ஒப்பந்தத்தை ருஷ்யா கைச்சாத்திட்டது. 1995 இல் இலண்டனைத் தளமாகக் கொண்ட இன்மாசட் என்ற நிறுவனத்தில் தொடர்புச் செய்மதியை ஏவுவதற்கான அமெரிக்க டொலர் 36 மில்லியன் ஒப்பந்தமாகும். இதனுடன் போட்டியிட்ட ஏரியான் ஸ்பேஸ் உற்பத்தி விலையை விட 50 சதவீதம் குறைவானது. அமெரிக்க விஞ்ஞானிகள் சம்மேளனத்தின் விண்வெளிக் கொள்கை பிரிவின் பணிப்பாளர் யோன் பைக் (John Pike) ருஷ்யர்கள் மேலெழக்கூடிய எதனையும் விற்பார்கள் என்று கூறுகின்றார்.

வர்த்தக ரீதியாக விண்வெளி கலன்கள் ஏவுவதற்கான சர்வதேச விலைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் இடையிடையே தோன்றின. 1980 களில் ஐரோப்பிய விண்வெளி முகவர்கள் சிவில் வான்வழி போக்குவரத்தின் கட்டணத்தையும், அளவையும் நெறிப்படுத்தும் சர்வதேச வான் வழி போக்குவரத்து சங்கத்திற்கு ஒத்த ஓர் அமைப்பில் உருவாக்குவது பற்றிக் கலந்துரையாடின. அமெரிக்க நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றமும் ஐரோப்பிய விண்வெளி முகவர் (ESA) இற்கும் ஐரோப்பிய கூட்டிற்கும் இடையிலான சட்ட சிக்கல்களும் இந்த முயற்சியைக் கைவிடச் செய்தது.

மொழியாக்கம்:
திரு. க. நந்தகுமாரன்

இருபக்க இராஜதந்திரம் திறமையானதாகத் தென்படுகிறது. 1988 இல் அமெரிக்காவும், சீனாவும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இதன்படி சீனா ஏவும் அமெரிக்கத் தயாரிப்புக்களைச் செய்மதி எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் (1987 இல் இருந்து அடுத்த 5 வருடங்களுக்கு என்பது) சந்தை விலையை அறவிடவும் தூண்டியுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதத்தில் அமெரிக்க உதவி ஜனாதிபதி அல்கோரியும் (Al Gore) ருஷ்யப் பிரதம மந்திரி விக்ரர் சேனோமைடினும் இது போன்ற ஒப்பந்தமொன்றிற்கு இணக்கங் கண்டனர். இதன்படி ருஷ்யாவில் வெளிநாட்டுச் செய்மதி ஏவுதல்களை 2001 வரை எட்டாகக் கட்டுப்படுத்துகிறது. (1995 இன்மாசட் ஏவுதல் நீங்கலாக) மேலும் இவ்வுடன்படிக்கை ஒப்பிடக்கூடிய மிகக் குறைந்த அமெரிக்க விலையை விட 7.5 சதவீதத்திற்கு மேல் விலைக் குறைப்பைச் செய்ய முடியாது எனவும் வலியுறுத்துகிறது. ஐரோப்பிய ஒருங்கமைப்பும் இது போன்ற ஓர் உடன்படிக்கையை ருஷ்யாவுடன் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் முடிவடைந்து விட்டன. ஆனால் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. ஐரோப்பாவில் தொழிலில் உள்ள ஒருவர் இங்கு ஓர் அல்கோரி இல்லை கைச்சாத்திட என்று கூறினார்.

இத்தகைய இருதரப்பு உடன்படிக்கைகள் சில ஒழுங்குகளைத் தொழிலில் கொண்டு வந்த போதும் அவை ஓட்டைகள் அற்றதாக இருக்கவில்லை. சீனா போட்டி அடிப்படையிலான விலையை அறவிடுவதாக ஏற்றுக் கொண்டபோதும் குறைந்த விலைகள் கோருவது பற்றிய அறிக்கைகள் தொடர்ந்தும் வந்து கொண்டே இருக்கின்றன. அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் இரண்டு முறை சீனா குறைந்த விலைகளை அறவிட்டதை எடுத்துக் காட்டியுள்ளனர். அமெரிக்க ஐரோப்பிய விண்வெளி நிறைவேற்று அலுவலர்கள் ருஷ்யா மீதும் உடன்படிக்கையை மீறிய குற்றச் சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

## ஜியோவும் லியோவும்
## Geo Vs Leo

மொஸ்கோ, பெய்ஜிங் ஆகியவற்றுடனான இரண்டு ஒப்பந்தங்களிலும் குறைகள் உண்டு. இரண்டும் ஒப்பந்தங்களும் பூமியில் இருந்து 22,000 மைல் தொலைவில் வலம்வரும் Geo Stationary (GEO) செய்மதிகள் பற்றியே குறிப்பிடுகின்றன. இது உயர்ந்த தொலைக்காட்சி தொலைத்தொடர்புச் செய்மதிகளால் விரும்பப்படும், செய்மதிகள் வலம் வரும் பாதையாலும் எதிர்காலத்தில், ஏவுகணைச் சந்தையின் கவனம் இங்கு இருக்கப் போவதில்லை. கடந்த இரண்டு வருடங்களாக ஆகக் குறைந்தது ஏழு அமெரிக்க நிறுவனங்களால் உலகளாவிய செய்மதி ஓசை, தரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு பற்றிய திட்டங்களை அறிவித்துள்ளன. சிறப்பாகத் தெரிந்தது மோட்டரோவின் 4 பில்லியன் இரிடியம் திட்டமாகும். இத்திட்டம் மட்டும் 64 செய்மதிகளைத் தொழிலில் ஈடுபடுத்தும். முன்மொழியப்பட்டுள்ள ஒவ்வொரு வலைப் பின்னல் அமைப்பும் மிகச் சிறிய அளவான பல செய்மதிகளைக் குறைந்த புவி சுற்றில் (Low Earth Orbit) பயன்படுத்தும் எல்லா வலைப் பின் அமைப்பும் கட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படவில்லை. தற்போது வியோ ஏவுதல் தொழில் போட்டிக்கு உட்பட்டதாகி விட்டது.

சீசாங் வீதிகளில் முதலில் அடிபட்ட வதந்திகள் போல், இவ் விபத்துப்போல் மார்ச் ஏவுகணைகளை உள்ளடக்கவில்லை. செய்மதி அழிக்கப்பட்டது. அதனை மேல் உயர்த்துவதில் தாமதத்தினை ஏற்படுத்தும். சீனாவிலும் வெளியிட்டு செய்மதிகளையும் ஏவுவதற்கான மிக முக்கியமான பரீட்சார்த்த வசதிகளை இவ்விபத்து அழித்து விட்டதனால் இந்த வருடத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்தது ஆறு ஏவுதல்களாவது பின்போடப்பட வேண்டியுள்ளது. இவ்விபத்து, சீனாவை நீண்ட காலத்திற்கு விண்வெளியில் இருந்து பிரித்து வைக்கப் போவதில்லை. வோஷிங்டனின் ஏவுதல்களை அனுமதிப்பது இந்த வருடம் முடிவடைகிறது. மீளவும் இதுபற்றிக் கலந்துரையாட வேண்டியுள்ளது. அடுத்த 10 வருடங்களுக்கு வெளிநாட்டு செய்மதி செயற்படுத்துவோர் 37 சீன ஏவுதல்களைப் பதிவு செய்திருக்கிறார்கள் என அறியப்படுகிறது. எனினும் இதில் எத்தனை உறுதியானவை, எத்தனை மாற்று வழியாகக் கருதப்படுகிறது என்பது தெரியாது. சீனாவின் விண்வெளி அதிகாரிகள் உறுதியுடன் முன்னோக்கிப் பார்க்கிறார்கள். உலகச் சந்தையில் கிழக்குப் பிராந்தியம் சிவப்பாக (கம்யூனிச சோசலிசம்) இருப்பதனால் சீனா தனது சொந்த உற்பத்தியான தொடர்புச் செய்மதிகளை விற்கத் திட்டம் இட்டுள்ளது. கடந்த வருடம் சீனா லோங் மார்ச் சிறிய வடிவங்களைப் பேரளவு உற்பத்தி செய்யவுள்ளதாக அறிவித்தது. 2,000 ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 25 வெளிநாட்டுச் செய்மதிகளை ஏவக்கூடிய குறிக்கோளை அடைவதே இதன் நோக்கமாகும்.

★

நாட்டுப் பற்று:

## ஜனாதிபதி கிளின்ரனின் அப்பா போரின்போது என்ன செய்தார்?

இரண்டாம் உலகப் போர்இறுதிநாள்நினைவு வைபவத்திற் கலந்து கொள்ள ஐரோப்பாவிற்கு வந்த ஜனாதிபதி கிளின்ரனுக்கு எதிர்பாராத விதமாகத் தான் என்றுமே கண்டிராத தனது தந்தைக்கும் நினைவஞ்சலி செலுத்தச் சந்தர்ப்பம் வாய்த்தது. அவருடைய தந்தை வில்லியம் ஜெபர்சன் பிளைத், வட ஆபிரிக்காவிலும், இத்தாலியிலும் இராணுவ இயந்திரத் திருத்துனராக இரண்டு ஆண்டுகள் சேவையாற்றிய பின்பு ஒரு மோட்டார் விபத்தில் கொல்லப்பட்டார். அது அவருடைய மகன் கிளின்ரன் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்தது.

இத்தாலியில் நிகழ்ந்த இரண்டாவது உலகப் போர் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற கிளின்ரனுக்கு அங்கு நிகழ்த்துவதற்கான உரையைத் தயாரித்தவர்கள், அவருடைய தந்தையாரின் இராணுவச் சேவைக் காலம் பற்றியும் ஆய்வு நடத்தினர். அப்பொழுது அவர் இத்தாலியின் கசர்டா, நகரில் பின் நாளில் அமைக்கப்பட்ட போர் வீரர் ஞாபகார்த்த மயானத்துக்கு அண்மித்த இடத்தில் தான் வாழ்ந்தார் என்பது தெரிய வந்தது. அதனால் கிளின்ரன் அங்கு உரையாற்றுகையில், ''நாங்களெல்லாரும் அவர்கள் சேவையாற்றிய உலகின் மைந்தர்கள்'' என்று குறிப்பிடவாய்ப்புக் கிடைத்தது. தந்தையார் பிளைத் நேரடியாகப் போரிடாவிட்டாலும் போர் முயற்சிக்கு உதவும் தொழிலில் ஈடுபட்டு இருந்தார் என்ற விடயம் கட்டாய இராணுவ சேவைக்குச் செல்லாது விடுபட்டவர் பில் கிளின்ரன் என்ற காரணத்தால் அவர் மீது குறை கொண்டிருந்த முன்னாள் படையினரின் மனோபாவத்தை மாற்றவும் ஒரு சந்தர்ப்பம் தந்து உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய்த் தடுப்பும் தாவர உணவும்

புற்று நோயைப் பற்றி வைத்தியர்களுக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே தெரியும். புராதன கிரேக்கர்கள், இந்த நோய் பரவும் விதத்தை உணர்ந்து அதற்கு '' கார்கினோஸ் ( Karkinos ) '' நண்டு எனப் பெயர் இட்டுள்ளனர். பின்வந்த ரோமர்கள் இதை ஆமோதித்து நண்டின் லத்தீன் பெயரால் '' கான்சர் ( Cancer ) '' என இந்த நோயை அழைத்தனர். கான்சர் அல்லது புற்று நோய் மூவகைப்படும். தோல், சுவாசப்பை, வயிறு, குடல், உள்ளக உறுப்புக்கள் ஆகியவற்றைத் தாக்கும் கார்சினோமா ( Carcinoma ), மூட்டுத் திசுக்கள், குருத்தெலும்பு, கொழுப்பு ஆகியவற்றைத் தாக்கும் சார்க்கோமா ( Sarcoma ), எலும்பு மச்சை ( Marrow ), குருதி, நிணநீர் ஆகியவற்றைத் தாக்கும் லியூக்கேமியாவும் லிம்ப் போமாவும் ( Leukemias and LympHomas ) எனலாம். இந்த நூற்றாண்டில் புற்று நோய் மிகக் கூடுதலாகப் பரவுவதற்கு எமது உணவு, தொழில் சூழல் ஆகியவற்றில் நிகழும் பாரிய மாற்றங்கள் காரணமாகலாம். எமது உடலிலுள்ள கலங்களின் ( Cells ) செயற்பாட்டை விளங்கிக் கொண்டால் கான்சர் நோயைத் தடுப்பதற்கும், சிகிச்சை அளித்துக் குணப்படுத்துவதற்கும் வழி பிறக்கும் என்று நம்பப்படுகின்றது. இன்றுள்ள வைத்திய முறை நிலையில் பாதிக்கப்பட்ட உடற்பாகத்தை வெட்டி அகற்றுதலும், எக்ஸ் கதிரினால் காயத்தை ஆற்றுவதும் இரு சிகிச்சை வழிகளாகும். நோய்வாய்ப்பட்ட கலங்கள் உடல் முழுவதும் பரவிவிட்டால் யாதொரு சிகிச்சை முறையும் பலன் தரா. இன்றைய விஞ்ஞானிகள் நோயின் அடிப்படைக் காரணத்தையும், நன்னிலைக் கலங்கள் புற்றுநோய்க் காவிகளாக மாறுவது ஏனென்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.



**வெள்ளைப்பூடு, வெங்காயமும் :** அலிலிக் சல்பைற் எனப்படும் இரசாயனப்பொருள் இதிலுண்டு. புற்று நோயை இது தடுக்கின்றது.
கோவாவிலுள்ள சல்பொறோப்பேன் எனும் இயற்கை இரசாயனப் பொருள் நோய் வருமுன் தடுக்கும் வல்லமை உள்ளதாகும். நச்சுப்பொருள்களின் செயற்பாட்டை அழிக்கின்றது. அத்துடன் பெண்களின் மார்பு புற்று நோயையும் வராது தடுக்கின்றது.

திடீரென விஞ்ஞானிகள் இயற்கை வைத்திய முறை ஒன்றை எம்முன் வைக்கின்றனர். மரக்கறிகளிலும், பழங்களிலும் இரசாயனப் பண்டங்கள் இந்த நோய்க்கு மருந்தாகுமெனத் தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி நிலைய ( National Cancer Research Institute ) விஞ்ஞானிகள் முழு நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளனர். இத்தகைய வேதியற் பொருள்களை ஆங்கிலத்தில் '' ( Phyto Chemicals) – பைற்றோ கெமிக்கல்ஸ் '' எனப் பெயரிட்டுள்ளனர். மீண்டும் கிரேக்க மொழிக்குச் செல்லும் அவர்கள், பைற்றோ என்றால் தாவரங்கள் எனப் பொருள் கூறியுள்ளனர். ஆகவே, இதன் முழுப் பொருள் தாவரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் காணப்படும் இரசாயனப் பண்டங்கள் எனக் கொள்ளலாம். தக்காளிப் பழம், அப்பிறிக்கொட் எனப்படும் பழம், தோடை, எலுமிச்சை ஆகியவற்றின் பழங்கள், கோவா இனங்கள் ஆகியவற்றில் இந்தப் பெறுமதி மிக்க இரசாயனப் பண்டங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சூரியனின் சில கதிர்களால் வரும் தீமைகளைத் தடுப்பதற்காகவே இத்தாவரங்களில் இந்த வேதியற் பொருள்கள் காணப்படுகின்றன. இப்போது இது புற்றுநோயை வருமுன் தடுப்பதற்கு மனிதருக்குப் பேருதவி புரியலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்கர்களுக்கே உரிய பிரச்சார வேகத்துடன் மேற்படி

மொழியாக்கம்:
— கலாநிதி க. சோமஸ்கந்தன் —

ஆராய்ச்சி நிலையம் பைற்றோ கெமிக்ல்ஸ் பற்றிய பெரியதோர் ஆய்வுக்காகப் பலகோடி டொலர்களை ஒதுக்கியுள்ளது. தனியார் மருந்து நிறுவனங்கள் தமது பங்கிற்கு இத்திசையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. மேற்கூறிய தாவரப்பொருள்களில் உள்ள இரசாயனப் பொருள்களை மாத்திரைகளாக்கி விற்பனைக்கு விடுவதே இவர்கள் நோக்கம்.

ஆகாரத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை, விஞ்ஞானிகளும், பொது மக்களும் உணரத் தொடங்கியுள்ளனர். அதே சமயத்தில் செயற்கை விற்றமின் மாத்திரைகளை உட்கொள்வதிலும் பயனில்லை என்பதையும் அண்மைக் காலத்தில் உணர்ந்துள்ளனர். அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து மாகாண விஞ்ஞான சஞ்சிகை பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டபின் நோய்த் தடுப்பில் விற்றமின் மாத்திரைகள் பயனற்றவை எனத் தீர்ப்புக் கூறியுள்ளது. அண்மைக் கால ஆய்வுக்கூடக் கண்டுபிடிப்புக்களின் படி புறொக்கோலி (Broccoli) எனப்படும் பூக்கோவா (கோலிபிளவர்- (Cauli Flower)வில் காணப்

அண்மைக்கால ஆய்வுகூட முடிவுகள் விற்றமின் மாத்திரைகள் உட்கொள்வதின் நன்மைகளைக் குறைத்து மதிப்பீடு செய்தாலும் அதன் விற்பனை குறைந்ததாகத் தெரியவில்லை. தமது ஆரோக்கியத்திற்கு இந்த மாத்திரைகள் உதவுவதாக பொதுமக்கள் நம்புகின்றனர்.

1992-93 வருடத்திற்கான சந்தை ஆய்வு விற்பனை கூடியதையே ஆணித்தரமாகக் காட்டுகின்றன. இத்தகைய விற்றமின் எந்த உணவில் காணப்படுகின்றன? அதன் நன்மைகள் என்ன? எந்தளவு விற்பனை கூடியுள்ளது? போன்றவற்றை இதன்கீழ் ஆராய்வோம்.

## இயற்கையும் செயற்கையும்

| | |
|---|---|
| விற்றமின் ஏ (A) | (பீற்றா கரோட்டீன் மறுபெயர்) மஞ்சள் நிற மரக்கறிகளிலும் மஞ்சள் நிறப் பழங்களிலும் காணப்படுகின்றது, புற்றுநோயைத் தடுக்குமென நம்பப்படுகின்றது. விற்பனைக்கு இதுவே ஆதாரம். மேற்கூறிய காலப்பகுதியில் 31 வீதம் விற்பனை கூடியுள்ளது. விற்றமின் ஏ யும், டி யும் கூட்டாக (A & D) தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு உண்டு. |
| விற்றமின் பீ (B) | அநேகமாக நாளாந்திர உணவுகளில் இது காணப்படுகின்றது. இதில் பல உட்பிரிவுகள் உண்டு. விற்றமின் (B 12) பி 12 கலங்களின் விருத்திக்கு உதவுகின்றன. விற்பனை 7 வீதம் உயர்ந்துள்ளது. |
| விற்றமின் சீ (C) | எலுமிச்சை, தோடை பிஞ்சு மிளகாய், காய்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றது திசுக்கள் சேதமடைவதைத் தடுப்பதால் புற்றுநோய்த் தடுப்புக்கும் உதவலாம். விற்பனை 10 வீதம் உயர்ந்துள்ளது. |
| விற்றமின் டீ (D) | சிறு மீன்கள், பசுப்பால், சூரிய வெளிச்சம் ஆகியவற்றில் காணப்படுகின்றது. எலும்புகளைப் பலப்படுத்துகின்றது. சில வகைக் கான்சர்களைத் தடுக்கலாம். விற்பனை கூடவில்லை. நிலையாக நிற்கின்றது. |
| விற்றமின் ஈ (E) | இது உணவில் கிடைப்பது கஷ்டம். கோதுமை முளையிலும், விதைகளிலும் காணப்படுகின்றது. இருதய நோய்களிலிருந்து காப்பாற்றுகின்றது. விற்பனை 39 வீதத்தால் கூடியுள்ளது. |
| போலிக் அமிலம் (Folic Acid) | இது இலை மரக்கறியிலும், ஈரலிலும் காணப்படுகின்றது. பிள்ளைப் பேற்று நோய்களிலிருந்து பெண்களைக் காக்கின்றது. விற்பனை கூடவில்லை. நிலையாக நிற்கின்றது. |
| நியாசின் (Niacin) | பயறு போன்றவற்றிலும், கடலை, மெலிந்த இறைச்சியிலும் காணப்படுகின்றது. இரத்தக் கொழுப்பைக் குறைக்கலாம். விற்பனை கூடவில்லை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் சல்பொறோப்பேன் எனும் வேதியற் பொருள் ( Sulforaphane ) புற்று நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் நிச்சயமாகக் கூட்டுகின்றது. இந்த இரசாயனப் பொருள் சகல கோவா வகைகளிலும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பெண்களைத் தாக்கும் மார்புப் புற்றுநோயைத் தடுப்பதிலும் இது பெரும் பங்கு வகிக்கின்றது என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். சமையற் கூடத்தில், கடும் வெப்பத்தில், இந்த இரசாயனப் பண்டம் அழியாதிருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஹொப்கின்ஸ் ( Hopkins University ) சர்வகலாசாலைப் பேராசிரியர் கேரி போஸ்னா வெற்றிகரமாகச் செயற்கை சல்பொறோப்பேன் பண்டத்தை ஆய்வு கூடத்தில் செய்துள்ளார். கோவா வகையிலிருந்து பிரித்தெடுப்பதிலும் பார்க்க இது எளிதாகச் செய்யக்கூடியதாக இருக்கின்றதென்றும், இரண்டும் ஒத்த பலன் தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சல்பொறோப்பேன் பின்வருமாறு செயற்படுகின்றது. இது வயிற்றுக்குள் சென்ற சில மணித்தியாலங்களின்பின் (சமீபாட்டு நேரம்) கார்சினோஜீன்ஸ் ( Carcinogens ) எனப்படும் புற்று நோய்க் காரணியான நச்சுப் பொருளைக் கலங்களிலிருந்து அகற்றி அழிக்கின்றது.

இதே மாதிரி தேசிக்காய், தோடம்பழம் போன்ற சகல புளிப்புள்ள பழங்கள் காய்களில் (F) பிலேவெனோயிட்ஸ் (Flavenoids) என்னும் இரசாயனப்பண்டம், புற்று நோய் உண்டாக்கும் நச்சுப் பொருள்கள், கலங்களைத் தாக்குவதைத் தடுக்கின்றது. ஆய்வுகளின் படி பெரும்பாலான பழங்களிலும், மரக் கறிகளிலும் புற்று நோய் எதிர்ப்பு பைற்றோ இரசாயனப் பண்டங்கள் நிறையக் காணப்படுகின்றன. தக்காளிப்பழத்தில் இரண்டு முக்கிய அமிலங்கள், காணப்படுகின்றன. அவையாவன பீ. கூமாரிக், குலோறோஜெனிக் அமிலங்கள் (P- Coumaric Acid, Chlorogenic acid). உடலில் உள்ள மூலக்கூறுகள் (Molecules) புற்றுநோய் உண்டாக்கும் நச்சுப் பொருள்களைச் (Carcinogens) செய்வதைத் தடுக்கின்றது. மேற் கூறிய இரண்டு அமிலங்களும் ஸ்றோபெரி பழத்திலும், (Strawberry) அன்னாசிப் பழத்திலும், மிஞ்சு மிளகாயிலும் காணப்படுகின்றன. வெள்ளைப் பூண்டிலும், வெங்காயத்திலும் காணப்படும் அலிலிக் சல்பைட் (Allylic Sulphide) என்னும் பைற்றோ இரசாயனப் பொருள் வயிற்



றுப் புற்று நோய் வருவதைத் தடுக்கின்றது. புற்று நோயை உண்டாக்கும் நச்சுப் பொருள்களின் நச்சுத் தன்மையைச் செயலிழக்கச் செய்து, இவை உடலுக்கு உதவுகின்றன. ஆகவே, சுருங்கக்கூறின் பைற்றோ இரசாயனப் பொருள்கள் புற்று நோய் வருமுன் நோய்த் தடுப்பு அரணாகச் செயற்படுகின்றன. மினிசோட்டா பல்கலைக் கழகத்தின் ஜோன் பொட்டர் பின்வருமாறு சொல்கிறார். ''உடல் புற்று நோயை நோக்கிச் செல்லும் பாதையில் மேற்கூறிய தாவரப் பொருள்களிலிருக்கும் பைற்றோ இரசாயனப் பண்டங்கள் குறுக்கே நின்று தமது தடுப்பு வேலையைச் செய்கின்றன. தீங்கிழைக்கும் சூரிய வெளிச்சத்திலிருந்து தம்மைக் காக்க இவர்கள் தயாரித்த இரசாயனப் பொருள் மனிதனுக்கும் சென்றடைந்து நன்மை பயக்கின்றது.

ஒருமுறை திருப்பிச் சொல்வதாயிருந்தால் கலங்களில் நச்சுப் பொருள்கள் உண்டாவதை தக்காளிப்பழம் தடுக்கின்றது. உண்டாகிவிட்ட நச்சுப் பொருள்களை கலங்களிலிருந்து கோவா அகற்றுகின்றது. கோவாவில் இன்னுமோர் இரசாயனப் பண்டம் இருக்கின்றது அதுதான் பீ.ஐ.டி.சி (Peitc. என்று சுருக்குப் பெயரால் அழைக்கப்படும். பெனித்தில் ஐசோதியோசியனேற் (Phenythyl Isothiocyanate) இது சுவாசப்பைப் புற்றுநோயைத் தடுக்க வல்லது. இது முள்ளங்கிக் கிழங்கிலும் தாராளமாகக் காணப்படுவதாகத் தெரிகின்றது இன்னுமொரு ரக இரசாயனப் பண்டம் திராட்சைப் பழத்தில் காணப்படுகின்றது. இதன் பெயர் எல்லாகிக் அமிலம் (Ellagic Acid). இது டி.என்.ஏ மூலக்கூறில் நச்சுப் பொருள்கள் சேர முன்பு தடுப்பு நடவடிக்கை எடுக்கிறது. உடம்பின் ஒருபகுதியில் கட்டி (Tumour) உண்டாக்கிய தொடக்க காலத்தில் அதை அகற்றி சிகிச்சை கொடுத்துவிட்டால் அபாயம் நீங்கிவிடும். ஆனால், சில காலத்தில் இக்கட்டியில் உள்ள நச்சுக் கலங்கள் உடலில் பரவியதும் பேராபத்து நிலை உண்டாகி விடுகின்றது. இக்கட்டத்தில் சிகிச்சைக்கு இடமில்லை. உதாரணம்; பெண்களைத் தாக்கும் மார்புப் புற்று நோய், ஆண்களைத் தாக்கும் ஆண்



உறுப்புப் புற்றுநோய் (Breast Cancer And Cancer of The Prostatc) பெண்களின் மார்பிலோ ஆண்களின் மர்ம உறுப்பிலோ சிறு கட்டியாக ஆரம்பிக்கும். புற்றுநோய் உடலின் வேறு பாகங்களிலிருந்து தனது ஊட்டச் சத்தையும் பெறுகின்றது. இதைத் தடுக்காவிட்டால் கட்டி ஆரம்ப நிலையில் நிற்கும். அத்துடன் அகற்றுவதும் எளிது. கட்டிக்கு ஊட்டச் சத்து செல்வதைத் தடுப்பதற்கு ஜேர்மன் விஞ்ஞானிகள் ஜெனிஸ்ரைன் (Genistein) என்னும் இரசாயனப் பொருளை சோயா அவரையிலிருந்து பெற்



PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

றுள்ளனர். இது சிறு கட்டிகள் பெருப்பதையும், பரவுவதையும் தடுக்கின்றது. சில சமயத்தில் கட்டிகளைக் கொன்றும் விடுகின்றது. சீன-ஜப்பானிய இனத்தவர்கள் நெடுங்காலமாகச் சோயா அவரை உணவை உட்கொள்பவர்கள். இவர்கள் மேற்கு நாடுகளில் குடியேறும்போது இதைக் குறைவாகவே உண்கின்றனர். மேற்கு நாடுகளில் வாழும் சீன - ஜப்பானிய ஆண்களுக்கு ஆண் உறுப்புக் கட்டிகள் தோன்றுவதின் விளக்கம் இதுவே.

மிளகாயில் கப்சயிசின் (Capsaicin) என்ற இரசாயனப் பண்டம் இருக்கின்றது. இது டி. என். ஏ. மூலக்கூறில் கார்சினோஜின்ஸ் எனப்படும் கான்சர் நோயை உண்டாக்கும் நச்சுப் பொருள்கள் தொடுப்பதைத் தவிர்க்கின்றது. இந்தப் பொருள் கறி மஞ்சளிலும், வெந்தயத்திலும் காணப்படுகின்றது. இவை உடல் பூராவும் ஓடிச் செயற்பட்டு கலங்களைச் சுத்த நிலையில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. புகைத்தலால் வரும் சுவாசப்பைப் புற்று நோயைத் தடுப்பதிலும் இது பெரும் பங்கு வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பெருந் திறனுடன் செயற்பட்டாலும் தாவர இரசாயனப் பாண்டங்கள் அல்லது பைற்றோ இரசாயனப் பொருள்கள் சர்வ வல்லமை பொருந்தியவை அல்ல. வாழ்நாள் முழுவதும் தாவர உணவு உண்டவர்களுக்கும் புற்று நோய் வரத்தான் செய்கின்றது. ஆனால், சுகதேகியாக வாழ்வதற்கு இந்த இரசாயனப் பொருள்கள் அடங்கிய உணவைத் தேடி உண்பது அத்தியாவசியம். இன்று மேற்கு நாடுகளில் விற்றமின் 'சி' யும் விற்றமின் 'ஈ' யும் (Cande) உடலிலிருந்து நச்சுப் பொருள்களை அகற்றுவதாக நம்பப்படுகிறது. இதை விற்பனை செய்வோர் இந்த விற்றமின்கள் இரண்டும், முதுமையைத் தடுப்பதாகவும், கான்சரை வெல்வதாகவும் தெரிவிக்கின்றனர். ஆனால், பெருமளவில் சிகரெற் புகைத்தவர்கள் இதனால் நன்மை அடைந்ததாக ஆதாரம் கிடைக்கவில்லை. விற்றமின் மாத்திரைகள் உட்கொள்வதில் மேற்கிலும் கிழக்கிலும் பலர் பெரு நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அதுவும் எல்லா விற்றமின்களும் அடங்கிய ஒரு மாத்திரை (Multi Vitamin), எம் மத்தியில் மிகவும் பிரபல்யமாகியுள்ளது. விஞ்ஞானிகளில் ஒரு சாரார் வாய், தொண்டை வயிற்றுப் புற்றுநோயை விற்றமின் சீ யும், மார்பு, குடல், ஆண் உறுப்பு புற்று நோயை விற்றமின் டி யும், இருதய நோய்களை விற்றமின் ஈ யும் தடுப்பதாக நம்புகின்றனர்.



இந்த நம்பிக்கை மேற்கூறிய பைற்றோ இரசாயனப் பண்டங்கள் அல்லது தாவர இரசாயனப் பொருள்கள் என்ற கூற்றிற்கு முரண் ஆனது அல்ல. மேற்கூறிய விற்றமின்கள் தாவர உணவில் நிறையக் கிடைக்கின்றன. நாளாந்திர உணவுடன் சேர்த்து இந்த விற்றமின் மாத்திரைகள் உட்கொள்வது பயனற்றதென அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். விற்றமின் ஏயும் ஈ யும் கான்சர் நோயைத் தடுக்க உதவலாமென இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். வடக்குச் சீனாவில் 29,000 வயது முதிர்ந்தோர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் விற்றமின் ஏ, செலினியம் என்ற கனியம் உட்கொண்டதால் புற்று நோயால் இறப்பு 13 வீதத்தால் குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆய்வுக்கூடாக கண்டுபிடிப்புக்குப் பின்பும் பத்திரிகைகளும், பிரச்சார சாதனங்களும் மனித குலத்தை உய்விக்க வந்த காயகல்பம் கிடைத்துவிட்டதாகப் பறை சாற்றுவது வழக்கம். இங்கும் அதுதான் நிகழ்ந்து விட்டது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் விற்றமின்கள் பிரபலமாகியுள்ளன. அதன் தயாரிப்பாளர்களான மருந்து நிறுவனங்களும், இதனால் பெரும் செல்வந் தேடியுள்ளன. இப்போது தாவர இரசாயனப் பண்டங்கள் யுகம் ஆரம்பித்துவிட்டது போல் தோன்றுகின்றது. இவை மாத்திரைகள் ஆக்கப்பட்டு விற்பனைக்கு வரும் காலம் வெகுதூரம் இல்லையென ஆருடம் கூறலாம். எது எப்படி இருப்பினும் எமது சிறு பராயத்தில் எமது தாயார் இடித்துரைத்த சொற்களை இவ்விடத்தில் ஞாபகமூட்டிக் கொள்ளலாம். 'பிள்ளாய் சோத்திலும் பார்க்கக் கூடுதலாக மரக்கறியையும் பழங்களையும் தின்.''

ஆதாரம்: நியூஸ்வீக்
ஏப்ரல் 25, 1994.

★

## ஜேம்ஸ் பொண்ட் பட வரிசைக்குப் புதிய நட்சத்திரம்

புகழ் பெற்ற அரசியல் வேவுத்துப்பறியுங் கதை கொண்ட '' ஏஜண்ட் 007 '' என்ற ஜேம்ஸ் பொண்ட் படவரிசையில் ஜேம்ஸ் பொண்டாக நடிக்க பியர்ஸ் புரொஸ்னான் என்ற நடிகர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். அடுத்து வர இருக்கும் '' கோல்டின்-ஜ '' என்ற படத்தில் அவர் நடித்துக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பெரிய பசுஞ் சுவர்



மழை பெய்யாதென்பதல்ல அல்லது சூரியன் தன் அதிக வெப்ப ஒளிக்கதிர்களை வீசுவதாலுமல்ல. சங்கன் பாலாவின் மண் வீட்டை ஆக்கிரமிக்கும் மஞ்சல் மணல், சீனாவின் கெடுதியான ( அழிவை உண்டாக்கும் ) பூமிக் கொள்கையினால் வந்த விளைவே. ஒரு காலத்தில் பைன் மரங்களுக்கும் புற்றரைகளுக்கும் விசேஷமான நிலங்கள் பல்லாண்டுகளாக ( நூற்றாண்டுகள். ) காடுகள் அழிவதாலும் மணற் பரப்பு குறைவதினாலும் பரந்த பாலை வனங்களாகி விட்டன. எப்போது கடைசி புல் கோக்கின் மணல் தரையிலிருந்து மறைகிறதோ, அதே கணம் சங்கன்பாலாவின் பேரப் பிள்ளைகள் தங்கள் ஆட்டு மந்தைகளை விற்று, வளமுள்ள மேயக்கூடிய பரம்பரை பசும் புற்றரைகளைக் கைமாறி, செங்கட்டித் தொழிற் சாலைகளில் வேலை வாய்ப்புத் தேட வேண்டிய நிலை ஏற்படக்கூடும். என்னுடைய சிறு பராயத்தில், அங்குள்ள புற்கள் ஒரு மனிதன் குதிரை மேல் இருக்கும் போதுள்ள உயரத்திற்கு வளர்ந்திருந்ததாக, எழுபது வயதாகிய சங்கன் பாலா ( Chagan Bala ) தன் மனதில் நினைவூட்டுகிறார். அந்த நிலை இப்போது மறைந்து விட்டது.

சீனாவின் இருபதில் ஒரு பங்கான விளைச்சலும், பயனுமுள்ள பிரதேசம் இப்போது வனாந்தரத்தோடு சேர்ந்து விட்டது. இதில் மூன்றிலொரு பகுதி மணல் அரிப்பினால் ஆண்டுக்கு 2,100 சதுரக் கிலோ மீற்றர் விகிதம் வனாந்தரமாக பரவிக் கொண்டு வருகிறது. புதுக் காடு அமைப்பதற்கு (உண்டாக்குதல்) செலவிட்டதைவிட விளைச்சல் குறைந்ததால் ஏற்படும் வறுமை நிவாரணத்திற்கும் ஆண்டுக்கு 900 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் பெய்ஜிங்க்கு செலவாகிறது. புற்றரைகளாலும் காற்றைத் தடுக்கும் முறைகளாலும் உபயோகமுள்ள நிலங்கள் 20 ஆண்டுகளுக்கு

**வனாந்தர மணலின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு, கையாளும் முடிவற்ற முயற்சியும் எத்தனிப்பும்**

முன் இருந்ததிலும் பார்க்க விரைவில் 35 விகிதம் கூடுதலாக இழக்க வேண்டியதாயிருக்கிறது. இது மக்களைப் பயங்கரமாகப் பாதிக்கிறது. 100 மில்லியன் மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகத் தாக்குகிறது. நாட்டிலுள்ள கடுமையான ஏழ்மை எல்லைக்குள் இருக்கும் பகுதிகளில் இப்பகுதியும் ஒன்றாகும்.

விசித்திரமான வனாந்தரமாவதற்கு முக்கிய காரணங்களிலொன்று, அரசாங்கத்தின் மணற் றடுப்புக் கொள்கை – காணிகள் சுற்றிவளைப்பு நோக்கம் சுலபம். மந்தை மேய்ப்பவர்கள் பொதுப் புற்றரைகளைத் துண்டு துண்டாக்கித் தங்கள் மிருகங்கள் மேய்வதற்குப்

மொழியாக்கம்:
— திரு. சி. கங்காதரன் —

போடலாம். இது அவர்களுக்கு ஓர் ஊக்கிவித்தலாக அமையவிருக்கும் அதே நேரம் சீர்கெட்ட இடங்களில் திரும்பவும் பயிர் உற்பத்தியாக்க ஒரு சந்தர்ப்பமாகும். பிரச்சனை என்னவெனில் திட்டமிடுவோர் வகுத்தபடி மக்கள் செய்வதில்லை. இதன் பிரகாரம் காணிகள் ஒழுங்கற்ற முறையில் பறிப்பதைத் தூண்டி விடுகிறது. எவரும் முட்கம்பி அடிக்க வசதியானவர்கள். உள்ளதிற்குள் திறமான பகுதிகளை அபகரிக்கிறார்கள். அங்கே தங்கள் மிருகங்களை மேய விடுவதற்குப் பதிலாக எல்லைக்கு வெளியே மேய விடுகிறார்கள். இது கொள்கைக்கு முரண்பாடானது. முடிவென்னவெனில் கூடிய மிருகங்கள் ஓர் இடத்தில் தான் காணப்படுகின்றன. '' சுற்றிவளைப்பு புல் மேயும் முக்கியத்துவத்தை, சரியாகத் தாக்கக்கூடிய நிலப்பரப்பில் கடுமையாகப் பாதிக்கப்படும் நேரத்தில் தீவிரமாக்குகிறது'' என கொலம்பியா சர்வகலாசாலை மனித சாஸ்திர நிபுணர் டீ. வில்லியம் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களற்ற சரிவுகள்

இன்னொரு பிரச்சனை என்னவெனில், 1949 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட கூறமுடியாத கொள்கைகளின் ஆட்டங்கள். ஸ்டாலினின் நிர்வாகத் திட்டத்தின் கீழ் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் நாசமான ''எங்கும் தானியம் நாட்டுங்கள்'' என்ற பண்பாட்டுப் புரட்சியின் காரணமாக, உள் மொங்கோலியாவில் வாழும் ஐம்பது வயதடைந்த ஒருவர், கொள்கைகள் மாற்றங்கள் ஏற்பட்டதால் ஆறு தடவைகள் பாதிக்கப்பட்டார். மக்கள் புற்றரைகளை உழுது, அதிலுள்ள மென்மையான மேல் மணல்களை மேலே கொண்டு வருவதால் கொடிய காற்றுக்கு வசதியாக வெளிப்படுத்தப்பட்டு மணலரிப்புக்கு ஏதுவாகி விட்டது. மந்தை மேய்ப்பவரும், கமக்காரரும் குறுகிய நோக்கத்தையே கையாண்டனர். வனாந்தரம் விரிவடைந்து வருவதைக் கண்டால் அவர்கள் தங்கள் மந்தைகளைப் பொதுப் புற்றரைகளில், அது முடியும் வரை மேயவிடுவார்கள். தங்கள் பூமி வருமானங் குறைந்தால், மேலும் பயிர்களைப் பூமி வளமற்றதாக வரும் வரை வளர்ப்பார்கள். மலைக்கருகில் வாழ்பவர்கள் மலைச்சரிவுகள், மரம் அற்று வரும் வரை தாவரங்களைத் தறிப்பார்கள்.

சீனா, 2,000 ஆண்டுகளுக்கு முன், மொங்கோலியரின் படையெடுப்பைத் தடுப்பதற்குப் பெரும் மதில் கட்டியது போல், இன்று பச்சைச் சுவர் வடக்கேயுள்ள 11 மாகாணங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 4 மில்லியன் கி.மீ. நிலப் பரப்பில், நாட்டைச் சுற்றியும், தெருக்களுக்கு அருகாமையிலும், பயிர் வளமுள்ள தேசங்களிலும் ஆண்டுக்கு 30 நாள்கள் வரை பாட்டாளி மக்கள் பயிர் உற்பத்தியாக்குகிறார்கள். 8.7 சத வீதம் 1950-ல், இருந்ததிலும் பார்க்க இப்போது 14 சத வீதம் பயிர்வளர்ப்புப் பரந்திருக்கிறது. இந்த நூற்றாண்டு முடிவில் 15 சத வீதமாக்குவதே குறிக்கோள். இது முடிவுற்ற பிரயாசையும், எத்தனிப்பும். சீனர் பல விதமாக இயன்றளவு மரங்கள் நாட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால், வனாந்தரப் பரவலை உடனடியாகத் தடுப்பது மிகவுங் கஷ்டமெனச் சர்வதேச சம்மேளன உதவும் மேற்பார்வையாளரான அந்தோனியோ பிறீக் கூறுகிறார்.

இந்த வெளித்தோற்ற (பகட்டான) பயிர் நடுகை மக்களின் தவறுகளால் அச்சத்தை ஏற்படுத்துகிறது. 1990 இல் லோங்கிகோன் வண்டுகள், Ningxia மாகாணத்திலுள்ள டென்ஜர் வனாந்தரத்திற்கும், மூன் மணற்றரைக்கும் இடையே பச்சைச் சுவரின் ஒரு பகுதியை அழித்து விட்டது. லோங்கிகோன் வண்டுகள் அதிகம் விரும்பும் பொப்லாஸ் என்னும் மரங்களே நடப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளாக மரங்களை இடம் பெயர்த்து நடுவதற்குப் பதிலாக பிளைற் என்னும் கிருமிகளால் தாக்கப்பட்ட 400 மில்லியன் மரங்களைத் தறித்து வீழ்த்தினார்கள். அவை சீனா முழுவதும் நடப்பட்ட மரங்களின் தொகையில் 1/6 பங்காகும். இன்று அழிக்கப்பட்ட பிரதேசங்களில் புதிதாக நடப்பட்ட பயிர்கள் 2 மீற்றர்களுக்குக் குறைந்த உயரமாவதால், அவை கமக்காரரைக் காற்று எடுத்து வீசும் மணல்களிலிருந்து பாது காக்கப் போதுமானதல்ல.

மணலைத் தடுத்து வைக்கும் வரை பாடாயன் ஜாறான் (Badain Jaran) என்னும் வனாந்தரத்தில் இருக்கும் நகரங்களில், வுவி (Wuwei) என்னும் நகரம், சென்ற மே 5ஆந் திகதி போல் கூடிய கொடிய உச்சி மதியவேளைகளை எதிர்நோக்க வேண்டி வந்தது. அன்று புயல் வேகத்தில் வந்த காற்று, 700 மீற்றர் உயரமாக மணற் சுவரை எழுப்பி, பட்டணத்தைத் தாக்கி, அயலிலிருந்த மக்கள் அனைத்துப் பேரையும் புதைத்து, 80 பேரைக் கொன்று, (பெரும்பாலான குழந்தைகள் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு நடந்து சென்றவர்கள்) 40 மில்லியன் நஷ்டத்தையும் ஏற்படுத்தியது. ஒரு வாரத்தின் பின் பக்கத்து Xinjiang மாகாணத்திலிருந்து காப்பாற்றும் தொழிலாளர்கள், தண்டவாளங்களில் மணல் குன்றுகள் ஏற்பட்டதால் வண்டியில் பயணம் செய்து, தவித்து நின்ற 10,000 அகதிகளுக்குச் சாப்பாடும், நீரும் கொண்டு அவசரமாக விரைந்து சென்றார்கள்.

வனாந்தரங்கள் தங்கள் பட்டணங்களை விழுங்காமல் தடுப்பதற்குச் சர்வதேச உதவி தேவையெனக் கூறுகிறது. சென்ற கிழமை உலக வங்கி 200 மில்லியன் டொலர் வட்டியின்றித் திருப்பவும் மரங்கள் நட்டுக் காடு உண்டாக்குவதற்குப் பணங் கொடுக்க இணங்கியுள்ளது. இந்தக் கிழமை, சீனப் பிரதிநிதிகள் சர்வதேச வனாந்தரத் தடுப்பு மன்றத்தோடு ஒப்புக்கொள்ளும் பத்திரங்கள் பாரிசில் கைச்சாத்திடப் போவதாக எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சீனாவுக்கு இன்னும் 83.9 பில்லியன் டொலர்கள இந்தப் பெரும் பச்சைத் தடுப்பை வெற்றிகரமாக்குவதற்குத் தேவைப்பட்டாலும் நிறைவேற்றுவது கஷ்டமென அபிப்பிராயப்பட்டார்கள். காட்டு மந்திரி இலாகாவின் உப கட்டளை அதிகாரியான லீ லுக்காங் தங்கள் வரவு செலவுத் திட்டம் 10 மடங்காக்கினாலும் போதியதாக இராது எனக் கூறுகிறார்.

இதோடு சேர்ந்த பிரச்சனை யாதெனில், சீனாவின் காணி நிர்வாகம், சர்வதேசப் பாலைவனத் தடுப்பு மகாநாட்டுடன் கைச்சாத்திட்டு முடிந்த பின், சீனா பாலைவனத் தடுப்பையும், மணல் அரிப்பையும் சேர்த்து ஒரே காலத்தில் போரிட வேண்டும். இத் திட்டம் பொருளாதாரத்தையும், இயற்கையின் சுற்றுப்புறத்தையும் சேர்ந்ததாயிருக்கும் (அணுகியதாயிருக்கும்). அது வனாந்தரமாக மாறுவதைத் தடுக்கும் சக்தி வாய்ந்த திணிப்பாயிருக்கும் அல்லது சீனாவின் சிக்கலான ஒரு வகைப்பட்ட ஆட்சியாய் முடியும்.

உலக உலா, செப்ரெம்பர் 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாணமாகும் மலைகள்

அத்தாட்சிகளின்படி, சீனா தன் பலமான குறிக்கோளைக் கடைப்பிடிக்க வேண்டும். மியூன் ( Miyun ) நீர்த் தேக்க நிலத்தில், பெய்ஜிங்குக்கும் வெளிப்பகுதியில் 65 கி. மீ. இருக்கும் பாதுகாப்புள்ள ஒரு பூங்கா நிலத்தில், ( Hebel ) மாகாணத்திற்கருகாமையிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள், தளபாடங்கள் செய்வதற்காகப் பெரும் விருட்சங்களை வெட்டுகிறார்கள். திபெத் பீடபூமியிலுள்ள சகல மலைகளிலிருந்து, உள்ள மரங்கள் எல்லாவற்றையும் வீழ்த்தி, தென்மாகாணங்களின் ஊடாகப் பாயும் முத்து ஆற்றில், அம்மரக் குற்றிகளைக் கீழ் நோக்கிப் பாயும் ஆற்றின் நீரில் மிதக்க வைத்துக் கரையோரங்களிலுள்ள விரைவாக முன்னேறும் நகரங்களுக்கு வீடுகள் அமைப்பதற்காகக் கொண்டு செல்கிறார்கள். ‘சுவர்க்கம் மேலே பேரரசர் வெகு தூரத்தில்’ கட்டாயப்படுத்தல் மிகவுங் கடினமெனக் காட்டுவள சர்வகலாசாலைப் பேராசிரியர் வாங்சியான் கூறுகிறார்.

அத்துமீறற்காரர்களில் உள்ளூர்த் தலைவர்கள் இருக்கிறார்கள் (உண்டு). சங்கன் பாலா வழமையான தன் கிராமத்தின் மத்தியில் விசேஷ அடையாளக் குறியான நூறாண்டு வயதான விருட்சத்தின் நிழலில் சந்தோஷத்தை அனுபவித்தவர். ஆனால் இப்போது அதன் சிறு அடிக்குற்றி மட்டும் வெறுப்பூட்டும் முட்கம்பிகளால் சுற்றி வளைத்துத் தோற்றமளிக்கிறது. அம்மரம் சட்டத்துக்கு விரோதமாகச் சென்ற ஆண்டு வெட்டப்பட்டு விறகுக்கு விற்கப்பட்டது. சங்கன் பாலா எவ்வளவு கோபமாக இருந்தாலும் அவரால் அதிகாரிகளுக்கு மறுப்பு மனுச் செய்வது கடுமையான காரியமாகும் அம்மரம் அவரின் கிராமத்தின் பிரதான தலைவனால்தான் வெட்டப்பட்டது.

*நியூஸ்வீக், ஜூன் 20, 1994*

ஹெய்ற்றி:

# படையெடுப்பு ஒன்றும் வேண்டியதில்லை

ஹெய்ற்றி பற்றி வோசிங்ரனில் நிலவும் கடைசியான வதந்தி என்ன? ஹெய்ற்றியிலிருந்து நாடுவிட்டு ஓடிவந்தோர்க்குப் பயிற்சி கொடுத்து அந்தத் தீவின்மீது படையெடுத்துத் தாக்க வைக்கலாம் என்று ஓர் ஆலோசனை வெளிவந்ததும், ஜனாதிபதியின் வசிப்பிடமான வெள்ளை மாளிகையில் உடனே அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதுடன், 1961 இல் கியூபாமீது படையெடுத்த போது ஏற்பட்ட சங்கடமான நிலைமை ஏற்படலாம் என்று கூறி அந்த ஆலோசனை நிராகரிக்கப்பட்டது. ஆனால் எப்படியாவது படையெடுப்பு நடத்தாமல் ஒன்றும் நடவாது என்றும் வோஷிங்ரன் நினைக்க வேண்டியுள்ளது. அந்த நாட்டின்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையைக் கேலிக் கூத்தாக்கும் விதமாக கடத்தற்காரர்கள் அதன் அண்டை நாடான டொமினிக்கன் குடியரசிலிருந்து எரிபொருளும், வேறு தேவையானவைகளும் அங்கு கொண்டு செல்கின்றனர். அந்த நாட்டின் ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்பட்ட ஜீன்பேர்டறன் அரிஸ்டைட், அங்கு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ள இராணுவ ஜெனரல்களுடன் ஒத்துப் போக மறுக்கிறார். அவலப்பட்டுக் கொண்டுள்ள ஹெய்ற்றி மக்களோ ஆபத்தான தோணியேற்றத்தின் மூலம் நாட்டைவிட்டு ஓடித் தப்புகின்றனர்.

இதற்கிடையில் அமெரிக்க ஐங்கோண மாளிகையில் உள்ள சில அதிகாரிகள், அரசாங்கம் வீணாக அவசரப்படுகிறதென்றும், ஹெய்ற்றியில் அதிகாரத்தை அபகரித்துக் கொண்டுள்ள ஜெனரல் றாவுல் செடார்ஸும் அவருடைய உயர் நிலை அதிகாரிகள் சிலரும் ஹெய்ற்றியை விட்டு ஓடித்தப்பி வேறு எங்காவது அந்நிய நாட்டில் தஞ்சம் பெற்றுச் சுகமாக வாழத் திட்டந்தீட்டிக் கொண்டுள்ளனர் என்றும் கூறுகின்றனர். அதற்காக அவர்கள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பல நாடுகளில் இரகசிய வங்கிக் கணக்குகளில் பணம் குவித்து வைத்துவிட்டுத் தப்பியோடச் சந்தர்ப்பம் காத்து நிற்கின்றனராம். அப்படி அவர்கள் தப்பியோடினால் பிரான்சுக்கும், ஆபிரிக்காவின் ஒரு நாட்டிற்கும் சென்று சொகுசுற இடம் உள்ளதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருக்கடியில் பயங்கர சத்தம்

அவற்றை, ஒன்றுக்கொன்று இணையான இரண்டு பெரும் ஒலிபெருக்கிகள் என்று எண்ணிக்கொள்ளுங்கள். அவற்றில் ஒன்று, கலிபோர்னியாக் கடலின் பிக்சூர் பகுதியில், நீரில் அமுக்கி வைத்து விட்டு, மற்றதை ஹவாய்த் தீவுகளில் ஒன்றான ஹவாய்த்தீவின் கடலிற் போட்டு விட்டு, அவற்றில் ஒன்றின்மூலம் ஒலி அதிர்வு ஒன்றைப் பிறப்பித்தால், அது நீரினூடாக ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் துரத்திற்கு அப்பாலும் கேட்கக் கூடிய அளவு, சத்தம் கூடியதாக இருக்கும். அதுமட்டும் அல்லாமல், அந்த ஒலி செல்லும் வழியில் அண்மித்து நீந்திச் செல்லக் கூடிய எந்த ஓர் உயிரினத்தினதும் செவிப்புலனையும் அழித்துவிட வல்லதாக அந்த ஒலி அதிர்வு இருக்கும்.

இது, சில கடல்வாழ் உயிரியலாளர்களுக்கும், திமிங்கிலங்களின் மீது பரிவு கொண்டவர்களுக்கும் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. அந்த இரு சாராரின் குழுக்கள் இரண்டு சில வாரங்களுக்கு முன்பு வோஷிங்ரனுக்குச் சென்று, அந்த ஒலி அதிர்வு மோதல்களுக்கு எதிராக விவாதித்தன. சான்டையகோவிலுள்ள ஸ்கிறிப்ஸ் கடலியல் ஆய்வுநிலையத்தால் 35 மில்லியன் டொலர் செலவில் நடத்தப்படும் அந்தத் திட்டம், தற்காலத்தில் மிகவாக அஞ்சப்படும் உலகின் வெப்பநிலை அதிகரிப்பு (Global Warming) உண்மையில் நிகழ்கிறதா? என்பதை உறுதி செய்வதற்காக நடத்தப்படுவதொன்றாகும். அதன்படி, ஓர் ஆண்டு காலத்திற்குள் குறிப்பிட்ட கிரமமான கால இடைவெளிக்கு, விஞ்ஞானிகள் ஒலி அதிர்வு "வெடிகளை" ஒலிக்க வைத்து, அந்த ஒலி அலைகள் பஸ்பிக்மா கடலில் நீண்ட தொலை தூரம் செல்ல எவ்வளவு நேரம் செல்கிறது என்பதைக் கணக்கெடுப்பர். ஒலி குளிர் நீரிலும் பார்க்க, வெப்ப நீரிலே விரைவாகச் செல்லுமாகையால், ஆய்வாளர்களுக்கு நேரில் முறையில் கடல் நீர் வெப்பத்தை அறிந்துகொள்ள முடியும். அமெரிக்க அரசு, கடல்வாழ் முலையூட்டி விலங்குகளைத் துன்புறுத்துவதனைத் தடுக்கும் சட்டத்திலிருந்து அதற்கு விதிவிலக்கு அளித்தால், அந்தப் பரிசோதனை இன்னும் சில வாரங்களில் ஆரம்பித்து விடும்.

இதனால் எழும் பிணக்கு, சூழலியலாளர்களைத் தமக்கு இடையிற் சண்டையிட்டுக் கொள்ளச் செய்துள்ளது. பூகோள வெப்பம் அதிகரிப்பதைப் பற்றிக் கவலைப் படுபவர்கள் ஒரு பக்கம் நிற்க, விலங்கினங்களின் நலனில் அக்கறையுள்ளோர் மறுபக்கம் நிற்கின்றனர்.

கோ(ர்)னல் பல்கலைக்கழகத்தின், திமிங்கிலங்களின் கேள்புலன் பற்றிய விடயத்தில் நிபுணரான லிண்டி வேய்ல்கா(ர்)ற் என்பவர், அமெரிக்காவில் தேசியக் கடல் மீன்பிடிச் சேவைகள் நிர்வாகத்தின் முன்பு தோன்றிச் சான்று தந்தபொழுது, திமிங்கிலங்களும், ஏனைய கடல்வாழ் முலையூட்டிகளும் தமது இரை தேடலுக்காகக் கடலிற் பிரயாணம் செய்வதற்கும், அத்துடன் அவற்றின் சமூக வாழ்விற்கும், தங்களது தனித்திறமை வாய்ந்த செவிப்புலனையே நம்பியுள்ளன என்று எடுத்துரைத்தார். அவர் ஒலி மாசுபடுதலாற் பல்லாயிரக் கணக்கான மிருகங்களின் புணர்ச்சிச் செயலும், இடம்பெயர் இயல்புகளும் பாதிக்கப்படக்கூடுமென்று, தாம் கருதுவதாக எடுத்துரைத்தார். அதை, பெண்மணியின் சொற்களிலேயே சொல்வதானால், "செவிட்டுத் திமிங்கிலம் செத்த திமிங்கிலந்தான்."

ஆனால் ஒலி அதிர்வு கொண்டு ஆய்வு நடத்துபவர்களே, அந்த ஒலி அதிர்வால் பாதிக்கக்கூடிய அருகாமைக்குச் சில விலங்குகள் தான் நீந்திச் செல்லுமென்றும், அந்த ஒலி அதிர்வு 900 மீற்றர் ஆழத்தில் அமைக்கப்படுமென்றும், அது கடலில் ஏற்படும் இடியோசை அதிர்விலும், பெருங் கப்பல்கள் துருவ உறைப் பனிப் படலங்களை உடைக்க எழுப்பும் ஒலியின் அளவிலும் குறைவானதாகவே இருக்குமென்றும் வாதிடுகின்றனர்.

சில கடல்வாழ் உயிரினவியலாளர்கள், அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றென்று இசைவுறத் தூண்டப்பட்டுள்ளனர் என்பதனால், அதற்கு அரசாங்க அனுமதி கிடைக்கும்போல் தெரிகிறது. "ஸ்கிறிப்ஸ்" கடலியல் ஆய்வு நிலையத்தினர், கடல்வாழ் முலையூட்டிகளுக்கு இந்தப் பரிசோதனையால் பாதிப்பு ஏற்படுவதைப்பற்றி ஆய்வு நடத்தவென்றுமட்டும் 2.9 மில்லியன் டொலர் நிதியை ஒதுக்கியிருப்பதுடன், அயலவர்களிடமிருந்து முறைப்பாடுகள் வந்தால், அந்த ஒலி பெருக்கிகளை உடனடியாகச் செயலிழக்கச் செய்வதாகவும் வாக்களித்துள்ளனர்.

டைம், ஏப்ரல், 4, 1994.

★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுக் கொண்டிருப்பதை விடுத்து, கேட்க ஆரம்பியுங்கள்

நல்ல கனம் காத்திரமான கேள்விக்கு எதிரியைத் திணறடிக்கும் சக்தி உண்டு. என் கேள்விக்கு என்ன பதில் என்று நாம் கேட்கவேண்டியது தான். அவர் தடுமாறிப்போவார். வேலை செய்யும் இடத்தில் உங்கள் பங்குக்கு மேலான பணிகள் தரப்படுகின்றனவா, அல்ல உங்கள் பணிப்புரைகள் கீழ்நிலை ஊழியர்களால் உதாசீனம் செய்யப்படுகின்றனவா? மௌனம் சாதியாதீர்கள், கேள்வி கேளுங்கள்.

வர்த்தக நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கேள்விகள் கேட்கவேண்டியது மிகவும் அவசியம். உங்கள் மேல் நிலை அதிகாரி மேலதிக வேலை தரும்போது சுமக்க முடியாத பளுவால் வேதனைப் பட வேண்டாம். "அப்போ நீங்கள் காலையில் தந்த வேலையை என்ன செய்ய" போன்றதோர் கேள்வியை ஒருவேளை கேட்கலாம். முதலாளிக்கு நீங்கள் ஞாபகமூட்டுவதோடு உங்கள் பரிதாப நிலையையும் அவர் முன் வைக்கலாம். உங்களுக்கு நன்றாக விளங்காத வேலையை உங்கள் அதிகாரி தரும்போது நீங்கள் கட்டாயம் கேள்வி கேட்டே ஆக வேண்டும். தவறின் நீங்கள் செய்யும் வேலை திருப்திகரமாக அமையாது அல்லது அது பிரயோசனமற்ற வேலையாகவும் இருக்கலாம். அதிகாரி உம்மீது எரிந்து விழுந்தாலும் பரவாயில்லை, இவ்விடத்தில் கேள்வி கேட்பதால் ஒரு தீங்கும் நேராது.

இதேபோன்று உங்கள் கீழ்நிலை ஊழியர்களையும் நீங்கள் சில சந்தர்ப்பங்களில் தேவையைப் பொறுத்துக் கேள்வி கேட்கவேண்டியது உங்கள் கடமை. நித்தம் கேள்வி கேட்பதால் உங்களுக்கு குலைக்கிற நாய் கடியாது போன்ற பட்டங்கள் சூட்டப்படலாம். எதுவும் அளவோடு என்பதை நீங்கள் மறுக்கக் கூடாது. நீங்கள் தர்ம சங்கடப் படவேண்டிய கட்டங்களும் உண்டு. அலுவலகத்தில் ஒரு பெண்மணி ஒவ்வொரு நாளும் காலையில் நேரம் கடந்து வந்து மாலையில உரிய நேரத்திற்கு முன்பாகவே வெளியேறுவதாக உங்களுக்குத் தகவல் வர நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? அப்பெண்மணி மீது குற்றப் பத்திரிகை தயாரித்து விளக்கங் தரும்படி கோரினால், அவரை வேலை நீக்கம் செய்ய வேண்டிய கட்டத்திற்குக் கொண்டு கொண்டு செல்லும். ஆகையினால் நல்ல திறமையாகக் கடமைபுரியும் அந்தப் பெண்மணியை நீங்கள் அழைத்து காரணங்களைக் கேட்டறியலாம். அப்படிச் செய்யும் போது அப்பெண்மணி கதறிக் கண்ணீர் வடிக்க நேர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இன்மேல் நேரத்திற்கு வந்து நேரத்திற்குப் போகும்படி நீங்கள் பணிக்கலாம். ஆனால் இதுபோதும். இந்தப் பெண் ஆற்றும் சிறப்பான பணியை மனதிற் கொண்டு நீங்கள் மன்னித்து விடுவீர்களானால், அலுவலகத்தின் ஒழுங்கு கெட்டுவிடுவதுடன் உங்களுக்கும் கெட்டபெயர் வந்துவிடும். ஆகவே இவ்விடத்தில் நீங்கள் கடும் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்.

அலுவலக ஊழியர்களை இரு வகையாகப் பிரிக்கலாம் கொடுத்த வேலையைக் கச்சிதமாகக் குறித்த நேரத்திற்குள் செய்து தருபவர்களும், தட்டிக் கழிப்பதற்கு வழிதேடுபவர்களும் என்ற இருவகையினர்களே இவர்கள். இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள்; எந்தக் கேள்விக்கும் மசியமாட்டார்கள். இவர்கள் மீது ஒழுக்க நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும்.

உங்களோடு சமநிலையில் கடமையாற்றுபவர்களுடன் நீங்கள் புத்திக்கூர்மையுள்ள கேள்விகேட்டு நல்ல பலன் பெறலாம். உங்கள் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் இது வழி வகுக்கலாம். தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை உங்களிடம் திணித்து விட்டுத் தப்பித்துக் கொள்ளும் நண்பனை நீங்கள் சூடான ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளைக் கேட்கத்தான் வேண்டும். இன்னும் ஒரு நண்பர் தினமும் உங்கள் மேசைக்கு வந்து உங்களைக் குடையும் வழக்கம் உள்ளவர். இதனால் உங்கள் பொன்னான நேரம் கெடுகின்றதுடன் உங்கள் திறமையும் கேள்விக்குரியதாகின்றது. இவரை விரோதியாக்காமல் விரட்ட நீங்கள் நல்லதொரு கேள்வியைச் சிருட்டிக்க வேண்டியுள்ளது. இதைவிட அலுவலக நேரத்தில் உங்கள் சொந்த விஷயங்களைப் பற்றி விசாரிக்கும் உங்கள் நண்பனுக்குப் பதில் கொடுப்பீர்களா? கேள்விக்கணை கொடுப்பீர்களா? இதுவும் ஒரு கேள்விதான்.

World Executive Digest ஏப்ரல் 94

**உங்கள் சிந்தனைக்கு ஏழு விடயங்கள்**

1) என்ன சொல்ல வென்று தடுமாறும் வேளையில் கேள்வி ஒன்றைக் கேளுங்கள்.
2) உங்கள் கேள்வியில் மற்றவர்களைப் புண்படுத்தும் அம்சத்தை நீக்குங்கள்.
3) உங்கள் கேள்வி எப்போதும் நேர்மை உள்ளதாக இருத்தல் வேண்டும்.
4) மற்றவர்களின் கேள்வியில் உள்ள அடிப்படை உணர்ச்சிகளைத் தவறாது கவனியுங்கள்.
5) சொல்மாரி செய்யாதீர்கள்; சுருக்கமாகக் கேளுங்கள்.
6) அடிப்படை நம்பிக்கைகளைத் தாக்கி; கேள்வி கேட்காதீர்கள்.
7) நட்புரிமை, சகவாழ்வு, சேவை போன்ற எண்ணங்கள் பிரதிபலிக்க கேள்வி கேளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் இரகசிய மொழி

மொழியாக்கம்:
— திரு. க. செல்வநாயகம் —

ஒரு செய்கை மீளாய்வின் போது எசமானர், வேலை வழங்குபவர், தனது பணியாளொருவரை நோக்கி அவரது சக தொழிலாளர்களோடு ஏதாவது சிக்கல்களுண்டா? என்று வினவுகிறார். ''கிடையவே கிடையாது'' என்று விடை பகர்ந்த பணியாள் தன்னையறியாமலே ஆம் என்பதற்கடையாளமாக தலையை மேல் கீழாக ஆட்டுகிறார். அக்கறையோடு முறைத்துப் பார்க்கிறார் எசமான். ஏன்? ''தாம் கேட்பதையோ பார்ப்பதையோ நம்புவதா இல்லையா எனத் தெரியாத சிலர் உண்மையை மட்டுமே கூறும் என்ற காரணத்தால், உடல் மொழியை நம்புகிறார்கள்'' என்று கூறுகிறார் முகாமைத்துவ நிபுணரான நன்ஸி ஒஸ்ரின். '' மிக வேகமாக விளையாடி சொற்களோடு தோற்கலாம். சைகைகளோடு அவ்வாறு முடியாது.'' தனது இரண்டு வயது மகள் தன் அலங்காரப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ள பெட்டிக்குள் புகுந்து கண்ணிமைக்குப் பூசும் மையை உடல் முழுவதிலும் அப்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து விடுகிறாள் ஒரு தாய். '' இனிமேல் ஒரு போதும் இதனோடு விளையாடக் கூடாது '' என்று கூறிய அவளால் புன்சிரிப்பைத் தடுக்க முடியவில்லை. மறுநாளும் குழந்தை அங்கே போய்த் தன் வேலையைப் பார்க்கிறது. தாயின் முகத்தில் தவழ்ந்த புன்னகை தனக்குச் சாதகமானது எனக் கருதி விட்டது குழந்தை. ஒருவர் சொல்வதற்கும், கருதுவதற்கு மிடையிலுள்ள வேறுபாட்டை ஒரு குழந்தையைப் போல வேறு யாரும் புரிந்து கொள்ளவே முடியாது என்றார் ஒஸ்ரின்.



**செயல்கள், சொற்களிலும் பார்க்க உரத்துப் பேசுகின்றன.**

ஒவ்வொரு நாளும் பல நூற்றுக் கணக்கான இத்தகைய சந்தர்ப்பங்களில் சொற்களிலும் பார்க்க, செயல்கள் வெகுவாக உரத்துப் பேசுகின்றன. '' எமது குரல் நாளத்தால் நாம் பேசுகிறோம். முகபாவத்தால் குரல் ஒலியால், முழு உடலால் அறிவிக்கின்றோம்'' என்பது உளவியலாளர் போல் எக்மனின் கருத்தாகும். உடல் மொழியைப் புரிந்து கொள்வதென்பது மனிதன் அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடிய மிகவும் சிறந்த செயன் முறைத் திறனாகும். ''ஏனையவர்கள் அறியாமல் சொல்வதை நீங்கள் அறிந்து வாசித்து விடுகிறீர்கள். வீட்டிலென்றாலென்ன, பணிமனையிலென்றாலென்ன பல விடயங்களை அவை சிக்கலாவதற்கு முன் தீர்த்து விட முடியும்'' என்கிறார் கல்வியாளர் மரிலின் மேப்பிள்.

## பணிசெய்யும் போது

பணி செய்யும் இடங்களில் சொல்லாலல்லாத பல செய்தித் தொடர்புகள் ஒரே விடயத்தைப் பற்றி எழும்போது அதிகாரம் அந்தஸ்தாகப் பெயர்க்கப்படுகிறது. மறுமுறை ஒரு கூட்டத்திற்குச் சமுகமளிக்கும், போது யார் அந்தஸ்தில் உயர்ந்தவர் என்று துளாவிப் பார்க்கிறீர்கள். ஒவ்வொரு சமூகத்திலும் இனவகையிலும் கட்டுப்பாட்டை வைத்திருப்பவர் பெரிதாகப் பலமுள்ளவராக, அச்சமில்லாதவராகத் தோற்றமளிக்கிறார். மனிதக் குரங்குகள் தமது ஆதிக்கத்தைக் காட்ட உரத்துக் கீச்சிடுகின்றன. அல்லது மார்பில் விரலால் தட்டுகின்றன. யார் பொறுப்புக்குரியவர் என்பதைக் காட்ட மனித இனம் வெவ்வேறு வழிகளைக் கடைப்பிடிக்கிறது.

''எமது பண்பாட்டின்படி உயர் தகைமை என்பது மிக நுண்ணிய அளவிலும் மெதுவான தோரணையிலுமே உருப்படுகிறது'' அல்பெட் மெஃறேபியன் என்ற மனோதத்துவ பேராசிரியர் கருத்து இது. ''எதிராக, தகைமையில் தாழ்ந்தோர் அதிக இரக்கமானவர்களாகிறார்கள். இதற்குத் தக்கதோர் உதாரணம்: உயர் அதிகாரிக்கு முன்னால் கவன நிலையில் நிற்கும் படை வீரர்களைக் குறிப்பிடலாம். அவருடைய உடல் மிக அதிக அளவில் இறுக்கமாகிறது. அங்கலட்சணங்கள் மிகவும் நேர்த்தியாகவுள்ளது. இவையெல்லாம் கீழ்ப்படிதலுக்கான அடையாளங்கள் '' என்கிறார் மெஃறேபியன்.

ஒரு குழுவின் தலைவர்களே தமது ஆசனத்தில் பின்னால் சரிந்து உட்கார்கிறார்கள். தலைக்குப் பின்னால் கைகளை மடித்து கோர்த்துக் கொள்கிறார்கள். பாதங்களை மேசைமேல் தூக்கி வைத்துக் கொள்கிறார்கள். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



விடயத்தை வலியுறுத்த முன்னே வளைகிறார்கள். அவர்களுடைய சைகைகள் பெரிதாக இருக்கும். இலகுவான தன்னம்பிக்கையையும், ஆறாமையையும் அது காட்டி நிற்கும்.

அதே நேரம் பாதிக்கக் கூடியவர்கள் தமக்கு முன்னால் கைகளைக் கட்டிக் கொள்வார்கள். தம்மை மறைத்துக் கொள்வது போன்ற செயல் அது. கதிரைகளில் இறுக அமர்ந்து அதனையே நன்றாகப் பிடித்தும் கொள்ளுவார்கள். மூக்கைக் கையால் அழுத்திப் பிடிப்பார்கள். கால்களைச் சொறிந்து விடுவார்கள். '' இவைகள் சுய செயற்பாட்டு நடத்தைகள். இவைகள் தாழ்மையை வளர்க்கின்றன '' என்பது எக்மனின் கருத்து.

அதிகாரம் உள்ளவர்க்கு அந்தஸ்துக்கு மிஞ்சிய சிறப்புரிமைகளும் உண்டு. அவர்களில் ஒருவர் மற்றவர்களைத் தொடுகிறார். ''ஓர் அதிகாரியைத் தொடுவதென்பது தகாத காரியம்'' என்று கருதுகிறார் மேஃறபின். உதவியாளரின் இடத்தைக் குறித்து மேலாளர் தொடலாம். அவர் உதவியாளரின் கழுத்தைச் சுற்றி கையைப் போடுவாரானால் ஆதரவுக்கு அது அடையாளம். முதுகிலே தட்டிக் கொடுப்பாரென்றால் ஒரு நபரை அவருக்குரிய இடத்திலே வைத்திருக்கிறார் என்று பொருள். உரையாடல்களின் போதும் மேலாளர்கள் கட்டுப்பாட்டைத் தம்வசம் வைத்துக் கொள்வர். '' மேல் நிலையில் உள்ள ஒருவர் பேசுவதும் அதிகம். உரத்தே கதைப்பார்கள். மற்றவர்களை இடை நிறுத்தவும் செய்வார்கள்'' மெஃறபினின் கருத்து இது.

அதிகார முடையவர்களின் உடல்களில் ''கசிவு'' ஏற்பட்டு அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏமாற்றம் விளைவதுமுண்டு. இந்தக் காட்சியைக் கற்பனை செய்யுங்கள். உங்கள் நிறுவனத்தின் தலைவர் நிறுவனத்தை ஒரு கட்டமைப்பு விலைக்கு வாங்கிவிட்டதாகத் தனது ஊழியர்களுக்கு அறிவிக்கிறார். '' இது ஒரு பெரிய செய்தி'' என்கிறார். '' புதிய உடைமையாளர்கள் எமது பணியைப் பற்றி நிறைவான எண்ணங் கொண்டுள்ளனர். முன் எப்போதையும் விட உங்கள் தொழில்களுக்கு நல்ல பாதுகாப்பு ஏற்பட்டுள்ளது. '' அவர் பேசும் போது தனது கதிரைக்குப் பின்னால் இறுக்கமாக நிற்கிறார். அவருடைய கைகளை முன்னால் கட்டிக் கொள்கிறா . கண்களிலே மிகவும் கடுமையான பார்வை தோன்றினாலும் அடிக்கடி புன்னகை செய்கிறார். அவருடைய குரல் தட்டையாகவும், சாதாரண வேளையிலும் பார்க்க உரத்தும் தொனிக்கிறது. நீங்கள் அவரை நம்புகிறீர்களா? '' நீங்கள் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் இடையில் வேறுபாடுகளைக் கவனியுங்கள் '' என்று ஆலோசனை கூறுகிறார். உங்கள் முதல்வரின் உடல் மொழி மீளுறுதி செய்யுமொன்றாகும்.

பலர் பொய் சொல்லும் போது அசைவது குறைவாகும். அவர்களுடைய அசைவுகளும், உடல் நிலையும் உறுதியற்றிருக்கும். உங்கள் கருத்தொன்றை முன்வைக்கும் போது உங்கள் முதல்வர் புன்னகைத்தால் நீங்கள் அவரைக் கவர்ந்து விட்டதாக நினைத்து விடாதீர்கள். புன்னகை ''மக்கள் நினைப்பதைவிட சிக்கல் மலிந்ததாகும்'' என்பது எக்மனின் கருத்து. அவர் 18 வெவ்வேறு வகைப் புன்னகைகளை அடையாளங் கண்டுள்ளார்.

அவற்றுள் அநேகமானவை பொய்யானவையாகும். வியாபாரச் சூழ்நிலைகளில் அநேகமாக வெளிவரும் புன்னகை, ''தகைமை பெறும்'' புன்னகை எனப்படும். அது ஒரு கருத்தை நிராகரிக்கும் போதும், ஓர் ஊழியரைக் கண்டிக்கும்போதும் மேலாளர்கள் செய்யும் புன்னகையாகும். அந்தப் புன்னகையின்போது உதடுகளின் மூலைகள் இறுக்கப்பட்டிருக்கும்; கீழுதடு சிறிது மேலுயர்ந்திருக்கும்.

ஒரு புன்னகை உண்மையானதுதான் என்று அடையாளம் காண்பதெப்படி? ஒரு மனிதரின் முகத்தின் மேல் அரைப் பகுதியைக் கவனியுங்கள். உண்மையான அல்லது உணர்வுபூர்வமான ''புன்சிரிப்பின் போது அதற்குப் பொறுப்பான தசைகள் கண்களிலே மகிழ்ச்சி ததும்பும் களிப்பை ஏற்படுத்தும்.''

## வீட்டிலே

பாலிருந்த கிண்ணம் தட்டுப் பட்டதைப் பற்றித் தான் கோபப் படவில்லை என்று கூறும் அன்னையின் சொற்களை உதாசீனஞ் செய்துவிட்டுக் கறைபடிந்த குரலுக்கும், கோபப் பார்வைக்கும் தாக்குப் பிடிக்கப் பிள்ளைகள் முயலுவார்கள். ''சொல்லாலல்லாத சைகையே பிள்ளைகள் முதலில் படிக்கிறார்கள் '' என்று சொல்கிறார் மேப்பிள். ''பிள்ளைகள் எவ்வளவிற்குச் சிறியவர்களாக இருக்கிறார்களோ சொல்லாலல்லாத தொடர்பே அதிகமாக இருக்கும் காரணம் அது மட்டுமே அவர்களுக்குப் புரியும்'' என்பதுதான். உடல்மொழிக்கு புதிதாகப் பிறந்த மகவுகளும் பதில் கொடுப்பதைப் பார்க்கலாம். ''தாய் தன்னைத் தூக்கி அணைத்திருக்கும் விதத்தில் இறுக்கத்தை உணர்ந்து பிள்ளை அழும்'' என்கிறார் மெஃறாபின். தாய் தளர்ந்திருக்கும் போது குழந்தையும் தளர்ந்திருக்கும்.

குழந்தைகளின் சொல்லாலல்லாத செய்திகளை அறிந்து கொள்ளப் பெற்றோரும் பயின்றிருக்க வேண்டும். ''குழம்பிப்போயிருக்கும் போது குழந்தைகள் என்ன செய்கின்றன; இறுக்கத்தை எவ்வாறு அவை விட்டுவிடுகின்றன; அழுத்தங்களுக்கு எவ்வாறு பதில் கொடுக்கின்றன் எனப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று ஆலோசனை வழங்குகிறார் மேப்பிள். பாதுகாப்பின்மையை உணரும்போது சிறுபெண்பிள்ளை தலைமயிரைக் கோதுகிறதா? ஆவல் மேலிடும்போது சிறு பையன் உதட்டைச் சப்புகிறானா? இவ்வாறான நடத்தைகள் குழந்தைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்கான அறிகுறிகளாகும்.

## உங்கள் நேர் சமிக்ஞைகள்

உடல்மொழியை எவ்வாறு உபயோகிப்பதென அறிந்து கொள்வதன் மூலம் மிகவும் திறமையாகத் தொடர்பு கொள்ள முடியும் வழி இதுதான். உடற் பேச்சுக்கு ஆளாகுங்கள்.

நாள் முழுவதும் நீங்கள் எவ்வாறு பேசுகிறீர்கள், சாடை காட்டுகிறீர்கள், போய் வருகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். நிற்கின்றபோது தோள்களை நிமிர்த்தி உடலைத் திறந்து வைத்து உங்கள் நிறை முழுவதும் பாதமிரண்டிலும் சமமாக நிற்கக் கூடியதாகப் பார்த்துக்கொள்ளுங்கள். இரும்புத் தூண் போல நேராக இருக்க வேண்டும் என்பதில்லை. ''அதிக அளவில் இறுக்கமாக நிமிர்ந்து நிற்பது சிந்தனையின் கடினப் போக்கைக் காட்டும்'' என்று மேப்பிள் குறிப்பிடுகின்றார்.

உணர்ச்சியடையும்போது நீங்கள் செய்யும் சிறு காரியங்களை அடையாளம் காணுங்கள். சிலர் தமது மயிரைச் சுருட்டுவார்கள். அல்லது பேனாவால் விளையாடுவார்கள். இந்த நடத்தைகளைக் கட்டுப்படுத்தப் பயிற்சி செய்யுங்கள். ''நீங்கள் சொல்ல விரும்புவதை அவை மட்டுப்படுத்தி விடும்'' இது ஒஸ்ரினின் கருத்து.

அமர்ந்திருக்குபோது பொறுப்புக்குரியவராகக் காட்டிக்கொள்ளக் கதிரையில் சரியாக உட்காருங்கள். பாதங்கள் தரையில் இருத்தல் வேண்டும். தோள்களை நேராக வைத்துக்கொள்ளல் அவசியம்.

ஒஸ்ரின் சொல்கிறார்: ''உங்கள் முன்னங் கைகளை மேசை மீது வையுங்கள். நான் அசைந்து கொடுக்கப் போவதில்லை என்ற தோற்றத்தை இது கொடுக்கும்.'' உங்கள் பாதங்களை ஆட்டிக் கொண்டே இருந்தீர்களானால் நீங்கள் அக்கறையில்லாமல் அல்லது துன்பச் சுமையோடிருக்கிறீர்கள் என்றே பொருள் படும். மற்றவர்கள் உங்களைப் பார்ப்பது போல நீங்களே உங்களைப் பார்த்துக்கொள்ளக் கூடியதாக நண்பர் மூலம் ஒளிப்பதிவு நாடாவில் உங்கள் நடத்தையைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## கை குலுக்கலைச் சரி செய்து கொள்ளுங்கள்

வியாபார உலகில் அதிகாரத்தையும், அந்தஸ்தையும் பற்றிய செய்திகளை வெளியிடும் சாதனமாகக் கைகுலுக்கல் திகழ்கிறது அது வெளிப்படுத்தும் நம்பிக்கை உறுதியானதும், உயர்ந்ததுமாகும். தொடர்புள்ளவரை அதிக அழுத்தமில்லாமல் பலமான உறவுக்கு வழி செய்கிறது. மணிக்கட்டை மடக்காதீர்கள். விரல்களை மட்டும் கெட்டியாக வைத்துக் கொள்ளுங்கள்.

## கண் தொடர்பு வலுவானதாக இருக்கட்டும்

''யாராவது ஒருவரைப் பற்றி ஓர் அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்க நன்கு நினைவில் நிறுத்திக் கொள்ளக் கூடிய கருவி கண் தொடர்புதான். நம்மை மற்றவர்கள் பொருளாக மதிக்கவேண்டுமாயின் நேர்கண் தொடர்பை ஏற்படுத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளல் அவசியம்'' என்கிறார் ஒஸ்ரின். ஆனால் சிலர் பெண்களைவிட ஆண்கள் நல்ல உணர்ச்சி மிக்க கண்பிடியால் அசௌகரியமடைகிறார்கள். இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ளக் கண்மணியிலிருந்து கண்மணிக்கென்றில்லாமல் உங்கள் பார்வையைக் கண்களுக்கும், மோவாய்க்குமிடையில் பரவ விடுங்கள்.

தொழில் தொடர்பான ஒரு சந்தர்ப்பத்தில் ''ஆதிக்கம் செலுத்துபவர் பார்ப்பதற்கும், பார்த்துக் கொண்டேயிருப்பதற்கும் உரித்துடையவராகவும், உதவியாளர் பார்வையை வேறிடத்தில் செலுத்த வேண்டியவராகவுமுள்ளனர். உங்கள் கண் தொடர்பு தொடர்ந்திருக்கும் போது உங்கள் நோக்கம் அதுவாக இல்லாதிருப்பினும் உங்கள் மேலாளர் அசௌகரியப்படுவதோடு அவரது அதிகாரத்துக்கு நீங்கள் சவால் விடுவதாக நினைக்க இடமுண்டு'' இது எக்மனின் கருத்தாகும்.

## உங்கள் குழந்தையின் மட்டத்தில் தொடர்பு வையுங்கள்

உங்கள் உடம்பை வைத்துக் கொள்ளும் விதத்தில் இளைஞர்கள், தாமும் நீங்களும் எங்கே நிற்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்வர். பேசிக்கொண்டிருக்கும் போது கைகளை மார்பில் மடித்து வைத்திருந்தீர்களானால் அல்லது கால்களைப் பின்னிக்கொண்டிருந்தீர்களானால் நீங்கள் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறீர்கள். உங்கள் பாதங்களால் தட்டிக்கொண்டிருந்தால் பொறுமையை இழக்கிறீர்கள். சிறு பிள்ளைகளுடனென்றால் முழங்காலில் நின்றோ, குனிந்தோ அவர் தம் கண்களுக்குள் பார்க்க முடியும். வயது கூடிய பிள்ளைகளுடனாயின் சுவரோடு, அல்லது மேசையோடு சாய்ந்து உங்கள் ஒரு பாதத்தில் மட்டும் நிறையை ஏற்றி கைகளைப் பக்கத்திலே வைத்திருந்தீர்களானால் அவர்களின் தேவைக்கு நீங்கள் தயார் என்று பொருள் படும்.

## நீங்களாகவே இருங்கள்:

சொற்களல்லாத செய்திகள் உங்கள் அடித்தளத்திலிருந்தே வருகிறது. உங்கள் சொந்த உணர்வின் மதிப்பீட்டிலிருந்தே அது தோன்றுகிறது. மேப்பிள் இவ்வாறு கூறுகிறார்: '' உங்கள் உடல் மொழியை மேம்படுத்துவது உங்களுள்ளே ஆரம்பித்து வெளியில் பணிசெய்ய வேண்டும். உங்கள் விடயத்தில் நீங்கள் சௌகரியமாக இருக்கிறீர்களென்றால் அதுவே அடையாளம். தாங்கள் யார் என்பதை உணர்ந்த மனிதர் ஆறுதலாக உரையாடுவர், பழகுவர். அவர்கள் எப்போதுமே சிறப்பாக இருப்பர்.''

*ரீடேர்ஸ் டைஜஸ்ட், மார்ச், 1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பி வந்த வரலாறும், அடைந்த மகிமைகளும்.



கோப்பி உலகெங்கும், நாளும் பொழுதும் பல மில்லியன் கணக்கான மக்கள் பருகி மகிழும் ஒரு பானமாகும்.

அதனைக் கண்டு பிடித்துப்பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, அது இறைவன் தந்த ஒரு கொடை எனக் கொள்ளப்பட்டது. கரியாகப் பதமாக்கித் தூளாக்கிக் கொதிக்க வைத்து வடித்தெடுத்த கோப்பி, ஏதோ ஒருவகை அமுதச் சுவை உடையதாக அமைந்து, பருகியவர்களை உடனே மகிழ்வுறச் செய்யும்.

கோப்பி பாவனைக்கு வந்த பின்பு மக்கா நகரை ஆண்ட ஓர் ஆளுநர் அதனை எவரும் அருந்தக் கூடாதென்று ஒருமுறை தடைவிதித்திருந்தாராம். பின் நாளில் அந்த ஆளுநர் கொல்லப்பட்ட பின்பு, கோப்பி மீண்டும் அருந்தப்படத் தொடங்கியதும் ஒரு கத்தோலிக்க பாப்பரசர் கோப்பியை ஆசீர்வதித்துள்ளார். கோப்பியால் ஆண்கள் மலடடைவர் என்று ஒரு காலத்தில் நம்பப்பட்டதால் பேரரசன் பிறெடிறிக் தனது ஆட்சிக் காலத்தில் அதனைத் தடை செய்திருந்தான். இங்கிலாந்தில் 2-வது சார்ள்ஸ் மன்னனது ஆட்சியின் போது கோப்பிக் கடைகள் மூடப்பட ஆணையிடப்பட்டன. இருந்தும் பின் நாளில் லண்டன் மாநகரின் நாகரிக வளர்ச்சியில் அங்கு இயங்கிய கோப்பிக் கடைகளும் பங்காற்றின. புலவர்கள் பலரால் புகழ்ந்து பாடப்பட்ட கோப்பி, ஏழைகளும் ஆவலுடன் சுவைத்து அருந்தும் பானமாகும்.

மொழியாக்கம்:
— திரு. அ கிருபைராஜா —

அமெரிக்கர்களினதும், மத்திய கிழக்கு நாட்டாரினதும், தேசிய பானமான கோப்பியின் ஆரம்பம், மத்திய கிழக்கில்தான் ஏற்பட்டது. காண பரம்பரைக் கதையொன்றின் படி, எதியோப்பிய மலைப் பிரதேசம் ஒன்றில் ஆடு மேய்த்துக் கொண்டு திரிந்த இடைச் சிறுவன் ஒருவன், தனது ஆடுகள் ஒருவகை மரத்தின் சிறு பழங்களை உண்ட பின்பு குதூகலிப்பாக இருப்பதை அவதானித்தானாம். அதனால் தூண்டப்பட்டு அவனும் அவற்றை மென்று சுவைத்த பின்பு புத்தூக்கம் பெற்றானாம். அந்த விடயத்தை அவன் அங்கு வசித்த சூபி மார்க்கத் துறவிகளிடம் கூறிய பொழுது, அத்தகைய தென்பு பிறப்பிக்க வைக்கக் கூடிய பழம், பிசாசுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும், என்று கருதிய அவர்கள் தீயில் அவற்றை எரித்துப் பொசுக்கிய பொழுது எழுந்த நறுமணம், அவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளச் செய்ததாம். அந்தத் தெய்வீகமான ஒருவகை மணம் வீசிய கருகிய விதைகளை அவர்கள் தட்டி எடுத்து நீரில் போட்டனராம். இப்படியாகக் கோப்பி பழக்கத்திற்கு வந்து இன்றைய பரிணாமத்தை அடைந்து திகழ்கிறது.

மிகச் சிறந்தது என்றால் அது சந்தேகம் இல்லாமல் எதியோப்பியாவில் விளையும் அரேபிக்கா கோப்பிதான். தேயிலைச் செடியைப் போலவே கோப்பிச் செடியும் கடல் மட்டத்தில் இருந்து உயர்வான செழுமையும், ஈரலிப்பும் உள்ள நிலத்தில் தான் செழித்து வளரும். அடுத்ததாக வருவது றோபஸ்டா கோப்பி என்ற சைரே நாட்டைத் தாயகமாகக் கொண்ட வகையாகும். அது அரேபிக்கா வகையைப்போல் அல்லாமல் பல்வேறு வகையான புவியியற் பகுதிகளிலும் இலகுவாகச் செழித்து வளரக்கூடியது. அந்த வகைச் செடிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியும் கூடுதலாக உள்ளது.

அரேபிக்கா முதிர்ச்சி அடைய நீண்ட நாள்கள் செல்லும். ஆனால், றோபஸ்டாவோ விரைவில் முதிர்ச்சி அடைந்துவிடும். ஆனால், றோபஸ்டாவிலும் பார்க்க அரேபிக்கா சுவை கூடியதாகும். ஆனால் றோபஸ்டாவில் அரேபிக்காவிலும் பார்க்க, $2\frac{1}{2}$ மடங்கு கபீன் உள்ளது. ஆனால், இருவகைகளையும் கலந்து சுவையும், மணமும் கூடிய கோப்பித் தூள் வகைகள் தயாரிக்கின்றார்கள். ஆரம்பத்தில் திடீர்க் கோப்பித் துகள்கள் தயாரிக்க றோபஸ்டாவே அதிகம் பயன்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டது. ஆனால், இன்று அந்தச் செயல் முறை நன்றாக வளர்ச்சியடைந்து அதிகமாக அரேபிக்கா கோப்பியே அதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

கோப்பிக் கொட்டைகளை வறுத்து எடுத்த பின்பு ஒரு நிபுணரால் கூட றோபஸ்டாவுக்கும், அரேபிக்காவுக்கும் இடையில் வித்தியாசங் காணமுடியாது. அரேபிக்கா பயற்றங்கொட்டைத் தோற்றமான நீண்ட முட்டை வடிவமும், சப்பட்டையுமாக இருக்கும். றோபஸ்டா விதைகள் சிறியனவாயும், சீரான உருவற்றனவாயும், குவிவாகவும், அரேபிக்காவிலும் பார்க்கக் கூடிய மண்ணிறத்தினவாகவும் இருக்கும்.

மூன்றாவது வகை லிபேறிகா என்பது அவ்வளவு நல்லதற்றதும், மூன்றாந்தரமான வகையினதுமாகும்.

நாம், துளாக்கப்பட்டு போத்தல்களில் அல்லது பைகளில் அடைத்தும் திடீர்கோப்பி தயாரிக்கவென்று துகள்களாகவும் விற்கும் கோப்பி வகைகளை வாங்கும் பொழுது அவை அனைத்தும் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தியான. அல்லது வெவ்வேறு வகைகளிலான கோப்பிகளின் கலவைகளாகவே இருக்கும். ஒருவகைச் சுவையும், இன்னொருவகை மெதுமையும், பிறிதொரு வகைக் காரமுங் கொண்டதாக இருப்பதற்குக் கோப்பி பதனிட்டு விற்போர், பல இரகசிய முறைகளைக் கையாள்வர். அதே போல் ஒரே நாட்டில் ஒரேவகையில் விளையுங் கோப்பியில் கூடக் கொட்டைகளின் அளவையும் வேறு பல காரணிகளையும் கொண்டு பல தரப்படுத்தல்கள் உள்ளன.

ஒரே அல்லது அதுவொத்த தரத்துக் கோப்பிக் கொட்டைகளைச் சரி பக்குவமாக வறுத்தெடுத்தால் நல்ல சுவையான கோப்பித் தூள் ஆக்கலாம். கீனியாவில் விளைந்ததையும், பிறேசிலில் விளைந்ததையும் கலந்து பதப்படுத்தப்படும்கோப்பி மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது.

## திடீர்க் கோப்பித் துகள்கள்

திடீர்க் கோப்பி வகைகள் வரவர அதிக பாவனைக்கு எடுக்கப்படுகின்றன. மேலும் திருத்தமுற்ற செயல்நுட்ப முறைகளாலும் அதிகமாக அரேபிக்கா வகையே அதற்கு உபயோகிக்கப்படுவதாலும், அது அதிகம் அதிகமாக விரும்பப்படக்கூடியதாகிக் கொண்டிருக்கிறது. அத்துடன் றோபஸ்டாவிலும் பார்க்கக் குறைந்த அளவு கபின் உள்ளதால் அதனால் உணர்வூட்டப்படுதலும் குறைவாகவே உள்ளது.

திடீர்க் காப்பி தயாரிக்கும் பொழுது, பாத்திரத்தில் இட்ட துகள்களின் மீது கொதிக்கும் வெப்ப நீரை ஓரளவு உயரத்தில் இருந்து கொட்டக் கூடியதாக ஊற்றினால்; அந்தக் காப்பிக் கலவைக்குள் சிறிது காற்றும் கலக்க இடமேற்பட்டு அதுவும் சுவையைக் கூட்டும்.

## கோப்பியுடன் கலக்கும் சேர்மானங்கள்

நமது நாட்டில் அதிகமாக கோப்பியுடன் கொத்தமல்லி, வேர்க்கொம்பு போன்றவை வழக்கமாகவும், சில சமயம் சிறிதளவாய் கறுவா ஏலம், கராம்பு என்பனவும் சேர்த்து வறுத்து உரலில் இட்டு இடித்து அரித்துத் தூளாக்கி வைத்துக் கொண்டு பாவிப்பர். கோப்பிக்கு இனிப்பு ஊட்டப் பனைவெல்லம் ஒரு தனிச் சுவைச் சிறப்பு வாய்ந்தது.

மேற்கு உலகில் கோப்பியுடன் கலக்கும் சிறந்த கலவை சிகோரி என்ற ஒருவகை உணவுக்கு உருசியூட்டும் முகிலியின் வேராகும். யுத்த காலப் பஞ்சத்தின் போது நமது வழமையான உணவுகளுக்குப் பதிலான மாற்றாக அல்லது பொலிவாக்கும் கலவையாகப் பற்பல பொருள்கள் சேர்த்துக் கொள்ளப் பட்ட காலத்தில் சிகோரியும் கோப்பிக்குள் இரண்டறக் கலந்தது. ஆனால் சிகோரிக் கலவை சிலருக்கு விருப்பம் என்றாலும் விரும்பாதவர்களும் உள்ளனர்.

இங்கிலாந்தில் மிகவும் விரும்பப்படுவது வியன்னீஸ் கோப்பி எனப்படுவதாகும். அதில் வறுத்த அத்தி விதைத் தூளும் கலக்கப்படுகிறது. அந்தக் கலவையின் உருசி வேடிக்கையானது என்பதுடன் கோப்பியின் சுவையைத் தனித்து உருசிக்க முடியாமல் செய்கிறது.

கோப்பியுடன் சேர்க்கப்படுபவைகளில் வாசனைச் சரக்குகள் முதல் இடம் பெறுகின்றன. கராம்பு, கறுவா, ஏலம் என்பன்வே அவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. முந்திய இரண்டும் ஒரு சிட்டிகை அரைத்த துளாகவே அல்லது கோப்பிக் கலனுக்குள் ஓர் இரண்டு விதைகளைப் போடுவதாலோ மணம் ஊட்ட கலக்கப்படலாம். ஆனால் கறுவாப் பட்டையை கொண்டு சுவையூட்டச் சிறந்த வழி கோப்பிக் கோப்பையை கறுவாப் பட்டைத் துண்டு ஒன்றால் விரும்பும் அளவு உருசி ஏறும் வரை கரைப்பதாகும். அல்லது ஒரு துளிக் கறுவாப் பட்டைத் தூளை வாற்றெடுத்த கோப்பிக் கோப்பைக்குள் மேலாலே தூவி விடலாம்.

உணவு உண்டபின் அருந்தும் பல இனிமையான தடிப்பான மது வகைகள் செய்ய கோப்பி கலக்கப் படுகிறது.

கோப்பியால் உருசி ஊட்டப் பட்ட பலவகைச் சொக்லேட்டுகள், கேக், பிஸ்கற், இனிப்பு வகைகள் பற்பல உள்ளன.

இலங்கையின் மலைநாடு முதலில் இங்கிலாந்தின் கோப்பித் தோட்டமாகவே ஆங்கிலேயரால் மாற்றப் பட்டு இருந்தது. அதன் பின்பு கோப்பி மரங்களுக்குப் பூஞ்சண நோய் வந்து பெரும் அளவில் அழிந்த பின்பு 1869 ஆம் ஆண்டில் இங்கு அவற்றைப் பிடுங்கிவிட்டுத் தேயிலை நடத் தொடங்கினர். அப்பொழுது இங்கிருந்து பிடுங்கப் பட்ட கோப்பி மரக் கிளைகளை இங்கிலாந்தில் தேனீர் மேசைகளுக்குக் கால் செய்யக்கூடக் கப்பல் ஏற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பியைக் களஞ்சியப் படுத்தல்

கோப்பிக் கொட்டைகள் சிறிதளவோ நடுத்தரமாகவோ கடும் கருமையாகவோ எப்படித் தானேனும் வறுக்கப்பட்டதும் அவற்றில் உள்ளடங்கிய எண்ணெய்த் தன்மை ஆவியாக வெளிப்படத் தொடங்கியதும் அவை உருசி உடையனவாக ஆகின்றன. வறுத்த கொட்டைகளைத் தூளாக்கியதும் அவற்றில் உள்ள எண்ணெய்த் தன்மை விரைவில் ஆவியாக மாறும். நல்ல கோப்பி வேண்டும் என்றாலும், விலைக்கேற்ற பெறுமதி வேண்டும் என்றாலும் உடனே இடித்த கோப்பித்தூள் தான் உகந்தது. அதுவும் வறுத்த கையோடு தூளாக்குவது தான் மிகவும் நல்லது.

வறுத்த கோப்பிக் கொட்டை ஓரளவு குளிர்ப்பதமாக வைக்கப் பட்டால் இரண்டு வாரங்கள் அளவு காலத்திற்குக் களஞ்சியப் படுத்தலாம். அதற்கு மேற்பட்ட காலம் சென்றதும் சுவை குன்றத் தொடங்குவதை அவதானிக் கலாம்.

கடுமையாகக் கருமையுற வறுத்த கோப்பிக் கொட்டைகள் விரைவாக ஒட்சியேற்றம் அடையும். அதனால் அவற்றை வறுத்த உடனே மரக்கூறி எண்ணெய்கள், அரேபியப் பிசின் அல்லது குளுகோசில் படக்கூடியதாகப் புரட்டி எடுக்க வேண்டும். ஆனால் வேறு சுவைகளும் மணமும் அதனுள் கலப்பதைத் தடுக்க முடியாது. வறுத்த கொட்டையைக் காற்றுப் புகாத தகரத்தில் அடைத்து வைத்தால் ஒரு மாதத்திற்கு மேல் அதன் குணம் கெடாமல் வைத்திருக்க இயலாது.

குளிரேற்றிப் பெட்டியில் கோப்பித்தூளை வைத்துப் பாதுகாப்பதன் திறன் பற்றிப் பல சர்ச்சைகள் உள்ளன. ஆனால் இறுக மூடப்பட்டு அல்லது சுற்றப் பட்டு வைத்தால் பலன் அதிகமாகும். மிகவும் மெல்லிய தூளாக்கப் பட்ட கோப்பி, கப்பித் தூளாக்கப் பட்டதிலும் பார்க்க நெடுநாள்கள் அதன் தன்மை குன்றாமல் இருக்கும். ஏனெனில் பெருந் துகள்களின் ஊடாக ஒட்சிசன் இலகுவில் உட்புகுந்து செல்லும்.

GOOD FOOD RETAILING
டிசம்பர், 1993

★

## திரிபு வாதம் திரும்புகிறது

அண்மையில் சீன இராணுவச் சஞ்சிகையொன்றில் 1930 களில் நடந்த சோவியத் - ஜப்பானிய யுத்த வரலாற்றில் திரிபு பற்றிய ஒரு கட்டுரை வெளிவந்தது. இது சீனப் பிரதமர் லீ பெங் மொங்கோலியத் தலைநகர் உலான் பட்டருக்கு வருகைதர ஆயத்தப்பட்ட வேளையில் வெளிவந்ததால் மொங்கோலிய இறைமை சட்டபூர்வ தன்மையினைப்பற்றிச் சந்தேகம் எழுப்புவதாக இராஜ தந்திர வட்டாரங்கள் வியப்புத் தெரிவிக்கின்றன. அந்தக் கட்டுரையில் முன்பு கூறியதுபோல் டோக்கியோவல்ல மொஸ்கோ தான் அந்தப் பெரும்போரைத் தூண்டிவிட்டதென்றும் நேமொன்ஹான் அல்லது ஹல்கின் கொல் என்ற பெயர் சூட்டப்பட்ட அந்தப் போரில் 75,000 ஜப்பானியத் துருப்புக்கள் சோவியத் தாங்கித் தாக்குதலுக்குப் பலியாகினரென்றும் கூறப்பட்டுள்ளது. சீனப் பாதுகாப்பு கல்விக் கழகத்தின் வெளியீடான இராணுவ வரலாறு என்ற அந்தச் சஞ்சிகையின் அப்போதைய சோவியத் தலைவர் ஸ்டாலின் அந்தத் தாக்குதலை நடத்தியதன் நோக்கம் ஜப்பானியர் வட சீனாவுக்குள் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்துவது அல்ல; ஆனால் புற மொங்கோலியாவிலிருந்த பொம்மை அரசு எல்லைகளை விரிவுபடுத்துவதாகும் என்று கூறப்பட்டுள்ளது. 1945-க்குப் பின்பு இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்தபின், நட்பு நாடுகளிடையே நடந்த பேச்சுகளின்போது அப்போதைய கொமிங் டாஸ்கிங் கோரிக்கை சியாங்சிங் குவோ எழுப்பிய புற மொங்கோலியாவைத் திருப்பித் தரவேண்டுமென்ற கோரிக்கையை ஸ்டாலின் நிராகரித்துவிட்டார் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி குன்றியவர்களாக வீடு திரும்பும் கூர்க்காக்கள்

## பணியினின்று நீக்கப்பட்டதன் பின்னர், இப்பிரபல போர் வீரர்கள் நேபாளத்தில் கடின வாழ்க்கை வாழ்கிறார்கள்

இரண்டாம் உலகப் போரின் போது, பர்மாவில் தன்னுடைய பதுங்கு குழியை நோக்கி எதிரித் துருப்புக்கள் முன்னேறியபோது, அதில் பதுங்கிக் கொண்ட லக்ச்சிமேன் குர்ராங், தன்னை நோக்கி அண்மித்து வந்து கொண்டிருந்த டாங்கிகள் மற்றும் துருப்பினர் மீதும் எறி குண்டுகளை வீசியபடி 2,000 எதிரி வீரர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து வைத்திருந்தான். பிரித்தானிய இராணுவத்தில் சுரி குழல் துப்பாக்கி வீரனாக இருந்த இவனுக்கு இதற்தாக, பிரித்தானிய இராணுவ உயர் கௌரவ விருதான 'விக்ரோறியா குரோஸ்' (Victoria Cross) வழங்கப்பட்டது.

இப்போது மத்திய நேபாளத்திலிருக்கும், அவரது குடிசை வீட்டின் மண் சுவரில் ஆணியடித்து வைக்கப்பட்டிருக்கும் பணிச் சான்றிதழ் ஒன்றும், தாக்குதலின்போது குண்டு வெடிப்பில் அவன் இழந்து போன வலது கரமுமே, குர்ராங்குடைய வீரததை, 75 வயதிலும் எடுத்துக் காட்டுகிற அனைத்து ஆதாரமாக இருந்தன.

அவரது கிராமத்திலிருந்து கிட்டிய தெருவுக்கு நடந்து செல்வதற்கு 8 மணித்தியாலங்கள் ஆவதுடன் அங்கிருந்து பொக்காராவிலிருக்கும் பென்ஷன் அலுவலகத்திற்கு வாகனத்திற் செல்வதற்கு மேலும் 4 மணித்தியாலங்கள் பிடிக்குமென்ற காரணத்தினால், அவன் தனது இளைப்பாற்றுச் சம்பளத்தை எப்போதாவதுதான் பெற்றுக் கொள்கிறான்.

இந்த வீரனது, வாழ்க்கை பற்றிய விபரண படமொன்றைத் தயாரிப்பதற்காக அண்மையில் அங்கு சென்ற படப்பிடிப்புக் குழுவொன்று ஒருநாள் முழுவதும் மேற்கொண்ட நீண்ட நடைப் பயணத்தின் பின்னரே குர்ராங்குடைய கிராமத்தை அடைந்தது. மதுவிற்கு ஆட்பட்டவராகவும், நரை விழுந்த ஒரு வயோதிபராகவுமே அவனை அவர்கள் கண்டனர். இருந்தும், நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தான் தொலைத்துவிட்ட தனது போர்ப் பதக்கத்தை, யாராவது தன்னிடம் கொண்டுவந்து சேர்ப்பார்கள் என்ற யதார்த்தத்திற்குப் புறம்பான நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்புடனேயே, அவன் காணப்பட்டான்.



ஹொங்கொங்கில் சேவையாற்றும் கூர்க்கா போர் வீரன்: இவருக்கு நேபாளத்தில் வேலை வாய்ப்புக்கள் கிடைப்பது என்பது சர்ச்சைக்குரியதே.

1951 இல் அந்தப் பதக்கத்தைத் தான் யாரிடமோ கொடுத்து விட்டதாகவே குர்ராங் கூறினான். படத் தயாரிப்பாளர் ரவி பாரல் விடம் அவன் பேசியபோது, ''யாரிடம் அதனைக் கொடுத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மறந்து போனேன். வயதேறிப் போய்விட்டதால் ஞாபக மறதி. அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாக அவர்கள் கூறியிருந்தனர். அவர்களுக்குத்தான் எழுதியிருந்தேன். அவர்கள் திருப்பி அனுப்பவில்லை. எத்தனையோ தடவைகள்...... நான் கேட்டிருந்தும் அவர்கள் அதனை என்னிடம் ஒருபோதுமே திருப்பித் தந்ததில்லை'' எனத் தெளிவின்றி இழுத்தான்.

அவனது இன்னல்களுக்கிடையிலுங்கூட, குர்ராங்குடைய வீரச் செயல்கள் மறக்கப்படவில்லை. பிரித்தானிய இராணுவத்திற்கு ஆற்றிய சேவையின் பொருட்டுக் கௌரவிக்கப்படுவதற்காக இவனுடன் 'விக்ரோறியா குரோஸ்' விருதுபெற்ற ஏனைய ஆறு வீரர்களும் காத்மண்டுவில் இடம் பெற்ற வைபவமொன்றில் தகுந்தபடி உபசரிக்கப்பட்டனர்.

கூர்க்காப் போர் வீரர்களது வரலாற்றுக் காவியங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை, கூர்க்காக்களைப் பெருமளவில் படையில் சேர்த்துக் கொள்ளும் பிரித்தானிய மற்றும் இந்திய இராணுவங்களில் விசுவாசத்துடன் பணியாற்றிய பின்னர் அண்மைக் காலத்தில், கடந்த சில தசாப்தங்களாகவே நேபாளம் திரும்பிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் பெரிதும், ஒளிமயமற்றதுமான ஓர் எதிர்காலத்தை மட்டுமே காண்கின்றனர். அமைதியான நேபாளத்தில் அவர்களது போர்த் திறமைகளுக்கான பயன்பாடு சிறிதளவேதான் என்பதால், அந்நியப் போர்களிலான இவர்களது வீரஞ் செறிந்த சேவை அனுபவம், விவசாயிகளான இப்போர் வீரர்களது சொந்த நாட்டு வாழ்க்கையில் வளம் சேர்க்கும் மாற்றமெதனையும் கொண்டு வரவில்லை. பெரும்பாலும், கூர்க்காக்கள் பலரும் சேவையாற்றி வரும் ஹொங்கொங் (Hong kong) 1997 ஆம் ஆண்டளவில் சீனாவிடம் கையளிக்கப்படவிருப்பதால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தனது கூர்க்காப் பட்டாளியன்களை 8,000 இலிருந்து 2,500 வீரர்களாகக் குறைத்துக் கொள்ளப் போவதாக 1991-ல் பிரித்தானிய இராணுவம் அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கையானது, பாரம்பரியமான தமது கிராம வாழ்க்கையினின்று தூர விலகிவிட்டிருக்கும், ஆயிரக்கணக்கான நேபாளக் குடும்பங்களை இடம் பெயர வைப்பதுடன் நேபாளத்தின் பரந்து கிடக்கும் நகரங்களில் அவர்களுக்கான வேலை வாய்ப்பின்மையை ஏற்படுத்தும் அச்சுறுத்தலாகவும் உள்ளது.

கூர்க்காக்கள், 1815 இல் இருந்தே பிரித்தானிய இராணுவத்தில் விசுவாசமான விதத்தில் கடமையாற்றி வருகிறார்கள். 2-ம் உலக யுத்தத்தின் போது, இராணுவத்தில் அவர்களுக்கான இடம் 1, 50, 000 ஐயும் தாண்டி, பெருமளவில் அதிகரித்திருந்தது இன்னும், நேபாளத்தின் அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் நான்காவது பெரிய காரணியும் இவர்களது வங்கி இருப்புக்களேயாகும்.

இந்த வருடம், 1, 800 கூர்க்காக்கள் காலத்திற்கு முந்தியே இளைப்பாறும் நிர்ப்பந்தத்திற்குள்ளாக இருக்கிறார்கள். கடைசியாக 1960-களிலும், பலர் இளைப்பாற்றுச் சம்பளமின்றியே பதவி விலக்கப்பட்டபோது, இவ் விதமான பெரும் வரம்பு மீறிய நிலையொன்று உருவாகிற்று. ''சேவைக்காலம் பூர்த்தியாகு முன்னரே அவனைப் பதவியிலிருந்து விலக்குவதுதான் கூர்க்கா ஒருவனுக்கு இழைக்கக்கூடிய ஆக மோசமான கொடுமையாக இருக்கும்'' என்பதே காத்மண்டுவில் பிரித்தானிய தூதரக இராணுவத் தொடர்பதிகாரியாக இருக்கும் கேணல் மைக் மைஃபோர்ட் என்பவரது கூற்றாகும்.

''1940-களிலும், 1960-களிலும் வெளியேறியவர்கள் ஏற்கனவே இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர்'' என்கிறார் கூர்க்காக்களுக்கான மீளக் குடியமர்த்தல் திட்டத் தூதரகப் பொறுப்பாளராகிய கெஃபோர்ட். ''வரம்பு மீறியதான இந் நடவடிக்கையுடன், இது போன்ற தவறுகள் மீண்டும் நேர்ந்துவிடக் கூடாது என்று நாம் தீர்மானமாகவே இருக்கிறோம்'' என மேலும் அவர் கூறினார்.

முன்னாள் போர் வீரர்கள் அனைவருமே மோசமான வறுமையில் வாழ்பவர்களாக இல்லை. சிலர் தமது இராணுவத் திறமைகளைப் பயன்படுத்தித் தமது கிராமங்களை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனையோர், நேபாளத்தின் பிரதான தொழில்களுள் ஒன்றாகிய சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் 22 வருடங்கள் சேவையாற்றிய பின்னர், 1981 இல் பிரித்தானிய இராணுவத்திலிருந்து விலகிய, மகாபி குர்ராங் என்பவரை உதாரணமாகக் காட்டலாம். உள்ளூரில் இவரை ஒரு வீரராக ஆக்கியிருந்த இவரது வேலைத் திட்டங்கள் பலவற்றுள் முதலாவது திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மாதாந்த ஓய்வூதியமாக 36 யு எஸ். டொலர் பெற்றே இவர் தனது கிராமத்திற்குத் திரும்பியிருந்தார். விரைவான ஓட்டமுடைய ஆறு ஒன்றின் மீதாகப் பாலமொன்றினைக் கட்டுவதற்கு, இவர் தனது பொறியியல் திறமையைப் பயன்படுத்திக்கொண்டார். இப்போது, விவசாயிகள் இவ் ஆற்றைக்கடந்து சென்று தமது உற்பத்திகளை அருகிலுள்ள நகரமொன்றில் விற்றுத் தமக்கு வேண்டிய பொருள்களையும் வாங்கி வரக்கூடியதாக இருக்கிறது. கிராமத்திற்கான மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் குர்ராங் உதவியிருப்பதுடன் முதலாவது தொலைபேசி அலுவலகத்தையும், நிறுவியிருந்தார்.

ஐம்பது வயதானமாக் பக்தூர் குர்ராங் என்பவரது கதை வெற்றிகரமான மற்றுமோர் அத்தியாயமாகும். 1989 இல் தனது கிராமத்தை விட்டு வெளியேறிய இவர், பிரித்தானிய இராணுவத்தில் சேர்ந்து கொள்வதற்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரடுமுரடான பள்ளத் தாக்குகள் வழியாக வெறுங்கால் நடையாக இரண்டு நாள்கள் நடந்தே சென்றிருக்கிறார். 1987 இல், 28 வருட சேவையின் பின்னர், இவர் ஓய்வு பெற்றதுடன், பொக்காராவில் 'மீரா' என்றொரு ஹொட்டலையும் ஆரம்பித்திருந்தார். வங்கிக் கடன் ஒன்றுடனேயே, 18 அறைகள் கொண்ட அந்த ஹொட்டலை அவர் கட்டியிருந்தார். ''ஆனாலும், அநேகமான போர்வீரர்கள் அங்கு அல்லற்படுவதாகவும், இதனால் குடிகாரராக மாறிவிட்ட அவர்களிடம் பணமெதுவுமில்லை'' என்றே குர்ராங் கூறுகிறார்.

இவ் விதம் ஹொங்கொங்கிலோ வேறு இடங்களிலோ இருந்து முன்னாள் வீரர்கள் இடம் பெயர்வதென்பது, குறிப்பாக அவர்களுடன் வெளி நாடுகளிலேயே வாழ்ந்த பருவ வயது (Teen Age) ப்பிள்ளைகளும் கூடவே இருப்பின் கஷ்டமான விடயமாகவே இருக்கும்.

''நல்ல உடைகள், குடி வகைகள், நடனம் மற்றும் புதுமையான இரவு வாழ்க்கை போன்றவற்றுக்குப் பிள்ளைகள் பழக்கப் பட்டு விட்டார்கள்'' என்று கூறுகிறார் குர்ராங். அவரது பருவ வயது மகனும், மகளும் ஹொங்கொங்கிலேயே பிறந்தவர்களாவர். ''அவர்கள் இளைப்பாறியதும் அவர்களது பிள்ளைகளுடைய பழக்கங்களுக்கு ஈடுசெய்யுமளவுக்கு அவர்களது ஊதியம் போதாதிருக்கும். சில பையன்கள் களவிலும் இறங்கி விடுவதுண்டு. போர் வீரர்களுக்குக் கிடைக்கும் ஒய்வூதியம் உண்மையில் போதாது. மிகுந்த வறுமையும், அதிக சுத்தமின்மையும், அவ்வளவுக்கு ஒழுங்கு குலைந்ததுமான இந்த நாட்டை காண்பதில் எனது பிள்ளைகளுக்குச் சந்தோஷமில்லை'' எனவும் கூறினார்.

இளம் நேபாளத்து ஆண்கள் அநேகருக்கு, பெருமளவில் ஊதியம் பெறுவதற்கு என ஒரே வழி இப்போதும் கூலிப்படை வீரனாக ஆவது மட்டுமேயாகும். ஆனாலும் இவ்விதம் சேர்த்துக் கொள்ளப் படுவது குடும்ப மற்றும் கிராம வாழ்க்கையைச் சீர் குலைப்பதாகவே இருக்கிறது. சில இளம் பெண்கள், தமது குடும்பத்திற்குக் கௌரவம் சேர்ப்பதற்காகப் போர் வீரர்களையே மணந்து கொண்ட போதிலும், விரைவிலேயே விதவைகளாகி, மறுமணம் செய்து கொள்ளவும் முடியாத நிலையையே எதிர் கொள்கின்றனர். ஏனையோர் கிராமங்களில் வேலை செய்வதுடன் தமது கணவன்மாரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இவர்களுங் கூட திரும்பி வரும் கணவர்கள் அங்கவீனர்களாக வேலை செய்ய முடியாதவர்களாக இருக்கும் நிலையையே எதிர் கொள்கின்றனர்.

டெக்ரூப்பா அலே என்ற 42 வயதுப் பெண், பொக்காராவுக்கு அருகிலுள்ள பாம்டி கிராமத்தில் வசித்து வருகின்றாள். தனது கரிய கூந்தலை இறுக்கமான கொண்டையாக முடிந்து கொண்டிருக்கும் அவளிடம், இராணுவத்தில் போர் வீரராக இருக்கும் அவளது கணவன் பற்றிக் கேட்டால், தனது பார்வையை அவள் அப்பால் திருப்பிக் கொண்டு விடுகிறாள். இருபது வருடங்களுக்கு முன்பு, பாரம் பரிய முறைமைகளுக்கு மாறாக, ஒழுங்கு செய்யப்பட்ட திருமணத்தை மறுத்து காதல் திருமணம் செய்து கொண்ட அவள் தனது 33 வயதில் விதவையாகியிருந்தாள். ''அவர் சாவதற்கு முன் அவரை நான் பார்த்ததில்லை'' என்றபடி தரையைப் பார்த்த அவள், ''அவர். சுகயீனமாக இருந்திருக்கிறார், ஆனால் எவருமே இதை எனக்கு அறிவிக்க வில்லை'' என்றாள்.

டெல்லியிலுள்ள வைத்திய சாலையொன்றிலிருந்து கடிதமொன்றை அவள் பெற்றுக் கொண்ட போது தான் தனது கணவருடைய மரணம் பற்றி அறிந்து கொண்டாள். இந்திய இராணுவத்திடமிருந்து மாதாந்த ஓய்வூதியமாக 12 யு. எஸ் டொலர் அவளுக்குக் கிடைக்கிறது. தன்னுடைய தாயாரது வேதனைகளைக் கண்டறிந்தவளாக இருந்துங் கூட அவளது 15 வயது மகள், தானும் ஒரு போர் வீரனையே மணக்க விரும்புவதாக இப்போது கூறுகிறாள்.

அன்னபூரணா மலைத்தொடர் அடிவாரத்தில் அதனை ஒட்டினாற் போலிருக்கும் கோதரி கிராமத்தில் டில்மெயா பண் என்பவள் பொதுப் பண்டகசாலை ஒன்றினை நடத்தி வருகிறாள். அவளுடைய கணவராகிய போர்க்கா பக்தூர் பண், 1987 இல் தனது இரு கைகளிலும் விரல்களை இழந்தவராக இந்திய இராணுவத்திலிருந்து திரும்பியிருந்தார். பாகிஸ்தான்-இந்திய எல்லையில் கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டிருந்த போதே அவர் தனது கைவிரல்களை வெடி விபத்தில் இழக்க நேர்ந்தது.

என்னுடைய கணவரது விபத்துக்குப் பிற்பாடு எனக்கு பல பிரச்சினைகள். ''அவருடைய கைகள் நல்லபடியாக இருந்தால் எனது வேலையில் அவரும் எனக்கு உதவுவார்'' என, கிராமத்துச் சதுக்கத்தில் குடும்பத்து உடைகளைக் கழுவியவாறு பண் கூறினாள்.

பிரித்தானிய இராணுவம் படையில் கூர்க்காக்களின் தொகையை மீளவும் வெட்டிக் குறைப்பதால் நேபாள இளைஞர்கள் இந்திய இராணுவத்தில் கூடுதலாகச் சேர்கின்றனர். தற்போது இந்திய இராணுவத்தில் 100,000-க்குமேற்பட்ட கூர்க்கா வீரர்களுள்ளனர்.

தனது ஆண்களை நாட்டைவிட்டு வெளியேறாமல் செய்வதற்குப் போதிய வேலை வாய்ப்புக்களை நேபாளம் கொண்டிருக்க வில்லை. பொஸ்னியாவிலும், சோமாலியாவிலும் பணியாற்றி வரும் ஐக்கிய நாட்டுப் படைகளில் இணைந்து கொள்வதற்குக் கூடுதலான வீரர்களை அனுப்புவது பற்றிய திட்டக் கருத்து ஒன்றுமுள்ளது. ஆனாலும், அது மற்றுமொரு கேள்வியை எழுப்புவதாக மட்டும் உள்ளது. வெறுமனே வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்காக, இமயமலைப் பிரதேசத்து நடுநிலை நாடொன்றாகிய நேபாளம், தனக்குச் சம்பந்தமேயில்லாத வெளி நாட்டு இராணுவ நடவடிக்கைகளின் நேரடித் தாக்கத்திற்கு முகங் கொடுத்து, அதன் பழியைத் தன் மீது சுமந்து கொள்ள வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் மின்சாரப் பசிக்கு அணு உலைகள் உதவும்

**"கிணறு வெட்டப் பூதம் கிளம்புமாப் போல் அணுகுண்டுத் தயாரிப்பும் பல்கிப் பெருகிவிடும் வாய்ப்பு உண்டு."**



ஜப்பான் நகர் காமோக்காவில் உள்ள மூன்றாவது அணு உலையின் உட் பக்கம்.

இன்று கிழக்கு ஆசியாவில் 115 அணு உலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எதிர்வரும் 15 வருடங்களில் இன்னும் பல சேவைக்கு வந்துவிடும். ஆசியாவின் மின்சாரப்பசி கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்கின் எரிபொருளை இந்த நாடுகள் நம்பி இருக்கத் தயாராக இல்லை. சீனா, ஜப்பான், தென் - கொரியா, தாய்வான் ஆகிய நான்கு நாடுகளும் தமக்கிடையில் 320 மில்லியன் மெகாவாட் மணி (Megawatt-Hours) மின்சாரத்தைத் தயாரிக்கின்றன. இது, 2,010 ஆம் ஆண்டு 748 வரை செல்லலாமெனக் கணிக்கப்பட்டுள்ளது. மின்சாரத் தேவைக்கு அணுஉலைகளைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆனால், பாரதூரமான விளைவுகள் உண்டென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உலக இராணுவ சமபலத்தை (Balance of - Power) சிதைக்கக் கூடிய புளுட்டோனியத்தில் இயங்கும் "விரைவு உற்பத்தி" (Fast Breeder) ரக அணு உலைகளையே ஆசிய நாடுகள் தெரிவு செய்கின்றன. புளுட்டோனியத்தை எரிபொருளாகப் பயன்படுத்தும் உலைகள் கூடுதல் மின்சாரத்தை மிகச் சிக்கனமாக வெளியிடுகின்றன. இந்த எரிபொருள் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பின் மீண்டும் பாவிக்கப்படலாம். இந்த ரக உலைகளுக்கு 'விரைவு உற்பத்தி' என்ற சொற்றொடர் சேர்க்கப்படுவதின் காரணம்; அவை எரிக்கும் பொருளிலும் பார்க்கக் கூடுதலான எரிபொருளைத் தருவதால் தான். இந்த விஞ்ஞான விந்தையைப் பின் வருமாறு விளக்கலாம். இவ்வுலைகளில் எரிபொருளாகப் பயன்படும் யுரேனியம் அல்லது புளுட்டோனியம் எரிந்த பின் கழிவுப் பொருளாக வெளியேற்றப்படும் போது முன்னிலும் கூடுதலாக இருக்கிறது. இதைச் சுத்திகரிப்புச் செய்து மீள பாவிப்பில் ஈடுபடுத்தும் போது கைவசம் கூடுதலான யுரேனியம் அல்லது புளுட்டோனியம் சேர்ந்து



PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். தன்னை நிலைக்கச் செய்வதுடன் தன்னைப் பெருக்குவதாலும் கூடுதல் உற்பத்தி நிகழ்கின்றது. இன்று யுரேனியம் கிடைப்பது அரிதானபடியாலும் புளுட்டோனியம் தாராளமாய்க் கிடைப்பதாலும் இரண்டாவதே விரும்பிப் பாவிக்கப்படும் எரிபொருளாகும். எரிபொருள் மீள் பாவிப்புக்குரிய சுத்திகரிப்பு எளிது. ஆனால், குண்டிற்குரிய சுத்திகரிப்பு வித்தியாசமான அதேசமயம் கடினமான செய்வினையாகும். எனினும் புளுட்டோனியத்திலிருந்து குண்டு தயாரிக்கப்படும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது.

அணுவாயுதம் உலகில் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் அணுவாயுதப் பரவலாக்கல் தடுப்புச் சட்டம் (Nuclear Non Proliferation Treaty) இன்று அமுலில் இருக்கிறது. அணுவாயுதத் தயாரிப்புக்காக யுரேனியத்தையும், புளுட்டோனியத்தையும் சுத்திகரிப்பதைத் தடுப்பதே இதன் முக்கிய குறிக்கோள். 1968 ஆம் ஆண்டுக்கு முன் அணுவாயுதம் தயாரித்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் ருஷ்யா, பிரான்சு, சீனா ஆகியவை தான் இத்தகைய சுத்திகரிப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அணு உலைகள் வைத்திருக்கும் நாடுகளைப் பரிசோதனை செய்வதற்கும் இச் சட்டம் வழி செய்கின்றது. பரிசோதனையின் போது எரிந்த புளுட்டோனியத்தின் கணக்கு வெளியில் எடுக்கப்பட்டு மீண்டும் எரிபொருளாக்கும் நோக்குடன் சுத்திகரிப்புச் செய்யப்பட்டு வைப்பிலிடப்படும். புளுட்டோனியத்தின் கணக்கு போன்ற விபரங்கள் வெகு கூர்மையாகக் கவனிக்கப்படும். மேற்கூறப்பட்ட சட்டத்தின் பாதுகாவலன் ஐ. நா. வின் சர்வதேச அணு சக்தி ஏஜென்சியாகும். ஐ. நா. வின் பல அலகுகளில் இதுவும் ஒன்று. பரிசோதனைகளின் போது கணக்கில் பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டால் தண்டனை வழங்க ஐ. நா. வுக்கு உரிமை உண்டு. மேற்கூறப்பட்டவற்றை வட - கொரியாவுடனான சச்சரவுகளுக்கு விளக்கமாகக் கொள்ளவும். இந்தப் பரிசோதனையின் பொது நோக்கம் அணுவாயுதங்கள் உலகில் பரவுவதைத் தடுப்பதாகும். ஆனால் சில நாடுகள் அதாவது இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் போன்றவை ஒப்பந்தத்தை அலட்சியம் செய்து ஆயுதங்கள் தயாரித்துள்ளது பலர் அறிந்த இரகசியமாகும்.

இற்றை வரை அணு குண்டின் தாக்கத்தை உணர்ந்த நாடு ஜப்பான் ஒன்றுதான். எனினும் மத்திய கிழக்கின் எரிபொருளுக்கு மாற்றிடாக அணுசக்தியைப் பயன்படுத்துவதில் ஜப்பான் கிழக்கு ஆசியாவில் முன்னணியில் இருக்கிறது. அதனிடம் ஒரு தொன்னுக்கு கூடுதலான புளுட்டோனியம் உண்டு. ஒரு சக்தி வாய்ந்த அணுகுண்டு தயாரிப்பதற்கு 7 கிலோ புளுட்டோனியம் போதும். ஜப்பானிய விஞ்ஞானிகளுக்கு ஆயுதத் தயாரிப்புக்குரிய சுத்திகரிப்பு நன்றாகத் தெரியும். வட — கொரியா, குண்டு தயாரித்து விட்டதாகக் குற்றஞ் சாட்டும் ஜப்பான் எங்கு நிற்கிறது பாருங்கள். இதேபோன்று ஆரம்ப நிலையில் இந்தோனேசியா இருக்கிறது. தென்கொரியாவின் மின்சாரத் தேவையில் 40 வீதம் அணுசக்தி பெறப்படுகிறது. 2006 ஆம் ஆண்டளவில் அணுஉலைகள் மூலம் பெறும் மின்சாரம் 170 வீதமாகக் கூட்டப்படுமெனத் தென்கொரியா அண்மையில் தெரிவித்துள்ளது. ஆனால் ஜப்பானிடம் எரிக்கப்பட்ட புளுட்டோனியத்தைப் புதுப்பிக்குந் தொழில் நுட்பம் உண்டு. தென்கொரியாவிடம் அது கிடையாது. இந்தத் தொழில் நுட்பம் இல்லாத மற்றைய நாடுகள் போல் தென்கொரியா, இத் தொழில் நுட்ப வசதி உள்ள நாடுகளுக்கு அனுப்பி சுத்திகரிப்புச் செய்ய வேண்டி உள்ளது.

தென்கொரியாவுக்குச் சொந்தமான தொழில்நுட்ப வசதியைப் பெறுவதற்குத் தடையாக இருப்பது 1991 ஆம் ஆண்டு வட கொரியாவுடன் செய்து கொண்ட அணுசக்திப் பாவனைக் குறைப்பு ஒப்பந்தமே. வடகொரியா இந்த ஒப்பந்தத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தென்கொரியா இவ் ஒப்பந்தத்தின் படி ஒழுகுவதாக மார் தட்டி வருகிறது.

மேற் கூறிய அணு வாயுத பரவலாக்கல் தடைச் சட்டத்தின் படி நடப்பதாக ஒப்பமிடாத நாடுகளும் உள்ளன. அதில் இந்தியா முன்னணி வகிக்கிறது. இந்தியா அணுஉலைகளை மின்சாரத் தயாரிப்புக்குப் பாவிக்கிறது. இந்தியா பாவிக்கும் எரிபொருள் புளுட்டோனியம். இதை ஆயுதத் தயாரிப்பு தரத்திற்கு சுத்தப்படுத்தி அணுவாயுதங்களும் இந்தியா தயாரித்து விட்டது. சர்வதேச அணுசக்தி நிலையப் பரிசோதகர்கள் இந்தியா வர மாட்டார்கள். இதன் காரணமாகப் புளுட்டோனியத்தை இந்தியா என்ன செய்கிறது என்று இந்த ஏஜென்சிக்கு இந்தியா விளக்கமும் கணக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. வடகொரியா ஒப்பமிட்டபடியால் மாட்டிக் கொண்டுள்ளது. இதேபோன்று ஜப்பானும் அணுவாயுத பலம் பெறலாம், இந்தியாவின் முன் மாதிரியைப் பின்பற்றலாம் என்ற அச்சம் உலகில் நிலவுகிறது, இதில் முதல் பயப்படும் நாடு தென்கொரியா தான். இரண்டாம் உலக யுத்த முடிவுக்கு முன் நடந்த ஜப்பானிய ஆக்கிரமிப்பை அவர்கள் இன்னும் மறக்கவில்லை.

இன்று ஜேர்மனியும் அமெரிக்காவும் புளுட்டோனியத்தில் தங்கி உள்ள அணுஉலைகளை நிறுத்தியுள்ளன. இவைகளில் கசிவு ஏற்படும் ஆபத்து உண்டு. அச்சமயத்தில் சூழல் மாசுபடுவதுடன் மனித உயிர்களும், உணவு, தானிய வகைகளும் பழுதடையும். உரேனியப் பாவிப்பு ஆபத்துக் குறைவாய் இருப்பினும் கிடைப்பது அரிது. பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் புளுட்டோனியத்தைக் கைவிடத் தயாரில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

2015 ஆம் ஆண்டளவில் ஆசியாவின் மின்சாரத் தேவை இப்போழுதிலும் பார்க்க மூன்று மடங்காக உயரும் எனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. கூடிவரும் வேலையைப் பூர்த்திசெய்ய இந்தக் கண்டத்தின் நாடுகளெல்லாம்புளுட்டோனியத்தை எரிக்கும் உலைகளையே கட்டுவார்கள். சீனாவின் மின்சாரத் தேவை கட்டுக்கடங்காமல் போய்விட்டது. சீனாவிடம் இப்போது 15 உலைகளே உள்ளன. ஆனால் ஜப்பானிடம் 67 உலைகள் உள்ளன. சீனாவின் அணுசக்தித் திட்டங்கள், அடுத்த நூற்றாண்டில் விஸ்வரூபம் எடுக்கும் எனத்திடமாக இருக்கலாம். ஜப்பான், கொரியா, தாய்வானும் பின் தங்கப் போவதில்லை. இப்போது ஆரம்பகட்டத்தில் உள்ள தாய்லாந்து, மலேசியா, வியட்நாம், இந்தோனேசியா ஆகியவையும் சும்மா இருக்க முடியுமா? இல்லை என்பதே விடை. பிலிப்பைன்சை மறந்து விடாதீர்கள்; அவர்களும் விசுவாக்கம் செய்யத்தான் போகிறார்கள்.

நியூஸ்வீக் ஜூன் 13, 1994.

| ஆய்வுக்கு எடுக்கப் பட்ட நாட்டின் பெயர் | இயங்கிக் கொண்டு இருக்கும் உலைகள் | புளுட்டோனியம் சுத்திகரிப்பு உலைகள் | புதிதாகக்கட்டப்படும் உலைகள் | தயாரிக்கப்படும் மின்சாரமும் அதன் உயர்வும் |
|---|---|---|---|---|
| சீனா | 15 | 03 | 01 | 1993 இல் 2.5 றில்லியன் வாட் மணி. 2010 இல் 69.0 உயர்வு |
| வட - கொரியா | 02 | 04 | 05 | 1993 இல் றில்லியன் வாட் மணியிலும் குறைவு. 2010 இல் தெரியவில்லை |
| தென் - கொரியா | 12 | 02 | 08 | 1993 இல் 50.1 றில்லியன் வாட் மணி. 2010 இல் 165.0 உயர்வு |
| ஜப்பான் | 67 | 13 | 06 | 1993 இல் 234 றில்லியன் வாட் மணி. 2010 இல் 450 உயர்வு |

| | சீனா | வட - கொரியா | தென் - கொரியா | ஜப்பான் |
|---|---|---|---|---|
| நாட்டின் முழு மின் சாரத்தேவையின் அணுசக்தி மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் வீதம் | 1993-ல் 0.3·/. | 1993-ல் 1·/. குறைவு | 1993-ல் 40.2·/. | 1993-ல் 30.2·/ |
| | 2010-ல் 2.5·/. | 2010 தெரியவில்லை | 2010-ல் 47.1·/. | 2010-ல் 47.7·/. |

தொகுப்பு:- உலக உலா ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் தன்னிறைவை நோக்கி, சீனாவின் பெரும் பாய்ச்சல்.

கிழக்கு ஆசியாவில் இன்று அணு உலைகள் உயர் அந்தஸ்தின் சின்னமாக மாறிவிட்டன. மின்சாரத் தேவை ஒருபுறமிருக்க அணுஉலைத் தொழில்நுட்பம் "ஒரு நாட்டின் பலத்தையும் வளத்தையும் பறை சாற்றும் கருவியாகவே காட்சி தருகிறது." சீனாவில் அணுசக்தி முகவத்தின் தலைவர் ஜியான் சின்சி யொங் தொடர்ந்து சொல்வது யாதெனில், "சர்வதேச அரங்கில் எமது தகுதியை உயர்த்துவது அணு உலைகளின் தொகைதான்" சீனா முதற்கொண்டு கிழக்கு ஆசிய நாடுகள் மேற் சொன்னவற்றைக் கருத்தில் வைக்கின்றன. ஆனால் அணு உலைகளின் பாதுகாப்புப் பற்றிப் பெரும் பிரச்சனையில் அக்கறை காட்டுவதைக் காணோம்.

2,050 ஆம் ஆண்டளவில், சீனாவின் அணுசக்தியை அடிப்படையாகக் கொண்ட மின்சார உற்பத்தி உலகில் மிகப் பெரிதாக இருக்கும் என பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் சீனா தனது திட்டங்களை உத்தியோக பூர்வமாக வெளியிடும் வழக்கம் இல்லாத நாடாகும். இந்த விதத்தில் சீனாவுக்கும், வட—கொரியாவுக்கும் சிறிய ஒற்றுமை இருக்கிறது. சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களின் பயம் என்னவென்றால், இன்று மேற்குநாடுகளில் எடுக்கப்படும் பாதுகாப்பு வரன்முறைகள் செலவுச் சுருக்கத்திற்காக இங்கு புறக்கணிக்கப்பட்டுவிடும் என்பதே. சீனாவில் சூழல் பாதுகாப்பு இயக்கம் ஒன்றும் கிடையாது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

அடிப்படைகளை வெளியிடத் தயக்கம், அவசரமாக உலைகளை இயக்கத் தொடங்குதல், மற்றும் செலவைச் சுருக்கும் நோக்குடன் தொழில்நுட்ப குறுக்கு வழிகள் இந்த மூன்று அம்சங்களும் மறைந்த சோவியத் ருஷ்யாவுக்கும் சீனாவுக்கும் பொதுவாகும். சேனோர்பில் போன்றதோர் துன்பம் சீனாவில் நடந்து விடுமோ என்று மேற்குலக நிபுணர்கள் அஞ்சுகின்றனர். ஹொங் கொங் தீவுகளில் இருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தயாகுடா அணு உலை, கடந்த 14 மாதங்களாகப் பல கண்டங்களைத் தப்பி இயங்கிக் கொண்டிருக்கின்றது. சென்ற வருடம் இதைப் பார்வையிட்ட சர்வதேச அணுசக்திப் பரிசோதகர்கள், இதனுடைய பாதுகாப்பு ஒழுங்குகள் பலப்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளனர். இந்த உலை சம்பந்தமான நடைமுறை விதிகள் ஆங்கிலத்தில் இருந்து சீனமொழிக்கு மாற்றப்படவேண்டும் எனவும் மேற்கூறிய பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரையும் பரிசோதகர்களின் முழுஅறிக்கையும் சீனா உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும்.

சீனா குயின்சான் நகரில் நிறுவிய உலையைப் பார்ப்போம். இது முழுக்கமுழுக்க சீன வடிவமைப்பாகும். பல மாதகால இழுபறியின் பின், இது 92 ஆம் ஆண்டில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதில் பல வரைபட மற்றும் வடிவமைப்புப் பிழைகள் உண்டு. எனினும் இதைப் பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் சீனா ஏற்றுமதி செய்யத் தொடங்கி உள்ளது.

வளரும் சீனப் பொருளாதாரத்தின் மின்சாரத்தேவை மிகவும் பெரிது அதே சமயத்தில் அவர்களுடைய ரொக்கப்பணமும் மிகவும் சுருக்கம். இதனால் அவர்கள் பல கேள்விகளுக்குரிய குறுக்குவழிகளைப் பின்பற்றுகின்றனர். உலகச் சந்தையில் மலிவுப்பொருள்களைத் தேடும் சீனா ருஷ்யாவிடமிருந்தும், பிரான்சிடம் இருந்தும், வாங்கிய உலைகளுடன் தங்கள் சொந்தத் தயாரிப்பையும் நிறுவியுள்ளது. ஒரே மாதிரியான உலைகளை நாடு பூராவும் நிறுவினால் செலவு கூடுதலானாலும் பராமரிப்பு எளிதாகும். சீனாவில் இன்று பல தொழில்நுட்பங்கள் இயங்குவது கண் முன்னே உள்ளது. சீனாவின் குறிக்கோள்கள் இரண்டு. ஒன்று தமது நாட்டின் மின்சாரத்தேவையைப் பூர்த்தி செய்வது, அடுத்தது அணு உலைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிகள் செய்வது. நாட்டின் உலைகளில் ஒன்றில் பாரதூரமான விபத்து நடந்து விட்டால் ஏற்றுமதிகள் பாதிக்கப்படுவது நிச்சயம்.

நியூஸ்வீக் ஜூன் 13, 94

★

## கிளிங்ரனுடன் சந்திப்பு

மலேசியப் பிரதமர் மகதீர் முகமத், மே மாத முற்பகுதியில் வோஷிங்ரனுக்கு உத்தியோக பூர்வ வருகை தந்து, ஜனாதிபதி கிளிங்ரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்ததற்கு, அமெரிக்க அதிகாரிகள் இன்னும் பதில் தரவில்லை. அதற்கான போதிய அவகாசம் அமெரிக்க ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் இருப்பதாக அவர்கள் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21-ம் நூற்றாண்டை வரவேற்கும் தகவல் தொடர்பு முன்னேற்றங்கள்

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் தொழில் வளத்தில் தங்கி உள்ளது. தொழில் முன்னேற்றம் இல்லாத நாடுகளில் பிற்போக்கு வாழ்வும் தட்டுப்பாடும் நிலவுகின்றன. அடிப்படை வசதியற்று இவர்கள் இருக்கும் போது, தொழில்நுட்ப வளர்ச்சியுள்ள நாடுகளில் ஆய்வுகளும், கண்டுபிடிப்புகளும் இடைவிடாது நடைபெறுகின்றன. தொழில்வளம் பெருக தகவல் தொடர்பு, களஞ்சியப்படுத்தல், தாமதமின்றி நினைவுகூரல் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல்தொடர்புச் சாதனங்கள் அத்தியாவசியமாகின்றன. அத்துடன் முகாமைத்துவமும், அதற்குதவும் கருவிகளும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன.

இவை யாவற்றையும் மையமாக வைத்து, இன்று அமெரிக்காவில் ''தகவல் தொடர்பு நெடுஞ்சாலை'' என்ற சொற்றொடர் பாவிப்பில் உள்ளது. ஆங்கிலத்தில் 'மோட்டார் கார்' என்ற சொற்கள் ஒன்று சேர்க்கப்படுமுன் ''குதிரை இல்லா வண்டி'' எனறே இவ் வாகனம் அழைக்கப்பட்டுள்ளது. அது போன்று பல்வேறு மின்சாரக் கணனி, இலத்திரனியல் சாதனங்களைத் தற்காலிகமாகத் தகவல் தொடர்பு நெடுஞ்சாலை என்று ஏடுகளும் நூல்களும் இயம்புகின்றன. நல்லதொரு துடிப்பான பதத்தை மொழி வல்லுனர்கள் தேடிய வண்ணம் இருக்கின்றனர்.

இந்த நெடுஞ்சாலைப் பயணத்தைத் தொடக்கி வைத்தவர்களில், அலெச்சான்டர் கிரகாம் பெல் (Alexander Graham Bell) (1847 – 1922) மிகவும் முக்கியமானவர். இவர் கண்டுபிடித்துச் செயற்படுத்திய தொலைபேசி, யாவற்றுக்கும் முன்னோடி என்பது வெளிப்படை. இத்தொலைபேசியில் பெருந்தொகையான கம்பித் தொடர்புகளும், தொடர்பு நிலையங்களும் தேவைப்பட்டன. ஆனால் கம்பி இல்லாத் தொலைபேசி வந்தவுடன் இவை தேவைப்படாது ஒழிந்துள்ளன. இன்று செய்மதியின் துணையுடன் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுடன் நொடிப்பொழுதில் தொடர்பு கொள்ளலாம். பெல் செய்த தொலைபேசித் தொடர்புகள் போல், இன்று கணனிகளுக்கிடையிலான தொடர்பும் நடைமுறைக்கு வந்துள்ளது. இதுவும் பயணத்தின் ஆரம்பமே. இன்னும் பல உருமாற்றங்களும் மெருகூட்டுதலும் நிகழ இருக்கின்றன. யாவற்றையும் இதன் கீழ் வேறுபடுத்தி ஆராய்வோமாக.

## பேச்சுத் தொடர்பு




தனியாருடைய விடுதிக்கணனிகளுக்கிடையில் தொலைபேசி மூலம் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவில், வீட்டில், அல்லது வேலை செய்யும் இடத்தில் இத்தொடர்பை 8 சத வீதமானோர் பயன்படுத்துவதாக அண்மைக்கால ஆராய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், முழுஉலகிலும் 20 மில்லியன் மக்கள் இத்தொடர்பை விரும்பி ஏற்றுள்ளதாக இதே ஆய்வு தெரிவிக்கின்றது. இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் தொடர்பு நெடுஞ்சாலை

இருவழித் தொடர்புதான் இந்த ஒழுங்கின் தொடக்கமும் முடிவும். வாடிக்கையாளர்கள் தொடர்பு கொள்ளவும் தகவல் பெறவும். சீரான அமைப்பு அவசியம். தொலைபேசியின் சௌகரியமும், தொலைக்காட்சியின் விரிவும், கணனியின் பணியும் ஒன்று கூட்டப்படல் வேண்டும். இந்த நூற்றாண்டில் இது நிகழ்வது சந்தேகம். காத்திருந்துதான் பார்ப்போமே.

● பல கணனிகள் ஒரு பொது மையத்தில் நிறுவப்படுகின்றன. இவ்விடத்தில் இருந்து வலுவான கம்பிக்கயிறுகள் (Cable) மூலம் தனியார் வீடுகளுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுளளது. இங்கு வைக்கப்பட்டிருக்கும் கணனிகளின் – வாடிக்கையாளர்களுக்கிடையில் தொடர்பு, அவர்கள் விசாரணைக்குப் பதில்; பொழுது போக்கு அம்சங்களை, பிரதானமாக வீடியோ வாடிக்கையாளர்களுக்கு கொடுத்தல்.

● 500 தொடக்கம் 1000 வீடுகளுக்கு ஒன்றாக உப மையங்கள் (Nodes) நிறுவப்படும். இதன் வேலை பிரதான மையத்தில் இருந்து வரும் தொடர்பைச் சரியான இடத்திற்குப் பகிர்ந்தளித்தல். கம்பிக்கயிற்றைப் புதிதாக இணைப்பதாக அல்லது இப்போது இருக்கும் தொலைபேசிக் கம்பிகள், தொலைக்காட்சிக் கம்பிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதா என்பதில் அமைப்பாளர்களிடையில் கருத்து வேறுபாடு உண்டு.

● தனியார் விடுதிகளில் உள்ள கணனிகள் (Pcs) யாவும் பிரதான மையத்துடன் இணைக்கப்படுகின்றன. இதனால் தகவல் தொடர்பு, ஆய்வுகள் செய்திகள் வர்த்தகம், வங்கி அலுவல்கள், முதலீடுகள் நடக்க ஏதுவாகிறது.

● இருவழி தொலைபேசித் தொடர்புக்கம்பிகள் தனியார் துறை தொலைக்காட்சி அமைப்புகளுக்கும் உதவுகின்றன. குறிப்பிட்ட சுற்றாடலில் கம்பி மூலம் தனியார் துறை தொலைக்காட்சிப் படங்களும், செய்திகளும் (Cable T. V) வருகின்றன. இன்று இரண்டும் இணையும் வாய்ப்பு உண்டு.

● தற்போது உள்ள செப்புக் கம்பிகள் இருவழித் தொடர்புகளுக்கும், நெடுந்தூரச் செய்திப் பரிமாற்றத்திற்கும் உகந்ததல்ல. கண்ணாடி இழைக்கம்பி அத்தேவைக்குச் சிறப்பாக இருக்கின்றன. ஆகவே இப்போது உள்ள தொலைபேசி, தொலைக்காட்சிக் கம்பிகள் தகவல் தொடர்பு நெடுஞ்சாலைக் கருமங்களுக்கு உதவா. பையர் ஒப்ரிக் கேபிள் என்ற (Fibre Optic Cable) கண்ணாடி இழைக் கம்பிகள் அவசியம் பொருத்தப்படல் வேண்டும்.

● அரங்கத்தில் நேராகக் கேட்பது போன்ற துல்லியமான இசையை இந்த முறையில் வழங்க முடியும்.

● வீடியோ படங்களை இந்த முறையில் காட்டுவது கடினம். முதலாவது இரண்டு மணித்தியாலம் படம் முடியும் வரை தொடர்பு அறாமல் இருக்க வேண்டும். இரண்டாவது குறிப்பிட்ட நேரத்தில் பல வாடிக்கையாளர்கள் படங்களைக் கேட்பார்கள்.

தொடர்பு அமெரிக்காவினுள் மாத்திரமல்ல இன்ரர்னெற் (Internet) எனப்படும் ஒழுங்கின் மூலம் பல கண்டங்களில் காணப்படும் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட கணனிகள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. பொழுது போக்குப் பேச்சு முதற்கொண்டு வர்த்தகம், அறிவியல், தகவல் பரிமாற்றம் வரை யாவும் இதனால் பயன் பெற்றுள்ளன.

**1991 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவில் கனரக ஆலைகளில் செய்யப்படும் முதலீட்டிலும் கணனி, இலத்திரனியல் போன்றவற்றில் செய்யப்படும் முதலீடு கூடுதலாக இருக்கிறது.”**

### தொழில் தொடர்பு:

மிகக் கூடுதலான தொடர்புகள் இத்துறையில் காணப்படுகின்றன. விற்பனைத்தொடர்பு, கலந்துரையாடல், பேரம்பேசுதல் போன்ற கருமங்கள், “இத் தொலைத்தொடர்பு கணனி” மூலம் நடைபெறுகின்றன். இன்று அமெரிக்காவில் பல முன்னணி வர்த்தக நிறுவனங்கள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் விற்பனையாளர்களைக் குறைத்துள்ளனர். இவர்கள் செய்து வந்தவேலையை இன்று இக்கருவி மூலம் திறம்படச் செய்வதே காரணம்.

## சில்லறை விற்பனை.-

இத்தொடர்பை இயக்கி, 50 மில்லியன் அமெரிக்கர்களை அவர் களுடைய வீட்டில் வைத்தே தொலைபேசி இணைப்பு மூலம் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கிறது. வர்த்தக நிறுவனங்கள் தாங்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் பொருள்களை அறிமுகம் செய்யும் வாய்ப்பும், தொடர்ச்சியான வர்த்தகத் தொடர்பும் இதனால் ஏற்படுகின்றன. புளொறிடா மாகாணத்தில் தொலைக் காட்சிப் பெட்டியுடன் தொடர்பு கொண்டு பொருள்களைக் கண்ணாற் பார்க்கும் வகையில் காட்ட முடியும் என்கிறது ஒரு வர்த்தக சஞ்சிகை.

## பொழுது போக்கு:-

ஒரு மத்திய நிலையத்தில் இருந்து விரும்பிய வீடியோ படத்தையோ அல்லது தொலைக் காட்சிப் பெட்டி விளையாட்டையோ (T. V. GAMES) தொலை பேசி மூலம் உத்தரவு கொடுத்து, வீட்டில் இருந்தவாறு பொழுதைப் போக்கலாம். கொடுப்பனவை ஓர் ஒழுங்கு மூலம் செலுத்தலாம். இது இப்போது ஆரம்ப நிலையில் இருக்கிறது. மாலைப்பொழுதில் வாடிக்கையாளர்களின் தேவையைத் திருப்திப் படுத்த முடியாத நிலை உண்டு. இது புறம்பான ஒரு தொழில் வாய்ப்பாக உருவாகும் என்று ஆருடம் கூறியுள்ளது.

## முதலீடுகள் ;-

பங்குச்சந்தையிலும், முதலீட்டுத்துறையிலும் இன்று தொலைபேசிக்கணனி மூலம் பெருந்தொகையான பணம் கைமாறும் நிலை அமெரிக்காவில் உண்டு. ஆய்வாளர்களின் பார்வையில் நாளாவட்டத்தில் ஒரு புதிய முதலீட்டு வர்க்கம் உருவாகிவிடும். முதலீட்டு முகாமையாளர்களும், தரகர்களும் இப்போதே இதன் நன்மையை உணர்ந்துள்ளனர். நியூயோர்க் நகரின் சாள்ஸ் சுவாப் என்ற நிறுவனம் தனது மூன்றில் ஒரு பங்குச் சந்தை வர்த்தகத்தை இந்த முறையில் செய்கிறது.

தகவல் தொடர்பு நெடுஞ்சாலை, யாமறிந்த நெடுஞ்சாலை போல் அல்லாது பல அபூர்வ அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகும், இது நிலையாக நின்றது கிடையாது. விஞ்ஞான ஆய்வுகளும், தொழில் நுட்பச் சேர்க்கைகளும் இந்த நெடுஞ்சாலையின் அசைவுக்கு உந்து சக்தியாக அமைகின்றன. ஆனால், மேற்கூறிய யாவற்றிற்கும் என்றோ கண்டு பிடிக்கப்பட்ட தொலைபேசி தான் அடிப்படையும், தொடர்பும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நெடுஞ்சாலை வளர்ச்சி வருங் காலத்தில் தொலைபேசி இணைப்பைத் தேவையில்லாமற் செய்யுமா? இல்லையா? என்ற வினாவுக்கு இப்போது விடை பகர்வது மிகவும் கடினம்.

*நியூஸ் வீக் ஜன் 06. 1994.*

★

## இந்தியா: இனிப்பும் கசப்பும்

சீனி இறக்குமதியில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நாடெங்கும் சீனித்தட்டுப்பாடுவந்து, பிரதமர் நரசிம்மராவ் அரசு கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. சென்ற ஜூன் 13 ஆம் திகதி, பாராளுமன்றத்தில் இது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொணர்ந்த எதிர்ப்புப் பிரேரணையை அரசு சாதுர்யமாகத் தோற்கடித்து விட்டாலும் கூட, எதிர்க் கட்சிகள், அரசு வேண்டுமென்றே சீனி இறக்குமதியைக் குறைத்து, அதன் மூலம் உள்நாட்டுச் சீனி உறபத்தி முதலாளிகளுக்கு விலை உயர்வு மூலம், அதிக இலாபம் கிடைக்கச் செய்கிறதென்று கூறுகின்றனர்.

## தேவை வந்தால் இந்தியா அணுகுண்டு செய்யும்

இந்தியாவின் வலதுசாரி எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி இந்தியா இப்பொழுதே அணுக்குண்டு செய்யவேண்டும் என்று பாராளுமன்றில் வற்புறுத்திய போது, அதனை நிராகரித்த, இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தேவை ஏற்படின் இந்தியா அணுகுண்டு செய்யும் என்று கூறினார். அணு ஆயுதப் பரிகரண ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா ஒப்பமிட வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுக்க, அதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றது இந்தியா. அது அத்தகைய ஒப்பந்தம் ஏற்கனவே அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளுக்குச் சாதகமாக அமையாது என்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் [redacted] இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

மியாசின் மனிதனிலும் மிகத் தொன்மை வாய்ந்தது. இது விலங்கியலாளர்களின் முடிவு. எம்மினம் புவியில் தோன்ற முன்பே மியாசின் இங்கு உலாவியதாகக் கருதப்படுகின்றது. 40 மில்லியன் வருடங்களுக்கு முன் வசித்த மியாசின் இன்றைய வளர்ச்சிக்காளானது. அன்று சிறிய உருவமைப்பில் இருந்த குதிரை, ஒட்டகம், குரங்கு ஆகியவற்றை வேட்டையாடித் தின்றுள்ளது. நான்கு கட்டைக் கால்களும், நீண்ட வாலும் கொண்ட இவ்வுயிரி தரையில் இரையைத் துரத்திப் பிடித்து உண்டதாகவும், மரமேறி அங்கு வாழ்ந்ததாகவும் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். 5 மில்லியன் வருடங்கள் சென்ற பின் மியாசினிலிருந்து டெப் (F) னே அவுஸ் (Daphne aus) சினோடிக்ருஸ் (Cynodictus) என இரு இனங்கள் தோற்றியதாகவும் அறிகிறோம். டெப் (F) னே அவுஸ் அல்லது கரடி–நாய் பெரிய உருவமும் அடர்ந்த உரோமமும் கொண்டு பல மில்லியன் வருடங்கள் வாழ்ந்த பின் இன்றைய கரடியாக வளர்ச்சி பெற்றுள்ளது. வேக ஓட்டத்திற்கேற்ற உடல்வாகும், நீண்ட காலும் கொண்ட மற்றைய சினோடிக்ருஸ் இனம்

**“ நாயும் கரடியும் மியாசின் (Miacin) என்ற விலங்கிலிருந்து தோன்றியவைதான்”**

மியாசினின் மரமேறும் திறனை இழந்துள்ளது. இன்றிலிருந்து 15 மில்லியன் வருடங்களுக்கு முன் சினோடிக்ருஷ் இனத்திலிருந்து, மூன்று வகை விலங்குகள் தோன்றியுள்ளதாக ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு. அவையாவன: லைக்கஓன் (Lycaon), பொரோபாகுஸ் (Boro phagus), ரொமார்க்ருஸ் (Tomarc tus) என்பன.

ஆபிரிக்காவின் அடர்ந்த காடுகளில் வேட்டையாடி உண்ணும் கொடிய வனவிலங்கான நாய்கள் முதல் ரகத்திலிருந்தும்: கடுவாய்

மொழி பெயர்ப்பு
கலாநிதி சோமாஸ்கந்தன்




**நாயின் வமிச விருட்சம்**

(01) மியாசின்
(02) டெப்(F)னேஅவுஸ்
(03) கரடி
(04) சினோடிக்ருஸ்
(05) லைக்கஓன்
(06) ஆபிரிக்க வேட்டை நாய்
(07) பொரோபாகுஸ்
(08) ஓநரி
(09) கடுவாய் எனப்படும் கழுதைப்புலி
(10) ரொமார்க்ருஸ்
(11) ஓநாய்
(12) நரி
(13) நாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் கழுதைப் புலி (Hyena) ஓநரி (Jackal) ஆகியவை இரண்டாம் ரகத்திலிருந்தும்: இன்றைய நரி, ஓநாய், நாய் ஆகியவை மூன்றாம் ரகத்திலிருந்தும் தோன்றியுள்ளன. இந்த மூன்றில் ரொமார்க்ருஸ் "நாய்களின் தந்தை" என வர்ணிக்கப்பட்டுள்ளது. சிறிய வேல் போன்ற காதும், நீண்ட சடைத்த வாலும், வேக ஓட்டத்திற்கேற்ற உடலமைப்பும், காலும் இந்த ரொமார்க்ருஸ் இனத்திற்கு உண்டு. அபார மோப்ப சக்தியும், இருட்டில் பார்க்கும் கண்ணும், கூரிய வேட்டைப் பல்லும் இதற்கு இருந்திருக்கின்றன. எல்லா விதத்திலும் இது இன்றைய நாய்களின் முன்னோடி என்றால் மிகையாகாது. இன்று நாய்கள் உலகெல்லாம் பரவிக்கிடக்கின்றன. நாய்கள் இல்லாத இடங்கள் அரிதினும் அரிதாகும். நாய்களை வளர்ப்பு நாய் (Domestic Dogs) காட்டு நாய் (Wild Dogs) என இரு வகைப்படுத்தலாம். நன்றியும், விசுவாசமும், வீரமும், அறிவும் உள்ள வீட்டு நாய் மனிதனின் பழம்பெரும் நண்பன் என்ற மறைமொழிக்கு இலக்காகியுள்ளது. மனிதன் தனது நீண்ட வரலாற்றில் விலங்குகளிலிருந்து தனக்குத் துணையாகக் கூட்டுச் சேர்த்த முதலாவது பிராணி நாய் என்று திடமாக நம்பலாம். நாய் ஒரு செல்லப் பிராணி மாத்திரமல்ல. அது உலகின் பல பாகங்களில் இன்றும் குடும்பத்தில் உழைக்கும் அங்கத்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. வித்தியாசமான உடலமைப்பும், நிறமும், உரோமமும், குணங்களுங் கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட நாய் இனங்கள் (Breeds) இன்று காணப்படுகின்றன. இவற்றுள் மிகப் பெரியது அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐரிஷ்வுல்ப் ஹவுண்ட் (Irish Wolf Hound) இனமே. தரையிலிருந்து இதன் தோள் 3 அடி என்றும், பின் காலில் எழுந்து நிற்கும்போது இதன் உயரம் 6 அடி என்றும் நாய்கள் பற்றிய நூல்கள் தெரிவிக்கின்றன. நாளொன்றிற்கு இதற்கு 20 இறாத்தல் உணவு தேவைப்படுவதால் இதை விரும்பி வளர்ப்போர் குறைவு. மிகச் சிறியது வடஅமெரிக்காவில் காணப்படும் சீகுவாகுவா (Chihuahua) என்ற நாயே. இந்த இனத்தில், சில அரைக் கிலோ நிறை உள்ளனவென்று தெரிவிக்கப்படுகின்றது. சீகுவாகுவா இனம் இன்று அருகி வருகின்றது.

மனிதனால், தனது சூழலில் வளர்க்கப்படாத வனப் பிரதேசத்தில் வாழும் காட்டு நாய்களின் குணாதிசயங்களும், பழக்க வழக்கங்களும் வீட்டு நாயுடன் ஒத்துப் போகின்றன. சுருங்கக் கூறினால் வீட்டுநாய மனித சகவாசத்தால் திருத்தமடைந்துள்ளதெனலாம். ஓநாய்கள், ஓநரிகள், கொயோட் எனப்படும் அமெரிக்கா வாழ் ஓநாய், ஓநரி இரண்டிற்கும் இடைப்பட்ட மிருகம் (Coyote) யாவும் எமது வீட்டு நாயின் சகோதரர்களே. நாய்க் குடும்பத்திற்கு விலங்கியல் பெயர் கனிஸ் (Canis). இங்கு குறிப்பிடப்பட்டவை யாவும் கனிஸ் குடும்பத்தினரே. இவைகளுக்கிடையில் கலப்புச் செய்து நல்ல ஆரோக்கியமான குட்டிகளைப் பெற முடியும். ஆனால், நரியுடன் மாத்திரம் வீட்டு நாய் உட்பட யாதொன்றையும் இனக கலப்புச் செய்ய முடியாது. காரணம்: நரி, நாய்க்குடும்பத்தின் இன்னுமொரு கிளைக்குச் சேர்ந்ததாகும். காட்டு நாய்களில், ஓநாய்தான் வீட்டு நாய்க்கு மிக நெருங்கிய உறவினன் ஆகும். இன்றும் சில வீட்டு நாய்கள் ஓநாய்களுடன் கலக்கப்பட்டுப் புதிய இனங்கள் விருத்தியாக்கப்படுகின்றன. ஆனால், வீட்டு நாய்களுக்கு இல்லாத உநார குணம் ஓநாய்களுக்கு இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆண் ஓநாய்கள் தமது வாழ்நாள் பூராவும் தமது ஒரு பெண் சோடியுடனேயே சேருமென்றும், பெரும் குடும்பப் பொறுப்பு வாய்ந்த மிருகம் இதுவென்றும் விலங்கியல் நூல்கள் தெரிவிக்கின்றன. இந்த உயிரிகள் யாவும் குரைத்தும், ஊளையிட்டும், தமது பல்வேறு உணர்ச்சிகளைத் தெரிவிக்கின்றன. நிலாக் காலத்தில், அவை தம்மை மறந்து ஒலி எழுப்பிய வண்ணம் இருக்கக் காணலாம். ஆபிரிக்கா நாட்டைச் சேர்ந்த, பசென்ஜி (Basenji) என்ற வகை நாய் குரைப்பதில்லை. சில அனுங்கல் ஒலிகளையே, இது கீழ்த்தொனியில் எழுப்புகின்றது. உலகில் குரையாத நாய் இது வொன்றுதான். அமெரிக்காவின் கொயோட் எனப்படும் சிறியரக ஓநாய் மாலை நேரத்தில், மெய் மறந்த நிலையில் ஓர் இசைக் கச்சேரியே செய்வதாகக் கேட்போர் தெரிவிக்கின்றனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாய் – மனிதன் சந்திப்பு எப்போது நிகழ்ந்ததென்று சரியாக வரையறை செய்ய முடியவில்லை. சில அறிஞர்களின் கணிப்பில் இச் சந்திப்பு 5,00,000 வருடங்களுக்கு முன் நிகழ்ந்திருக்கக் கூடும் அக்கால கட்டத்தில், மனிதனுக்கு அறிவுக் கூர்மை ஏற்பட்டிருக்கலாமென்றும், கல், தடி போன்ற கருவிகளை அவன் பாவித்திருக்கலாமென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். புராதன காலத்திற்குரிய மனித எலும்புகளுடன் நாய் எலும்புகளும் வசிப்பிடக் குகைகளில் காணப்படுகின்றன. இருபக்க உறவுகளும் எந்த அடிப்படையில் ஆரம்பித்தனவென்று சொல்ல முடியவில்லை. மனிதன் மூட்டிய தீயில், நாய் குளிர்காய நெருங்கியிருக்கலாம் அல்லது அவன் உண்டபின் எலும்பு, தோல் ஆகியவற்றைப் பொறுக்க நாய் தேடி வந்திருக்கலாம் என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றுகிறது. வேட்டையாடச் செல்லும் இடத்தில், கண்ட அழகான நாய் அல்லது ஓநாய்க் குட்டிகளை மனிதன் தனது குகைக்கு எடுத்து வந்து தன்னுடன் வைத்திருந்து அதன் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்திருக்கலாம் என்றும் ஏற்றுக்கொள்ளலாம். இரு பகுதியினரும் ஒருவருக்கொருவர் உதவும் அளவுக்கு இரு பக்க உறவுகளும் வளர்ந்திருக்கலாம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஐரோப்பியக் குகைச் சித்திரங்கள், வேட்டையாடும் மனிதனுக்கு உதவும் நாயை எமக்கு இன்றும் காண்பிக்கின்றன. குகைவாசல் காவலிலும் சிறுவர் பாதுகாப்பிலும், பாரம் இழுத்து வருவதிலும் இப் பிராணி உதவியிருக்கலாமென எண்ண நிறைய இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை தன்வயப்படுத்தும் மனிதன் ஓர் அங்கமாக இரத்தக் கலப்பு செய்வதன்மூலம் தனது பிரத்தியேக தேவைகளுக்காகப் பல புதிய உயிரினங்களை தோன்றச் செய்துள்ளான். கறவைப் பசுக்களையும், உறுதியான பாரஞ் சுமக்கும் காளைகளையும் அவன் இம்முறையில் பிறப்பித்துள்ளான். இவ்வாறே புதிய இன நாய்களையும் அவன் இன்று போல் ஆரம்ப காலத்திலும் சிருட்டித்திருக்கலாம். இதற்குரிய நேரடிச் சான்றுகள் இல்லாது விட்டாலும், 5,000 வருடங்களுக்கு நிகரான நாய்கள் சம்பந்தமான இத்தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. 2,000 வருடங்களுக்கு முன் ஆப்கன்கவுண்ட் (Afghan Hound) என்ற புதிய ரக வேட்டைநாய் இரத்தக் கலப்புமூலம் தோற்றுவிக்கப்பட்டதற்கு ஆதாரம் உண்டு. அசீரிய நாகரிக காலத்து (Assyrian Rock Carvings) கற் சிற்பங்களிலும் இத்தகைய ஆதாரங்கள். காண்பிக்கப்படுகின்றன. வேட்டையாடும் தேவைக்கே மனிதன் முதன்முதல் இத்தொழிலுக்கு உகந்த நாய்களை விருத்தி செய்துள்ளான். நல்ல மோப்ப சக்தி, வேகமாக ஓடும்திறன், மிருகத்தைத் தப்பவிடாது தடுக்கும் வீரம், தேவை ஏற்படின் வனவிலங்கைத் தாக்கிக் கொல்லும் பலம், இவை யாவும் அடங்கியவோர் இனத்தை அவன் தயாரித்துள்ளான். ஆதி மனிதன் மந்தைகளுக்குச் சொந்தமாகியவுடன் இன்னுமோர் இனத்தையும் விருத்தி செய்துள்ளான். ஆடும், மாடும் தப்பியோடாத காவல் காக்கும் மேய்ப்பான் நாய். அதே சமயத்தில், இந்த நாய் மந்தையைத் தாக்க வரும் காட்டு மிருகங்களை விரட்டும் பலமும், சாதுரியமும் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். மேய்ப்பான் நாய் எசமானின் உத்தரவின்றியே சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். வடதுருவத்து எஸ்கிமோ (Eskimo) சாதியினர் தங்கள் சறுக்கு வண்டிகளை இழுப்பதற்கு இன்னுமோர் இனத்தை விருத்தி செய்துள்ளனர். மாலேமுட் (Male Mute) என்ற இந்த ரக உடல் உரங்கொண்ட நாய், ஓநாய் கலப்பால் உண்டாகியுள்ளது. ஆதிகால மனிதன், ஒட்டப் பந்தயங்களுக்கு என்றும் ஒருவகை நாயைத் தயாரித்துள்ளான். பல்லாயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்த கிரேகவுண்ட் என்ற நீட்டுப் போக்கான உயரமுள்ள நாய் (Grey Hound) இதற்குரிய உதாரணமாகும்.

எந்தச் சீதோஷ்ண நிலையையும், தட்பவெட்ப மாற்றத்தையும் தாங்கக் கூடிய மனிதனின் சக்திக்கு நிகராக இருப்பது நாயொன்றுதான். நீரில் கடமை புரிவதற்கேற்ப நியூபவுண்ட்லான்ட் (New Foundland) நாயை இவ்விடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். வாத்துக்களுக்குள்ளதுபோல் இந்த ரக நாய்களுக்குக் கால் விரல்களுக்கிடையில் சவ்வு இருக்கின்றது. இது நீச்சலுக்கு உதவுகின்றது. அதன் உரோமத்தில் ஒருவித எண்ணெய்த் தன்மை இருப்பதால் நீர் உட்புக முடியாது தடுக்கப்படுகின்றது. இதேபோன்று உஷ்ண வலயத்தில் உள்ள நாய்கள் நீளம் குறைந்த உரோமமும், குளிர்ப் பிரதேச நாய்கள் நீண்ட உரோமமும் உள்ளதாக இருக்கின்றன. 65 மில்லியன் வருடங்களுக்குமுன் தோன்றிய டைனோசர் அழிவதற்கு அதன் பிரமாண்ட உருவமே காரணம். 40 மில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றிய நாய் இன்றும் நிலைப்பதற்கு அதன் உடலின் ஒவ்வொரு பகுதியும் மிகுதியுடன் சிறப்பாக அமைவதே காரணம். அதன் உடலின் ஒவ்வோரு அங்கமும்இறுக்கமாக இணைந்து காணப்படுகின்றன. யானைக்குத் தும்பிக் கையும், ஒட்டகச் சிவிங்கிக்கு நீண்ட கழுத்தும் காணப்படுகின்றன. இதேபோல் நாய் இனத்துக்கு ஒரு பாகமும் இல்லை. உணவிலும் அது ஒன்றையும் தள்ளி வைப்பதில்லை. நாய் தின்னும் உணவை வேறு மிருகங்கள் தின்றால் அவை சுகவீனமடையும். நாயினுடைய பற்களும், அதன் வாயைச் சுற்றியிருக்கும் தசை நார்களும் எலும்பு தின்பதற்கு ஏற்றவையாக இருக்கின்றன. அதன் வயிற்றில் சமிபாட்டுக்குரிய அதிசக்திவாய்ந்த திரவங்கள் காணப்படுகின்றன. எலும்பிலுள்ள கல்சியத்தை இத் திரவம் எளிதில் பிரித்தெடுக்கின்றது. நாயினுடைய உயரிய மோப்பசக்தி வேறு ஒரு வகை மிருகத்திற்கும் கிடையாது. மேற்கு நாடுகளில் காவல் துறையினர் பயன்படுத்தும் பிளட் கவுன்ட் (Blood Hound) என்ற ரக நாய் இந்த வகையில் ஒப்புவமையற்றதாகும். வேறு நாய் இனங்களிலும் இந்த நாய் திருடர்களைப் பிடிப்பதற்கும், யுத்த காலத்தில் எதிரிகள் நடமாட்டத்தைச் சுட்டிக் காட்டுவதற்கும் மிகச் சிறந்ததாகும்.'

நாயின் காதுகளும் மிகக் கூர்மையானவை. மனிதக் காதுகளுக்கு எட்டாத ஒலிகள் நாயின் காதிற் படுகின்றன. எமது காதுகள் நொடிக்கு 50 தொடக்கம் 15,000 ஒலிச்சுற்றுக்களை கிரகிக்கின்றன. நாயின் காதுக்கு இதைவிடப் பல ஆயிரந் தடவை கூடிய ஆற்றல் உண்டு. ஆனால் கண் பார்வையில் நாய் ஒரு சாதாரண மிருகமே. அதன் பார்வை சராசரி ரகத்தைச் சேர்ந்தது. அநேக நாய்களுக்கு இதிலும் குறைவாக இருக்கும். நாயின் கண்கள் அதன் நெற்றியில் நேராகப் பார்க்கும் விதத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் நாய் தூரத்தையும், ஆழத்தையும் கணக்கிடுவதில் வல்லவியாக இருக்கின்றது. நொடிப் பொழுதில் பாய வேண்டிய தூரத்தைக்கணக்கெடுக்கவும், ஆழத்தை நோட்டமிடவும் நாயால் முடியும். நாய்களுக்கு நிறங்கள் தெரிவதில்லை, எல்லாம் சாம்பல் (Grey) வர்ணத்தில் தெரிவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். நாய்களால் பேச முடியா விட்டாலும் தமது உள்ளக் கிடக்கையை எசமானுக்குத் தெரிவிக்கும் தன்மை அதற்கு நிறைய உண்டு. நாய்களுக்கு அன்பு, வெறுப்பு, கோபம், விருப்பம் ஆகிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கத் தெரியும். எசமான் சொல்வதை விளங்கிக் கொண்டு அதன்படி நடக்கும் பண்பும் இதற்கு உண்டு. 150 சொற்களுக்கு மேல் சில நாய்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

விளங்கிக் கொள்ள முடியும் என்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய பரிமாற்றமே மனிதன் நாய் இணையத்திற்கு அடிப்படையாகும்.

நாயினுடைய வயதெல்லை பத்திலிருந்து பதினைந்து வரை என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிலநாய்கள் இருபது வருடங்கள் சீவித்ததாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் ஆரோக்கியச் சீர்கேடுகளால் எமது ஆசிய நாடுகளில் நாய்கள் தமது முழு வயதிற்கும் இருப்பதில்லை. நாயினுடைய பரம்பரையும் வயது விஷயத்தில் மிகவும் முக்கியமான காரணியாகும். நாய்கள் தங்கள் உடல் வெப்பத்தை நாக்கு மூலம் வெளியேற்றுகின்றன வாய் திறந்தபடி நாக்கைத் தொங்கவிட்டபடி கோடை காலத்தில் அவைகள் அலைவது இக்காரணத்திற்காகவே மனிதர்களைப் போல் தோல் மூலம் வியர்வையை வெளியேற்றும் வசதி அவர்களுக்கில்லை. எம் மத்தியில் சிறிய ரக நாய்கள் பிரபலமாகி வருகின்றன. மேற்குலகில் விருத்தியாகிப் பல தொழில்களில் ஈடுபடுத்தப்படும் நாய்களுடன் ஒப்பிடும் போது இவர்கள் செல்லப் பிராணி என்பதைவிட வேறு பிரயோசனமற்றவையாகும். இன்றும் பெல்ஜியம், ஒல்லாந்து போன்ற நாடுகளில் கிராமப் புறங்களில் இரண்டு நாய்கள் பூட்டிய சிறிய வண்டில்கள் பாவிக்கப்படுகின்றன. எமது நாடுகளில் நாம் தின்று மிஞ்சிய உணவைத் தின்பதற்கும் படலையில் படுத்திருந்து குரைப்பதற்குமே நாய்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம்: நாய் ஓர் உழைக்கும் மிருகம் ஆகும். சந்தோஷமாக உழைக்கும் மிருகம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

★

## சாங்ஹாய் நகரின் பாடு

தாய்வான் தொடுவாய்க்கு அப்பாலான நாடுகளுடன் உறவுகளுக்கான சங்கத்தின் தலைவராக இருக்கும், முன்னாள் சாங்ஹாய் நகரசபைத் தலைவர் டோகான், அண்மையில் அந்த நகருக்குச் சென்ற வெளிநாட்டவர் ஒருவருடன் உரையாடும் பொழுது சாங்ஹாய் நகரின் அவலங்கள் சிலவற்றைக் கூறினார். தொழில் இல்லாமையாலும், பெரும் எண்ணிக்கையான குடிப் பெயர்வுகளினாலும் அந்த நகரம் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாம். அந்த நகரின் சனத்தொகை 13 மில்லியன் என்று உத்தியோக ரீதியாகக் கூறுபட்டாலுங் கூட அங்கே பதிவு செய்யப்படாத மக்கள் தொகை 3.5 மில்லியன்களாகுமாம். 1930 இல் அமெரிக்காவில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பல மில்லியன் கணக்கானோருக்கு வேலை வழங்க அவர்களை வீதிகள், குளக்கட்டுக்கள் போன்ற பெருந் திட்டங்களில் வேலைக்கு அமர்த்தியதுபோல் சீனாவிலும் செய்யப்படவேண்டும் என்று அந்த நகரமுதல்வர் கூறினார்.

## ருஷ்யர்களின் கடும் சோதனைகள்

வரி ஏய்ப்பை முறியடிக்கும் முயற்சியாக ருஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள், மொஸ்கோவில் உள்ள வியட்நாமிய வர்த்தக நிலையத்தினைத் திடீரென முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்தினர். அநேகமாக வியட்நாமிய, சீன இறக்குமதியாளர்களால் ருஷ்யாவில், நடத்தப்படும் புடைவை இறக்குமதிகள் மூலம் செய்யப்படும் வரி ஏய்ப்புகளைக் கண்டு பிடிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இது முதலாவதாகும். அந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது, 450,000 அமெரிக்க டொலர் பணமும், 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான விற்பனைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டன. ஒரு வியட்நாமிய வர்த்தகர், ருஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள் தேடுதலின்போது பிடித்தெடுத்த பொருள்களை விற்றுக் காசு தேடிக் கொள்கின்றனர் என்றும், பிறநாட்டு வர்த்தகர்களை அழிக்க வேண்டுமென்றே திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர் என்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க அதிசயம்

போராளிக் குரு ஒருவரின் சமாதியின் ஆராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக் கோவைகள்.

எமிலி மிக்சல்:
(EMILY MITCHELL)



ஆன்மீகத்தினதும், இலௌகிகத்தினதும் ஆதிக்க குறியீடுகளைப் பொன்னாலும், வெள்ளியாலும் பொறித்துள்ள நாடுகள் பெரு நாட்டின் மொச்சே குல அரசர்களின் பெருநிதிகளோடு அவர்களின் புதை குழிகளில் ஆழமாகப் புதைந்து விட்டன. அவற்றோடு அவர்களின் இரகசியங்களையும் அந்த மன்னர்கள் தமது புதைகுழிகளுக்குக் கொண்டு சென்றுள்ளனர் போலும். சுவர் ஓவியங்கள், உலோகக் கலங்கள், மண் பாண்டங்கள் என்பனவே இவ்வாறு புதையுண்டவை. புதைபொருள் ஆய்வாளர்களுக்கு '' இன்கன் '' நாகரிகத்திற்கு முன்பு நிலவிய நாகரிகம் பற்றி விரிவாக அறிய இவை உதவமுடியும். இந்த நாகரிகம் கி. பி. (சுமார்) 800 ஆண்டுகளுக்கு முந்தியது என்பதை அறிந்துகொண்ட போதிலும், புதைபொருட் சின்னங்கள் பலவும் காணப்பட்ட இடங்களில் இருந்து அவை மறைந்து வெறுமையாக்கப்பட்ட நிலையில் விரிவான விளக்கங்களைப் பெறமுடியாது இருந்தது. எழுத்துமொழி ஆதாரங்கள் எவையும் கிடைக்காத நிலையில் மறைந்துபோன நாகரிகத்தை அறிதற்கு ஆய்வாளருக்கு நம்பகரமான வழி காட்டியும் இல்லாது போய் விட்டது.

தங்கத்தைத் தேடிச் சூறையாட முற்பட்டோர் சிலரே முதன் முதலாகக் கடந்த கால நாகரிகத்தின் ஒளிகாணும் திறவு கோலைக் கண்டு பிடித்தவர்கள். வைக்கோலும், களிமண்ணும் கலந்து அமைந்த செங்கட்டிகளால் உருவாக்கப்பட்ட கூர்நுனிக் கோபுரம் ஒன்றினுள்ளே புதைந்து கிடந்த, அரசகுடும்ப நடுகல் ஒன்று ஓர் உள்நாட்டு சூறையாடுபவன் கால்களிலே தற்செயலாகத் தட்டுப்பட்டது. அந்த நடுகல்லை அவன்கண்ட இடம் பெருவில் வட கரையோரத்தில் உள்ள லம்பயேக்கு நதிப் பள்ளத்தாக்கை அடுத்த சிபான் கிராமத்தின் அண்மையில் ஆகும். அவனது கண்டு பிடிப்பு பல துண்டுகளாகச் சிதைக்கப்பட்டு அந்தத் தொல் பொருட் கூறுகள் சர்வதேசக் களவு, கலைப் பொருட் சந்தையில் காட்சியளிக்கத் தொடங்கின. அதிர்ஷ்ட வசமாக மற்றைய மூன்று நடுக்கோபுரங்கள் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவை நிபுணர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டுப் புதைபொருள் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டன. இதன் பயனாக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருளில் கிடந்த நாகரிகம் ஒன்றின் சின்னங்களை ஒளிக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஆய்வுக்குழு ஒன்று ஈடுபடலாயிற்று,

இந்த மூன்று நடுகற் கோபுரங்களிலும் கண்டு எடுக்கப்பட்ட தொல் பொருட் கூறுகளும், போராளிக்குரு அல்லது சிபானின் தலைவர் எனச் சொல்லப்பட்டவரைப் புதைத்திருந்த இடத்தின் மீளமைப்பு வடிவமும் நியூயோர்க் நகரில் உள்ள இயற்கை வரலாற்றுத் தொல் பொருட் காட்சியகத்திலே கடந்த மாதம் காட்சிக்கு வைக்கப்பட்டன. நடுகற்கோபுரத்தின் கண்டுபிடிப்புக்களில் உள்ளடக்கம் அவை வெளிப்படுத்திய ஒளியிலும் முதன்மையானவை என்பதற்கு ஐயமில்லை. லம்பயோக்கே தேசிய தொல் பொருட் காட்சியகத்தின் பணிப்பாளரும், புதைபொருள் ஆய்வாளருமான வோல்டர் அல்வா அதன் ஆய்வு தொடங்கிய நாளில் இருந்து அதனை மேற்பார்வை செய்து வருகிறார். '' சிபானின் அறிவியல் முக்கியத்துவம் அதன் ஒளிவீசும் தங்கத்திலும் மேலானது '' என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயோர்க் நகர் தேசிய அரும் பொருட் காட்சியகத்தின் மேற்பார் யாளரான கிறெயக்மொறிஸ் காட் சிப் பொருள்கள் அறிவியலோடு அழகியலும் இணைந்தவையாய் வெளிச்சத்திற்கு வந்துள்ளன என் றும், அவற்றினது அழகியற் கவர்ச்சி ஒருபுறமாக நவீன புதை பொருள் ஆய்வுத் தொழில் நுட் பத்திற்கும் அவை குறிப்பிடத் தக் கவையாக உள்ளன என்றும் கருத் துத் தெரிவித்து இருக்கிறார். ''ஒவ் வொரு கூற்றும் மற்றைய எல்லா வற்றோடும் கொண்டுள்ள உறவை விளங்கிக் கொள்ளப்பட வேண் டியதாகும்'' என்பது அவர் கூற்று. பணிப்பாளர் அல்வா அவர்களும், அவருடைய குழுவினரும் ஒவ் வொரு புதை குழியையும், அவற் றில் கண்டெடுக்கப்பட்டவையை யும் பதிவு செய்வதிலும், பகுப் பாய்வு செய்வதிலும் மிகுந்த கவ னஞ் செலுத்துகிறார்கள். உதார ணமாக, இறந்த சடலத்தோடு நெருக்கமாக உள்ள ஒவ்வோர் அணிகலனும் சடலத்திற்குரியவர் மிகவுஞ் சிறந்த முறையில் ஒழுங்க மைக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வர் என்பதைப் புலப்படுத்தும் மிக உயர்ந்த குறியீட்டுச் சின்னமாக உள்ளது.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதல் சூறையாடல் நிகழ்ந் ததைத் தொடர்ந்து, இடம்பெற்ற பைத்தியக்காரத் தனமானது இந்தி யாவின் யோன்ஸ் திரைப்படக் காட்சியை, அதில்வரும் அடி பிடிக ளைப்போன்று இருந்தது. சர்வதேச அரும்பெரும் சேமிப்பாளரும், தொல் பொருள் சின்ன விற்பனையாளரும் '' குவாகுறொஸ் என்ற பெருவியப் பதத்தால் அழைக்கப்படும், புதை குழிகளில் சூறையாடுவோருடன் இணைந்து சிபான் பிரதேசத்தில் பெருந் தொகையில் குழுமினர். இவர்களைப் பிடித்துச் சோதனை யிடும் முயற்சியில் ஈடுபட்ட காவல் துறையினர் இவர்களிடம் இருந்து சில தொல்பொருள்களைச் சுவீகரித் தனர்.

இப்போது புதைபொருள் ஆய் வுப் பிரதேசம் போதிய காவலரை நியமித்ததன் மூலம் பாதுகாப்புக் கொண்டுள்ளதாய் உள்ளது. புதை குழிகளில் இறந்தோரை அடக்கம் செய்து, அதன் மேல் முத்திரை குத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு, அல்வா அவர்களும், அவரின் குழு வினரும் மிகக் கவனமாகவும், பொறுமையாகவும் அவற்றை ஒவ் வொரு படியாக வெளிக்கொண்டு வந்தனர். இம் முயற்சியின் பய னாக மிகவும் மலிவான உலோகப் பொருள்கள், ஓடுகள், என்பன கண்டு பிடிக்கப்பட்டன. மறைந்து விட்ட கலாசாரத்தின் மர்மங் களை இவற்றின் மூலம் அறிந்து கொள்ள வழி பிறந்தது. கொலம் பியாவின் முற்பட்ட வரலாறு, பண்பாட்டாளர்களில் நிபுணரான கிறிஸ்ரோபர் டொனஸ் என்ற கலிபோர்னியப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த ஆய்வாளர், இந்தச் செய்தித் திட்டத்தில் இணைத்துக் துக் கொண்டு நடுகற் கோபுரப் பொருள்களை ஒலிப்படங்களாக எடுப்பதில் ஈடுபட்டார். இவ்வாறு எடுக்கப்பட்ட 135,000 ஒளிப்படங் கள் ஒப்பீட்டுப் பகுப்பாய்வுக்காக யூளிஎல்ஏ - க்குச் சொந்தமான பௌளலர் அரும் பொருள் காட்சி யகத்திற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

மொச்சே அரச குலத்து ஆட்சி யாளர்களின் அறிவான்மையை இவ்வளவு தொகையான கலைச் செல்வங்களை உருவாக்கியிருக்கும் என்று முன்பு கற்பனையே செய் முடியாதிருந்த நிலையை, இந்த தொல் பொருள் கூறுகள் முற்றாக மாற்றிவிட்டன. '' மொச்சே குலத் தினரைப் பற்றிய தகவல் எதுவும் பெற முடியாத போதும் அவர் களின் சிபான் நகரத்தை ஆராய் வது என்பது, எகிப்தின் பறோக் கள் பற்றி அறியாது எகிப்தின் நாகரிகத்தைப் பற்றி அறிய முற் படுவதை ஒத்ததாகும் என்பது இவரின் கூற்று. மொச்சேயின் சமூக நிறுவனங்கள், சமயம், கலை கள் என்பவை இன்று சிபானுக்கு முற்பட்ட காலம் சிபானுக்கு பிற்பட்ட காலம் என இரு கட் டங்களாகப் பிரித்து ஆய்வுக்குள் ளாக்கப்படுகின்றன.

**மறைந்துவிட்ட கலாசாரம் ஒன்றினது புதைபொருட் செல்வங்கள், பெரு என்ற நாட்டினது இழந்துபோன இறந்த காலத்தின் மீது ஒளி பாய்ச்சுவதோடு, அதன் எதிர்காலத்தினையும் வளமுடையதாக்குகின்றது.**

மொச்சே மண்கலங்களிற் காணப்படும் சித்திரங்களிற் சில நிருவாணமாக்கப்பட்ட அடிமை களின் கழுத்துக்களை வெட்டிப் பலியிடும் காட்சிகளைக் கொண்டு இருக்கின்றன. பாரிய பிறைச் சந் திர வடிவில் அமைந்த ஆபரணம் ஒன்றைக்-கூம்பு வடிவமாகத் தலைக் கவசத்தில் பிணைத்து அணிந்த, கவர்ச்சி வாய்ந்த உருவம் ஒன்றின் சித்திரமும் குறிப்பிடத் தக்க தாகும். அதன் காதுகளில் பெரிய அளவான பரிவட்டக் காதணி களும் காணப்படுகின்றன. இவ்வு ருவம் கொலை செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதிகளின் குருதியை நிறைந்த கிண்ணம் ஒன்றை வாயில் வைத்துப் பருகுகின்றது இவ்வுருவங்கள் புராண கதாபாத்திரங்களாகலாம். 1,700 வருடப் பழைமையுடைய பிணம் ஒன்று கவர்ச்சி வாய்ந்த அரசுச் சின்னத்தையும், ஆபரணங்களையும் அணிந்து விளங்குகிறது. சிபான் பிரபுத்துவ குடும்பத்தினராய் இருக்கலாம் என்று ஊகிக்கப்படும் இப் பிணத்திற் குரியவர், சடங் காசாரத்தோடு பலியிடுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்தப் பிணம் மற்றொரு நடுகற் கோபுரத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகும். அதன் உடலில் அணியப்பட்டிருக்கும் உடையிலிருந்து அது போராளிக் குருவாகக் கொள்ளப்படுகிறது. மொச்சே குலத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தான மனித பலிக்கு ஓர் எடுத்துக் காட்டாக, முதன்மையானதாக இது விளங்குகிறது. தங்க ஆபரணங்கள், ஒளிகாலும் மணிகள், செப மாலைகள் மற்றும் அணிகலன்களை தன் உடலின் அசைவு மூலம், அசைந்தாட வைத்துச் சூரியனிலும் கூடிய ஒளிக்கதிர்கள் வாய்க்கப் பெற்றவன் என்ற நம்பிக்கையை மக்களிடையே இந்தப் போராளிக் குரு வெளிப்படுத்தி இருக்கக் கூடும்.

மொச்சே மட்கலங்களிலும், சுவர் ஓவியங்களிலும், நடுகற் கோபுரத் தொல்பொருள்களிலும் சிலந்திகள், நண்டுகள், ஆந்தைகள் வடிவ நகல்கள் பல தோன்றுகின்றன. இவை வழிபாட்டுக்குரிய (விலங்கு வழிபாடு) வடிவங்களாகக் கொள்ளப்பட வேண்டும். இவை இவற்றின் குண வேறுபாடுகளுக்கு அமைவாக வெவ்வேறு நிலையங்களில் மனிதரே அவை போலத் தம்மைப் பாவனை செய்து வழிபடப்பட்டவை. சமயச் சடங்குகளின் போது முதன்மையளிக்கப்பட்டவை. சிலந்தி வடிவில் அமைந்த கவனத்தைப் பற்றி இழக்கும் வடிவம் ஒன்று பிறை வடிவம் அமைந்த கத்தி ஒன்றை ஒரு கையிலும், வெட்டப்பட்ட தலை ஒன்றை மறுகையிலும் தாங்கிய வண்ணம் நிற்கும் காட்சி இவ் வழிபாட்டு முறைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. 3 ஆவது இலக்க நடுகற் கோபுரத்தின் உச்சியில் அரசுச் சடலம் ஒன்றின் அழகார்ந்த வடிவம் அக்காலத்து அதியுன்னத கைவினைத் திறனுக்கு உதாரணமாக விளங்குகிறது. இதுவே அங்கு கிடைப்பவற்றில் மிகப் பழைமையானது. கிடைத்துள்ள 10 செபமாலைகளில் மனிதத் தலையோடு கூடிய சிலந்தியின் வடிவம் அவற்றின் பின்புறத்தில் வரையப்பட்டுள்ளது. ''எழுத்து முறைக்குப் பதிலாகத் தமது சித்திரத் திறமை கொண்டு கருத்து வெளிப்பாட்டை அக்காலத்தவர் திறம்படக் கையாண்டுள்ளனர்'' என்று டொனன் கருதுகிறார். ''மிகவும் முறை சார்ந்த ஓர் ஒழுங்கமைப்பினை நாம் கையாண்டு செயற்பட்டால் மட்டுமே இத்தகைய குறியீடுகளை அமைக்கக்கூடியதாக இருக்கும்.

மொச்சே நாகரிகம் நிலவிய நூற்றாண்டு இடைவெளியில் சிபானுக்கு அண்மையில் உள்ள மணல் செறிந்த மலையின் அடிப்பாகத்தில் 5,000 மக்கள் வரை வாழ்ந்திருக்கலாம் என்று அல்வா கணிப்பிடுகிறார். மேற்குக் கோளாரத்திலேயே மிகச் சிறந்த கலைச் செல்வங்களை உருவாக்கிய கைவினைக் கலைஞர்களும் இம் மக்களோடு வாழ்ந்துள்ளனர். தங்கம், வெள்ளி, செம்பு என்பவற்றை உருக்கி அந்த உருக்கலைக் கொண்டு செம்புக்கு மெருகூட்டும் அதிநுட்ப தொழில் கலையிலும் இவர்கள் பூரண திறமை அடைந்தவர்கள்.

அல்வா நான்காவது அடக்கத் தலத்தினையும் கண்டு பிடித்துள்ளார். அடுத்த 10 ஆண்டுகளில் மேலும் பல புதிய உண்மைகள் வெளிப்படலாம் என்பது அவரது நம்பிக்கை. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் வீடுகளின் அத்திவாரங்களை அகழ்ந்து அவற்றின் கதவுகள் பொருத்தப்பட்ட பகுதி, சமையலறை இருந்த பகுதிகளைக் கண்டு பிடித்து அவற்றின் மூலம் அக்காலத்தில் சாதாரண மக்களின் வாழ்க்கை எப்படி இருந்து இருக்கும் என்ற ஊகங்களையும் பெற்றுள்ளனர். அரும்பொருட் காட்சியகங்களாக அமெரிக்காவில் உள்ள ஐந்திற்குப் பயணம் செய்து அப்பயணம் மூலம் கிடைக்கக்கூடிய பணத்தை ஒரு பகுதியாக்கிக் கொண்டு பிறெளனில் அரும்பொருட் காட்சியகத்தின் விரிவாக்கமாகக் கட்டடம் ஒன்றை எழுப்பி அதில் மொச்சே அரும்பொருள்களைக் காட்சிக்கு நிரந்தரமாக வைக்கும் முயற்சியும் 1995 இல் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தக் கட்டட உருவாக்கத்திற்கான செலவு 800,000 டொலர்களாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மச்சுபிச்சு அரும்பொருட் காட்சியகத்தினைப் பார்வையிடக் கல்வியாளர்களும், உல்லாசப் பயணிகளும் படை எடுப்பது போல எதிர்காலத்தில் சிபானுக்கும் அவர்கள் படை எடுக்கலாம் என்ற உண்மை விளங்கிக் கொள்ளக் கூடியதுதான். இறந்த கால நிகழ்வுகளில் இருந்து சிபான் தலைவன் வெளிப்பட்டுத் தனது நாட்டின் பழம்பெருமை புதுப்பிக்கப்பட்ட இடத்திற்கு மீண்டும் திரும்புவான் என்பது உறுதி.

(அட்ரியானா வொன் ஹகன் (விமா) அனுப்பிய செய்தி அறிக்கையில் இருந்து)
ரைம், ஜூன் 27, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண சாசனம்

மொழி பெயர்ப்பு:
— தி. யோகரட்ணம் —

**மோட்டார் கார் வேக பந்தயத்தில் 6 தரம் உலக சம்பியனாகத் திகழ்ந்த செனா பெருமளவு இரசிகர்களைக் கவர்ந்து கொண்டவர். மிகவும் துணிச்சலான, திறமையான கார் ஓட்டும் வீரர் அவர். அண்மையில் இத்தாலியில் இடம்பெற்ற உலக கார்ஓட்டப் பந்தயத்தில் எதிர்பாராத விதமாக அவர் விபத்தில் மரணத்தைத் தழுவிக்கொண்டார்: கோடானு கோடி இரசிகர்கள் சோகத்திலே ஆழ்ந்தனர்.**

அண்மைக்காலத்தில் இந்த விதமானதொரு சோக அலைகள் புரண்டதாக நினைவில் இல்லை. பிறேசில் நாட்டைச் சேர்ந்த பிரபல கார் ஓட்டப்போட்டி நட்சத்திரமாகிய எயர்ட்டன் செனா ட சில்வா, இத்தாலியின் சிமோயாறில் நடைபெற்ற சான் மரீனோ கிறாண்ட் பிறிக்ஸ் (San Marinogrand Prix) போட்டியின் போது விபத்தொன்றில் கொல்லப்பட்டார். அவரது நாட்டினர் ஒரு போர் வீரனுக்கான கௌரவத்தை அவருக்கு வழங்கியிருந்தனர். பாரிஸிலிருந்து சாவோபால்லோவிற்கான வெர்றிக் ஏயர்லைன்ஸ் விமானமொன்றின் வர்த்தகப் பிரமுகர்களுக்கான வசேட பகுதியில் அவரது உடல் வைக்கப்பட்டிருந்த பேழை, தகுந்த மரியாதைகளுடன் திரையிடப்பட்டு எடுத்துச்செல்லப் பட்டபோது, பயணிகள் அதனருகில் முழந்தாளிட்டு ஜெபம் செய்த காட்சி அதனை ஒரு புனிதத்தலமாக மாற்றிவிட்டதோ என்ற மயக்கத்தைக் கொடுப்பதாக இருந்தது. பிறேசிலை செனாவின் உடல் அடைந்த போது சட்டசிலை மண்டபத்தில் அரசமரியாதைகளுடன் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் பொருட்டு, சாவோ பாவ்லோவின் கும்பிக்கா விமான நிலையத்திலிருந்து 33 கி. மீ. தூரம் பவனியாக அவரது உடல் பொலிஸ் அணிவகுப்பில் எடுத்துவரப்படும்போது, வீதிகள், சந்திகளின் இருமருங்கிலுமாக ஒரு மில்லியன் மக்கள் அணிவகுத்து நின்று பார்வையிட்டனர். ஜனாதிபதி சிற்ராமர் ஃபிறாங்கோ மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியதுடன், பிறேசிலியாவிலிருந்து விமானமூலம் அங்கு வந்திருந்தார். தமது இறுதிமாரியாதையைச் செலுத்துவதற்காக அங்கு வந்திருந்தவர்கள் 200,000, பேர் என மதிப்பிடப்படுகின்றது. அவர்களுடன் ஜனாதிபதியுங்கூடவே கலந்து கொண்டார். செனாவின் உடல் மொறும்பி சேமக்காலையில் வைக்கப்பட்டிருந்தபோது பிறேசில் விமானப்படை விமானங்கள் தலைக்குமேலாக ஆகாயத்தில் இராட்சத 'S' மற்றும் இதய வடிவத்தில் அணிவகுத்துப் பறந்து மரியாதை செலுத்தின.

சோகத்தின் மத்தியில் ஆவேசத்தின் சாயலையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மணிக்கு 300 கி. மீற்றரிலும் பார்க்க, கூடுதலான வேகங்கள் அசாதாரணமானவையாக இல்லாததான விளையாட்டுப் போட்டியொன்றில் தான் பங்குபற்றுவதன் மூலம் மரண ஆபத்தையே செனா எதிர்கொள்வது பிரபலமான ஒரு துணிகர விடயமாக இருந்தபோதிலும், தேவையற்ற விதமாக அவர் மரணமடைய நேர்ந்துவிட்டதாக எண்ணுபவர்களும் உண்டு. "ஃபொமியூலா ஒன்று" முதன்மைச் சாசனப் போட்டியில், கடந்த 12 வருடங்களில் எவருமே கொல்லப்பட்டதில்லை. இருந்தும், சான் மரினோவில்மட்டும் ஐந்து விபத்துக்களும், இரண்டுமரணங்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஓட்டத்தின் போது செனா திருப்பமொன்றைத் தவறவிட்டதன்மூலம் தனது 'வில்லியம்ஸ் றெனோல்ட்டை' காரினை சுவரொன்றுக்குட் செலுத்தியதற்கு முதல் நாளன்று, ஆஸ்திரியாவைச் சேர்ந்த றூக்கி விமான ஓட்டியாகிய றொலாண்ட் றெட்ஸன்பேகர், தகுதிகாண்பதற்கான பரீட்சார்த்த ஓட்டங்களின் போது, இதே விதமானதொரு விபத்தில் உயிரிழந்தார். மூன்றாவது ஓட்டக்காரரொருவர் தன்னுடைய றேசர் காரை ஓட்டத்தின்போது புரட்டிக் கொண்டதின் மூலம் மரணத்தை அண்மித்திருந்ததுடன், அவ்வளவு மோசமானதாக இல்லாத இரு விபத்துக்களில் சிதறிப் பறந்த காரின் பகுதிகளால் பார்வையாளர்களும், உதவிப்பணியாளர்களும் ஆபத்திற்குள்ளாகினர்.

*ரைம், மே 16, 1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசப் பூக்கள்

ஓராண்டு அகவை தன்னில்
நிறைவு காணும் உலக உலாவே
பல்லாண்டு நீ வாழ
வாழ்த்துகின்றேன் வாழிய நீ
திங்கள் ஒரு முறை
மலரும் உன் இதழில்
சேர்த்து நீ தருவாய்
செய்தியினை கொத்தாக
போரும் பொருளாதாரத் தடையும்
பொசுக்கும் எம் தமிழீழத்தின்
கல்வி அறிவினை என்று
கங்கணம் கட்டிய
சிங்கள வெறியரின்



சிந்தையைச் சிதைக்க
''உலக உலா'' என்ற
சிறகொன்று கிடைத்தது
அறிவுலகில் பறக்க
''உலக உலாவே''
நீ உன்னை நிறுத்திக் கொண்டால்
ஏமாற்றியது என்னை மட்டுமல்ல
எம் தமிழீழமே ஏமாந்து போய்விடும்.
நீ நிதம் வளர
உன் ஒளி பரவ
நித்தம் உன்னை
என் இதயத்தால்
வாழ்த்துகிறேன்.

ஆக்கம்: மேரி மன்ரேசா பறுநாந்து

உங்கள் பதிப்புக்கள்
தரமாய் அமைய வேண்டுமா?

அழகும் - அமைப்பும்
உங்களைத் திருப்திப் படுத்தவேண்டுமா?

தயக்கமேன்?

இன்றே வருகை தாருங்கள்!
உங்கள் தேவைகளைத் தந்து பாருங்கள்!

இராசன் அச்சகம்

144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய வாகனம் இலாபகரமாக இயங்க
எங்களை நாடி நல்ல இலாபம் அடையுங்கள்

டீசல் வாகனம்
வைத்திருப்பவர்களுக்கு
எல்லாவிதமான
பியூவல் பம்களையும்
நொசல்ஸ்களையும்
சிறந்த முறையில்
சுத்திகரித்துத்
தருகின்றோம்.




★

மற்றும்

பெற்றோல் வாகனங்களானாலும் சரி எரிபொருள்
சிக்கனமான முறையில் பொருத்தித் தருகின்றோம்.

*எங்களது* ★ நீண்டநாள் உழைப்பு
*குறிக்கோள்* ★ எரிபொருள் சிக்கனம்
★ நம்பகமான சேவை

எல்லா வகை பற்றறிகளுக்கும் ஏற்ற தரமான பிளேற்றுக்கள்
மற்றும் பி. வி. சி. செப்ரேட்டர்கள் செய்து சிறந்த முறையில்
மின்னேற்றித் தருகின்றோம்.

# சிறீஸ்கந்தராஜா மெக்கானிக்ஸ்

103, ஐயனார் கோவிலடி,
*யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் தோறும் தேடிவரும் உலகளந்து செய்தி கூறும்
பலவிடயந் தாங்கிவரும் - உன்னைப் படிப்பவர் பயனடைவார்.

முதலாம் ஆண்டு
சிறப்பு இதழ்



யாழ். மாவட்டத்தில்
சகல
புத்தகக் கடைகளிலும்
அமோகமாக
விற்பனையாகின்றன.

நவீன
உலகை
நோக்கி

"உலக உலா" முதலாம் ஆண்டுச் சிறப்பிதழ்

முந்துங்கள்; முற்றிலும் சிறந்த
வெள்ளி அட்டையுடன் வெளிவந்துள்ளது.

★ விலை ரூபா 25/- மட்டுமே ★

உலக உலா நிறுவனம்
144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.



அச்சுப்பதிப்பு: இராசன் அச்சகம், அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அட்டைப்பதிப்பு: அந்திவானம் பதிப்பகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org